சீனா: பட்டுப்பாதையை மீளத் திறத்தல்

# உலக உலா

ஜூன்-ஜூலை 1994

உலக உலா 1994



## பிரபஞ்சத்தில் மோதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36

## உலக விவகாரங்கள்


### ஆசியா

காஷ்மீரில் குண்டு வெடிப்பு 07
கறுப்புக் கம்பள வரவேற்பு 09
தவறான தாக்குதல் 12
ஜப்பானில் அரசியல் நில நடுக்கம் 14
போருக்குத் தயாராகியுள்ளது 16
இஸ்ரேலின் வெளியேற்றம் 18
இராணுவத் தளபாட ஊழல் 20
பட்டுப்பாதை 22
உறவுகளின் விரிசல் 25

### அவுஸ்ரேலியா

அந்தரங்கங்கள் வெளிவருகின்றன 27

### அமெரிக்கா

மெக்சிக்கோவின் புதிய வேட்பாளர் 30
தோழர்களின் வியாபாரம் 32
கடிகாரத்துக்காக எனது நாடு 34
நட்புரிமை ஒற்றர்கள் 36
இராணுவக் கல்லூரிகள் தேவையா? 39

### ஐரோப்பா

போர்க்கால நடவடிக்கைகள் அம்பலம் 41
ருஷ்யாவுடன் இணைவதா? 43

### ஆபிரிக்கா

எகிப்து சூடு பிடிக்கிறது 47
ருவாண்டாப் படுகொலைகள் 49
மறு பிறப்பு எடுக்கும் நாடு 52

### சட்டம்

விரல் யுத்தம் 56

### மதம்

புத்த பிக்குவின் மதன லீலைகள் 59

### சுற்றுச்சூழல்

அருகிவரும் மீன்வளம் 61

### குற்றவியல்

தொடரும் விமானக் கடத்தல் 64

### விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்

திறவு மூலங்கள் யாரிடம் 66
முழு உலகையும் இணைத்தல் 69

### விண்வெளி

வால் நட்சத்திர மோதல் 71
நாசாவில் ஒரு ருஷ்யன் 76

### விளையாட்டு

கனவுக் கன்னியின் வெற்றி 78

### மனிதவியல் வரலாறு

பிணத்தின் கதை 80

### பல்திணைப் பகுதி

செய்திச்சரம் 02
புதியன அறிமுகம் 03
பார்வைகள் 06



விலை ரூபா 100/-

உலக உலா
பல்துறைசார்
மாத இதழ்

உலா: 11

உலக உலா ஜூன் — ஜூலை 1994


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியட்நாம்

### சர்வதேச மேம்பாட்டுக்கான அமெரிக்கக் குழுவின் வருகை

வியட்நாமில் நல்ல பணிகள் ஆற்றிவந்த இந்த அமெரிக்க உதவி ஸ்தாபனம், அமெரிக்க-வியட்நாம் போருடன், தனது நாடு திரும்பியமை தெரிந்ததே. இப்போது, 19 வருடங்களுக்குப்பின், இக்குழு மீண்டும் வியட்நாம் திரும்பியுள்ளது. இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் சீரடைவது, இதனாற் புலப்படுகின்றது. பெற்றோர் அற்ற பிள்ளைகளுக்கான பராமரிப்பு நிலையமொன்றையும், அறிவு வளர்ச்சி அற்ற சிறுவர்களுக்கான நிலையமொன்றையும் இக் குழு டலாற் நகரில் ஆரம்பித்து, இந்த நாட்டில் தனது பணிகளைத் தொடங்கும்.

### மலேசிய வழிகாட்டி

அண்மையில், வியட்நாம் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் தோ மூாவாய் மலேசியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். மலேசியாவின் பொருளாதார வளர்ச்சியையும், தொழில் முன்னேற்றத்தையும் வியந்து பாராட்டிய அவர், தனது நாட்டுக்கும் இத்தகைய முன்னேற்றத்துக்கு உதவும்படி கேட்டுக் கொண்டார். கிராமிய வளர்ச்சிக்கும், வாகனத் தயாரிப்புக்கும், இலத்திரனியல் தொழில் நுட்பத்திற்கும், தாம் உதவத் தயாரென, மலேசியப் பிரதமர் மகாதீர் முகம்மது தெரிவித்துள்ளார்.

### பர்மாவின் தனிமை முடிவுறுகின்றது

பல தசாப்தங்களாக வெளி உலகத் தொடர்பு இன்றித் தனித்தியங்கிய பர்மா, மீண்டும் பல நாடுகளுடன் உறவுகளைப் புதுப்பித்துள்ளது. 1988 இல் ஜனநாயக மாற்றங்களை வேண்டி நின்றோரை நசுக்கிய பின், இத்தனிமை கூடியுள்ளது என்றாலும், 1993ஆம் ஆண்டு தொடக்கம் பர்மாவின் வெளியுறவுக் கொள்கைகளிற் பல மாற்றங்கள் தெரிகின்றன. லாவோஸ் பிரதமர் ஜெனரல் கம்ரேயைப் பின்தொடர்ந்து, சிங்கப்பூர்ப் பிரதமர் கோ சொக் ரொங் உடன் மார்ச் மாதம் சிங்கப்பூருக்குச் சென்றுள்ளார். பர்மாவில் முதலீடு செய்ய, சிங்கப்பூர் உத்தேசித்துள்ளது. தனது விஜயத்தின்போது, பிரதமர் ரொங் இது பற்றிப் பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

## கொரியா

### தாக்கப்போவதில்லை என்ற வாக்குறுதி

தாய்லாந்துக்கான வட கொரியத் தூதுவர் பாங்கொக் நகரிலிருந்து பின்வருமாறு கூறியுள்ளார்:- '' நாம் தென்-கொரியாவைத் தாக்கமாட்டோம்.'' வட கொரியாவின் அணு ஆயுதத் திட்டம், தென் கொரியாமீது தாக்குதல் நடத்தும் நோக்குடன் விரிவாக்கப்படுவதாக, பரவலாக நம்பப்படுகின்றது. ஆனால், இது உண்மையல்லவென்று, அந்த நாட்டின் தூதுவர் கூறி உள்ளார்.

## பாகிஸ்தான்

### தேசவிரோதக் குற்றச் சாட்டுக்கள்

1947-ம் ஆண்டு இந்திய-பாகிஸ்தான் பிரிவினைக்குப்பின், இந்தியாவில் இருந்து இடம் பெயர்ந்து பாகிஸ்தானிற் குடியேறிய உருதுமொழி பேசும் முஸ்லிம்கள், முகாஜிர்கள் என்று அழைக்கப்படுவர். இவர்கள் குடியேறிய கராச்சிப் பகுதியில், இவர்களுக்கும், அங்கு முன்னரே வாழ்ந்தோருக்கும் நெடுங்காலமாக மோதல்களும், தொடர் வன்முறைகளும் நடைபெற்று வருகின்றன. அண்மையில், மார்ச் மாதம் நடந்த கலவரங்களில் மூவர் இறந்துள்ளனர். பதினெண்மர் படுகாயம் அடைந்துள்ளனர். இதன் பின், முகாஜிர்களின் கட்சிப் பிரமுகர்கள் ஒன்பது பேருக்கு எதிராக, அரசுக்கெதிராக ஆயுதம் தூக்கிய தேசவிரோத நடவடிக்கைக்காக வழக்குத் தொடர, பாகிஸ்தான் அரசு தீர்மானித்துள்ளது. 1986 ஆம் ஆண்டுக்கும் இவ்வருடத்திற்குமிடையில், இந்த மோதல்களால் கராச்சியில் 2,000 உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன.

## ஜப்பான்

### தேர்தல் வெற்றி

ஜப்பானின் கரையோரப் பகுதியான இசிக்காவாத் தொகுதிக்கு நடந்த ஆளுநர் தேர்வில் தற்போது ஆட்சியில் இருக்கும் கூட்டு அரசு சார்பிற் போட்டியிட்ட தானிமோட்டோ அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மிகவுங் குறைந்த வாக்குகளால், இவர் எதிர்க்கட்சி வேட்பாளரைத் தோற்கடித்துள்ளார். இவருடைய கூட்டு அரசுக்கு இந்த வெற்றி பெரும் ஊக்கமும், உற்சாகமும் அளித்துள்ளது. எதிர்க்கட்சிக்கு எதிரான கட்சிகளின் கூட்டு வலுப்பெற, இதனால் வாய்ப்பு உண்டாகியுள்ளது.

## பிலிப்பைன்ஸ்


### பொதுமன்னிப்பு

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பிடல் றாமோஸ், பொது மன்னிப்புத் திட்டமொன்றை அறிவித்துள்ளார். அரசுக்கெதிராகப் போராடும் பிரிவினைவாதிகளுக்கும், பிரிவினை வாதிகளுக்கு எதிராகப் போராடும் வேளையில், பல குற்றச் செயல்கள் புரிந்த காவல் துறையினர், இராணுவத்தினர் அனைவருக்கும் இந்தப் பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளது. இந்தப் பொது மன்னிப்புத் திட்டம், இந்த நாட்டுச் சட்டத்தின் கீழ் பதிவாகியதும் அமுலுக்கு வரும். பிரிவினை வாதிகளுக்குப் பொது மன்னிப்புச் சட்டத்தைப் பயன்படுத்த, ஆறு மாதக் காலக்கெடு கொடுக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபாய எச்சரிக்கைக் கருவிகள்




தமது பனிச்சறுக்கு உபகரணங்களான ''ஸ்கீ'' களையும், கோல்களையும் களவு கொடுக்காமல் இருக்க விரும்புபவர்களுக்காக, ஐக்கிய இராச்சியத்தின் ஜொஸ்ரெக் நிறுவனம் ஓர் அபாய எச்சரிக்கைக் கருவியை உருவாக்கி உள்ளது. இதன் பெயர், ஸ்கீ ''செக்குயர்,'' ( Ski-Secure ). இரண்டு வாங்கிகள் ஒருவாரிற் பொருத்தப்பட்டு, இக்கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வார், பனிக் சறுக்கு உபகரணங்களை எங்காவது விட்டுச் செல்லும் போது, அவற்றில் சுற்றிவிடப்படும். வாங்கிகளுள் ஒன்று, உபகரணங்கள் அசைக்கப்படுவதைக் கண்காணிக்கின்றது. மற்றையது, சுற்றப்பட்டிருக்கும் வார் கழற்றப்படாமற் கண்காணிக்கின்றது. உபகரணங்களை அசைக்க முயன்றாலோ, அல்லது இவ் வெச்சரிக்கைக் கருவியைக் கழற்ற முயன்றாலோ, 100 டெசிபல் காதைக் கிழிக்கும் ஒலியொன்றை இக் கருவி உண்டாக்கும். ஆனால், உபகரணங்கள் தவறுதலாகத் தட்டுப்பட்டால், அலாரம் தன்னைத்தானே நிறுத்திக் கொள்ளும். இவ் வெச்சரிக்கைக் கருவி, சட்டைப் பைக்குள் போடக் கூடிய அளவுக்குச் சிறியது. அத்துடன், இது பனிச்சறுக்கு உபகரணங்களை ஒன்றாகப் பிணைத்து, தூக்கிச் செல்லவும் பயன்படுத்தக் கூடியது. விலை 30 டொலர்.

வீடுகளிற் பயன்படுத்தப்படும் திருடர் அபாய எச்சரிக்கைக் கருவிகளில் உள்ள குறைபாடு என்னவென்றால், திருடர் வசிப்பிடத்தினுள் உட்புகுந்த பின்னரே, அவை ஒலி எழுப்புகின்றன. இதனால், காவற்றுறையினர் வருவதற்கு முன்னரே, ஒரு சில பொருள்களை எடுத்துக் கொண்டு கள்வர் தப்பிவிட முடிகிறது. இப்போது, ''பட்-வண் என்ற ( But-One ) பிரித்தானியக் கம்பனி, வீட்டை கள்வர் அணுக முன்னதாக அபாயக் குரல் ஒலி எழுப்பி, அவர்களைப் பயந்தோடச் செய்யக் கூடிய ஒழுங்கமைப்பொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இவ்வொழுங்கமைப்பானது, அசைவைக் கண்டுபிடிக்கும் கருவிகளை அடிப்படையாகக் கொண்டது. இக்கருவிகள் வளவைச் சுற்றிப் பொருத்தப்படும். இவை இடறப்படும் போது, 500 வோல்ற் மின் விளக்கு ஒன்று தானாகவே செயற்பட்டு ஒளியைப் பாய்ச்சும். அத்துடன், சம்பவம் வீடியோவிற் படம் பிடிக்கப்பட்டு விட்டதாகவும் காவற்றுறையினர் அழைக்கப்பட்டு விட்டதாகவும், ஒளிப்பதிவு செய்யப்பட்ட குரல் ஒன்று ஒலிபெருக்கியில் அறிவிக்கும். ''வொய்ஸ் அலேர்ட் '' ( Voice Alert) எனும் இவ்வொழுங்கமைப்பை பொருத்திக் கொள்வது வெகு சுலபமென, இதன் உற்பத்தியாளர்கள் கூறுகின்றனர். விலை 450 டொலர்.

## கணனியின் தொழில் விரிவு

கணனிகளின் பலதொழிற் செயற்பாடு விரிந்துகொண்டே செல்கின்றது. தொழில் முன்னேற்றத்திற்கு உதாரணமான அப்பிள் ( APPLE ) நிறுவனம், மீண்டுமொரு புரட்சிகர முன்மாதிரியை உலகுக்களித்துள்ளது. ''மக்கின்டொஷ் சென்றிஸ் 660 ஏ. வீ '' ( MACINTOSH CENTRIS 660 AV), (AUDIO VISION 14 DISPLAY MONITOR ) ''ஓடியோ விஷன் 14 டிஸ்பிளே மொனிற்றர் '' ஆகிய, இரண்டு கருவிகளையும் கணனியுடன் இணைத்தால், பின்வரும் பலன் கிடைக்கின்றது. 660 ஏ. வீ, முதல்




தரமான திரையரங்கிற் படம் பார்ப்பது போன்ற பிரமையுடன் திரைப்படங்களையும். ஓடியோ விஷன் 14, மிகவுந் துல்லியமான கச்சேரி மண்டப ஒலி நயத்துடன் இசையையுந் தருகின்றன. இத்துடன், இக்கணனியில் ஃபாக்ஸ் அனுப்பலாம்; வரப்பெறலாம்; தொலைபேசியாகவும் பாவிக்கலாம். சொந்தக்காரனின் குரலை அடையாளங் காணும் தொழில்நுட்பம் இதிற் பொருத்தப்பட்டிருப்பதால், குரல் கட்டளையிடும் வசதியும் இதில் உண்டு. இந்த இரண்டு இணைப்புக்களின் மொத்த விலை 3,530 டொலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## ராடர் (RADAR கருவிகளுக்குப் புலப்படாத, அமெரிக்காவின் கப்பல்




அமெரிக்கக் கடற்படையின் சான் ஃபிரான்சிஸ்கோ (SAN FRANSISCO) தளத்தில், றாடர் கருவிக்குப் புலப்படாத யுத்த விமானங்கள் போல், போர்க்கப்பல் தயார் நிலைக்கு வந்துள்ளது. இது, ஏவுகணைகளாற் பின்தொடரமுடியாததும், எதிரிகளின் நிலைகளிலுள்ள றாடர் சாதனங்களில் அகப்படாததுமாகும். இதன் பெயர்:- கறுப்பு நிழல் (BLACK SHADOW). இது, அமெரிக்காவின் எஃப் (F) 117 ரகவேவு பார்க்கும் போர் விமானங்களின் தொழில்நுட்பத் திறனுடன் செய்யப்பட்டுள்ளது. இது ஓர் ஆராய்ச்சிக் கப்பல் என்றே சொல்லவேண்டும். இதனுடைய பெறுபேறுகளை வைத்து, எதிர்காலத்தில் இத்தகைய கப்பல்கள் கட்டப்படும். கப்பல்களை மூழ்கடிக்கும் "எக்சோசெற்" (EXOCET) போன்ற ஏவுகணைகளினால் இது போன்ற கப்பல்களைத் தயாரிக்க வேண்டியமை, அமெரிக்கக் கடற்படைக்கு மிகவும் அவசியம். முதற் பார்வைக்கு ஒரு கப்பல்போல இல்லாதது, இதன் குறைபாடு என்று சொல்லப்படுகின்றது.

## குரல்மூலம் கட்டளை

தொலைக் காட்சிப் பெட்டியில், விரும்பிய திரைப்படத்தை வீடியோமூலம் பார்ப்பதும், அதேபோல் விரும்பிய இசையை, ஓடியோ முறையில் கசெற்றிலோ, சீடி ஆகவோ கேட்பதும் தினசரி நடைமுறையில் வந்துவிட்டது. வீடியோக் கருவியையும், ஓடியோக் கருவியையும் குறிப்பிட்ட தூரத்தில் இருந்து. இலக்க "றிமோற் கொன்ற்றோல்" (REMOTE CONTROL) எனப்படும் தூரவிருந்து இயக்கியும் நடைமுறையில் உள்ளன,



இந்த றிமோற் கொன்ற்றோல் கருவியை, உரிமையாளரின், அல்லது குடும்பத்திலுள்ள இன்னும் மூவரின் குரலுக்கு ஏற்ப, கட்டளை நிறைவேற்றும் பாணியில், முதன் முறையாகப் பிலிப்ஸ் (PHILLIPS) கொம்பனி தயாரித்துள்ளது. கட்டளைகள், மிகவும் சுருக்கமாகவும், ஒரே மாதிரிச் சொற்களாகவும் இருத்தல் அவசியம். றிமோற் கொன்ற்றோல் கருவியைக் குரல் உதவியின்றி, முன்பு போலச் சாதாரணமாகவும் இயக்கமுடியும்.




## பாற்கட்டி செய்யும் போது மிஞ்சும் கழிவுக்குப் புதிய உபயோகம்

ஓர் இறாத்தல் சீஸ் (CHEESE) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் பாற்கட்டியைச் செய்யும்போது, ஒன்பது இறாத்தல் நீர்ப் பதார்த்தம் கழிவுப் பொருளாகக் கிடைக்கின்றது. இதற்கு, ஆங்கிலத்தில் 'வேய்' (WHEY) என்ற பதம் பிரயோகிக்கப்படுகின்றது. இவ்வளவு காலமும், இது வீணே வீசப்பட்டு வந்துள்ளது. கோர்ணல் சர்வகலாசாலை ஆய்வுக்கூடம், இதைப் பயன்படுத்தி, பின்வரும் பொருள்களை அதிலிருந்து தயாரித்துள்ளது. உண்ணக்கூடிய, முகச்சவரம் செய்யும் நுரை, உடையும் பொருள்களுக்குக் காப்பரணாகச் சிறிய உருண்டைகள், தோல் வியாதி மருந்துகள், சமையல் அறையிற் கை சுத்தப்படுத்தும் கழி போன்றவற்றுடன், இன்னும் பல பொருள்கள் செய்யப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கண்ணுக்குப் புலப்படாத காது கேளாதவர் களுக்கு உதவுங் கருவி

காது கேளாதவர்கட்கு இதோ ஒரு நற்செய்தி! பிலிப்ஸ் PHLLIPS), பன்னெடுங் காலமாக, காது கேளாதவர்களுக்கெனப் பல கருவிகளைத் தயாரித்துள்ளது. இதை அணிபவர்கள், காது கேளாதவர்களென்ற பரிகாசத்திற்குரியவர்களாவார்கள். எவ்வளவு மறைத்தாலும், இவை தம்மைக் காட்டிக் கொடுத்துவிடும். இப்போது, செவிப்பறைக்கு மிகவும் அருகாமையில், காதுக்குட்புறமாக அணியக் கூடிய கருவியொன்றைப் பிலிப்ஸ் தயாரித்துள்ளது. மிகவும் சிறியதும், காதுக்கு உட்புறமாகவும் உள்ள இக்கருவி, கண்ணுக்குப் புலப்படாது. இரவிற் படுக்கும்போது, இதை வெளியே எடுத்து வைத்துவிடலாம். காலையில், மீண்டும் அணிந்து கொள்ளலாம். இதன் விலை டொலர் 1,500 தொடக்கம் 2,000 வரை.




## முப்பரிமாணப் படங்கள் எடுக்கும் விதம்

இரண்டு பரிமாணக் கடதாசியில், மூன்று பரிமாணப் படத்தைப் பதிவு செய்வதென்றால், அது ஓர் அதிசயம் என்றுதான் சொல்லவேண்டும். முப்பரிமாணப்படங்கள் எடுப்பதற்கென்றே, ஒரு புகைப்படக் கருவி தயாராகிவிட்டது. இது ஒரு, முதன்முறைக் கண்டுபிடிப்பு. இந்தப்புகைப்படக் கருவியில் மூன்று கண்ணாடிகள் (லென்சுகள்) உள்ளன. பிரதிகள் அச்சாகி வரும்போது, மூன்று உருவங்களும் ஒன்றின் மேல் ஒன்று இருப்பது போன்ற தோற்றம் கொடுக்கின்றன. மொத்தத்தில், இதுதான் அந்த 3டீ (3D) அல்லது முப்பரிமாணத் தோற்றம். கமெறாவின் விலை டொலர் 15. படங்களைப் பிரதியாக்குவதற்கு, பிரத்தியேக ஆய்வுக் கூடத்திற்கு அனுப்பவேண்டும்.

## தொலைக் காட்சிப் பேச்சைப் பதியும் கருவி,

தொலைக்காட்சிப் பெட்டி, அல்லது வானொலிப் பெட்டியுடன் இணைக்கப்படும் கடதாசியில் பேச்சுக்களைப் பிரதிபண்ணித் தரும் கருவி தயாரிக்கப்பட்டுவிட்டது. உதாரணம்:- தொலைக்காட்சியில் ஒருவர் பேசிய பேச்சை உடனுக்குடன் காகிதத்திற் பதிந்து தேவைக்கேற்ற விதத்தில் இக்கருவி தந்துவிடும். தட்டச்சு இயந்திரத்தில் உள்ள திறன்கள் யாவும் இக்கருவியில் உள. இடைவெளி விடுதல், வெவ்வேறு பேச்சாளர்களின் நிகழச்சிகளை வித்தியாசப் படுத்தல் முதலியன இதில் அடங்கும். தொலைக்காட்சியுடன் இணைப்பதற்குரிய சகல சாதனங்களும் இதிலடங்கும். இதன் விலை 2,000 டொலர்.

## புரட்சிகரமான "வொல்வோ" கார்

மின்சாரத்திலும், எண்ணெயிலும் செயற்படும் மோட்டார்க் கார்களை, சுவீடன் நாட்டு 'வொல்வோ' கார்க் கொம்பனி தயாரித்துள்ளது. பிஸ்ரன் சிலின்டர் இத்தியாதி இதில் இல்லை. இது ரேர்பைன் முறையில் (Iurbine) இயங்குகின்றது. பாரிய கடற் கப்பல்களிலும், விமானங்களிலும் இது பயன்படுத்தப்படுகின்றது. இதில் மின் கலன்கள் இணைக்கப்பட்டுள்ளன. இந்த வாகனம் மின்சாரத்தில் மாத்திரம் இயங்கும்போது 50 மைல் தூரம் ஓடும். மின்சாரம், எண்ணெய் இரண்டிலும் ஒன்று சேர்ந்து ஓடும்போது இந்த முழு அளவுக் கார் கலனுக்கு 45 மைல் செல்கின்றது. இதன் சிறப்பம்சம் புகை போக்கியால் புகை மிகுதியாக வெளிவராமையே. நூறு மைல் வேகத்திற்கு இதனால் ஓட முடியும். இது இன்னும் விற்பனைக்கு விடப்படவில்லை. தற்சமயம் இது சுவீடனில் தயாரிப்பில் உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதில்


★ சிங்கப்பூர் முதிர்ந்த அமைச்சர் ''லீ குவாங்யூ'' அவர்கள், அமெரிக்காவைச் சேர்ந்த ''மைக்கேல்ஃபே'' என்ற மாணவனுக்கு, பிரம்புத் தண்டனை வழங்கியமை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்:-


''இது ஓர் அநாகரிகமான செயல் என்று அவர்கள் நினைப்பார்களாயின், தயவு செய்து சிங்கப்பூருக்கு அவர்கள் வரும் போது, அவர்களுடன் அவர்களது 17 – 18வயது மகனைக் கூட்டிவர வேண்டாம்''. அவ்வாறு செய்ய முடியாதிருப்பின், உங்களது பிள்ளைகளுக்கு இப்படியான சம்பவங்களின் உண்மை விளக்கத்தைப் புகட்ட வேண்டும்.

★ ''ஆக்கிரமிக்கப்பட்ட பொஸ்னியா முஸ்லிம் நகரான குருசேட்டில்இருந்து ஐ. நா உதவிப் படையினரால், தலைமைச் செயலகத்திற்கு அனுப்பப்பட்ட செய்தியில்:-

''மரணத்தையே அதிர்ஷ்டமாகக் கொள்ளும் நகரத்திலிருந்து, எமது வாழ்த்துக்கள்'' என்று தெரிவித்திருந்தனர்.




## விழுந்தவை

★ புகைப்பிடித்தலுக்கெதிரான இயக்கத்தை எட்டு வருடங்களுக்கு முன் உருவாக்கிய கியூபாத் தலைவர் ஃபிடல் கஸ்றோ அவர்கள்:-

''நான் ஓய்வு பெற்ற பின்பு, மீண்டும் சுருட்டுப்பிடிப்பதை ஆரம்பிக்கக்கூடும்'' என்று கூறினார்.

★ கோலன் குன்றுப் பிரதேசம், சிரியாவின் ஆக்கிரமிப்புக்குள்ளாகக் கூடாது என்ற தோரணையில்:–

''பாதுகாப்புக் காரணங்களுக்காக மக்கள் இடம்பெயர்வதை அனுமதிக்க முடியாது. ஆனால் சமாதானத்தை எட்ட முடியுமெனக் கருதினால் மாத்திரம், இப்படியானதோர் இடப்பெயர்ச்சி நிகழலாம் என்று, இஸ்ரேலியப் பிரதமர் யிற்சாக் றாபீன் கூறினார்.

★ ''எனது கடமைகளை எதிர்காலத்தில் தான் திறம்படச் செய்யமுடியும்'' என்று, ஜப்பானியப்பிரதமர் ''ஹொசோகாவா'' தனது பதவியைத் துறந்து, அலுவலகத்தை விட்டு வெளியேறியதும், கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா: புலனாய்வுப் படைத் தலைவரின் உயிரைக் காவுகொண்ட குண்டு வெடிப்பு



**புதுடெல்கியின், புதிதாக நியமனமான புலனாய்வுப் படைத்தலைவர் காஷ்மீரிற் கொலையுண்டார்.**

கைக்குண்டு வெடிப்புக்களும், துப்பாக்கிச் சூடுகளும் காஷ்மீர்ப் பிரிவினைவாதிகளிடையே நாளந்த நிகழ்ச்சிகளாகிவிட்டன. ஆனால், கடந்த மாதம் கோடைக் காலத்தில் தலைநகரிலே இடம்பெற்ற குண்டுவெடிப்பானது ஸ்ரீநகரையே உலுக்கி, பெரியதொரு பயங்கர அதிர்ச்சிக்கு உள்ளாக்கிவிட்டது. பதாமி பாக்கின் இராணுவத் தளத்திலிருந்து பாரிய பலூன் வடிவ நெருப்புப் பந்தொன்று மேலெழுந்து இந்திய ஆயுத விநியோகச்சாலையின் மீது வெடித்து, நிருவாகப் படைவீட்டை அழிவுக்குள்ளாக்கிற்று. இந்தக் குண்டு வெடிப்பில், ஒரு டசினுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இவ்வாறு மரணத்தைத் தழுவிக் கொண்டவர்களில் முக்கியமானவர், அண்மையில் இராணுவப் புலனாய்வுப் படையின் தலைவராய் நியமனம் பெற்ற, 55 வயதான மேஜர் ஜெனரல் யூஸ்ரெஸ் வில்லியம் பெர்னான்டெஸ் ஆவார்.

இக்குண்டுவெடிப்புத் தொடர்பான ஆதாரங்கள் யாவும் அழிவுண்டு விட்டதால், இது ஒரு விபத்தா? சதியா? என்பது இன்னுந் தெளிவாகவில்லை. பிரிவினைவாதக் குழுக்கள் பலவும், தாமே இதற்குப் பொறுப்பு என்று உடனடியாக உரிமை கொண்டாடத் தொடங்கியுள்ளன. இவ்வாறு உரிமை கோரும் குழுக்களில், பாகிஸ்தான் சார்பான ஜமியத் – உல் — முஜாஹிடின் குழுவும், இதனிலும் கூடிய நிதானமுடைய இஸ்லாமியத் சகோதரத்துவக் குழுவும் உள்ளடங்கும்.

மிகுந்த பாதுகாப்பான ஆயுத விநியோகச்சாலையிலிருந்து குறித்த நேரத்தில் வெடிப்பதான குண்டு (Time Bomb) ஒன்றை, தாம் களவாகக் கடத்திவரக் கூடியதாயிருந்தது என்றும், அதுவே வெடிக்க வைக்கப்பட்டு அழிவைக் கொண்டுவந்ததாகவும், இந்த இரண்டு குழுக்களும் சாதிக்கின்றன.

**ஜம்முகாஷ்மீர்**
**பரப்பளவு**
2, 22, 236 ச. கி. மீ
**தலைநகர்**
சிறீ நகர் (கோடைகாலம்),
ஜம்மு (மாரிகாலம்)
**மொழி**
உருது (ஆட்சி மொழி) காஷ்மீரி, டோஹ்ரி, பால்ட்டி, வடாக்கி, பஞ்சாபி
**மக்கள் தொகை**
77, 18. 700
**எழுந்தறிவு**
26.17%
**சராசரி வருமானம்**
3, 420 ரூபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாப்பைச் சேர்ந்த 'காலிஸ் தான் கொமாண்டோக்கள்' என்ற பிரிவினைவாதிகள், பாதிப்படையாத இந்தியப்படையதிகாரி ஒருவர், தாம் பெரிய வீரர் என்று காண்பிக்க வேண்டிய, படைத்தள மைதானத்தில் வைத்து இக் குண்டினை வெடிக்கச் செய்திருக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். ஆனால் படை அதிகாரிகளோ, சீன ஆக்கமான கண்ணிவெடி ஒன்றினைப் பரீட்சித்து, அதன் தொடர்ச்சியான விளைவுகளை அறிந்துகொள்ள அதிகாரி ஒருவர் முற்பட்டபொழுது, ஏற்பட்ட எதிர்பாராத விபத்தே இது என்கிறார்கள்.

இந்தப் பேரழிவுக்கு எதுதான் காரணமாய் இருப்பினும், இந்தியப் படையினரைப் பொறுத்தவரையில் பெர்னான்டெஸ் இன் இழப்பு, பேரதிர்ச்சி தரும் ஒன்று தான். இவர் 1962 இல் நடைபெற்ற இந்தோனேசியாச் சண்டையிலும், 1965, 1971 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இந்திய–பாகிஸ்தான் போர்களிலும், பஞ்சாப்பில் பிரிவினைவாதிகளின் கிளர்ச்சியிலும், இலங்கையிலே தமிழ்ப் போராளிகளின் அரச எதிர்ப்புப் போராட்டங்களிலும், இந்தியாவின் சார்பிலே தலையிட்டுப் பணியாற்றிய அநுபவசாலி. பயங்கரவாதத்தை எதிர்த்து நடவடிக்கைகளை மேற்கொள்வதில் நிபுணர். காஷ்மீரில் இந்தியப் படையானது, கடந்த மாதம் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணித் தலைவரான ஜவெட் அஃமட் மிர் என்பவரைப் பிடித்தது உட்பட, பல வெற்றிச் சாதனைகளைப் புரியும் சந்தர்ப்பத்திலே, தமக்குப் பழக்கப்பட்ட காஷ்மீருக்கு இரகசியமாகச் சென்றிருந்த வேளையில் பெர்னான்டெஸின் மரணம் நேர்ந்திருக்கிறது.

புது டெல்லியில் பிரதமர் பி. வி. நரசிம்மராவின் கொங்கிரஸ் கட்சி அரசானது, காஷ்மீரில் மீண்டும் தேர்தல் நடத்துவது பற்றிப் பிரதேச அரசியற்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அதில் வெற்றி கண்டு வரும் வேளையில் பெர்னான்டெஸ் மரணமடைந்தமை, மேலும் கவலை தருவதொன்றே. எனினும், காஷ்மீர்ப் பிரிவினைவாதிகள் கடைசியிலே தனிமைப் படுத்தப் பட்டு விட்டனர். இந்திய அரசு, வெளிநாட்டு இராஜதந்திரிகளையும், சர்வதேசச் செஞ்சிலுவைக் குழுவையும் காஷ்மீர்ப் பள்ளத் தாக்குக்கு அழைத்துள்ளது. மனிதாபிமானச் சேவை நிறுவனங்கள், மருத்துவம், பிற சேவைகளில் ஈடுபட அனுமதிக்கப் பட்டுள்ளன.

எவ்வாறெனினும், பதாமி பாக் குண்டு வெடிப்பு, அரசின் தன்னம்பிக்கையோடு கூடிய அமைதி நடவடிக்கைக்கு உகந்த பருவம் கனியவில்லை என்பதை வெளிப்படுத்தும் ஓர் அடையாளமே யாகும். ஒரு மாதத்திற்கு முன்பு தான், போராளிகள் மாகாண சட்ட சபையின் முன்னாள் சபா நாயகர் வாலி முகமட் ஐட்டுவை, ஜம்மு நகரின் பள்ளிவாசலுக்கு வெளிப்புறத்தில் வைத்துப் படுகொலை செய்தார்கள். கடந்த இரு வாரங்களுக்கு முன்பு, ஜமியத்-உல்-முஹாஜிடீன் கிளர்ச்சியாளர் அரசுடைமைகளான வாகனங்களையும், கட்டடங்களையும் அழிப்பதில் ஈடுபட்டார்கள். சென்ற மாதத்தில் அரசுப்படையுடன் நடந்த போரில் 95 போராளிகள் மரணமடைந்தார்கள். கடந்த 4½ ஆண்டுகளில், 16,000 உயிர்கள் பிரிவினைவாதத்தில் இழக்கப் பட்டுள்ளன. ஆனால், இந்தத் தொகைக் கணிப்பு இறுதியானதல்ல.

*யூசுஃப் ஜமீலின் (காஷ்மீர்) செய்தியறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, ஜெஃபர்சன் பென்பேர்தி எழுதியது.*

★

## எரிபொருள் சேமிப்பு

குறைந்தளவு எரிபொருளில் கூடிய தூரம் செல்லக்கூடிய வாகன இயந்திரங்களைத் தயாரிப்பது விஞ்ஞானிகளின் நெடுங் காலக் கனவுகளில் ஒன்று. அத்துடன் வாகனங்கள் வெளியேற்றும் நச்சுப்புகையையும் இல்லாமற் செய்வதும் இன்னுமோர் இலட்சியம் என்று சொல்லலாம். ஜப்பானின் மோட்டார்க்கார் கொம்பனி-மஸ்டா-இக் கனவுகளை நனவாக்கும் முதற்படியில் நிற்கின்றது. விஞ்ஞான மொழியில் "NOX" எனப்படும் மாற்றீடை இது தயாரித்துள்ளது. எதிர் காலத்தில் இக்கருவி உலகம் முழுவதும் பரவும் வாய்ப்புண்டு. சூழல் மாசுபடுவதைத் தடுப்பதிலும், எரிபொருள் சேமிப்பிலும் இக்கண்டுபிடிப்பு பெரும் பங்கு வகிக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும் இதைத் தொடர்ந்து புதிய ரக மோட்டார் வாகன இயந்திரங்கள் செய்யப்படுவதற்கும் பெரும் வாய்ப்பு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராஜ தந்திரம்:

# கறுப்புக் கம்பள வரவேற்பு

**பாகிஸ்தான்**

**தலைநகர்**
இஸ்லாமாபாத்
**பரப்பளவு**
7, 96, 095 ச. கி. மீ
**மக்கள் தொகை**
12 . 48 கோடி
**மொழி**
உருது (ஆட்சிமொழி), பஞ்சாபி, சிந்தி, புஷ்து, பலூச்சி
**எழுத்தறிவு**
34%
**தனிவருமானம்**
380 டொலர்

ஒரு மாதத்துக்கு முன்பு றொபின் றஃபெல் உடைய வானூர்தி புதுடெல்லி விமானத் தளத்தில் இறங்கிய வேளையிலிருந்து, அப் பெண்மணி தோலைக் கொப்பளிக்க வைக்கும் சூரியக் கதிர்கள் போன்ற வெம்மை மிகுந்த அரசியற் சூழலில் நடக்க நேரிட்டது. அவரின் வருகைக்குப் பல நாள்களின் முன்பே, 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை அவரை வேண்டாத விருந்தாளியாகக் கொண்டு, அவருக்குக் கறுப்புக் கம்பளத்தை விரிக்க, மற்றப் பத்திரிகைகளும் அதன் வழியைப் பின்பற்றின. நாளந்தம் அவரின் விஜயங்களை இரக்கமற்ற முறையிலே தாக்கியும், முதற்பக்கக் கேலிச் சித்திரங்களையும், இகழ்ச்சியான ஒளிப்படங்களையும் வெளியிட்டும் தங்கள் வெறுப்பைக் கக்கின. அவருடைய கருத்துக்களை, நடத்தைகளை, உடைகளைக் கூடக் கடுமையாகக் கண்டனம் செய்தன. சில பத்திரிகைகள், அவரின் வாய் அகலத் திறந்து, அதனால் அவர் ஒரு கோமாளிக் குரங்காய்த் தோற்றுவதுபோலச் சித்திரங்களை வெளியிட்டன.

கடந்த வாரம், மீண்டும் துன்பந்தரும் அகௌரவத்துக்கு அவர் உள்ளானபோதும், அது அவரின் சொந்த நடத்தையின் பயனாக ஏற்பட்டதன்று. பல ஆண்டுகளாய் இந்தியாவிற்கு அமெரிக்காவிலிருந்து மிக உயர்ந்த பதவியாளர் வருகை தராத நிலையில், இப்பொழுது அத்தகைய ஒருவராய் வந்துள்ள அமெரிக்க அரசச் செயலர் ஸ்ட்ரோப் ரல்பொட் உடன் றொபின் இணைந்து கொண்டார். இவ்விருவரூடாகப் பத்திரிகையாளர்கள், அமெரிக்காவின் நையாண்டித்தனமான, மனத்தைப் புண்படுத்துகின்ற, அநாவசியமாகத் தலையிடுகின்ற போக்கினைப் பழி வாங்கினர் என்றே கூறவேண்டும். ஸ்ட்ரோப் றல்பொட்டின் வருகைக்கான நோக்கம், இந்தியா பாகிஸ்தானின் வெறுப்புணர்ச்சிகளை அமைதிப்படுத்துவதோடு, இவ்விரண்டு நாடுகளுக்குமிடையே நிலவும் அணுவாயுதப் பந்தயத்தை முடிவுக்குக் கொண்டுவருவதுதான். இந்தப் பந்தயமாகிய தீப்பொறியால் தென்னாசியா முழுவதுக்குமே ஆபத்து உண்டாகலாம்.

கடந்த ஓரிரு கிழமைகளிற் போலவே, போட்டியைக் கட்டுப்படுத்துவதற்கான வாய்ப்பு இப்பொழுதும் சாதகமானதாய் இல்லை. இந்தியா தனது தீர்மானத்தில் உறுதியாக இருப்பது போலவே, பாகிஸ்தானும் தனது இராணுவப் பலத்தைக் குறைத்து மதிப்பிடவும், பிரதமர் பெனாசிர் பூட்டோவின் ஆட்சியைப் பலவீனமானது



எனக் கருதவும் இடமளிக்கும் அணுவாயுதம் தொடர்பான எவ்வித உடன்பாட்டிற்கும் வர ஆயத்தமாயில்லை. அணுவாயுத சக்தி படைத்தோர் என்ற வசியத்தாற் கட்டுண்டிருக்கும் இந்தியர், தங்களின் கணிப்பீட்டின்படி அதனைப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்படும்பொழுது, தமக்குப் போழிவு ஏற்பட்டுப் வழிவாங்கப்படும் நிலை ஏற்படப்போவதில்லை என்று நினைக்கிறார்கள். ஐ. அமெரிக்கப் புலனாய்வின் கணிப்பின்படி,

++++++++++++++++++++

**இந்தியா பாகிஸ்தான் விரோதம் ஆழமாகின்ற போதும், அணுவாயுதப் போட்டியாளரான அவை, அமெரிக்காவின் "வேண்டாத் தலையீட்டினை" வெறுக்கின்றன.**

++++++++++++++++++++



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்தியா**
**தலைநகர்**
புதுடில்லி
**பரப்பளவு**
32, 87, 263 ச. கி. மீ
**மக்கள் தொகை**
87, 95, 00, 000
**மொழி**
ஹிந்தி (அலுவலக மொழி)
ஆங்கிலம் மற்றும் 18 அங்கீகரிக்கப்பட்ட மொழிகள்
**எழுத்தறிவு**
52. 11 வீதம்
**தனிநபர் வருமானம்**
350 டொலர்

ஹிரோஷிமாவில் பயன்படுத்தப்பட்ட (2 ஆம் உலக யுத்தத்தின் போது அமெரிக்காவால் ஜப்பானிய ஹிரோஷிமா, நாகசாகி நகரங்கள் மீது வீசப்பட்ட) குண்டின் அளவில் 12 அணுக்குண்டுகள் பாகிஸ்தான் வசம் உள்ளன. இந்தியாவிடமோ 20-க்கு மேற்பட்ட எண்ணிக்கையில் உள்ளன. முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவுள்ளதும், இந்திய அரசின் கீழ் உள்ளதுமான வடக்குக் காஷ்மீரில் இடம்பெற்றுவரும் வன்முறைகள் காரணமாக அயல் நாடுகளான இந்தியாவும், பாகிஸ்தானும் சீர்கெட்டு வரும் தமது உறவின் இறுதி விளைவாக, ஒரு கட்டத்தில் அணுவாயுதங்களைப் பயன்படுத்த நேரலாம்.

ஆற்றல்வாய்ந்த முதன்மையான வர்த்தகப் பங்காளராய் ஐ. அமெரிக்கா இருந்து வருவதால், அந்நாடு பற்றிய சாதகமும், பாதகமுமான கலப்புணர்வு இந்தியரிடையே நிலவுகின்றது. வர்த்தக உறவில், அவர்கள் அதன் மீது வைத்திருக்கும் அழுத்தமான நம்பிக்கை, அது தன்னை இந்தியாவின் மூத்த சகோதரன் என்று, தானே பாவனை செய்து கொண்டு இந்திய அரசியலிலே தன் தலையை நுழைத்துக் கொள்வதனால் இழக்கப்படுகின்றது. இதனால், தமது சுயகௌரவத்துக்குப் பங்கம் விளைவதாக அவர்கள் நினைக்கிறார்கள். பாகிஸ்தான் அணுவாயுதப் பயன்பாட்டைக் கைவிடவோ, அதனைச் சர்வதேசப் பரிசோதனைக்கு அனுமதிக்கவோ மறுக்கிறது. அவ்வாறு நடவடிக்கை எடுப்பதானால், அதே நடவடிக்கை இந்தியா மீதும் எடுக்கப்படவேண்டும் என்று பாகிஸ்தான் வலியுறுத்துகிறது "பாகிஸ்தானின் எந்த அரசாங்கமும், ஐ. அமெரிக்காவுக்கு இந்தப் பாரபட்சமான சலுகையை வழங்கிவிட்டுப் பிழைத்திருக்க முடியாது" என்று, பாகிஸ்தானின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறுகிறார்.



பரஸ்பரம் இருநாடுகளும் எதிரெதிராகக் கூறும் குற்றச்சாட்டுக்களாகிய நெருப்பின் நடுவிலே சிக்கிக்கொண்டு, சமரசம் செய்ய முன்வந்த ஐ. அமெரிக்கா தத்தளிக்கிறது. 47 ஆண்டுகளுக்கு முன்பு பிளவுபடாதிருந்த பிரிட்டிஷ் இந்தியா, பிளவுபடக் காரணமாயிருந்த வரலாற்றை மறவாத துணைக்கண்டம், இன்று அந்நியமான ஒரு நாடு மேலாண்மை கொண்டு நியாயந் தீர்க்க வருவதைச் சந்தேகக் கண்களோடு நோக்குவது இயல்பே. 'முன் தடுப்பு இராஜதந்திரமே' (Preventive Diplomacy) தமது குறிக்கோள் என்று, ஐ. அமெரிக்க அரசுச் செயலாளரான வொறன் கிறிஸ்ரோபர் எவ்வளவுதான் வலியுறுத்தினாலும், அந்த முன்தடுப்பு தனக்கல்ல, மற்றதற்கே என்று இரு பகுதிகளும் (இந்தியாவும், பாகிஸ்தானும்) வேண்டுகின்றன.

ரஃபேலை வரவேற்ற ஸ்நைப்பர் நெருப்புக்கு, ரல்போட் முகங்கொடுக்க வேண்டியதாய் இருக்கவில்லை என்பதில் எவ்வித ஐயத்திற்கும் இடமில்லை. புது டெல்கியின் கொள்கை ஆய்வு நடுவத்தின் சிரேஷ்ட பகுப்பாய்வாளர் பாபனி சென் குப்தாவின் கருத்துப்படி ரஃபெல் முதலில் இந்தியாவிற்கு வருகை தந்தபொழுது, அந்த வருகையானது, "காத்திரமான பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையை உருவாக்கியது." ஆனால், அதே வேளையில், ஐக்கிய அமெரிக்கா (பென்ரகன்) எவ் 16 ஜெற் போர் விமானங்களைப் பாகிஸ்தானுக்கு வழங்குவதற்கான பிரேரணையை முன்வைத்தது. இதனோடு, ரல்பொட்டும் இஸ்லாமாபாத்துக்குச் சென்றார். இவ்விரு நிகழ்ச்சிகளும், அமெரிக்காவின் உள்நோக்கம் பற்றிய ஐயத்தை இந்தியாவிற்கு ஏற்படுத்தின.

வோஷிங்ரனில் புதியதொரு சக்தி தொழிற்படுவது, மிக அண்மைக் காலத்திலேதான் வெளிச்சத்துக்கு வந்தது. குறிப்பிட்ட ஒரு சிறிதளவு அணுவாயுதத் திறனைப் பெற்றிருப்பதற்கு, பாகிஸ்தான் வடகொரியா மற்றும் சில எல்லை வரையறைப்பட்ட அணுச் சக்தி, சார்புநாடுகளுக்கு ஐ. அமெரிக்கா இசைவு வழங்கியது என்பது சாத்தியமான உண்மையாகலாம். ரல்பொட்டினுடைய நோக்கம், இந்த இசைவினை ஓர் ஒழுங்கிற் கட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தி வைத்திருப்பதே. மாற்றீடாக, இஸ்லாமாபாத்துக்கு 38எவ்–16 போர் விமானங்கள் ஏற்கனவே விநியோகிக்கப்பட்டுவிட்டன. வெள்ளை மாளிகை, பாகிஸ்தானின் அணுஆயுதச் செயல்திட்டம் செயலிழக்கப்படுவதைப் பரிசீலிக்க விரும்புகிறது. இந்திய உப கண்டத்தில் அணுவாயுத ஆய்வு முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தி வைப்பதும், அதன் நோக்கமாக இருந்து வருகிறது. பாகிஸ்தான், ஜெட் விமானங்கள் என்ற தூண்டில் இரையினை ஏற்கத் தயங்கும் வேளையில், இந்தியாவோ தனது பகையாளியான பாகிஸ்தான் பக்கம் அமெரிக்கா சாய்வதாகக் கவலை கொள்கிறது.

ஒவ்வொரு நாடும் அதிகமாக, மிக அதிகமாக எதிர்பார்க்கிறது, ஜனாதிபதி பில் கிளின்ரனின் போக்கு, 1960 இன் தொடக்கத்தில் ஜோன் எஃப் கென்னடியின் போக்கை ஒத்ததாய், நல்லெண்ணம் நிலவிய காலத்தை இந்தியருக்கு நினைவூட்டுவதாய் இருக்க, ஜோர்ஜ் புஷ் உடைய பின்னவர் (அவர், பின்னர் பதவிக்கு வந்தவர்.) 1990 இல் நிறுத்தப்பட்ட ஆயுத விற்பனையை, பொருளாதார உதவியைப் புதுப்பிப்பவராய், பூட்டோவின் வார்த்தையிற் சொல்வதானால், ''அமெரிக்காவின் நேசரில் நேசராய்'' அவரது போக்கு அமையும் எனப் பாகிஸ்தான் எதிர்பார்க்கிறது. ஆனால் கிளின்ரன், பாகிஸ்தானுக்கு ஆயுதம் வழங்காமைக் கோட்பாட்டில் உறுதியாக இருந்து கொண்டே, அமெரிக்காவின் இந்தியத் தூதுவரை நியமிப்பதில், அவரின் பெயரைக் குறிப்பிடுவதிற் கூட ஈடுபடாது 14 மாதங்களைக் கடத்தி வந்திருக்கிறார்.

இந்தியத் தூதர்ப்பதவி, முன்னாள் கொங்கிரஸ்காரரும், ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவரும் ஆசிய விவகாரங்களில் நிபுணருமான ஸ்டீபன் சோலாஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், பாதுகாப்புச் சோதனைக்கு அவரை உள்ளாக்கி, அதிலிருந்து இறுதியாக அவர் விடுபட்ட போதிலும், அவரின் பெயர் வாபஸ் பெறப்பட்டது. பாதுகாப்புக் கொள்கை வகுக்கும் அமைச்சின் இரண்டாம் செயலாளராய் உள்ளவரும், முன்பு எகிப்தில் தூதுவராய்ப் பணியாற்றியவருமான ஃபிறாங்க் விஸ்நரின் பெயரைக் கிளின்ரன் குறிப்பிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், இந்திய அதிகாரிகள் முன்னவரின் நியமனத்திலும் பார்க்க, இவரின் நியமனத்திற் கூடிய அதிருப்தி கொண்டுள்ளார்கள். எவ்-16 களைப் பாகிஸ்தானுக்கு அனுப்ப வேண்டும் என்ற பிரேரணையிற் சம்பந்தப்பட்டவர் என விஸ்நரை அடையாளங் கண்டமையே, இந்த அதிருப்திக்குக் காரணம்.

இந்தியா, இவ்விருவருக்கும் பதிலாக, வோஷிங்ரனிலுள்ள கர்னீஜி உலக சமாதான அறநிதிய இணை அதிகாரியான செலிக் ஹறிசனையே தூதுவராக ஏற்க விரும்புகிறது, ''இந்தியா தன்னளவில் உலக சக்தியாக விளங்குவதால், அது தன்னை இரண்டாந்தர நாடாகக் கருதுவதை விரும்பவில்லை'' என்று ஏற்றுக் கொண்டவர் செலிக் ஹரிசன். கிளின்ரனோ, தென்னாசியாவை முதலாந்தரத்தில் வைத்து நோக்குவதை விரும்பவில்லை. அவர், கடந்த ஆண்டு அமெரிக்கா இந்தியாவில் இட்ட முதலீடு 1.1 கோடி டொலர் என்பதையும், இந்த முதலீடு உலக நாடுகள் பலவற்றிலும் அது இட்டுள்ளதன் 0.3 % என்பதையும், ஐ.அமெரிக்காவின் மொத்த ஏற்றுமதியில் இந்தியா பெறுவது 0.6 % என்பதையும் கணக்கிற் கொண்டு அதற்கு முக்கியத்துவம் வழங்கத் தயாராய் இல்லை. புது டெல்கி தன்னை நிலைப்படுத்துவதிற் கஷ்டமான காலம் ஒன்றுக்கு முகங்கொடுக்க வேண்டியிருப்பதாகவும், இன்றைய தலைமை (ஜனாதிபதி) வெளிநாட்டுக் கொள்கையற்றதாய் உள்ளதாகவும், வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் வாதிக்கிறார்.


ரல்பொட்டைப் பொறுத்தவரை, காஷ்மீர்ப் பிரச்சனைக்குத் தீர்வுகாணக் கூடிய முன்னாயத்தமோ, அணுவாயுத இராஜதந்திரம் பற்றிய நிச்சயமான அடித்தளமோ அவரிடம் இல்லை. ஐ. அமெரிக்க மேற்சபையினர், பாகிஸ்தானுக்கு எவ் - 16 களை விநியோகிப்பதைக் கடுமையாகக் கண்டிக்கிறார்கள். அணுவாயுத அபேட்சை கொண்டுள்ள இரு நாடுகளில் ஒன்றுக்கு, மேற்குறித்த உதவியை வழங்குவது பிழையான சைகை அடையாளம் என்பது அவர்களின் கருத்து. அணுவாயுதக் கொள்கையைக் கைவிடுதலாகிய கட்டுப்பாட்டினை இந்தியா ஏற்க மறுக்கிறது. சீனா அணுவாயுதத்தைக் கைவிடும்வரை, இந்தக் கட்டுப்பாட்டுக் கருத்து அர்த்தமற்றது என்பது அதன் முடிவு.

இந்திய–பாகிஸ்தான் உட்பகையானது, அடிப்படையிலே திசை திருப்பும் ஒன்று என நம்பும் கர்னீஜி அறப்பாதுகாப்பு நிதியத்தின் சிரேஷ்ட இணை அதிகாரி பெனலா நியூபேக்: ''தென்னாசியா ஆபத்தைத் தன்னுள்ளேயே கொண்டிருக்கும் ஒரு பிரதேசம். அமெரிக்காவின் திடீர்த்தாக்குதலும், தடைகளும் எவ்விதப் பயனையும் விளைவிக்கப் போவதில்லை. நீண்டகாலமாக நிலவும் இந்தக் கருத்து, எதிர்வாதத்திற்கு உரியதன்று'' என்கிறார்.

''ரைம்,'' ஏப்ரல் 11, 1994.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க யுத்த விமானங்கள், தமக்குச் சொந்தமான இரண்டு உலங்குவானூர்திகளைத் தாக்கி அழித்துள்ளன.



*நண்பனை நண்பன் தாக்கி அழித்தல். மனிதன் விட்ட பிழையும், அசாதாரண விதிகளும் விபத்தின் காரணங்கள்.*

தனது நிலைமீது பந்தைச் செலுத்திவிட்டுத் தவிக்கும் உதைபந்தாட்ட வீரனின் நிலையில் இன்று அமெரிக்கா இருக்கின்றது. வளைகுடா யுத்தத்தின் பின் குர்திஷ் மக்களுக்கெனப் பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட வடக்கு ஈராக்கை நோக்கிப் பறந்து கொண்டிருந்த இரண்டு அமெரிக்க உலங்கு வானூர்திகள் இரண்டு அமெரிக்க யுத்த விமானங்களாற் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன. ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி அதிகாலை இச்சம்பவம் நடந்துள்ளது.

வழியை நோட்டமிடும் அமெரிக்க விமானப்படையின் அவாக்ஸ் (Awacs) விமானத்தின் றடார் திரையில் இந்த பிளாக் ஹோக் (Black Hawks) ரக இரண்டு உலங்கு வானூர்திகளும் தென்பட்டுள்ளன. அவாக்ஸ் விமானத்தில் இருந்த அதிகாரிகள் தமது படைக்குச் சொந்தமான இரண்டு எப் 15 சீ (F-15C) யுத்த விமானங்களை வானூர்திகள் யாருக்குச் சொந்தமானவை என்பதை நெருங்கிப் பார்க்கும்படி கட்டளை இட்டுள்ளனர். வானூர்திகளுக்கு அண்மையில் இரு தடவை பறந்து பார்வையிட்ட விமானிகள் மிகவும் பாரதூரமான தவறிழைத்து விட்டனர். ஈராக் இராணுவம் பாவிக்கும் ஹின்ட் (Hind) ரக ருஷ்யத் தயாரிப்பு உலங்கு வானூர்திகள் என்ற செய்தியை அவர்கள் ''அவாக்'' அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளனர். இச்செய்திக்கு உடன் மறுமொழியாக இரண்டு உலங்கு வானூர்திகளையும் சுட்டு வீழ்த்தும்படி அவாக் அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர். எப்-15 சீ யுத்த விமானங்கள் இரண்டும் காலதாமதமின்றி இரண்டு உலங்கு வானூர்திகளையும் தமது எறிகணை மூலம் சுட்டுத் தரைக்கு வீழ்த்தி உள்ளன.

**ஈராக்**
**தலைநகர்**
பாக்தாத்
**பரப்பளவு**
4, 38, 446 ச. கி மீ
**மக்கள் தொகை**
1, 93, 00, 000
(அரபுக்கள் 79 வீதம்)
(குர்திஷ் 16 வீதம்)
**மொழி**
அரபி (ஆட்சி மொழி) மற்றும் குர்திஷ்
**எழுத்தறிவு**
60 வீதம்
**நாணயம்**
இராக்கி தினார்
**தனிநபர் வருமானம்**
2,400 டொலர்

இந்தத் தாக்குதலில் இருபத்தியொரு உயிர்கள் பலி ஆகியுள்ளன. 15 நட்பு நாட்டு அதிகாரிகளும் மிகுதி குர்திஷ் இனத்தவர்களுமென அடையாளங் காணப்பட்டுள்ளனர். இதன் காரணமாக அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் வில்லியம் பெரி (William Perry) தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கான தனது பயணத்தை ஒத்திப் போட்டுள்ளார். செய்தியாளர் சந்திப்பில் அவர் பின்வருமாறு விளக்கம் கூறியுள்ளார்: ''விமான ஓட்டிகளின் பிழையும், வேறு நடைமுறைப் பிழைகளும் இதிற் கலந்திருக்கின்றன'' என. தான் இரண்டு வித விசாரணைகளுக்கு உத்தரவு கொடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். முதலாவது விசாரணை மேற்கூறிய சம்பவத்தைச் சுற்றி இருக்கும். இரண்டாவது விசாரணை ஈராக்கிலும், பொஸ்னியாவிலும் எதிரிகளின் விமானங்களுக்குத் தடைவிதிக்கப்பட்ட பிரதேசங்களில் நட்பு விமானங்கள் சந்திக்கும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறை பற்றி இருக்கும். பத்திரிகையாளர்களின் கேள்வி ஒன்றுக்குப் பதில் தரும்போது அவர் பின்வரும் முக்கியமான தகவலை வெளியரங்கப்படுத்தியுள்ளார். எதிரிகளின் விமானங்களைத் தாக்கு முன் எச்சரிக்கை கொடுப்பது பொஸ்னியாவில் அவசியம்; ஆனால் ஈராக்கில் எச்சரிக்கை கொடுக்கத் தேவையில்லை. இதுவே இந்த நிகழ்வுக்குக் காரணமாக அமைதுள்ளது.


யுத்த மோதற் காலங்களில் நண்பனை நண்பன் தாக்கும் சம்பவங்கள் நிறைய நடந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைத் தடுப்பதில் இராணுவ அணிகள் அதிகம் கவனம் செலுத்துகின்றன. பிரத்தியேக அடையாளங்கள், சமிக்ஞைகள் போன்றவை இத்தேவைக்காகத் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. வளைகுடா யுத்தத்தில் நட்பு நாடுகளுக்குப் பொதுவாக 148 இராணுவத்தினர் இறந்துள்ளனர். இதிற் காற் பங்கினர் நண்பனின் தாக்குதலுக்குப் பலியானதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இதை மிக மிகக் குறைவு என்றே சொல்லவேண்டும்.

எப்-15 விமானங்களை இச்சம்பவத்தில் ஓட்டியவர்கள்; மேற்கூறிய உலங்கு வானூர்திகளுக்கு மேலாகவும், வாற் பகுதியோரமாகவும் விமானங்களைச் செலுத்திய படியால், ''அமெரிக்க இராணுவத்திற்குச் சொந்தமான வானூர்தி'' என்ற ஆங்கிலச் சொற்களையும், இலச்சினையையும் அவர்கள் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அத்துடன், அவர்கள் அடையாளங் காண்பதில் பெருந் தவறு செய்துவிட்டனர். ருஷ்யத் தயாரிப்பு வானூர்தி சிறிய செட்டைகளுடனும், கூர்மையான மூக்குடனும் காணப்படுகின்றது. அமெரிக்கத் தயாரிப்புக்கு, மேலதிக எரிபொருட் கொள்கலன்களை வெளிப்புறத்திற் பொருத்தும் வசதி உண்டு. அவ்வாறு பொருத்தியபின் எறிகளை வரிசையுடன் செல்லும் ருஷ்ய உலங்குவானூர்திபோல் அது தோற்றுவதாகவும் சொல்லப்படுகின்றது. இந்த விஞ்ஞான யுகத்தில் கண்ணாற் பார்த்து அடையாளங் காணுகின்ற நடைமுறை, நம்பிக்கை அற்றதொன்றாகும். அடையாளங் காண்பதில் நடந்த தவறுதான், இந்தத் துன்பகரமான சம்பவத்திற்குக் காரணமென்று, திட்டவட்டமாகக் கூறிவிடலாம். அதே சமயத்தில், கணனிப் பொறி போன்றவற்றிடம் நண்பனா? எதிரியா? என்று இனங்காணும் பொறுப்பை ஒப்படைப்பதும் ஆபத்தானதென்று, நிபுணர்கள் கருதுகின்றனர். கண்ணுக்குப் புலப்படாத எதிரியைச் சுட்டு வீழ்த்தும் தொழில் நுட்பமும், செயல் முறைக்கு வருவதற்குக் கால தாமதம் ஆகலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆகவே, மனிதக் கண்




களுக்கு மாற்றீடாகக் கருவிகள் தயாரிக்கப்பட்டிருந்தாலும், செயல் முறையில் இன்னும் புகுத்தப்படவில்லை. புகுத்தப்படக் காலதாமதமாகும் என்பதே, இன்றைய நிலை.

சந்தேகத்திற்கிடமான முறையில் வான் பரப்பிற் பறக்கும் விமானங்களை அடையாளங் காண்பதற்கு, பெரும்பாலான அமெரிக்க யுத்த விமானங்களில் ஐ.எஃப், எஃப் என்ற சாதனம் பொருத்தப்பட்டுள்ளது. இது, நண்பனா? எதிரியா? என்று வினவும்போது மறு விமானத்திற் பொருத்தப்பட்டிருக்கும் இலத்திரனியற் கருவி தகுந்த பதிலளிக்கும். இச்சம்பவத்தில் கேள்வி கேட்கப்பட்டதா? பதில் கொடுக்கப்பட்டதா? போன்ற விபரங்கள் இன்னும் வெளிவரவில்லை. பாதுகாப்புச் செயலாளர் வில்லியம் பெரி ஒத்துக்கொண்டதுபோல, ஈராக் வான் பரப்பில் அமெரிக்க யுத்த விமானங்கள் பிரத்தியேகத் தாக்குதல் விதிகளைக் கடைப்பிடிக்கின்றன. பொஸ்னியாவில் என்றால், விமானம் ஒன்றைத் தாக்கமுன், நிலத்தில் உள்ள கட்டுப்பாட்டு அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளல் வேண்டும். ஆனால் ஈராக்கில் இது தேவையில்லை. வளியில் இருந்தவாறு தீர்மானம் செய்யலாம். பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதில் கொடுத்த பெரி அவர்கள், இந்த முரண்பாடான விதி மாற்றப்படும் என்று தெரிவித்தார்.

குர்திஷ் இனத்தவர்களுக்கும், நட்பு நாடுகளுக்குமிடையிற் பாலமாக விளங்கிய தொடர்பு மையம், இந்த விபத்தால் அழிக்கப்பட்டுள்ளது. உலங்கு வானூர்திகளில் இருந்த அதிகாரிகள் அனைவரும், இந்த மைய அலுவலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மையத்தின் தலைவர் அமெரிக்க இராணுவக் கேணல் தொம்சனும், அவருடைய உதவியாளர் அமெரிக்க இராணுவக் கேணல் முல்கேர்னும் இதிற் கொல்லப்பட்டனர். இங்கிலாந்து, பிரான்ஸ், துருக்கி, ஆகிய நாடுகளைச் சேர்ந்த உயர் இராணுவ அதிகாரிகளும் இதில் மாண்டுள்ளனர். இந்தச் சம்பவத்தின்பின், குர்திஷ் பிரதேசத்தின் மீது சில தாக்குதல் நடவடிக்கைகளை சதாம் ஹுசைன் ஆரம்பித்து உள்ளார்.

அதேசமயத்தில், அமெரிக்கக் கொங்கிரஸ் சபையிற் சில கண்டனக் குரல்கள் கேட்க ஆரம்பித்துள்ளன. ஈராக்கில், அமெரிக்கர் தொடர்ந்தும் நிலை கொள்ள வேண்டியது அவசியந்தானா? என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. இது அபாயங்கள் நிறைந்த இடம். ஆகையால் அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் கூடுதலான கண்காணிப்புச் செலுத்த வேண்டும் என்று, வெளியுறவுக் குழுத் தலைவர் லீ ஹமில்ரன் தெரிவித்துள்ளார். பாரிய விபத்துக்களின் பின், கண்டனங்கள் எழுவதும், மாற்றங்கள் நிகழ்வதும் உலக இயல்பு . . .

''நியூஸ்வீக்,'' 25 ஏப்ரல், 94



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானில் அரசியல் நில நடுக்கம்.

| | |
|---|---|
| ஜப்பான் | |
| தலைநகர் | டோக்கியோ |
| பரப்பளவு | 3, 77, 765 ச. கி. மீ |
| மக்கள் தொகை | 12, 45, 00 000 |
| எழுத்தறிவு | 99 வீதம் |
| நாணயம் | யென் |
| தனிநபர் வருமானம் | 25, 430 டொலர் |
| மொழி | ஜப்பானிஸ் |

பொருளாதாரம் எவ்வாறு இருப்பினும், ஜப்பான் அரசியல் தளம்பல் நிலையில் உள்ளது. சென்ற வருடம் நடந்த பொதுத் தேர்தலில், 38 வருடங்கள் ஆட்சி செய்த ஜனநாயகக் கட்சி (எல். டி. பி) தோல்வி கண்டுள்ளது. நிதி மோசடி, பரவலான ஊழல் போன்ற குற்றச்சாட்டுக்கள் இந்தக் கட்சி மீது சுமத்தப்பட்டுள்ளன. அத்துடன், பின்னணியில் இருந்து கட்சியை இயக்கிய மூத்த தலைவர்கள் மீதும், இளையவர்கள் வெறுப்புக் காட்டியுள்ளனர். கட்சி நடைமுறைகளையும், அரசிற் பதவி வகிப்போர்களையும், செல்வாக்கு மிகுந்த இத்தகைய ஜாம்பவான்கள் ஆட்டிப்படைத்துள்ளனர். அறுபதுகளிலும், எழுபதுகளிலும் காக்குயி தானக்கா என்பவர் இவ்வாறு செயற்பட்டுள்ளார். இவருடைய அரசியற் சித்தாந்தம், பின்வரும் இரண்டு வரிகளில் அடக்கம். இளம் அரசியல்வாதிகளுக்குப் பணம் தேவைப்படும் போதெல்லாம், நிறைய உதவுங்கள். அவர்களுடைய அசைக்க முடியாத கட்சி விசுவாசத்தைபெற, ஒரே வழி இதுதான். இதை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதியைத் திரட்ட, தொடர்ச்சியான பல ஊழல்களை எல். டி. பி அரசு செய்துள்ளது. தானாக்கா போன்ற இன்னுமொருவர், அண்மைக்காலத்திற் பெரும் அவமானத்திற்கு ஆளாகிய ஷின் கானேமாறு என்ற பழுத்த அரசியல்வாதியாவார். பல வருடங்களாக, கட்சியில் இவர் வைத்ததே சட்டமாக இருந்துள்ளது. நிதி மோசடிக் குற்றச் சாட்டில், இவர்மீது நீதி விசாரணை தற்போது நடைபெறுகின்றது.

ஜோன் டோவர் (John Dower) என்ற அமெரிக்க வரலாற்று ஆசிரியர், ஜப்பானிய அரிசியலை, இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்பும் பின்பும் என்று வகைப் படுத்தி ஆய்வு செய்துள்ளார். அவருடைய முடிவுகள் பின்வருமாறு:– கட்டுப்பாடுகள் இன்றி, பதவிக்குரிய அதிகாரங்களுடன் விளங்கும் அரசியல் தலைவர்கள் ஜப்பானில் இல்லை. இந்த நிலை, யுத்தத்திற்கு முன்பும் பின்பும் நிலவுகின்றது. உயர் பதவியிற் காணப்படும் தலைவர்கள் வெறும் பொம்மைகளே. நிர்வாக சேவையும், இராணுவமும் நாட்டின் தனிப்பெரும் சக்திகளாகக் காணப்படுகின்றன. யுத்தத்தின் பின் ஜப்பானை ஆட்சிசெய்த அமெரிக்கத் தளபதி மெக்ஆர்தர் (Mac Arthur), இராணுவ ஆதிக்கத்தை நிரந்தரமாகப் பின்னுக்குத் தள்ளியுள்ளார் ஆனால், நிர்வாகச் சேவையோ இன்றும் பலம் குன்றா நிலையில் இருக்கின்றது.

> "இவ்வருடம் உட்பட, ஆறு வருடங்களில் ஆறு பிரதமர்கள் பதவி மாறியுள்ளனர்."

முற்போக்கு நாடுகளின் முதுகெலும்பு, அதன் நிர்வாக சேவையே என்பர். தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட அரசியல் வாதிகள், தமது பதவியைக் காண்பதிற் சிரத்தையாக இருப்பர். ஆனால், நாட்டின் நாளாந்திர இயக்கம் நிர்வாகச் சேவையின் கையில் இருக்கின்றது. எனினும், ஜப்பானைப் பொறுத்தளவில் நிர்வாக சேவையினரின் அதிகாரம் உச்சநிலைக்குப் போயுள்ளது. மக்கள் பிரதிநிதிகள் இரண்டாம் பட்சமே. ஜப்பானின் மிகச் சிறந்த பட்டதாரிகள் நிர்வாக சேவையில் இணைகின்றனர். இந்த நாட்டின் முடிக்குரிய இளவரசர், தனது மனைவியாகத் தெரிவு செய்த இளம் பெண்ணும், அவருடைய தந்தையும் நிர்வாகச் சேவை உயர் அதிகாரிகள் என்பது, தற்செயல் விபத்தல்ல. அரசியல்வாதிகள் தங்கள் போட்டிகளையும், விளையாட்டுகளையும் நடத்திக்கொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருக்க, கொள்கை வகுத்தல் தொடக்கம், நடைமுறைப்படுத்தல் வரை நிர்வாகச் சேவையினரே நடத்தி வருகின்றனர். இந்த அசாதாரண நிலை, அரசியல்வாதிகளுக்கும், ஆட்சி அதிகாரத்திற்கும் உள்ள இடைத்தூரத்தைப் பெரிதாக்கியுள்ளது. உறுதியான தலைமைத்துவம் தோன்றாததற்கு, இது தகுந்த காரணமாய் அமைகின்றது. தலைநகர் ரோக்கியோவிலுள்ள நிர்வாக உயர்பீடத்தை மீறி, ஜப்பானியப் பிரதமர்கள் செயலாற்ற முடியாத நிலை பலகாலமாக நிலவுகின்றது. நிர்வாகச் சேவையினரை மட்டந் தட்டி, தமக்குரிய அதிகாரங்களை அரசியல்வாதிகள் பறித்தெடுப்பது எளிதானதொன்றாகத் தோன்றவில்லை நிர்வாகச் சேவையினருக்கு அடுத்த படியாக, நாட்டின் தொழிலதிபர்களும் பெரும் சக்தியாக விளங்குகின்றனர். இரண்டும் ஒருமித்துச் செயற்படும்போது, அரசியல்வாதிகள் செய்வதறியாது தவிப்பது வெளிப்படை.

சென்றவருடம் லிபறல் ஜனநாயகக் கட்சி தோல்வியுற்ற பின், இதிலிருந்து வெளியேறிய இளம் அதிருப்தியாளர்களும், வேறு சிறிய கட்சிகளும், ஒரு கூட்டாட்சியை ஏற்படுத்தியுள்ளனர். இந்தக் கூட்டில், வடகொரிய அபாயத்தை எதிர்கொள்ள ஆயுதப் பலத்தைக் கூட்டவேண்டும் என்ற கட்சியுடன், எதுவரினும் ஜப்பான் நிராயுத பாணியாகவே இருக்க வேண்டும் என்ற கட்சிகளும் இருக்கின்றன. ஆகவே, உறுதியான வேலைத்திட்டத்தை இந்த அரசினால் அமுலாக்க முடியவில்லை. பிரதமர், அமைச்சர்கள் ஆகியோருக்குக் கொள்கை வகுத்தல், அமுலாக்கல் போன்ற அதிகாரங்களைப் பெற்றுக் கொடுக்கவிருப்பம் இருப்பினும், இயலாமைக்கு இன்னும் சில காரணங்கள் உண்டு. எல்.டி.பி யின் தோல்விக்குப் பின், பிரதமராக இருந்த மொறிகிரோ கொசக்காவா அரசியற் சீர்திருத்தச் சட்டமொன்றைப் பதிவு செய்துள்ளார். இவர், எட்டு மாதங்கள் மாத்திரம் பிரதமராக இருந்துள்ளார். இவருக்குப்பின், இதே மனப்



புதிய பிரதமருக்கு வாழ்த்துக்களும், தலையிடியும்.

பான்மையுள்ள இளைஞர் ருசுற்றோமு ஹற்றா பிரதமராகப் பதவியேற்றுள்ளார். சென்றவருடம் வரை, இவர் எல். டி. பி அங்கத்தவராக இருந்துள்ளார். இந்தக் கூட்டாட்சியால், அரசியற் சீர்திருத்தம் போன்ற முக்கியமான தொன்றையும் செய்துவிட முடியாதென்று, அவருக்கு நன்றாகத் தெரியும். இவருடன் சேர்த்து, கடந்த ஆறு வருடகாலத்தில் ஜப்பானியப் பாராளுமன்றத்தில் ஆறு பிரதமர்கள் பதவி வகித்துள்ளனர். நால்வர் எல். டி. பி கட்சியினர். மிகுதி இருவர், கூட்டு அரசைச் சேர்ந்தவர்கள்.

ருசுற்றோமு, அண்மையிற் கொள்கைப் பிரகடனம் ஒன்றைச் செய்து உள்ளார். இது வரை காலமும் நடவாத ஒன்றென, இதை வர்ணிக்கலாம். ஜப்பானின் பழைமை வாய்ந்த வரிச்சட்டங்களைத் திருத்தப் போவதாகவும், வடகொரியாவுக்கு எதிராக ஐ. நா கொண்டு வரும் தடைகளுக்கு வாக்களிக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார். வரிச்சட்டத் திருத்தங்களைக் கொண்டு வரும்வரை பதவியில் இருப்பது, சந்தேகமாய் இருக்கின்றது. தொடக்கத்தில் இவருக்கு ஆதரவாக இயங்கிய சோசியல் ஜனநாயகக்கட்சி, இவருக்கு எதிரியாக மாறி எல். டி. பிக்கு நண்பனாகி உள்ளது. இவருடைய ஆட்சி, குறைந்த தொகை அங்கத்தவர்களைக் கொண்டதாகும். 511 அங்கத்தவர்கள் கொண்ட கீழ்ச் சபையில், இவருக்கு 182 அங்கத்தவர்களின் ஆதரவு மாத்திரம் உண்டு.

எனினும், இவருடைய கொள்கைப் பிரகடனத்தை வெறும் வாய்ப் பேச்சு என்று ஒதுக்கி விட முடியாது. ஒரு முன்மாதிரி முயற்சி என்ற பெருமை அதற்கு உண்டு.

இவர் தனது பதவியைக் காப்பாற்ற, ஒரு வழி உண்டு. எல். டி. பி கட்சியில் இருக்கும் இளம் அங்கத்தவர்களைத் தன் பக்கம் வரச் செய்யலாம். ஆனால், இதை அவர் செய்தால், ஜப்பானின் பழைமை வாய்ந்த அரசியல் விளையாட்டை இவரும் தேடிக்கொண்டதாக முடியும். எதை வெறுத்து ஒதுக்கினாரோ, அதை, தானே செய்த நிலை ஏற்பட வாய்ப்புண்டு. அத்துடன், எல். டி. பி. யும் சும்மா இருக்கப் போவதில்லை. 32 அங்கத்தவர்கள் கொண்ட கூட்டு ஆட்சியிற் பங்காளியான புதிய ஜப்பான் கட்சியைத் தம் பக்கம் எடுக்க, அவர்கள் தற்சமயம் பேரம் பேசுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. பிரதமர் கொசக்காவா அகன்ற பின், ஜப்பான் அரசியலிற் பல நாள்களாகப் பெருங் குழப்பம் நடைபெற்றுள்ளது. மீண்டும் அந்த நிலை வராதென்பதற்கு, ஒரு வித உத்தரவாதமும் இல்லை.

''நியூஸ் வீக்'' குக்கு ரோக்கியோவிலிருந்து

எழுதியவர் :- பில் பொவெல்.

'' (F) பார் ஈஸ்ரன் எக்கொனோமிக் றிவியூ'' வுக்காக ரோக்கியோவிலிருந்து

எழுதியவர்:- சால்ஸ் ஸ்மித்.

''நியூஸ் வீக்'' மே 02, 1994.

''(F) பார் ஈஸ்ரேன் எக்கொனோமிக் றிவியூ''

மே, 12, 1994.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகொரியா பணிய மறுக்கின்றது

## தென்கொரியா போருக்குத் தயாராகின்றது

இனம், மதம், மொழி, கலாசாரம் ஆகியவற்றைப் பொதுவாகக் கொண்ட இரு நாடுகள் இன்று மோதல் நிலையில் எதிரும், புதிருமாக நிற்கின்றன. இருநாட்டு எல்லையில் இவ்வாறான இராணுவக் குவிப்பு வேறு எங்கனும் காணோம் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்தக் கட்டத்தில் வடகொரியாவின் பேச்சுக்களும், நடவடிக்கைகளும் தென்கொரியாவை மேலும் தனது இராணுவ பலத்தைக் கூட்டத் தூண்டியுள்ளது. அண்மையில் வடகொரிய உயர் அதிகாரி ஒருவர் தென்கொரியத் தலைநகரை ''நெருப்புக் கடலில்'' மிதக்க விடத் தாம் தயார் என்று தெரிவித்துள்ளார். இன்னுமொருவர் ஐ. நா உத்தேசித்திருக்கும் தடைகள் தமது நாட்டின் மீது செய்யப்படும் ''போர்ப் பிரகடனம்'' என்றும் தெரிவித்துள்ளார். போர் ஆபத்தை எதிர்கொள்ளத் தென்கொரியா ஓசைப்படாமல் தயாராகி வருகின்றது. ஆனால் ஓர் உடன் மோதல் நிலையைத் ,தவிர்க்கத் தென்கொரியாவும் அமெரிக்காவும் மிகவும் அவதானமாக இருக்கின்றன. கறுப்புத் துணியைக் கண்ட காளை போல் வடகொரியத் தலைவர் கிம் இல் சுங் திடீர்த் தாக்குதல் நடத்தலாம் என்று இந்த நாடுகள் அஞ்சுகின்றன. பேற்றியட் (Patriot) ரக ஏவுகணைகளைத் தென்கொரியாவுக்குக் கொண்டுவருமுன் அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர்: 'இவை பாதுகாப்பு ஆயுதங்களே. யுத்தம் வரும் சாத்தியங்கள் இப்போதைக்கு ஒன்றும் தோன்றவில்லை'' என்று கூறியுள்ளார்.



தென் கொரிய விஜயத்தின் போது இராணுவ அணிவகுப்பைப் பார்வையிடும் அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் வில்லியம் பெரி அவர்கள்.

தென்கொரியாவின் பாதுகாப்புக்குப் பொறுப்பேற்றுள்ள அமெரிக்கா தென்கொரியாவின் கப்பல் தளங்கள், விமான நிலையங்கள் ஆகியவற்றின் பாதுகாப்புக்காக 100 பேற்றியட் ரக ஏவுகணைகளைக் கொடுத்து உதவியுள்ளது. இவை வளைகுடா யுத்தத்தில் பாவிக்கப்பட்டுப் பின்பு திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. ராங்கிகளை எதிர்த்து அழிக்கும் கருவிகள் பொருத்தப்பட்ட அப்பாச்சி ரக 18 அமெரிக்க உலங்கு வானூர்திகள் தென்கொரியாவுக்கு வந்துள்ளன. 500 போர் வீரர்கள் கொண்ட அமெரிக்கப் பற்றாலியனும் தென்கொரியாவுக்கு வந்து நிலைகொண்டுள்ளது. மேலும் பல பற்றாலியன்கள் இவ்வருடம் முடியுமுன் வர இருக்கின்றன. வளைகுடா யுத்தத்தில் விமானத் தாக்குதல்களுக்குப் பொறுப்பாக இயங்கிய அமெரிக்க முப்படைச் செயற்குழு வடகொரியா மீது நடத்தப்படக்கூடிய தாக்குதலுக்குத் திட்டம் தீட்டத் தொடங்கியுள்ளது. வடகொரியாவில் தாக்கப்படவேண்டிய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், அணுசக்தி நிலையங்கள், ஆகியவற்றை இக்குழு தெரிவுசெய்ய ஆரம்பித்து உள்ளது.

### தென்கொரியா

**தலைநகர்**
சியோல்

**பரப்பு**
98,859 ச. கி. மீ

**மக்கள் தொகை**
4,42,00,000

**மொழி**
கொரியன்

**எழுத்தறிவு**
92 வீதம்

**நாணயம்**
வொன்
(ஒரு டொலர் 787 வொன்)

**தனி நபர் வருமானம்**
6,498 டொலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதற்றத்தைத் தணிக்கும் முகமாகச் சர்வதேச அணுசக்திப் பரிசோதகர்களை யொங்பியோங் நிலையத்தைப் பார்வையிட வடகொரியா அனுமதி வழங்கியுள்ளது. ஆனால் வடகொரியாவில் உள்ள சகல உலைகளையும், நிலையங்களையும் பார்வையிட அனுமதி தருமாறு சர்வதேச அணுசக்தி அமைப்பு கண்டிப்பாகக் கூறிவிட்டது. இந்த அனுமதி கிடைக்காவிடின் ஐ. நா பொருளாதாரத் தடைகளைக் கொண்டு வருவது நிச்சயம்.

தென்கொரிய இராணுவம் தனது பலத்தை முனைப்புடன் பெருக்குவதற்கு இருபெரும் காரணங்கள் உள்ளன. இப்பிரதேசத்தில் தன்னை ஒரு வல்லரசாக உயர்த்தும் நோக்கம் இவர்களுக்கு அண்மைக் காலத்தில் வந்துள்ளது. அடுத்தது வடகொரிய அபாயம் எனலாம். இதற்காகவே தென்கொரியா நீர்மூழ்கிக் கப்பல்கள், போர்க்கப்பல்கள், அதிவேக யுத்த விமானங்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்துள்ளது. தென் கொரியாவுக்குச் சென்ற வாரம் விஜயஞ் செய்துள்ள அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் வில்லியம் பெரி (William Perry) பீரங்கித் தாக்குதல்களை முறியடிக்கும் போர்க் கருவிகளையும் வாங்கும்படி சிபாரிசு செய்துள்ளார். இரவு நேரத் தாக்குதல் சம்பந்தமான சகல உபகரணங்களையும் வாங்கும்படியும் இவர் தென்கொரியாவைக் கேட்டுள்ளார். தனது முழு அணு நிலையங்களைப் பார்வையிட வடகொரியா அனுமதி வழங்கத் தவறின் தென்கொரியாவும், அமெரிக்காவும் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் இராணுவ ஒத்திகைகளைக் கூட்டாக நடத்தலாமென்றும் இவர் இச்சமயத்தில் தெரிவித்துள்ளார்.

தென்-கொரிய இராணுவ ஒழுங்குகளில் சில குறைகள் இருப்பதாக அமெரிக்கா சுட்டிக் காட்டியுள்ளது. வட-கொரியாவின் பீரங்கிக் குண்டுகளுக்கு இலக்காகத் தென்கொரிய இராணுவ அணிகளை நிறுத்தவேண்டாமென அமெரிக்கா கேட்டுள்ளது. ஆனால் இந்த அணிகளை அகற்றத் தென் கொரியா மறுத்துள்ளது. யுத்த விமானங்கள் நிறுத்துமிடப் பாதுகாப்புப் போதாதென்று அமெரிக்கா குறைகூறியுள்ளது. அத்துடன் அமெரிக்காவில் இருந்து தென்கொரியா வந்து சேரும் இராணுவத்தினருக்குச் செய்து கொடுக்கப்படும் வசதிகளும் போதாதென்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. கொரியத் தீபகற்பத்தைச் சுற்றிப் பல பாரிய கப்பல்களில் தனது இராணுவ அணிகளை நிறுத்தி வைக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. யுத்தம் ஆரம்பித்தவுடன் இக்கப்பல்கள் தரையை நெருங்கித் தளபாடங்களையும், துருப்புக்களையும் இறக்குவது அவர்களின் விரிவான திட்டம் என அறியப்படுகின்றது.

ஆதாரம் நியூஸ் வீக்
மே. 02, 1994

## திருவாளர் 'கைசுத்தம்' எனப் புகழ் வாய்ந்த தென் கொரியப் பிரதமர் பதவி விலகினார்

தென் கொரியாவில் ஜனாதிபதிக்கும், பிரதம மந்திரிக்கு மிடையில் அதிகாரப் பங்கீடு சம்பந்தமாக நடந்த முரண்பாடுகளில் பிரதமர் பலியாகி உள்ளார். ஐம்பதுகளில் நடந்த கொரிய யுத்தத்தின் பின் தென் கொரிய ஜனாதிபதிப் பதவியை இராணுவத் தளபதிகளே பெரும்பாலும் வகித்துள்ளனர். தற்சமயம் ஜனாதிபதியாக இருக்கும் கிம் யங் சாம் முதலாவது இராணுவத்தினர் அல்லாத குடிமகன் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தென் கொரியப் பொது வாழ்வைத் தூய்மைப்படுத்த பல நடவடிக்கைகள் எடுத்துள்ளார். உயர் அதிகாரிகள் மத்தியில் புகுந்துள்ள லஞ்ச ஊழலை இல்லாதொழிக்க லீ கோய் சாங் என்ற அதிகாரியை இவர் நியமனஞ் செய்துள்ளார். லீ கோய் சாங் அவர்கள் மிகவும் தூய்மையானவர். லஞ்சப் பேயை விரட்ட இவர் மிகவும் தீவிரமாகப் பாடுபட்டுப் பொது மக்களின் பாராட்டு தலைப் பெற்றுள்ளார். நாளடைவில் இவருக்கு 'மிஸ்ரர் கிளீன்' (Mister Clean) திருவாளர் கை சுத்தம் என்ற காரணப் பெயர் ஏற்பட்டுள்ளது.

இவருடைய சேவையைப் பாராட்டி ஜனாதிபதி கிம் யங் சாம், லீ கோய் சாங் அவர்களை நாட்டின் பிரதமராக நியமனஞ் செய்துள்ளார். இராணுவத்தினர் ஜனாதிபதியாக இருந்த காலந்தொட்டு தென் கொரியப் பிரதமர் அதிகாரங்களற்ற காட்சிப் பொருளாகவே விளங்குகின்றார். இந்த நிலையை மாற்ற வேண்டிய அவசியத்தை லீ கோய் சாங் சுட்டிக் காட்டியுள்ளார். இராணுவ ஆட்சி முடிந்த பின் சீர்திருத்தங்களில் நாட்டங் கொண்ட ஜனாதிபதி ஏன் இராணுவ கால நிலையைத் தொடர்கின்றார் என்று பிரதமர் கேட்டுள்ளார். நாட்டின் பாதுகாப்புச் சபையில் தனக்கும் முக்கிய இடம் வேண்டுமென அவர் கேட்டுள்ளார். சாதகமான பதில்கள் ஒன்றும் கிடைக்காத படியால் அதிகாரங்கள் அற்ற பதவி ஒன்றில் குந்தி இருப்பதை விரும்பாத பிரதமர் தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதியிடம் நீட்டியுள்ளார். இவருடைய பதவி விலக்கு உடனடியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு லீ யுங் டுக் என்பார் அவ்விடத்திற்கு நியமிக்கப் பட்டுள்ளார். ஆனால் தென் கொரியாவின் அரசியல் வாதிகள் பலர் லீ கோய் சாங் அவர்களுடைய நிலைப்பாடு மிகவும் சரியானதென்று ஒத்துக் கொண்டுள்ளனர். காலப்போக்கில் தென் கொரியாவில் அதிகாரப் பங்கீடு நடக்கும் என்பது உறுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்துக்கென ஒரு பிரார்த்தனை உண்டா?

பரிசுத்த பூமி எனப் புகழ் வாய்ந்த பாலஸ்தீனத்திலும் ஒரு சில பிரார்த்தனைகளுக்ப் பதில் கிடைப்பதில்லைப்போலும். உதாரணமாகப் பரூக் கோல்ட்ஸ்ரெயினின் சமாதியில் செய்து கொண்டது. சாக்கடலின் மேற்குக் கரைக் குடியேற்றமாகிய கிர்யத் அர்பாவில் யாத்திரைக்குரிய புனித ஸ்தலமாகிவிட்டது அச்சமாதி. யூத தீவிரவாதப் பெற்றோர் தம் பிள்ளைகளை இங்குகொண்டு வருகிறார்கள். அயலிலுள்ள ஹெப்றோனில் பள்ளிவாசலுக்குள் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த பாலஸ்தீனியரின் முதுகுகளைத் துளைத்து குண்டுகளை மழையாகப் பொழிந்த மாமனிதரல்லவா சமாதி வைக்கப்பட்ட கோல்ட்ஸ்ரெயின். யாத்திரிகர்கள் சமாதியின் தலைப் புறம் உள்ள கல்லைத் தடவியபின் தம் விரல்களை முத்தமிடுகின்றனர். சமாதியருகில் நிற்கும் தாடிக்காரர் ஒருவர், ''டொக்டர் கோல்ட்ஸ்ரெயின் ஒரு புனிதர்'' என்று விளக்குகிறார். ஆனால் சமாதான முயற்சிகளைத் தவிடு பொடியாக்க முயன்ற கோல்ட்ஸ்ரெயினின் எத்தனம் வீணாகி விட்டது. யூதரும் அராபியரும் ஒத்துவாழ இஸ்ரேல் அரசும், பாலஸ்தீனிய விடுதலை இயக்கமும் ஹெப்றோனில் எடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கை பற்றிய முரண்பாடுகளை ஓரளவு சரிசெய்துள்ளன. காஸாப் பகுதியிலும் மேற்குக் கரையின் ஜெரிக்கோ நகரில் இருந்தும் இஸ்ரேலின் பிடியிலிருந்த மண்ணிலிருந்து படைகள் விலக்கிக் கொள்ள வழிவகை பற்றி ஒரு முடிவுக்கு வரும் நெறியில் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் உண்டாயிற்று.



உணர்ச்சி மின்னோட்டம், ஒரு வாலிபன் இஸ்ரேலிய காவல் போக்கு வரவு வாகனத்துக்குக் கல் எறிகிறான்.

**இஸ்ரேல்**
**தலைநகர்**
ஜெருஸலேம்
**பரப்பு**
20,772 ச. கி. மீ
**மக்கள் தொகை**
51,00,000
**மொழி**
ஹிப்ரு (ஆட்சி மொழி), அரபி
**எழுத்தறிவு**
92 வீதம் (யூதர்),
70 வீதம் (அராபியர்)
**நாணயம்**
ஷெகெல்
(ஒரு டொலர் 278 ஷெகெல்)
**தனி நபர் வருமானம்**
10,920 டொலர்

படைவிலக்குதல் தொடங்கி விட்டது. 27 ஆண்டுகள் வரை காஸாப் பகுதியில் அடக்குமுறைக்கு என வைத்திருந்த கட்டமைப்பை இஸ்ரேல் படைகள் குலைத்தன. சில இராணுவ முகாங்கள் முற்றாக மறைந்து விட்டன. அராபியர் யூதரையும், யூதர் அராபியரையும் கொல்லுதல் தொடர்ந்தது எனினும் கணனிகள், முட்கம்பி வேலிகள், தூக்கிப் போகக் கூடிய சிறைச் சிற்றறைகள் எல்லாம் எடுத்துச் செல்லப்படுகின்றன. பெரிய ஊர்திகளில் கூடாரங்களும் அலுவலக தொடர்க்கட்டுக்களும் ஏற்றிச் செல்லப்பட்டன. இன்னும் 72 மணி நேரத்தில் காஸாப் பகுதியிலிருந்து இஸ்ரேலியர் விலகிச் செல்லல் நிறைவேறி விடும் என்கின்றனர் இஸ்ரேலிய படை அதிகாரிகள். பிரதமர் யிற்சாக் ராபினுடைய கடைசி உத்தரவுக்குக் காத்திருக்கிறார்கள். ''ஒப்பரேஷன் வானவில்'' என்ற இறுதிப் படை விலக்கல் நிகழ்ந்ததும் வரையறைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்பட்ட பாலஸ்தீனிய சுய ஆட்சி அங்கு நிகழும்.

தொடக்கத்தில் தீர்மானிக்கப் பட்டபடி சுய ஆட்சி ஏப்ரல் 13 இல் தொடங்கும் எனப் பாலஸ்தீனியர் நம்புகின்றனர். இன்னும் பல உயிர் நாடியான விபரங்கள் பேச்சு வார்த்தைகளால் தீர்க்கப்படல் வேண்டும். உதாரணம்; ஜெரிக்கோ வின் எல்லை, பாலஸ்தீனிய சட்ட சபைகளின் சட்ட ஆக்க அதிகாரம் போன்றவை. ஏப்ரல் நடுப்பகுதிக்கு முன் பாலஸ்தீனியப் பொலிஸார் முன் கூட்டியே வந்த காஸா, ஜெரிக்கோப் பகுதிகளில் பொறுப் பேற்கும் ஆரம்ப முயற்சிகளைச்

## இஸ்ரேல்:- கைப்பற்றிய பிரதேசத்திலிருந்து வெளியேற்றம் தொடங்கிவிட்டது,

செய்வர், காஸா மக்கள் இஸ்ரேலிய படைகளின் இறுதி ஆள் வரை விலக வேண்டுமென ஆவலுடன் காத்து இருக்கிறார்கள். யாசீர் அரபாத்தின் பிரதான ஃபற்றாக் குழுவினரில் ஆறுபேரைத் தவறுத லாக இஸ்ரேலிய படை சுட்டது, மேலும் அவர்களின் ஆவலை அதிகரிக்கச் செய்தது. ஹெப்ரோ னில் அராபியரின் படையணி குடியேறியோர் மூலம் வரும் கொடூரங்களிலிருந்து காப்பாற்ற நோர்வே, டென்மார்க், இத்தாலி ஆகிய நாடுகளிலிருந்து இவ்வாறு தற்காலிக சர்வதேசப் பிரசன்னம் காரணமாக ஹெப்றோனில் சமநிலை ஏற்படும் எனக் கருதப்படு கிறது. 110,000 கோபமிக்க பாலதீனியர்களுக்கு மத்தியில் 400 துப்பாக்கி ஏந்திய யூதர்கள் வாழ்கிறார்கள். அயல் நாட்டவர் விசேட உடைகளை அணிந்து பக்கத்தே பாதுகாப்புக்கு ஆயுதங் களைத் தொங்கவிட்டபடி நகர்வலம் வந்துதம் அறிக்கையை ஒன்றிணைந்த யூத—பாலஸ்தீனிய நிர்வாகக் குழுவிடம் சமர்ப்பிப்பர். அவர் களுக்கு மூன்று மாத அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதைப் புதுப் பித்தல் இரு இனத்தவரது சம்மதத் துடனேயே நிகழலாம்,

ஹெப்றோனின் பிரச்சனை களைத் தீர்க்க, நிலைத்திருக்கக் கூடிய தீர்வு ஒன்றைக் காண்பதே முன்னிடம் பெற்ற நோக்கமாகி வரு கிறது. யூதர் கைப்பற்றிய பிரதேசங் களில் குடியிருப்பது மிகவும் உணர்ச்சியைத் தூண்டும் விடய மாகையால், இது வரை அது சமாதானப் பேச்சு நிரலில் சேர்க்கப் பட்டிலது. ஆனால் ஹெப்றோன் யூதர் நிலை தனித்தன்மை வாய்ந்தது. காஸாவிலும் மேற்குக் கரையிலும் குடியேறிய 115,000 யூதர்கள் வேலியிடப்பட்ட பாதுகாப்பான சமூகங்களாக வாழ்கிறார்கள். அவர்களைப் போலன்றி ஹெப் றோன் யூதர் அராபியரின் நகரத் தில் அவர்கள் மத்தியில் வாழ்கிறார் கள். அரபாத் ஆதாரவாளரான நபில் அபுஸ் நைத் கூறுகிறார்: ''புற்றுநோயைப் போக்க அறுவைச் சிகிச்சை செய்தே ஆக வேண்டும் என.'' பிரதமர் ராபின் இக்கட்டத்தில் தாம் ஹெப்றோனில் குடியேறிய யூதரை வெளியேற்றும் யோசனையை எடுத்துக் கொள்ள வில்லை என்கிறார். அடுத்த கட்டத்தில் என்ன நடக்கும் என்று யாருமே சொல்ல முடியாது. சென்ற செப்ரம்பரில் எழுதிய ஒப்பந்தப்படி பாலஸ்தீனிய தன்னாட்சியுரிமை காஸா ஜெரிக்கோவிலிருந்து மேற்குக் கரையில் அராபிய குடியேற்றங்கள் உள்ள பிரதேசங் களுக்கும் சில மாதங்களுக்குள் விரிவாக்கப்படும். அதில் ஹெப் றோனும் அடங்கும். யூதரோ 3,000 ஆண்டுகளுக்கு முன் தாவீது மன்னன் தன் சிம்மாசனத்தை நிறுவிய இடத்திலிருந்து விலகி அந்நகரைப் பாலஸ்தீனிய கட்டுப் பாட்டில் விடச் சம்மதிக்க மறுக் கிறார்கள்.

வலது சாரித் தலைவர்கள் குடியேறிய யூதரை வெளியேற்ற அரசு முயன்றால் எப்படியாவது அதற்கு முட்டுக்கட்டைபோடத் தீர்மானித்துள்ளனர். சகோதர யூதருடன் போராடுவதைத் தவிர வேறு எல்லா வழிவகைகளையும் அவர்கள் மேற் கொள்ளக்கூடும். மூன்று புகழ்பெற்ற ராபிமார் (யூதகுரு) சர்ச்சைக்குள்ளான பிரகடனம் ஒன்றை – போர்வீரர் யூதக் குடியேற்றக்காரரை அகற்றும் படி கட்டளை இடப்பட்டாலும் அதற்குக் கீழ்ப்படியத் தேவை யில்லை என்பதை வெளியிட்டார் கள். ''பன்றி இறைச்சியைத் தின்னும் படி கூறினால் எவ்வள வுக்கு எதிர்ப்பார்களோ அவ்வளவு தீவிரமாக இக்கட்டளையையும் எதிர்க்க வேண்டும்'' என்பது ராபிமாரின் முடிவு. ஆனால் வேறு முக்கிய ராபிமார் இதனை ஒப்புக் கொள்ளவில்லை. பிரதமர் ராபின் இப்படியான பிரகடனங்கள் இஸ்ரேலிய சமூகத்தின் அடித் தளத்தையே நொறுக்கி விடும் என்கிறார்.

கோல்ட்ஸ் ரெயினின் சமாதி யில் இருக்கும் தாடிக்காரர் பிரதமரின் இக்கூற்றை மறுக்கிறார். ''இஸ்ரேல் மண் ராபினுக்குச் சொந்தமானது அல்லவே. அது இஸ்ரேலிய கடவுளுக்குச் சொந்த மானது.'' கடவுளின் போர்வீர ராகத் தம்மைத் தாமே பிரகடனம் செய்யும் அராபியர், யூதர் இரு பாலாரும் பாலஸ்தீனிய சுயநிர்ணய ஆட்சி தொடங்குமுன் பெரும் அழிவைச் செய்யும் சாத்தியக் கூறுகள் உள. ஆனால் வேறு பல இஸ்ரேலியரும், பாலஸ்தீனிய ரும் தங்கள் சொந்த நோக்கில் தேவ சித்தம் — சமாதானம் நடக்கட்டும் என்று பிரார்த்திக் கிறார்கள்.

ஹெப்றோவிடமிருந்து ஜெஃப்ரி பார்கொல்ஃப்ற்றும், காஸா பகுதி யிலிருந்த கரோலீன் ஹோலியும் எழுதியது.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தோனேசியா:

# இராணுவத்தினருடன் ஆலோசிக்காமல் அமைச்சர் வாங்கிய தளபாடங்கள்.

**இந்தோனேசியா**
**தலைநகர்**
ஜகார்த்தா
**பரப்பு**
9, 04, 569 ச கி மீ
**மக்கள் தொகை**
15, 12, 66, 000
**மொழி**
மஹாசா, இந்தோனேசியன், டச்சு, ஆங்கிலம், ஜாவானீஸ்
**எழுத்தறிவு**
85 வீதம்
**நாணயம்**
ரூபியா (ஒரு டொலர்=2,048 ரூபா)
**தனிநபர் வருமானம்**
570 டொலர்

சிறிதும், பெரிதுமாகப் பெரும் தொகை தீவுகளை உள்ளடக்கிய நாடு இந்தோனேசியா. இதன் கடல் எல்லைகள் இந்து சமுத்திரத்தில் தொடங்கி பசுபிக் சமுத்திரத்தைச் சென்றடைகின்றன. அத்துடன் தென் சீனக் கடலிலும் அதற்கு உரிமைகள் உண்டு. அண்மையில் இக் கடலிலுள்ள ஸ்பிராற்லித் தீவுகளுக்கு உரிமை கோரி அங்கு ஓர் இராணுவ அணியையும் அது அனுப்பியுள்ளது. அத்துடன் காலத்திற்குக் காலம் இந்தோனேசியத் தீவுகளில் குழப்பங்களும் உள் நாட்டுப் போரும் நடைபெறுகின்றன. கிழக்கு ரிமோர் பிரச்சனை இதற்கோர் எடுத்துக் காட்டு. அத்துடன் இந்தோனேசியத் தீவுகளுக்குப் பொதுவாக 165 பெரும் கப்பற் துறைகள் இருக்கின்றன. இங்கெல்லாம் இந்தோனேசிய கப்பற் படைக்குச் சொந்தமான கப்பல்கள் வரிசைக் கிரமமாகச் சென்று வரவேண்டியுள்ளது. அத்துடன் தனது பொறுப்பிலுள்ள நீர்ப்பிரதேசத்தை இடைவிடாது கண்காணிக்க வேண்டிய அவசியமும் உண்டு. இவையெல்லாவற்றையும் கருத்திற் கொண்டு அண்மையில் இந்த நாடு தனது கப்பற் படையின் விரிவாக்கத்திட்டத்தைப் நடை முறைப்படுத்தி வருகின்றது.

ஜேர்மனியின் மேற்கும் கிழக்கும் ஒன்றான பின் கிழக்கு ஜேர்மனியின் போர்க் கப்பல்கள், ரோந்துப் படகுகள் ஆகியவை மலிவு விற்பனைக்கு உலகச் சந்தையில் வந்துள்ளன இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இந்தோனேசியா விற்பனைக்கு வந்த பெரும் பகுதி கடற்படைக் கப்பல்களையும், உபகரணங்களையும் வாங்கியுள்ளது. இந்த கொள்வனவுக்குப் பொறுப்பாக இருந்தவர் ஆராய்ச்சிதொழில் நுட்ப அமைச்சர் பீ. ஜே. ஹபீபி (B. J. Habibie) என்பார் ஆவார். 1980 ஆம் ஆண்டு தொடக்கம் இவர் ஜனாதிபதி சுகார் தோவுக்கு மிகவும் வேண்டியவராகவும், நெருங்கிய ஆலோசகராகவும் இருக்கின்றார். இக் காலந் தொட்டு இந்தோனேசியா வாங்கிய பாதுகாப்புத் தளபாடங்கள் இவரைக் கலந்தாலோசித்தே வாங்கப்பட்டுள்ளன.




இந்தோனசியரோவின் கடற்படை, அமைச்சர் ஹபீபியுடன் மிகவும் அவதானமாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் இந்த அமைச்சர் ஜனாதிபதியுடனான தனது நட்பைப் பயன்படுத்தித் தொழில் வளம் சம்பந்தமான தனக்குச் சொந்தமான சொள்கையை அமுலாக்கியுள்ளார். இவருடைய கூற்றுப்படி நாட்டில் அதியுயர் தொழில் நுட்பம் வாய்ந்த தொழிற் சாலைகள் சிலவற்றை வெற்றிகரமாக நிறுவி நடத்தினால் வேறு தொழில்கள் யாவும் தாமாகவே முன்னேற்றம் அடையும். இந்தக் கொள்கையின் பிரகாரம் கப்பல் கட்டும் திருத்த வேலை செய்யும் பாரிய துறைமுகத் தொழிற் சாலையும், விமானங்களைத் தயாரிக்கும் நிறுவனமும், இந்தோனேசியாவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இவை இரண்டும் அரச உடைமைகள். இவை தயாரிக்கும் சாதனங்கள் யாவும் நாட்டின் விமானப்படையும், கப்பற் படையும் வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இது போன்றவற்றை வெளியாரிடம் வாங்கினால் நாட்டின் சில அதிகாரிகள் ஆதாயம் பெற வாய்ப்புண்டு. உள்நாட்டுத் தயாரிப்புக்களை வாங்க வேண்டி உள்ளதால் உயர் நிலை அதிகாரிகள் வழமையாகப் பெறும் வெட்டுக்கள் இல்லாதொழிக்கப்பட்டுள்ளன.

இப்போது இந்த அமைச்சர் இன்னுமோர் படி மேலுக்குச் சென்றுள்ளார். கடந்த இரண்டு அல்லது மூன்று வருடங்களாக முப்படைகளுக்குத் தேவையான ஆயுதங்கள் உட்பட சகலதையும் தனித்து நின்று இவர் கொள் முதல் செய்கின்றார். மேற்கூறிய கிழக்கு ஜேர்மன் போர்க் கப்பல்களையும் இவர் கடற்படை அதிகாரிகளைக் கேளாமலே வாங்கியுள்ளார். இந்தோனேசிய பாதுகாப்பு அமைச்சு வாங்கப்பட்ட கப்பல்களின் விலையைக் கூட்டி தமக்குத் தெரியாதென்று தெரிவித்துள்ளது. இந்தக் கப்பல்கள் தமது நாட்டின் தேவைக் கேற்ப எவ்வாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது போன்ற விபரங்களையும், தமக்குத் தெரியாதென்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இதே மாதிரி முப்படை அதிகாரிகளும் வேதனைப்படுகின்றனர்.

அவர்களுடைய வருத்தத்திற்கு வருவாய்க் குறைவும் ஒரு தகுந்த காரணமாக இருக்கலாம். ஆனால் முப்படை யாதொன்றிலாவது செயற்பட்ட அனுபவம் இல்லாத ஓர் அமைச்சர் படை அதிகாரிகளைக் கலந்தாலோசிக்காமல் கொள்வனவு செய்வது ஓர் அபூர்வ நிகழ்ச்சி எனலாம். இதனால் முப்படைகளின் அதி உயர் அதிகாரிகளின் கடுஞ் சினத்திற்கு இவர் ஆளாகியுள்ளார்.

''படைகள் தமக்குத் தேவையானவற்றை வாங்குவதுதான் நடைமுறை. இன்னுமொருவர் வாங்கியதை முழுமையாகப் பயன்படுத்துவது எளிதல்ல'' என்கிறார் ஓர் ஆய்வாளர். படை அதிகாரிகளுக்கும், இந்த அமைச்சருக்கு மிடையிலான வேறுபாடுகள் அண்மையில் புதிய உருவம் எடுத்துள்ளன.

> **"உயர்நிலை அதிகாரிகளுக்கும் அமைச்சருக்கும் இடையில் கருத்துவேற்றுமை உண்டா?"**

அவருடைய அரசியல் அபிலாசைகள் முப்படை அதிகாரிகளில் அரசியல் தொடர்புள்ளவர்களை ஒரு புறந் தள்ளி வைத்துள்ளது. 1990 இல் ஹபீபி இந்தோனேசிய இஸ்லாமிய புத்தி ஜீவிகள் இணையத்தின் தலைவராக ஏற்றம் பெற்றது இவர் ஜனாதிபதிப் பதவியில் கண்வைத்திருப்பதைக் காட்டுகின்றது. இவருடைய நண்பர் சுகார்தோ இளைப்பாறியதும் அநேகமாக இவர் இப் பதவிக்கு உரிமை கோரலாம் என நம்பப்படுகின்றது. இதை முப்படை உயர் நிலை அதிகாரிகள் வரவேற்க மாட்டார்கள்.

கிழக்கு ஜேர்மனியிடமிருந்து வாங்கிய கப்பற் தொகுதியின் மொத்த விலை 12.7 மில்லியன் டொலர். ஆனால், திருத்த வேலைக்கும், மாற்றியமைக்கவும் 640 மில்லியன் டொலர் செலவு செய்யப்படுகின்றது. இவர் வாங்கிய கப்பல்களின் விபரம் பின்வருமாறு:—

14 துருப்புக்களை இறக்கும் கப்பல்கள், 16 போர்க் கப்பல்கள், 9 கடற்கண்ணி வெடி அகற்றும் கப்பல்கள். ஒவ்வொன்றின் சராசரி விலை 20 மில்லியன் டொலர் என இராணுவ ஆய்வாளர் ஒருவர் தெரிவிக்கின்றார். இது சந்தை விலையிலும் மிகக் குறைந்ததென அவர் சுட்டிக்காட்டுகின்றார். ஆனால், இந்த நாட்டுக் கடற்படையிடம், பிரிட்டிஷ், அமெரிக்கன், ஒல்லாந்து ஆகிய நாட்டுத் தயாரிப்புக்கள் ஏற்கனவே உள்ளன. ஜேர்மன் தயாரிப்பையும் ஒன்று கூட்டியவுடன் நடைமுறைப் பிரச்சனைகள் எழலாமெனப் பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்தோனேசியக் கடற்படைப் பொறியியலாளர்கள் புதிதாகப் பயிற்சி பெற வேண்டியுள்ளது. அத்துடன் உதிரிப் பாகப் பிரச்சனை எதிர்காலத்தில் நிச்சயமாக எழலாம்.

கிழக்கு ஜேர்மனியிடமிருந்து வாங்கப்பட்ட கப்பல்களில் எல் எஸ். ரி. (LST) எனப்படும் துருப்புக்களைத் தரை இறக்கும் கப்பல்கள் மிகவும் உபயோகமானவை எனப்படுகின்றது. இந்தோனேசியாத் தலைநகரிலிருந்து வெகு தொலைவில் இருக்கும் தீவுகளின் பாதுகாப்பை இவை பலப்படுத்தும். இப் பிரதேசத்தில் தனது ஆதிக்க நிலையை உயர்த்த இவை உதவும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், கிழக்கு இந்தோனேசியா கடற்படைத் தளபதி தொன்ரோ குசுவந்தோ திருப்தி அடைந்தவராகக் காணப்படவில்லை. ''எமது தேவைக்கேற்ப மாற்றியமைக்க ஹபீபி எவ்வளவு செலவு செய்தார், என்ன விதமான மாற்றங்களைச் செய்துள்ளார் போன்ற விபரங்கள் எனக்குக் கிடைக்கவில்லை'' என்கிறார் தொன்ரோ குசுவந்தோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்மிரல் தரத்தில் உள்ள கடற்படை அதிகாரி அறியாமல் கப்பல் வாங்கும் அமைச்சர் ஓர் அபூர்வ அரசியல் வாதி என்றால் மிகையாகாது.

கரையோரப் பாதுகாப்புக்கென ஹபீபி வாங்கிய மூன்று போயிங் 737—200 ரக விமானங்களும் இந்த வகையைச் சேர்ந்தவை. இந்தோனேசிய விமானப் படைக்கு இந்த விமானங்கள் நாட்டிற்கு வரும் வரை ஒன்றுமே தெரியாது. றாடர் கருவிகள் பொருத்தப்பட்ட இந்த விமானங்கள் வந்தபின்தான் விமானப்படைப் பயிற்சி ஒழுங்குகளைச் செய்துள்ளது. ஆனால் திடீரென உலக அரங்கில் தொழில் நுட்ப மாற்றங்கள் மிக வேகமாக மாறியுள்ளதால் இந்த விமானங்கள் பிரயோசனமற்றதாகி விட்டன.

ஜனாதிபதி சுகார்தோ, பாதுகாப்பு அமைச்சு மற்றும் ஆராய்ச்சி, தொழில் நுட்ப அமைச்சு ஆகியவற்றை மேற்படி விமானங்களை எவ்வாறு மாற்றி அமைக்கலாம் என வினவினார். டொலர் 72 மில்லியன் செலவில் சிறிய ரக அவாக் ( AWAC ) விமானம்போல் இதை திருத்தி அமைக்க முடியுமெனப் பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது. ஆராய்ச்சி, தொழில்நுட்ப அமைச்சுக்கொடுத்த கணக்கின்படி செலவு 140 மில்லியன் டொலர் வரை காட்டப்பட்டுள்ளது. ஆனால், தொகை கூடவென்றாலும் தொழில் நுட்பம் மிகக் குறைந்ததே. இரண்டு அமைச்சுக்களின் முரண்பாடுகளால் மூன்று விமானங்களும் சாதாரண கரையோரப் பாதுகாப்பில் தற்சமயம் ஈடுபடுகின்றன. இதன் காரணமாக அமைச்சர் ஹபீபிஅவர்களுக்கும் ,விமானப படை உயர் அதிகாரிகளுக்குமிடையில் முறுகல் நிலை நிலவுகின்றது.

*(F)வார் ஈஸ்ரேன் எக்கனமிக் றிவியூ ஏப்ரல் 7, 1994*

★

# பட்டுப் பாதை
# பழையதும் புதியதும்

பன்னெடுங் காலமாக இருந்து வரும் பட்டுப்பாதை எனக் காரணப் பெயர் பெற்ற வர்த்தகர்களின் நெடுஞ்சாலை ஐரோப்பாவையும், ஆசியாவையும் தரை மார்க்கமாகத் தொடுக்க உதவியுள்ளது. சீனாவில் நெய்யப்பட்ட பட்டுத்துணிவகைகள் இப்பாதையால் ஐரோப்பா மற்றும் மத்திய தரைக் கடற்பகுதி நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. பட்டுப் பாதை எனப் பெயர் வர இதுவே காரணம். அக்காலக் கடற்பிரயாணம் ஆபத்துக்கள் பல நிறைந்துள்ளபடியால் குறுகிய தூரத்திற்கே மேற்கொள்ளப்பட்டுள்ளது. எவ்வித கடற்பிரயாணமாக இருப்பினும் அது தரைதெரியும் தூரத்திலேயே நடத்தப்பட்டுள்ளன. கி.மு 628 இல் முகப்மது நபிகள் நாயகத்தின் தூதுவர்கள் அரேபியாவிலிருந்து சீனாவுக்கு இந்தியக் கரையோரமாகக் கடற்பிரயாணம் செய்துள்ளனர்



உய்கூர் இனத்தவர் கஷ்கார் நகரில் பணம் மாற்றுந் தொழில் புரிகின்றனர்.

**பழைய பட்டுப் பாதையினை மீளத்திறப்பதன் மூலம், மத்திய ஆசிய குடியரசுகளுடன் பெருமளவிலான வாணிக உறவுகளைச் சீனா மீண்டும் ஆரம்பித்துள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனச் சக்கரவர்த்தியின் அனுமதியுடன் இவர்கள் கன்ரன் நகரில் கட்டிய மசூதி உலகின் மிகப் பழைமைவாய்ந்த இஸ்லாமிய வணக்கஸ்தலமாகும். முன் இந்த நெடுஞ்சாலை ஈராக்கின் பக்தாத் நகரில் ஆரம்பித்துப் பெரும் நிலப் பரப்பைக் கடந்து சீனாவின் ச்சயான் நகரை வந்தடையும். இன்று இச்சாலை முன்னாள் சோவியத் குடியரசு துர்க்மினிஸ்தான் நகர் அஷ்காபத்தில் ஆரம்பித்து மத்திய ஆசியாக் குடியரசு நாடுகளுக்கு ஊடாகச் சென்று க்சியான் நகரை அடையும். பாதை சில இடங்களில் காலத்திற்கேற்ப மாறுபட்டாலும் அன்றும் இன்றும் சுமார் கந்த் கஷ்கார் போன்ற பிரசித்த நகரங்களில் தங்கியே செல்கின்றது.

கி. பி. 13 ஆம் நூற்றாண்டில் வெனிஸ் நகரிலிருந்து புறப்பட்டுச் சீனாவை அடைந்த மார்க்கோ போலோ என்ற பிரயாணி மேற்கூறிய பழைய பாதையால் சென்றுள்ளார். தனது பிரயாண நூலில் கஷ்கார் நகரை விபரித்துள்ளார். இன்றைய பட்டுப் பாதையுடன் பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரிலிருந்து வரும் சாலையும் தொடுக்கின்றது. அன்று பட்டு வர்த்தகம் பிரசித்தம் பெற்றிருந்தாலும் வேறு பல பொருள்களும் கைமாறியுள்ளன. இன்று பட்டு என்ற பேச்சே இல்லை, இன்றைய வாணிபம் பெரும்பாலும் தொலைக்காட்சிப் பெட்டிகள், வீடியோ சாதனங்கள், சீனாவில் செய்யப்படும் மதுபானம் ஆகியவற்றில் நடைபெறுகின்றன. பழைய பட்டுப் பாதை வர்த்தகம் பண்டமாற்று முறையிலேயே நடைபெற்றுள்ளது. இன்றும் பண்டமாற்று நடைபெறுகின்றது. ஆனால் ஓரளவுக்குப் பணமும் தலைகாட்டத் தொடங்கி விட்டது. கஷ்கார் நகரில் பணம் மாற்றுவதே தம் தொழிலாகக் கொண்ட சிலரை இன்று காணக்கூடியதாக இருக்கின்றது. முன்பு வர்த்தகர்கள் ஒட்டகங்களில் தமது பொருள்களை ஏற்றியவாறு கூட்டமாகப் பிரயாணம் செய்தனர். இன்று பெரும் பொதி சுமக்கும் மோட்டார் வாகனங்கள் பொருள்களைக் கொண்டு செல்கின்றன.

பழம் பெரும் பட்டுப் பாதை மீண்டும் திறக்கப்படுவதற்குச் சோவியத் ருஷ்யாவின் உடைவே காரணம். மத்திய ஆசியாக் குடி அரசுகள் விடுதலையானவுடன் பாதைப் பழக்கம் மீண்டும் ஆரம்பித்துள்ளது. இந்தப் பாதை மலைகளின் ஊடாகப் புகுந்து செல்லுகின்றது. அன்றிருந்த அபாயங்கள் இன்றும் இருக்கின்றன. இத்துடன் அதிகாரிகளின் மிரட்டல்களும், தமக்கென பொருள்களைப் பறிமுதல் செய்வதும் நிறைய நடைபெறுகின்றன. என்றாலும் பட்டுப் பாதை வியாபாரத்தால் 1993 ஆம் ஆண்டு 3·9 பில்லியன் டொலர் பெறுமதியான வர்த்தகம் நடந்துள்ளதாகச் சீன அரசு புள்ளி விபரம் வெளியிட்டுள்ளது. இது குறைந்த மதிப்பீடு என்று நம்ப இடமுண்டு. மத்திய ஆசியாக் குடியரசுகளுடன் இத்தகைய வியாபாரம் நடப்பதை சீனா பெரிதும் விரும்பி ஊக்குவிக்கின்றது. சீனாவின் வட–மேற்குப் பகுதியில் பெரும்பாலும் முஸ்லிம்களே வாழ்கின்றனர். இவர்களே பெரும்பாலும் இந்தப் பட்டுப் பாதை வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். இவர்கள் வாழ்க்கை வசதியாய் இருந்தா அமைதியைக் குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட மாட்டார்கள் என்று சீன அரசு நம்புகிறது. அதற்காகவே அண்மையில் சீனப் பிரதமர் லீபென்ங் ஐந்து மத்திய ஆசியக் குடியரசுகளுக்கும் விஜயம் செய்துள்ளார். வியாபார வாய்ப்புக்களைக் கூட்டுவதே இவரின் நோக்கம். இதை அக்குடியரசுகள் வரவேற்றுள்ளன. சீனத் தலைநகரிலிருந்து துருக்கியின் தலைநகர் வரை ஒரு புகையிரத சேவையைத் தொடங்கும் திட்டத்தை லீபென்ங் இந்த விஜயத்தின் போது பிரஸ்தாபித்துள்ளார்.


சீனாவின் புகழ்பூத்த கஷ்கார் நகர் மீண்டும் தனது பழைய உன்னத நிலைக்குத் திரும்பியுள்ளது. அன்றும், இன்றும் இது பெரும் தங்குமிடமாகும். இங்கிருந்து சீனத் தயாரிப்புக்களான ஒலி, ஒளிச்சாதனங்கள், மிதிவண்டிகள், மலிவான மதுபானம் ஆகியவை மத்திய ஆசியாவுக்கு ஏற்றிச் செல்லப்படுகின்றன. ருஷ்யாவிலிருந்தும், மத்திய ஆசியக் குடியரசுகளிலிருந்தும் இராணுவக் கழிவுப் பொருள்களான கைக்கடிகாரங்கள், தூரநோக்கிகள், படப்பிடிப்புக் கருவிகள், இங்கு கொண்டு வரப்படுகின்றன. பெரும்பாலும் இவை பண்டமாற்றுச் செய்யவே கொண்டு வரப்படுகின்றன. நுகர்ச்சிப் பொருள்களும் கைமாறுவதை இந்தப் பெரும் சந்தையில் காணக்கூடியதாக இருக்கின்றது. கஷ்கார் நகரைச் சந்தையில் இடைத் தரகர்களும் நல்ல வருமானம் பெறுகிறார்கள். கஷ்கார் நகரைவிட்டு மேற்குத் திசையில் செல்லும் லொறிகள் வடக்குப்புறமாகவுள்ள துருகார்ட் கணவாய் மூலம் தங்கள் பயணத்தைத் தொடர வேண்டியுள்ளது. இக்கணவாய் தியன்

**சீனா**

**தலைநகர்**
*பீஜிங் (பீகிங்)*
**பரப்பு**
*95, 61, 000 ச. கி. மீ.*
**மொழி**
*சீனமொழி மற்றும் வட்டார மொழிகள்*
**எழுத்தறிவு**
*70 வீதம்*
**தனி நபர் வருமானம்**
*360 டொலர்*
**மக்கள் தொகை**
*118, 80, 00, 000*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சீனாவின் புதிய, பழைய பட்டுப் பாதை

சான் மலைத் தொடரை ஊடறுத்துக் கொண்டு 3,700 மீற்றர் உயரத்தில் இருக்கின்றது. ஒக்ரோபர் மாதம் தொடங்கி ஏப்ரல் வரை இப்பிரதேசத்தில் பனியும் காற்றும் கலந்த கால நிலை நிலவும். இக்காலத்தில் பிரயாணம் மிகவும் ஆபத்துள்ளதாகும்.

சீன எல்லைக்கு அப்பால் கிரிக்கிஸ்தான் குடியரசு இருக்கின்றது. இந்த எல்லையில் கிரிக்கிஸ்தான் சுங்கத் திணைக்களம் இருக்கின்றது. சீனாவிலிருந்து எடுத்து வரும் பொருள்கள் யாவும் லொறிகளிலிருந்து இறக்கப்பட்டு, சுங்கப் பார்வைக்கு வைக்கப்படல் வேண்டும். நடுங்கும் பனிக்குளிரில் இந்த வேலை நடக்கும். இறக்குவதும், ஏறுவதும் பெருஞ் சிரமத்திற்கு மத்தியில் நடப்பதை நாம் அவதானிக்கலாம். வாகனத் தொடர் நாட்கணக்காக நிற்பதையும் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. எப்படியோ இந்தப் பொருள்களெல்லாம் துர்க்மெனிஸ்தான் நகர் அஷ்காபத்வரை சென்றடைகின்றன.

பட்டுப்பாதையின் கிழக்கு முடிவு பழம் பெருமை வாய்ந்த க்சியான் நகரமாகும். இந்த நகரம் சீனாவின் வடமேற்கு மாகாணமான க்சன்ஜியாங் பிரதேசத்தில் காணப்படுகின்றது. கிட்டத்தட்ட இந்த மாகாணத்தில் வாழ்வோரில் அரைப் பங்கினர் உய்கூர் என்ற இனத்தவர்களாகும். இவர்கள் சீன மக்களிலிருந்து வித்தியாசப்பட்டவர்கள். சீனாவைப் பொறுத்தளவில் இவர்கள் ஒரு சிறுபான்மை இனம் எனலாம். இந்த உய்கூர் இனத்தவர்கள் மத்திய ஆசியாவின் கசக்கஸ்தான், கிரிக்கிஸ்தான், உஸ்பெக்கிஸ்தான் குடியரசுகளிலும் வாழ்கிறார்கள். சீனாவின் வடமேற்கு மாகாணத்தில் 7½ மில்லியன் உய்கூர் இனத்தவர்களும் மேற்கூறிய மூன்று குடியரசுகளில் உள்ள ½ மில்லியன் உய்கூர் இனத்தவர்களும் பட்டுப் பாதை திறக்கப்பட்டுள்ளதால் நெருங்கிவர ஆரம்பித்துள்ளனர். க்சின்ஜியாங் வாழ் உய்கூர் இனத்தவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட தனியாட்சி வழங்கப்பட்டிருந்தாலும், மாநில அரசு சீன இனத்தவர்கள் கையில் இருக்கின்றது. இதை உய்கூர் இனத்தவர்கள் வெறுக்கின்றனர். பட்டுப்பாதை மூலம் கிடைக்கும் பொருளாதார மேம்பாடு அவர்களுடைய தேசிய அபிலாசைகளைத் தணிக்கவில்லை என்பது தான் உண்மை நிலை. ஆகவே சீன அரசு எதிர்பார்ப்பது போல் அதிருப்தி மறையாமல் கூடியே உள்ளது. க்சின்ஜியாங் மாகாணத்தில் அண்மையில் நடந்த குண்டுவெடிப்புக்களின் பின்னணியில் உய்கூர் இனத்தவர்கள் இருப்பதாக நம்பப்படுகின்றது. இதன் பின் சீனா கூடுதலான துருப்புக்களை இந்த மாகாணத்திற்கு அனுப்பியுள்ளது.

அதே சமயத்தில் மத்திய ஆசியாக் குடியரசுகள் வெளிப்படையாகத் தெரிவிக்காவிட்டாலும் உய்கூர் இனத்தவர்களின் தேசிய எழுச்சிக்கு ஆதரவுதரத் தயங்குகின்றனர். முதலாவதாகச் சீனாவின் பகையை அவர்கள் விரும்பவில்லை. தமது வளத்தைப் பெருக்கச் சீனாவின் வர்த்தகத்தை வரவேற்கின்றனர். சீனாவும் இந்தக் குடியரசுகளுக்கு வர்த்தக உதவிகளைச் செய்யத் தயாராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றது. அண்மையில் லீ பென்ங் இக் குடியரசுகளுக்கு விஜயம் செய்யும் போது பெரும் சீன முதலீட்டாளர்களையும் தன்னுடன் கூட்டிச் சென்றுள்ளார். ஆதிகாலச் சீனப் பேரரசர்கள் தம்மைச் சுற்றியுள்ள நாடுகளைச் சீனாவின் செல்வத்தாலும் கலாசார உயர்வாலும் வசீகரித்து வந்துள்ளனர். இதற்குப் பழைய பட்டுப்பாதை பெரிதும் உதவியுள்ளது. இன்றும் இப்பாதை இதைச் செய்யலாம். மத்திய ஆசியாக் குடியரசுகள் ருஷ்யாவிலும் பார்க்க சீனாவைக் குறைவாகவே வெறுக்கின்றன. அத்துடன் உய்கூர் போன்ற இனங்களின் எழுச்சியால் இஸ்லாமிய அடிப்படை வாதம் என்ற பெரும் பூதம் தமது நாடுகளுக்குள் வரலாம் என இக்குடியரசுகள் அஞ்சுகின்றன. இதுவே புதிய பட்டுப்பாதையைச் சுற்றிய தள நிலைமை.

*நியூஸ் வீக் மே, 02, 1994*

# கம்போடியா தாய்லாந்து உறவுகளில் மீண்டும் விரிசல்

அண்மையில் கம்போடிய இராணுவம் பாயிலின் (Pailin) பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள கமரூச் போராளிகள் மீது கடுந் தாக்குதல் நடத்தி அப்பிரதேசத்தைக் கைப்பற்றியுள்ளது. தாக்குதல் தொடங்கியவுடன் போராளிகளின் குடும்பத்தினரும், அனுதாபிகளும் அண்டைநாடு தாய்லாந்துக்கு ஓடிவிட்டனர். இரு நாடுகளுக்கும் இடையில் 800 கிலோமீற்றர் பொது எல்லை உண்டு. வியட்நாம் கம்போடியாவை ஆண்ட 1979-1991 காலப் பகுதியில் பெரும்பாலான கம்போடிய அகதிகள் இவ்வெல்லை மூலம் தாய்லாந்தில் புகலிடம் அடைந்துள்ளனர். அத்துடன் வியட்நாமியருக்கு எதிராகப் போராடிய கமரூச் கெரில்லாக்கள் தாய்லாந்தில் சுதந்திரமாக உலாவியுள்ளனர். தாய்லாந்தின் ஆயுதச் சந்தையிலும், தாய்லாந்து இராணுவத்திடமும் இவர்கள் தமக்குத் தேவையான ஆயுதங்களைக் கொள்வனவு செய்துள்ளனர். இந்த வர்த்தகத்தில் தாய்லாந்து வியாபாரிகளும், இராணுவத்தினரும் கொள்ளை இலாபம் பெற்றுள்ளனர். இன்று வியட்நாமியர் கம்போடியாவை விட்டு அகன்றாலும் கமரூச் போராளிகள் கம்போடிய அரசுக் கெதிராகப் போராடி வருகின்றனர். உலக நாடுகளும், கம்போடிய அரசும் கமரூச் கெரில்லாக்களுக்கு உதவ வேண்டாமெனத் தாய்லாந்தைக் கேட்டுக் கொண்டுள்ளன. தாய்லாந்து தாம் தொடர்ந்து உதவப் போவதில்லை என்று கூறினாலும் மறைமுகமாக ஆயுத வர்த்தகம் தொடர்கின்றது.



அண்மையில் நடந்த பாயிலின் யுத்தத்தின் பின் 25,000 அகதிகள் தாய்லாந்தில் புகலிடம் தேடியுள்ளனர். கம்போடிய – தாய்லாந்து அரசுகள் அகதிகள் சம்பந்தமாக ஒரு பொதுக் கொள்கைக்கு இணங்கியுள்ளன. அதாவது தாய் அரசு எடுக்கும் அகதிகள் பற்றிய எந்த முடிவும் முதலில் கம்போடியாவுடன் ஆலோசித்த பின்பே நடைமுறைப் படுத்த வேண்டும். ஆனால் தாய் அரசு திடீர் என இதை மீறி விட்டது. மேற்கூறிய பாயிலின் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்த 25,000 அகதிகளையும் கட்டங் கட்டமாக கம்போடியாவுக்குள் கமரூச் போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குத் திருப்பி அனுப்ப அது தொடங்கியுள்ளது. பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் இந்த ஒரு பட்ச நடவடிக்கை கம்போடிய அரசைப் பெரும் அதிர்ச்சி அடையச் செய்துள்ளது. கமரூச் போராளிகளுக்கு ஆயுதம் கொடுப்பதற்குச் சமமான செயலென்று இதை ஒரு கம்போடிய அதிகாரி வர்ணித்துள்ளார். கம்போடியத் தலைநகரில் தங்கியிருக்கும் ஐ.நா அதிகாரிகள்

**கம்போடியா**

**தலைநகர்**
நொம்பென்

**பரப்பு**
1, 81, 035 சகிமீ

**மக்கள் தொகை**
88 00, 000

**மொழி**
கெமர், பிரஞ்சு

**எழுத்தறிவு**
50 வீதம்

**சமயம்**
தெரவாடா புத்தம்

**நாணயம்**
ரியல் (Riel) (ஒரு டொலர் = 1,993 ரியல்)

**தனிநபர் வருமானம்**
150 டொலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்லாந்தின் இந்த நடவடிக்கையைக் கண்டித்துள்ளனர். அத்துடன் கெரில்லாக்களுக்குத் தொடர்ச்சியாகச் செய்யப்படும் ஆயுத உதவி பற்றிய ஆதாரங்களும் தம்மிடம் உண்டு எனத் தெரிவித்துள்ளனர்.

கம்போடிய வெளிவிவகார அமைச்சர் நொறொடொம் சிறிவுத் அகதிகள் திருப்பி அனுப்பப்படும் தகவலைப் பெற்றவுடன், ''இது ஒரு மனித உரிமை மீறல் பிரச்சனை, தாய்லாந்து பெருந் தவறு இழைத்துவிட்டது'' என்றார். முன்பு செய்த ஒழுங்குகளின்படி அவர் அடுத்த நாள் தாய்லாந்தின் தலைநகருக்குச் சென்றபின் ''திருப்பி அனுப்புவதற்குக் காரணமென்ன என்பதை நான் ஆராய வேண்டும்'' என்றுசற்றே பணிந்து வந்துள்ளார். ஒரு மேற்குலக இராஜதந்திரி தாய்லாந்து தவறு செய்யவில்லை என்கிறார்; காரணம்: தற்காலிகப் புகலிடம் தருவதாகவே தாய்லாந்து அண்மையில் ஒத்துக்கொண்டுள்ளது. கூடிய விரைவில் அவர்களைத் திருப்பி அனுப்புவதாகவே தாய் அரசு வெளியரங்கப்படுத்தியுள்ளது. பலாத்காரமாக அகதிகள் திருப்பப்பட்டதற்குச் சான்றுகள் இல்லை. ஆனால் தாம் உள்ளுக்குள் தள்ளிவிட்டதாக ஓர் இராணுவ அதிகாரி தன்னை இனங்காட்டாமல் கூறியுள்ளார். அத்துடன் கெரில்லாக்களின் குடும்பத்தினரையும், அனுதாபிகளையும் அரச படைகள் உள்ள பிரதேசத்திற்குள் தள்ளுவதைத் தாம் தவிர்த்துக்கொண்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

தாய் அரசு பெருந் தவறு இன்னுமொரு விதத்தில் இழைத்து விட்டதாக நடுநிலை நாடுகள் தெரிவிக்கின்றன. ஐ.நா அதிகாரிகளையும், இருபக்கத்துடன் தொடர்பு இல்லாத நாடுகளின் பிரதிநிதிகளையும் கம்போடிய அகதிகளைத் தாய்லாந்தில் வைத்துப் பார்வையிட அவர்கள் அனுமதி மறுத்துள்ளனர். இதற்குப் பதிலளிக்கும் விதத்தில் தாய்லாந்துப் பிரதமர் சுவான் லீக்பை பின்வருமாறு: ''எமது இராணுவம் செய்ததைச் சரியென ஏற்றுக்கொள்கிறேன். ஐ.நாவையோ வேறு எந்த நாட்டையோ கலந்து ஆலோசிக்க வேண்டிய கட்டாயம் எமக்கு இல்லை'' என்று கூறியுள்ளார். தொடர்ந்து பேசும்போது சுவான் லீக்பை 1979 ஆம் ஆண்டு தொடக்கம் கம்போடிய அகதிகளைத் தாம் பராமரித்துள்ளதாகவும், இனிவரும் அகதிகளைத் தாம் தற்காலிக அகதிகளாகவே கருதுவதாகவும் தெரிவித்துள்ளார்.

(F)பார் ஈஸ்ரேன் எக்கனமிக் றிவியூ.

ஏப்பிரல் 7, 1994.

# உயரப் பறப்பவை

## மக்கள் வாயைப் பிளந்தனர்; காசு கதை சொல்லியது!

சிங்கப்பூர் நாட்டு வான்படையின் பிளாக்நைற் விமானங்கள், தமது வான் சாகசங்களால் மக்களைப் பரவசப்படுத்தின. ஆனால், கூடுதற் பரபரப்பான நிகழ்வுகள், நிலத்தில் அதாவது, ஆசிய விமானக் கண்காட்சியில் தான் நடந்தன. இக்கண்காட்சி, ஒவ்வொரு வருட்மும் வருடத்தில் இரு தடவை நடைபெறுவது வழக்கம். இம்முறை வானூர்தி உற்பத்தி, இயந்திரப் பாகத் தயாரிப்பு, ஆயுதத் தயாரிப்பு ஆகிய துறைகளைச் சேர்ந்த 900-க்கு மேற்பட்ட கம்பனிகள் கண்காட்சிக்கு வந்திருந்தன. ஜோகோர் நாட்டின் சுல்தான், இந்தோனேசியாவின் ஆராய்ச்சி, தொழில் நுட்ப இராஜாங்க அமைச்சர் பி.ஜெ. ஹபீபி போன்ற பல மிக முக்கிய பிரமுகர்களும் வந்திருந்தனர். ஜகர்த்தாவின் அமைச்சர் ஹபீபி, உயர் தொழில் நுட்ப இலக்குக் கொண்டவர். இவர் I.P.T.N. என்ற வானூர்தித் தயாரிப்புக் கம்பனியின் தலைவரும் ஆவார். இக்கம்பனி கண்காட்சியில் வைத்து, ஐரோப்பாவின் எயர் பஸ் நிறுவனத்துடன் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துள்ளது. கண்காட்சியை, சிங்கப்பூரின் பிரிகேடியர் ஜெனரல் லீ சின் லூங் திறந்து வைத்தார். சிங்கப்பூரின் உபபிரதம மந்திரி: ''இப்பிரதேசம், உலகில் மிக வேகமாக வளர்ந்து வரும் வானூர்தி, வானூர்தி உபகரணச் சந்தையாகிவிட்டது'' என்று தெரிவித்தார். ஆசியாவின் விமானப்பயணிகளின் எண்ணிக்கை, வருடத்திற்கு 8 வீதப்படி அதிகரித்துச் சென்று, 2006 ஆம் ஆண்டளவில் ஐரோப்பாவையும் (5.1 வீதம்) ஐக்கிய அமெரிக்காவையும் தாண்டிவிடும் என்று எதிர்வு கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தரங்கங்களை ஒழுக விடும் அமைச்சு

அவுஸ்ரேலியாவின் இரகசியப் புலனாய்வு முகவர்கள் (ASIS) மலேசியாவின் நாடாளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குப் பெருமளவில் லஞ்சம் வழங்கியதாகச் சிட்னி செய்தித் தாள் ஒன்றிற் செய்தி வெளியான பொழுது வெளிநாட்டு அமைச்சர் கறெத் இவான்ஸ் அதனை மறுத்து அறிக்கை விடுத்துள்ளார். ''என்னதான் விஷமத்தனமும், வழிபாடும் கொண்டதாயினும்'' இந்தச் செய்திக் கதை பற்றி அவர் எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை. சுயமாகத் தொழில் புரியும் பெயர் வெளிப்படுத்தாத ஆசிஸ் முகவர்கள் இருவர் ஒரு மாதத்துக்குப் பின்பு பொதுத் தொலைக்காட்சி ஒன்றிலே தோன்றி மேலும் சில இரகசியங்களை வெளிப்படுத்தாதிருந்திருப்பின் இந்த விவகாரம் தானாகவே மறக்கப்பட்டு மறைந்துபோயிருக்கும். குறிப்பிட்ட ஆசிஸ் முகவம் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி கொறோசன் அக்கினோவுக்கு எதிராக இராணுவ அதிகாரிகள் மேற்கொள்ளும் சதிக்கு ஆதரவளிக்கும் வகையில் அவர்களுக்குப் பெருமளவு கொடுப்பனவைச் செய்ததாக இவர்கள் வெளிப்படுத்திய இரகசியமும் இவற்றுள் ஒன்றாகும். பிரித்தானியர் சார்பில் ஹொங்குகாஸ்கின் பிரதான நிலப் பகுதியிலுள்ள சீன நிறுவனங்களிடமிருந்து வர்த்தகத் தகவல்களைப் பெறுவதற்கென அவற்றின் அலுவலகங்களில் இரகசியம் கேட்குங் கருவிகளைப் பதித்து வைத்துள்ளதாகவும் இவ்விருவரும் தெரிவித்தனர்.



**அவுஸ்ரேலிய உளவாளிகள், தமது உளவினிரகசியங்கள் பகிரங்கமாகி வருவதாற் சங்கடப்படுகிறார்கள்.**

உலகின் மிக அந்தரங்கமான புலனாய்வு முகவங்களுள் ஒன்று எனப் பெயர் பெற்ற ஆசிஸ் முகவத்தின் இரகசியங்கள் சடுதியில் எங்கும் வெளியாகி விட்டன. இதன் நடவடிக்கைகளால் அவுஸ்திரேலியாவின் அயலவரான ஆசிய நாடுகளோடு அது கொண்டிருந்த உறவுகள் பாதிப்புக்கு உள்ளாகலாம். மலேசியப் பிரதமர் போல் கீற்றிங் தமது எதிரிணையாளரான மகாதிர் முகமட் கடந்த நவம்பரில் இடம் பெற்ற ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு உச்சி மாநாட்டுக் கருத்தரங்கிலே கலந்து கொள்ள மறுத்ததை வைத்து முகமட்டை ''ஒழுங்குக்குக் கட்டுப்படாதவர்'' என்று விமர்சிக்க நேர்ந்ததை ஆசிஸ் முகவத்தின் தூண்டுதலின் முதலங்கம் எனலாம். இவ்விருவருக்குமிடையே ஏற்பட்ட இந்த முறுகல் நிலை தொடர்ந்து வந்த அறிக்கைகளாலும் சீர்ப்படுத்தப்படவில்லை. குறித்த லஞ்சம் வழங்குதலானது மலேசியாவின் எதிர்க்கட்சி உறுப்பினரிலும் பார்க்க ஆளுங் கட்சி உறுப்பினர்களையே குழப்பி விட்டதால் நாலாண்டுகளுக்கு முன்பே கொடுப்பனவு நிறுத்தப்பட்டு விட்டதாக அவர்கள் கூறினார்கள்.

இவான்ஸ் இது தொடர்பாக உத்தியோக மட்ட விசாரணை ஒன்று நடத்துவதாகத் தெரிவித்தார். இந்த விசாரணைக்குழு நியூ சவுத் தலைமையிற் செயற்பட்டது. இக்குழு ஆசிஸ் ஆளணியினரின் குறைகளையும், முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யீடுகளையும் பரிசீலனை செய்வதற்கென்று நியமிக்கப்பட்டதாகும். அவுஸ்திரேலியப் புலனாய்வுச் சேவையை ஒழுங்கமைக்கவும், வரையறை செய்யவும், சீர்ப்படுத்தவுமான வழிவகைகளை ஆராய்ந்து தீர்மானிப்பது இக்குழுவின் மற்றொரு நோக்கமாகும். எதிர்காலத்தில் இப்படியாக இரகசியங்களை ஒழுகி விடும் நிலை ஏற்படாது என்று இவான்ஸ் நம்பினார். ''அவ்வாறு நிகழுமானால் தேசத்தின் பாதுகாப்புக் கருதி உறுதியானதும், உடனடியானதுமான நடவடிக்கை எடுக்கப்படும்.'' மேலும் ''நெருக்கமாகவும், மிக அந்தரங்கமாகவும் செயற்படவேண்டிய இத்தகைய நிறுவனங்கள் ஒழுங்காக மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டியவையாகும்'' என்றும் அவர் தொடர்ந்து கூறினார்.

கன்பெரா (அவுஸ்ரேலியத் தலைநகர்) இவ்விசாரணையின் மூலம் லஞ்சம் பெறப்பட்ட உண்மையை வெளிப்படுத்துவதற்குத் தமது அரசாங்கம் பூரண ஒத்துழைப்புத் தர விரும்புவதாக மலேசிய உள்நாட்டுத் துணை அமைச்சர் மெகட் யூனைட் மெகட் கூறியுள்ளார். மலேசியக் காவல் துறைத் தலைவர் அப்துல் றஹ்மின்நூர் லஞ்சச் செய்தியினை வெளிப்படுத்திய அவுஸ்திரேலியச் செய்தித்தாள் நிருவாகிகளைக் குறுக்கு விசாரணை செய்யவும், அதேபோல் லஞ்சக் குற்றப் புகாரை வெளியிட்ட முன்னைய முகவர்களைச் சந்திக்கவும் தமது பிரதிநிதிகளை அனுப்பத் தாம் விரும்புவதாகச் சொன்னார். ''கன்பெரா ரைம்ஸ்'' பத்திரிகை தனக்குக் கிடைத்த செய்தியின் மூலாதாரத்தினை வெளிப்படுத்த மறுத்து விட்டது. ''சண்டே ரெலிகிராப்'' பத்திரிகைப் பிரதம ஆசிரியர் கோலாலம்பூருடன் (மலேசியத் தலைநகர்) ஒத்துழைக்கத் தயார் எனக் கூறியுள்ளார்.

அவுஸ்ரேலியப் புலனாய்வுக் குழுவின் தற்போதைய விசாரணையே, 1983 இற்குப் பின் மேற்கொள்ளப்படும் முதலாவது விசாரணையாகும். அந்த ஆண்டிலே (1983) புலனாய்வுப் பயிற்சி மிகவும் மோசமான பிழையான வழியிற் சென்று முடிந்தது. முகவர்கள் மெல்போனிலிருந்த உணவு விடுதி ஒன்றினுள் ஆயுததாரிகளாக நுழைந்து அங்கிருந்த விருந்தினர்களை மிரட்டிக் கதவுகளை அடித்துடைத்துப் பெருங் குழப்பம் விளைவித்தனர். இதன் விளைவாக ஆசிஸ் பணிப்பாளர் ஜோன்றியன் பதவியிலிருந்து விலகுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார். மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இயங்கி வந்த இம் முகவத்தின் முத்திரை பொதுமக்களின் முன்பு இவ்வாறு 1983 இற் கிழிந்து போயிற்று.

1952 மே 13 அன்று ஆசிஸ் நிறுவப்பட்டது. ''Moq'' என்ற குறியீடு மூலம் அது அழைக்கப்பட்டது. இதன் முதற் பணிப்பாளரான அல்பிறட் புறூக்ஸ் சட்டயாப்பிற்கு அமைவாகவன்றி நிறைவேற்று நிலை அலுவலர் என்ற ரீதியிலே தமது நியமனத்தைப் பெற்றார். அமெரிக்காவின் சி.ஐ.ஏ போன்றில்லாது இன்றும் இம்முகவம் சட்ட யாப்புப் பதிவைப் பெற்றிருக்கவில்லை.

எனவே ஆசிஸ், அவுஸ்ரேலிய நாடாளுமன்றத்தின் கட்டுப்பாட்டினுள் அடங்காத ஒன்றாகவே இயங்கிவருகிறது. தேசிய நிதிய றிக்கையில், இதன் செலவு விபரமும் உள்ளடக்கப்படுவதில்லை. 20 மில்லியன் டொலர் செலவினத்தை வெளிவிவகார அமைச்சின் செலவினத்திலிருந்து உபமானியமாகவே ஆசிஸ் பெற்று வருகிறது. மெல்போனில் இயங்கி வந்த இம் முகவம், 1977 இலேயே கன்பெராவுக்கு மாற்றப்பட்டது. இது வெளிவிவகார வர்த்தகத் திணைக்களத்தின் நிழலில் இருந்தபோதிலும், கன்பெராவின் தொலைபேசிப் பதிவுப் புத்தகத்தில் இதன் பெயர் பதிவு பெறாமல் இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அமெரிக்க, ஐரோப்பியப் புலனாய்வு முகவங்களோடு ஒப்பிடுகையில், ஆசிஸ் மிகச் சிறியதொரு முகவந்தான். இதில் 35 முகவர்கள் உள்ளனர். சராசரியாக, ஒவ்வோராண்டும் ஐந்துபேர் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். பயிற்சி மிகவுங் கடுமையானது. வெளிநாட்டு மொழிகளைச் சரளமாய்ப் பேச, எழுதத் தெரிந்திருப்பது, பெருமதிமிக்க உயர் திறனாகக் கணிக்கப்படும். ஆசிஸ் ஆளணியினர், இராஜதந்திரிகள் என்ற போர்வையில் அடிக்கடி புகுந்து கொள்வார்கள். இந்தப் போர்வையானது, இராஜதந்திரிகளுக்குச் சில வேளைகளிற் சங்கடமாகி விடுவதும் உண்டு.

போட்டியும், பகைமையும் அவ்வப்போது பிரச்சினைகளை உருவாக்கி விடுவதுண்டு. ஒரு சந்தர்ப்பத்தில், பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் மீது உளவு பார்த்து வந்த இரு முகவர்களின் முகத்திரையை இராஜதந்திரி ஒருவர் கிழித்து விட்டார். அவ்விருவரும் உயிர் பிழைத்துத் தப்பி வந்தமை அவர்களின் அதிர்ஷ்டத்தினாலேதான். இன்னொரு சந்தர்ப்பத்தில், இராஜதந்திரியான இளைஞர் ஒருவருக்கு – இன்று அவர் மிக உயர்ந்த பதவியில் இருக்கிறார். அவர் பதவி ஏற்றுச் சென்ற நாட்டில் இயங்கி வந்த புலனாய்வுத் துறைத் தலை

---

**அவுஸ்ரேலியா**

**தலைநகர்**
கன்பெரா
**பரப்பு**
76. 82. 300 ச. கி. மீ
**மக்கள் தொகை**
1. 76. 00. 000
**மொழி**
ஆங்கிலம்
**எழுத்தறிவு**
99 வீதம்
**சமயம்**
கிறித்தவம்
**நாணயம்**
டொலர்
(ஒரு அமெரிக்க டொலர் 1 . 42)
**தனிநபர் வருமானம்**
16 . 350 டொலர்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிடம் ஒரு செய்தியினை வாய் மூலமாகச் சொல்லுமாறும், அந்தச் செய்தியை அந் நோக்கத்திற்காக மனனஞ் செய்து செய்யவேண்டும் என்றும் பணிக்கப்பட்டது. அந்த இளைஞரோ, செய்தியை மனனஞ் செய்யச் சோம்பற்பட்டு, எழுத்து வடிவிற் குறித்துச் சென்று, குறித்த தலைவரின் அலுவலக மேசையிற் போட்டுவிட்டார். அந்த வேளை யில் அந்த அலுவலகத்தில் அந் நாட்டு சிரேஷ்ட இரகசியக் காவல் துறை அதிகாரி இருந்தார்.

குறிப்பிடத்தக்க சில விதி விலக்குகளைத்தவிர, ஆசிஸ் முகவத் தின் செயற்பாடுகள் ஆசியாவிற் குள் மட்டுப்படுத்தப்பட்டவையா கும். அண்மைக் காலத்தில் ஆசிஸ், தனது மூல வளங்களை ஆசியப் பிரதேசங்களிற் கள வேலைக்கெனப் பயன்படுத்தி, புதிய இரு கிளை களை அங்கு உருவாக்கியுள்ளது. இதன் மூலம், முகவத்தின் செயற் பாடு ஆற்றல் கூடியதாகலா · ஜகார்த்தாவில் மூன்று முகவர்க ளும், பெய்ஜிங்கிலும், டெல்கியி லும் தலா இருவரும், மணிலா, ரோக்கியோ, சிங்கப்பூர், பாங் கொக், ரைப்பே ஆகிய இடங்க ளில் ஒவ்வொருவரும், புலனாய்வுப் பணியில் ஈடுபட்டிருப்பதாக நம்பப் படுகிறது.

பெரும்பாலும் புலனாய்வு முக வங்களின் வெற்றிகளிலும் பார்க்க, தோல்விகளே அதிகமாக வெளியில் தெரிவது வழக்கமாக இருந்து வரு கின்றது. ஆசிஸ், இந்தோனேசியா விற் புலனாய்வு செய்து, இரு சாத னைகளைப் படைத்தமை குறிப்பி டத்தக்கதாகும். 1972 இல் கடல் மாநாட்டுச் சட்டம் தொடர்பாக ஜகார்த்தா, திட்ட ரீதியில் அமைத்த விரிவான ஆவணங்களை வசப்படுத்தியமை ஒரு சாதனை. இந்தோனேசியாவின் விமானப் படையிடமிருந்து, சோவியத் விமா னமான MiG-21 இனது முழுமை யான பயிற்சிக் கையேட்டினைப் பெற்றுக்கொண்டமை மற்றச் சாதனை. ஐக்கிய அமெரிக்க இரா ணுவப் படையினாலே கைப்பற்ற முடியாதிருந்த சோமாலியாவின் புரட்சிப்படைத் தலைவரான முக மது ஐ'டிட் ஐ, இவான்ஸ் சந்திக்க ஒழுங்கு செய்த முயற்சியின் பெரும் பகுதி ஆசிஸ் முகவரையே சாரும் என்று தெரிய வருகிறது.

ஆசிஸ் முகவர் சேவையின் மிகப் பெரிய சங்கடச் சூழ் நிலை கள், அதன் முன்னாள் முகவர்க ளாலோ, அவர்களின் மனைவிமா ராலோ வெளிப்படுத்தப்பட்டிருக் கின்றன. கிழக்கு ரைமோர் கிளர்ச் சிக் குழுவாகிய ஃபிரெட்லினின் தலைவரான ஜோஸ் ராமோஸ் ஹோற்ராவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர் என்று சொல்லப்பட்ட முன்னாள் முகவர் ஆன பெண்மணி ஒருவர், வெளி நாட்டுப் பாதுகாப்புச் சேவையி னர் மேற்கொண்ட அரசியற் சதிக் கொலை ஒன்றில் தாம் சம்பந்தப் பட நேர்ந்தமையை, வானொலிச் செவ்வி ஒன்றில் எடுத்துரைத்தார். மற்றொரு சந்தர்ப்பத்தில், முகவர் ஒருவரின் மனைவி, எவ்வாறு மற் றொரு நாட்டின் முகவரின் மனைவி யோடு தகாத முறையில் உறவு வைத்திருந்ததாக, தாம் குற்றஞ் சாட்டப்பட்டார் என்பதை விரித் துரைத்தார்.

அவுஸ்ரேலிய அரசு, தனது புலனாய்வு முகவத்தோடு நெருக்க மில்லாதது போல எட்டி நின்ற படியே, அதன் மூலம் சில நற்பயன் களை அடைந்திருக்கிறது. மலேசிய நாடாளுமன்ற அரசியல் வாதிக ளுக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டது தனக்குத் தெரியாது என்று, அது வன்மையாக மறுத்து வருகிறது. நாடாளுமன்றம், முகவத்தின் நாளந்தச் செயற்பாடுகள் பற்றி அறிவிக்கப்படுவதில்லை என்பது உண்மைதான். ஆனால், ஆசிஸ் அயலவர்களிடையிற் பழகுவதும், அவர்களின் நலன்களுக்கு எதிராகத் தொழிற்படுவதும், அவுஸ்திரேலி யாவின் பிரதேச உறவுகளைப் பாதித்து, அதற்குச் சங்கடம் விளைவிப்பதாகவே உள்ளன. சாதா ரண அவுஸ்ரேலியரிடையே, ஆசிஸ் புலனாய்வு முகவத்தின் படி மமானது கறைப்பட்டே காட்சி தருவதையும் மறுக்கவியலாது.

*'' ஏசியா வீக் '', மார்ச் 23, 1994*

## இன்னும் உயிர் துடிப்பு உள்ளது

*வடகொரியாவின் கொம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினரான கிம் யொங்சும் தான், அனைத்துலகத் தொடர்பு வேலைகளுக்குப் பொறுப்பாக இருந்தார். அவர், காரணம் அறிய முடியாத ஏதோ ஒரு வகையில், அதிகாரத்தில் இருந்து கழித்து வைக்கப்பட்டுவிட்டார் என்று, சென்ற டிசம்பர் மாதம் முதல் பேசப்பட்டது. ஆனால், அவர் உண்மையில் பொயாங்யாங் பிர தேசத்திற் சுறுசுறுப்பாகச் செயற்பட்டுக் கொண்டு உள்ளார். சென்ற ஏப்ரல் மாதத்தில், ஜனாதிபதி கிம் - இல் - சுங் அமெரிக்க சீ. என். என் தொலைக்காட்சிக்குப் பேட்டி கொடுத்ததும், அதன் பின்பு ஜப்பானின் என். எச். கே. தொலைக்காட்சியில் தோன்றி யதும், எல்லாம் அவரால் ஒழுங்கு பண்ணப்பட்டவையாம். பயிற்சி பெற்ற அந்தக் கிம், இன்னும் கட்சியின் மத்திய குழு வில் உள்ளார் என்பது தெரியாது உள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெக்சிக்கோ நாட்டின் புதிய ஜனாதிபதி வேட்பாளர் செடில்லோ



செடில்லோ பேசிக்கொண்டிருக்கிறார். கட்சியின் கொள்கைகள் மாறக்கூடாது; நாட்டில் உறுதிப்பாடும், தொடர்ச்சியும் நிலவவேண்டும் என்பது, இவருடைய நிலைப்பாடு.

கொலோசியோ சுட்டுக் கொல்லப்பட்ட ஆறாவது நாள், புதிய வேட்பாளராகச் செடில்லோ தெரிவு செய்யப்பட்டுள்ளார். கொலோசியோ இறக்கும் வரை, செடில்லோ அவருடைய தேர்தல் அலுவல்களுக்குப் பொறுப்பாகக் கடமையாற்றியுள்ளார். 42 வயதுடைய செடில்லோ, அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகத்திற் பயிற்சி பெற்ற பொருளாதார நிபுணராவார். தன்னுடைய முதலாவது தேர்தல், உரையில் தான் கொலோசியோவின் பணியைத் தொடரப் போவதாக வாக்களித்துள்ளார். '' புதிதாகத் தொடங்குவதற்கு ஒன்றுமில்லை '' என்று. அவர் ஆணித்தரமாகக் கூறியுள்ளார். நாட்டில் உறுதிப்பாடும், தொடர்ச்சியும் நிலவ வேண்டுமென்பதை, அவர் தனது பேச்சிற் பல தடவை வலியுறுத்தியுள்ளார்.

கொலைகாரனுக்கு உடந்தையாகச் செயற்பட்ட இன்னுமொருவன் மெக்சிக்கோ பொலிசாரினாற் கைது செய்யப்பட்டுள்ளான். கொலோசியோவைக் கொல்வதற்கு, ஆளுங் கட்சியின் பெரிய மனிதர்கள் சூழ்ச்சி செய்ததாக நாட்டில் வதந்திகள் பரவியுள்ளன. இதனால், ஒரு கொந்தளிப்பு நிலை உருவாகியுள்ளது. இதைத் தணிக்கும் முகமாக, ஜனாதிபதி சலினாஸ் கோர்தாரி இவ்வளவு வேகமாகச் செடில்லோவை வேட்பாளராகத் தெரிவு செய்துள்ளார், அத்துடன், இவர் சலினாஸ் கோர்தாரியின் கொள்கைகளில் நம்பிக்கையும், அக்கொள்கைகளை அமுலாக்க வேண்டும் என்ற ஆர்வமும் உடையவர்.

செடில்லோ தெரிவு செய்யப்படுமுன், பி. ஆர். ஐ கட்சிப் பிரமுகர்களுக்கிடையில் ஒரு மோதல் நிலை உருவாகியமை உண்மையான சங்கதி. தங்களுக்குப் பிடித்தமான வேட்பாளர்களைச் சிபாரிசு செய்வதிற் பலர் குறியாக இருந்தனர். தீவிர வலதுசாரிகள், சட்டம் ஒழுங்கு என்ற போர்வையில், இறுக்கமான சர்வாதிகார ஆட்சியை நிறுவக் கூடிய வேட்பாளரை முன்வைத்தனர். தனது பிரத்தியேக அதிகாரத்தைப் பிரயோகித்து, சலினாஸ் கோர்தாரி, கட்சி அண்மைக்காலத்தில் எடுத்த தீர்மானங்களை ஆதரிக்கும் செடில்லோவைத் தெரிவு செய்துள்ளார். இதற்கு முன், எந்தவொரு தேர்தலிலும் வேட்பாளராக நில்லாதவர் செடில்லோ. இவருடைய தந்தை ஒரு மின்சார ஊழியர். ஆகவே, இவருடைய பின்னணி வசதியற்றதாகும். உபகாரச் சம்பளம் பெற்று அமெரிக்கா சென்ற செடில்லோ, பொருளாதாரத்திற் கலாநிதிப்

**மெக்சிக்கோ**

**தலைநகர்**
மெக்சிக்கோ நகர்

**பரப்பளவு**
19, 72, 547 ச. கி. மீ.

**மக்கள் தொகை**
8, 83, 35, 000

**மொழி**
ஸ்பானிஷ், அமெரித்தியான் மொழிகள்

**எழுத்தறிவு**
92 வீதம்

**சமயம்**
கிறித்தவம்

**நாணயம்**
பெஸோ (ஒரு டொலர் = 310)

**தனிநபர் வருமானம்**
2,390 டொலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டம் பெற்றுள்ளார். நாடு திரும்பியபின், மத்திய வங்கியில் உயர் பதவி இவருக்குக் கொடுக்கப் பட்டுள்ளது, பணவீக்கத்தைத் தணிப்பதில், இவருடைய முயற்சிகள் வெற்றி கண்டுள்ளன, கட்சியின் பார்வை இவர்மீது பட்டிருக்கின்றது. இதன்பின், இவர் சில காலம் கல்வி அமைச்சராகக் கடமையாற்றியுள்ளார். மெக்சிக்கோவின் முறைப்படி, தேர்தலைச் சந்திக்காமலேயே, இவர் பதவியை வகிக்க முடிந்துள்ளது.

கொலோசியோ கொலை விசாரணையைக் கவனிப்பதற்காக, மைக்கல்மொன்றோய் என்ற அதிகாரி பொறுப்பாக நியமிக்கப் பட்டுள்ளார். இவருடைய முதற் கடமை, இக்கொலை பலரின் கைங்கரியமா? என்று புலனாய்வு செய்வதே. கொலை செய்தவன் மாரியோ ஆபுர்ரோ மார்ரினேஸ்; சில காலம் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் வசித்துள்ளான். இதனால், அமெரிக்கா எம்.பீ.ஐ நிறுவனமும் உதவிக்கு அழைக்கப் பட்டுள்ளது. கன்சேஸ் வெனிகாஸ் (வயது 56) என்ற இளைப்பாறிய பாதுகாப்பு அதிகாரி, கொலையில் தொடர்பு உள்ளவன் என்ற சந்தேகத்திற் கைது செய்யப்பட்டுள்ளான். கொலை நடப்பதற்குச் சில நிமிடங்களுக்குமுன், கொலைகாரனுடன் இவன் பேசிக்கொண்டு நின்றதாகப் பலர் சாட்சியம் கூறியுள்ளனர். மேலும், கொலைகாரனுக்கும் இவனுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென, கொலைகாரனின் காதலி சாட்சியிற் கூறியுள்ளார்.

உள்நாட்டு அமைச்சில் வேலை செய்யும் சன்சேஸ் ஓர்டேகா என்பவனும், தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளான். இவன், இன்னும் கைது செய்யப்படவில்லை. பீ.ஆர்.ஐ கட்சிக்கும், கொலைக்கும் தொடர்பு உண்டு என்ற மக்களின் சந்தேகம் ஊர்ஜிதம் ஆகிவிட்டால், செடில்லோ வெற்றி அடைவது மிகவும் சந்தேகமே.

"ரைம்," ஏப்ரல் 11, 94.

# கொலோசியோ கொலை ஒரு கூட்டு முயற்சியா?

Chunnakam Branch Library

ஜனாதிபதி வேட்பாளர், மக்கள் கூட்டத்திற்குள் புகுந்து கைகுலுக்குதல், தழுவுதல், பரவசமடைதல் போன்ற தேர்தற்கால நடிப்பில் ஈடுபட்டிருக்கும்போது, ஒரு படப்பிடிப்புப் பிரியன் அமைதியாக யாவற்றையும் தனது வீடியோக் கருவியிற் பதிவு செய்து கொண்டான். கொலையும், அவனுடைய கறுப்பு வெள்ளைப் படத்திற் பதிவாகியுள்ளது. இந்தப் படச்சுருள்தான், இன்று கொலைப் புலனாய்வுக்குப் பெரும் ஆதாரமாக விளங்குகின்றது. மெக்சிக்கோ நாட்டிலுள்ள எல்லாத் தொலைக்காட்சி நிலையங்களும் இப்படத்தைக் காட்டியுள்ளன. அத்துடன், காவல்துறையினர் இந்தப் படத்தை ஒவ்வொரு அங்குலமாக நிறுத்தி அவதானித்தபோது, சில திடுக்கிடும் செய்திகள் வெளிவருகின்றன.

கொலைகாரன், கொலோசியோவை நெருங்குவதற்கு வசதியாக, பிறிதொருவன் சனக்கூட்டத்திற்கிடையிற் பாதையுண்டாக்கிக் கொடுப்பதை, இப்படம் நன்றாகக் காட்டுகின்றது. இந்த வழி ஏற்படுத்திக் கொடுத்தவன், சனக்கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காக, கட்சி அமர்த்திய ஊழியன் என்றும் தெரிய வந்துள்ளது இதை ஆதாரமாக வைத்து, நாட்டின் பிரபல தினசரிப் பத்திரிகை "எல் யூனிவர்சல்" பின்வருமாறு தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது:- "கொலோசியோ படுகொலை, ஒரு கூட்டு முயற்சி." பத்திரிகைகளின் தலையீடு, புலனாய்வுக்கு வேகங்கொடுத்துள்ளது. வழியேற்படுத்தியவன் கைதுசெய்யப்பட்டதுடன், இளைப்பாறிய காவல் துறையினன் என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


அதே சமயத்தில் இக்கொலை, கட்சிக்குள் இவ்வளவு காலமும் வெளிவராதிருந்த தீவிர வலதுசாரி முற்போக்குவாதிகளுக்கிடையிலான மோதல்களையும் முன்னணிக்குக் கொண்டுவந்துள்ளது. அரசியல், சமுதாய, பொருளாதார சகல துறைகளையும் தனது இரும்புப் பிடியில் வைத்திருந்த கட்சி, இன்று உட்பூசல்களாலும், சந்தேகங்களாலும் தடுமாறுகின்றது. ஆகஸ்ற் மாதம் தேர்தல்கள் நடக்குமுன், இன்னும் பல பூகம்பங்கள் வரலாமென்று, கட்சி அஞ்சுகின்றது. அமைதியை நிலைநாட்டுவதற்கு முதற்படியாக, கொலோசியோ கொலை சந்தேகத்திற்கிடமானதென்பது, துப்புத் துலக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமே. ஆனால், கொலைகாரனைவிட இன்னுமொருவன் கைது செய்யப்பட்டாலும், பரவலான சதித்திட்டத்திற்குத் தேவையான ஆதாரம் இதுவரை கிடைக்கவில்லை. அண்மையில் எடுக்கப்பட்ட மக்கள் கருத்துக் கணிப்பில், பின்வரும் அபிப்பிராயங்கள் வெளிவந்துள்ளன:- கொலை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட மைக்கேல் மொன்றேஸ், பீ.ஆர்.ஐ கட்சியுடன் தொடர்புடையவர். இவரிடமிருந்து, நேர்மையான விசாரணையை எதிர்பார்க்க முடியாது. அரசு ஒருபோதும் உண்மையை வெளிவரவிடப் போவதில்லை. தீவிர வலதுசாரிகளே இந்தக் கொலையின் பின்னணியிற் செயற்பட்டிருக்கிறார்கள். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கெனடியின் கொலைபோல, இங்கும் ஒரு மர்மமாகவே இறுதிவரை இருக்கும்.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர்கள் பெரிய வியாபாரம் செய்கிறார்கள்.



டலாஸ் துப்பாக்கி ஆண்டு விழாவில், ஏ. கே. 47 துப்பாக்கி ரகத்தை வடிவமைத்துக் கொடுத்த கலாஷ்னிகோவ், துப்பாக்கி சுடக் குறி வைக்கிறார்.

— எழுதியவர் —
கறோல் பொகேட்

சோவியத் இராணுவத்தின் மிகப் பெரிய பாரஞ்சுமக்கும் விமானம் ஏ. என். 124 ஒஹியோ மாநிலத்திலுள்ள கொலம்பஸ் நகரில் அபூர்வமாக இறங்கியது. சென்ற டிசெம்பர் 23 இல் நடந்தேறிய வரலாற்றில் ஒரு புதுமை அந்த நிகழ்ச்சி. சுங்க அதிகாரிகள் அதன் களஞ்சிய அறையிற் கண்டவை, அதிலும் வியப்பான பொருள்கள். 18, 750 ஒரளவு தன்னியக்கத் துப்பாக்கிகள், சோவியத் படை வீரர் தாங்கிச் செல்லும் (10 சுற்று சுடவல்ல) எஸ். கே. எஸ். றைஃபிள்கள் ஆகியவை இருந்தன. ஒரு காலாட் படைப் பிரிவுக்குப் போதிய அளவு ஆயுதங்கள். விமான நிலைய அதிகாரிகள் பெரு வியப்பில் மூழ்கினாலும், துப்பாக்கி, மது இறக்குமதிக் கட்டுப்பாட்டு அதிகாரிகளின் இறக்குமதி அநுமதிச் சீட்டுக்கள் அனைத்தும் சரியாகவே இருந்தன. ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர், நாடு முழுவதும் ஆவலுடன் காத்திருந்தனர்.

இந் நாளில், துப்பாக்கிக் கைத்தொழில் வியாபாரம் பெருக லாபத்தோடு நடக்கின்றது. முன்னை நாள் பொதுவுடைமை நாடுகளிடமிருந்தும், சீனாவிலிருந்தும் மலிவாக அமெரிக்காவுக்குள் அவை இறக்கப்படுகின்றன. ஆறு மாதங்களுக்குள், ருஷ்யாவிலிருந்து இறக்குமதி அதிகரித்து வருகிறது, சீனத் துவக்குகள் ஏற்கனவே சந்தையிற் பெருமளவு குவிந்துள்ளன. 1992 இல் அமெரிக்கா 97,000 சீனத் துவக்குகளை (பெரும்பாலும் ருஷ்யாவிடம் பிரதி செய்த மாதிரிகள்) இறக்கியது. 1993 இல் ஒன்பது இலட்சம், முன்னைய ஆண்டிலும் 10 மடங்கு இறக்குமதியாயிற்று: எஸ். கே. எஸ் றைஃபிளின் விலை 70 டொலர்; மிக மலிவு. அதே வகையான அமெரிக்கக் கருவி 600 டொலர் ஆகும். இப்போது தேவை அதிகரித்து விட்டதால், விலைகளும் இரண்டு மூன்று மடங்கு ஆகி விட்டன. வழங்குவோர், கேள்வியைச் சமாளிக்க இயலவில்லை. ருஷ்ய, ஹங்கேரியத் துப்பாக்கிகளை இறக்குமதி செய்யும் கம்பனி முதலாளி ஒருவர், தாம் சீவியத்தில் இப்படியான இலாபந்தரும் வாணிபத்தில் ஈடுபட்டது கிடையாது என்கிறார்.

**துப்பாக்கிகளை முன்னை நாள் பொதுவுடைமை வாதிகளிடமிருந்து வாங்குவது என்பது, பெரும் பைத்தியமாகி விட்டது.**

குற்றவாளிகள் இத்துப்பாக்கிகளை உபயோகிக்க முடியாது. றைஃபிள்களை மறைத்து வைப்பது கடினம். வாங்கும் வாடிக்கையாளரிற் பலர், பலவகைகளைச் சேகரித்து வைப்போர்; அல்லது, தினசரி வேலைகளுக்குத் துப்பாக்கியைப் பயன்படுத்துவோர். வெயின்லோ என்ற கல்லூரி மாணவன், தன் பேராசிரியரையும், சக மாணவனையும் சுட்டுக் கொன்றதற்காக விசாரணை செய்யப்படுகின்றான். அப்படி எவனும் விளையாட்டுச் சாமான்கள் விற்கும் கடையில் துப்பாக்கி வாங்கி, தபால் மூலம் தோட்டா பெற்று விடமுடியுமானால், கொலைகள் அதிகரிக்குமென்ற எச்சரிக்கையை, துப்பாக்கி மது கட்டுப்பாட்டுத் திணைக்கள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரிகள் விடுத்துள்ளனர். 1992 இல் சீனர் விற்ற தோட்டா மருந்து வகை, 55 மில்லியன் முறை சுடப் போதுமானவை. ஒரு தோட்டா, அமெரிக்க நாணயத்தில் 10 சதம். அமெரிக்கத் தோட்டா விலையில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே.

18,750 றைஃபிள் விற்பனையால், அரை மில்லியன் டொலர் இலாபம் கிடைக்கும். சீனத் துப்பாக்கி விற்பனையில் முன் நிற்கும் கம்பனியொன்று, 1992 இல் 24 மில்லியன் டொலர் சம்பாதித்தது. இப்போது, அது இரட்டித்திருக்கும். அதன் 1993 விலைப்பட்டியற் கைநூலின் முகப்புப் படத்தில் ருஷ்ய றைஃபிள் காணப்படுகிறது. பின் அட்டையில், இரண்டு கலைமான்கள் தாங்கும் விருது மொழி, '' உலகில் சமாதானம் ஓங்குக. '' (எல்லாருக்கும் இலாபம் பெருகுக.) (வேட்டையாடுதல், விளையாட்டுக்கள் வரிசையிற் சேரும்.)

ஜனவரி மாத நடுப்பகுதியில் டலாஸில் நிகழ்ந்த சுடுதல், வேட்டை, வெளிக்கள விளையாட்டுக்கள் வர்த்தக ஆண்டு விழாவில் இறக்குமதியாளர்கள் பெரும் வணிகம் செய்தனர். சிறு வணிகர், மொத்த வியாபாரிகளைக் கெஞ்சித் திரிந்தனர். மைக்கேல் கலாஷ்னிகோவ், உலகில் மிக அதிகமாக உபயோகிக்கும் (எதிர்த்துத் தாக்கும்) றைஃபிளை ஆக்கிய பெருமைக்குரியவர். தாம், இரண்டு ஆண்டுகளுக்கு முன் தேசிய றைஃபிள் சங்கத்தில் அங்கத்தவரானார் என்று, அச்சங்கத்திற்குரிய கழுத்துப் பட்டியைப் பெருமையுடன் காட்டினார். அவர் கூறும் விளக்கம்:- ருஷ்யத் துப்பாக்கிகள் இங்கு பிரபலமாகக் காரணம், சுடும் கருவிகளில் அமெரிக்கருக்குள்ள தீராக் காதல் தான்.

அரசாங்கம், சுடும் கருவிகளைக் கட்டுப்படுத்தும் நோக்கம் உடையது என்ற செய்தியால் உந்தப்பட்டு, பலர் அவற்றை வாங்க முந்துகின்றனர். துப்பாக்கி, மருந்து சஞ்சிகை ஒன்றின் ஆசிரியர், பழைய காலத்தில் ரோமாபுரிச் செல்வர் '' வெசூவியஸ் '' மலைச்சாரலில் இன்பக் கேளிக்கைகளில் திளைத்தமையோடு ஒப்பிடலாம், இவ்வாண்டு துப்பாக்கி வாங்குவோர் ஆண்டுவிழாவிற் குழுமியிருந்தோரின் உல்லாசத்தை என வருணித்தார். உள்ளூர் (வேட்டைத்) துப்பாக்கி உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்று, இலாபம் குன்றிக் கலைக்கப்படும் நிலையிலிருந்தாலும், அது விளையாட்டுக்குரிய துப்பாக்கிகள் செய்யும் கட்டளையைப் பெரும் அளவிற் பெற்றுள்ளது. ஆயினும் இப்படி மலிவாகச் சந்தையில் விற்பவற்றோடு அது போட்டியிட முடியாது. இறக்குமதியைக் கட்டுப்படுத்தும்படி கேட்பது, அரசாங்கம் தனது பசை பிடித்த விரல்களைத் துப்பாக்கி உற்பத்திக் கைத்தொழிலிலும் தோய்த்து விட வழி செய்வதாகும். இறக்குமதியாளர் மிக ஒற்றுமையாகத் தொழில் செய்கின்றனர். போட்டியின் கஷ்டங்களுக்கு முகங்கொடுக்க அவர்கள் சம்மதம். அரசாங்கக் கட்டுப்பாடுகளை அவர்கள் சகிக்க மாட்டார்கள். 1991 இல் அமெரிக்கா இறக்குமதி செய்த றைஃபிள்களிலும், மும்மடங்கு உற்பத்தி செய்தது. 1992 இல் இறக்குமதி செய்தவற்றிலும், அரைவாசி அதிகம் உற்பத்தியாக்கியது சீனர் துப்பாக்கிகளைக் கொண்டு வந்து குவிக்காமல், சப்பாத்துக்களை மலிவாகக் கொண்டு வந்து சந்தைப் படுத்தினாலும், இதைவிடப் பெரிய ஓலம் எழும்.

கியூபா:

## கஸ்ரோவின் சூதுக்களம், காசுக்காரரைக் கவர்கிறது

*பொருளாதாரமும் சீர்குலைந்து, அரசத் திறைசேரியும் வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறையால் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கையில், கியூபாவின் அரசாங்கம் பகடையை உருட்டத் தொடங்கி விட்டது. அந்த நாட்டின் பயணிகள் கப்பல்களில் ஒன்றான சந்தியாகோடி கியூபாவில் சூதாட்டக் களம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. கைநிறையக் காசுகொண்ட வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைக் கவரவே, அப்படிச்செய்யப்பட்டு உள்ளது. கியூபா நாட்டிற் சூதாட்டம் சட்டப்படி தடை செய்யப்பட்டதொரு செயலாகையால், அந்த மிதக்கும் சூதாட்டக்களம் நாட்டின் கடல் எல்லையிலிருந்து 12 மைல் அப்பாற் சென்று பின்புதான் விளையாட்டு ஆரம்பிக்கப்படவேண்டும் என்று விதியிருந்தாலும், அதிற் செல்லும் பிரயாணிகள் போகும் இடம் இதுவென்று இல்லாமற் செல்லும் அந்தக் கப்பல், துறைமுகத்தை விட்டு நகரத் தொடங்கிய உடனேயே பண விளையாட்டுக்களும் ஆரம்பித்து விடும். அத்துடன், அந்தக் கப்பலிற் செல்லும் கடலோடிப் பந்தயக்காரர்களும் கியூபர்களாகவே உள்ளனராம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு றொலெக்ஸ் கடிகாரத்துக்குக் கைம்மாறாக, எனது நாடு.

கடந்த வாரம் சி. ஐ. ஏ. ஊழியரான அல்டீறிச் ஹஸென் அமிஸ் உம், அவரது மனைவி மறியா டெல் றொசாறியோ காஸஸ் அமிஸ் உம் கைது செய்யப்பட்டுச் சோவியத் யூனியனுக்காக உளவு பார்த்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டனர். அவர்கள் 1.5 மில்லியன் டொலரைக் கூலியாகப் பெற்று அதை ஒரு ''ஜாகுவார்'' கார், 540, 000 டொலர் வீடு போன்ற ஆடம்பரங்களிற் செலவு செய்தனர் என்று குற்றஞ் சாட்டப்பட்டமை பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை. ஏனெனில் ஏறக்குறையப் 10 ஆண்டுகளாகவே அமெரிக்காவில் ஆடம்பரச் செலவு செய்வது துரோகிகளுக்கு ஒரு வழக்கமாக இருந்து வருகிறது.

| உளவாளி | கூலி | செலவு செய்தது |
|---|---|---|
| எட்வ(ர்)ட் எல்.ஹவா(ர்)ட், 1985 இல் சோவியத் யூனியனுக்காக உளவு பார்த்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டார். | 150, 000 டொலர். சில (சோவியத் சுருட்டுக்களும்). | தங்க நாணயங்கள், வெள்ளிக் கட்டிகள்.ஒரு றொலெக்ஸ் கடிகாரம், ஒரு சிவப்பு ஜீப் ஆகியவை. |
| றொனால்ட் டபிள்யூ. பெல்ரன் 1985 இல் சோவியத் யூனியனுக்காக உளவு பார்த்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டார். | 35, 000 டொலர். பிரயாணச் செலவுகளுடன். | கடன்களை அடைக்கத் தனது கூலியைத் தங்கக் கட்டிகளாகத் தரும்படி இவர் கேட்டிருந்தார். |
| ஜொனதன் ஜே போலா(ர்)ட், 1985 இல் இஸ்ரேலிற்காக உளவுபார்த்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டார். | டொலர் 45, 000 இலிருந்து 50, 000 இற்குள். | ஐரோப்பாவுக்கு இரு முறை பிரயாணம். மனைவிக்கு வைரமும், நீல மாணிக்கமும் பதித்த மோதிரம். |
| ஜோன். ஏ. வோக்கர் ஜூனியர் 1985 இல் சோவியத் யூனியனுக்காக உளவு பார்த்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டார். | 1 மில்லியன் டொலர் | ஒரு படகு வீடு, ஒரு விமானம், இருகார்கள் (கிறிஸ்லர், ஓல்ட்ஸ்மோபைல்,) வட கறோலினாவிலும், தென் கறோலினாவிலும் நிலம். |
| ஜெறி விற்வேர்த், 1985 இல் பல்வேறுபட்ட தகவல்களை ஜோன். ஏ. வோக்கர் ஜூனியருக்கு வழங்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டார். | 332, 000 டொலர். | தங்க நாணயங்கள், இரு மோட்டார் சைக்கிள்கள், வாடகைக்கு எடுக்கப்பட்ட றோல்ஸ்றோய்ஸ் ஆடம்பரக் கார்கள், 10, 000டொலர் பெறுமதியான தங்க வெள்ளிக் கட்டிகள், விலையுயர்ந்த மகளிர் உள்ளாடைகள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| வறிவூ ராய் சின் 1985 இல் சீனாவுக்காக உளவு பார்த்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டார். | 180, 000 டொலர் |
| றிச்சட். டபிள்யூ. மி(ல்)லர், 1984 இல் சோவியத் யூனியனுக்காக உளவு பார்த்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டார். | 65, 000 டொலர் |

நூறாயிரம் டொலர் பெறுமதியான 29 வாடகைக்கு விடப்படக்கூடிய சொத்துக்கள், லாஸ் வேகாஸ் நகர கசினோக்களில் சூதாட்டக் கடனை அடைக்க 96 000 டொலர்.

ஒரு சோடி இத்தாலியச் சப்பாத்துக்கள், ஒரு ஜாக்கிங் உடை, 675 டொலர் பெறுமதியான நீருட் புகாத கோட்ஒன்று வங்கு ரோத்து நிலைமையைப் போக்க.

''ரைம்'' மார்ச் 7, 1994.

## நீதி:- அது பிரம்பைத் தவித்து விடுவதில்லை

வேண்டுமென்றே தகாத செயல் புரிந்த குற்றச்சாட்டை ஒப்புக் கொண்ட 18 வயதான மைக்கல் பே சிங்கப்பூர் நீதிமன்றம் அவருக்கு விதித்த கசையடித் தண்டனைக்காகக் காத்திருந்த வேளையில் இது தொடர்பாக அமெரிக்காவில் ஏற்பட்ட கருத்துக்கள் அவருக்கு அவ்வளவு ஆறுதல் ஏற்படுத்தியிருக்க முடியாது. சிங்கப்பூரிற் சாதாரணமாக வழங்கப்படும் இந்தக் கர்ண கொடூரமான நீதி இளவட்டங்களின் குற்றங்கள் அதிகரித்துள்ள ஐக்கிய அமெரிக்காவில் மனநிறைவான போற்றுதலைப் பெற்றுள்ளது. இந்த வழக்குத் தொடர்பான செய்தி சென்ற வாரம் ''நியூஸ் வீக்'' சஞ்சிகையிற் பிரசுரமானதைத் தொடர்ந்து தண்டனைக்கு ஆதரவான கடிதங்கள் குவியத் தொடங்கியுள்ளன, பே என்ற இளைஞனின் சொந்த நகரான ஒஹியோவின் ''த டேய்ற்றன் டெய்லி நியூஸ்'' என்ற தினசரியும் இப்படியான கடிதங்களைப் பெற்று வருகிறதாம்.

சென்ற வாரம் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனின் கோரிக்கையும், மனித உரிமைக் குழுக்களின் எதிர்ப்புங் கூட எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. பே இன் கருணை மனு சிங்கப்பூர் உயர் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளது. அவருக்கு இப்போதுள்ள ஒரே நம்பிக்கை, தனக்குக் கருணை காட்டுமாறு ஜனாதிபதி ஒங்பெங் சியோங்குக்கு மேன் முறையீடு செய்வதுதான். அது தவறினால் அவர் நிர்வாணமாக்கப்பட்டு மரத்தாலான தூணோடு கட்டப்பட்ட பின் அரைக்குக் கீழே பிரம்புத் தடியொன்றால் 6 கசையடிகளுக்காளாவார். இதனால் உண்டாகும் புண் ஆறுவதற்கு 2 வாரங்கள் செல்லும்.

பே போன்ற முதற் குற்றமிழைத்தவர்களுக்கும் கூட, சிங்கப்பூர் கடுமையான தண்டனைகளையே வழங்குகிறது. பே 1992 ஆம் ஆண்டிலிருந்து சிங்கப்பூரிலே வாழ்ந்து வருகிறார். இன்று அமெரிக்காவிலே தொற்றுநோய் போலப் பரவி வரும் சட்டத்திற்கு முரணபட்ட செயல்களைத் தமது நாட்டில் அறவே இல்லாதொழிப்பதே சிங்கப்பூரின் நோக்கமாகும். சில மோட்டார் வாகனங்களுக்கு வர்ணம் தெளித்ததும் சில வாகனங்களுக்கு முட்டை எறிந்ததும் தான் பே செய்த குற்றமாகும். மேலை நாடுகளில் இவ்வாறான குற்றங்களை உதாசீனஞ் செய்வதைச் சிங்கப்பூர். மக்களுக்குச் சமிக்ஞையாகக் காட்டத் தமது மகனை உதாரணமாக்கியிருக்கிறது அந்த அரசு என்கின்றனர் பே இன் பெற்றோர். இதை மறுத்துள்ள சிங்கப்பூர் அதிகாரிகள் 1984 ஆம் ஆண்டிலிருந்து இவ்வகையான குற்றங்களுக்காக 92 சிங்கப்பூர் குடிமக்களுக்குக் கசையடி வழங்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்கள். சென்ற வாரம் வரை பிணையில் நின்ற பே தண்டனை விதிக்கப்பட்ட நாளிலிருந்து அந்த மாதம் முழுவதும் மன அழுத்தங் காரணமாக மருத்துவமனையிற் சேர்க்கப்பட்டிருந்ததாகச் செய்திகள் கூறுகின்றன. ''இப்படி ஏன் தனக்கு நடக்கிறது? என்று என் மகனுக்குப் புரிந்து கொள்ள முடியவில்லை'' என்கிறார் அவரது தாயார்.

''நியூஸ்வீக்'' ஏப்ரல் 11, 1994.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்புரிமையுள்ள ஒற்றர்கள்

## அமெரிக்கா, தனது உயர் தொழில்நுட்ப இரகசியங்களைக் காக்க முயல்கிறது.

கலிபோர்ணிய, சக்றமென்ரோ நகரிலிருந்து எழுதியது:
— ஜோண் பே(ர)த்தெல்சன் —

சான்:பிரான்சிஸ்கோ குடாவுக்குத் தெற்கிலிருந்து தொடங்கி, சான்ஜோஸேயை நோக்கிப் பரந்து கிடக்கின்றது, கலிபோர்ணிய சிலிக்கன் பள்ளத்தாக்கு. மைற்கணக்கான நீண்டு கிடக்கும் நேரிய வீதிகளும், அயல் வளாகங்களை ஒத்த கைத்தொழிற் சோலைகளும், ஆங்காங்கு ஆபரணத்தில் இரத்தினம் பதித்தாற்போல அழகுடன் திகழ்கின்றன. அதைப் பள்ளத்தாக்கு என்று சொல்வதிலும், மெல்லென விரிந்து கிடக்கும் ஒரு வெள்ளப்பெருக்குச் சமவெளி என வருணிக்கலாம். கடந்த 30 ஆண்டுகளாக, புது முயற்சி தொடங்கும் நனி சிறந்த விவேகிகளின் அடர்ந்த குடியிருப்புப் பிரதேசம் ஆக வளர்ந்து வருகிறது.

நாட்டின் எந்தப் பகுதியிலும் பார்க்க, இதுவே அமெரிக்க வர்த்தகம், பாதுகாப்பு ஆகிய இரண்டையும் உலகின் முதல் தரத்தில் வைத்திருக்கும் உயர் தொழில்நுட்பக் கோட்டை எனச் சகலரும் நம்பினர். ஆனால், பள்ளத்தாக்கிலுள்ள ஆயிரக்கணக்கான கம்பனிகள், இலத்திரனியல், உயிர்த்தொழில்நுட்பவியல் துறைகளில் விசேட கண்டுபிடிப்புகளைச் செய்துவரும் இரகசியத்தை, ஊடுருவி அறிந்துவிட முயல்வோருக்கும் அதிகவாய்ப்பான வேட்டைத் தளமாக இப்பகுதி காணப்படுகிறது.

அவர்களது வெற்றியால், நாடு எத்தனையோ பத்துமில்லியன் டொலர்களை இழக்க நேரிடும்.

சமஷ்டிப் புலனாய்வுக் கழகத்தைச் சேர்ந்த முகவர் ஒருவர் – சிலிக்கன் பள்ளத்தாக்கில் தமது ஆய்வுமையத்தை வைத்திருப்பவர் - கூறுகிறார்:- "நாம், 173 உலகநாடுகளை உற்றுநோக்கி ஆய்வு செய்தோம்; 57 நாடுகள் எமக்கு மாறாக, முன்னேறிய தொழில்நுட்ப அறிவில் மேம்படுவதற்கு, தீவிர முயற்சி செய்கின்றன எனக் கண்டுள்ளோம். 100 நாடுகள் வரை, நாம் கண்டறிந்த உண்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காக, தமது மொத்தத் தேசிய உற்பத்தியின் ஒரு பகுதியைச் செலவிடுகின்றன. அமெரிக்கச் சட்ட நிர்வாக அதிகாரிகளின் கருத்துப்படி, ஆசிய அரசாங்கங்களும், பல்தேசிய அமைப்புக்களும், விசேடமாக ஜப்பான், தாயவான், தென்கொரியா, நாட்டினர், "எமது சிலிக்கன் பள்ளத்தாக்கில் திருட்டுத்தனமாக நுழைந்து, தொழில்நுட்பங்களைக் களவாட முனைந்துள்ளனர்,

தொழில்நுட்பக் களவு பற்றிய அறிக்கைகள் பரந்த அளவிற் கிடைப்பதால் தூண்டப்பட்டு, சட்ட நிர்வாக அதிகாரிகள் இப்படியான திருட்டுக்களைத் தடுக்கப் பெரிதும் முயன்றுள்ளனர். ஜனாதிபதி பில் கிளின்ரனின் உத்தரவை அடுத்து, அவர்கள் சட்டத்தின் கரங்களை இறுக்கி, தடைமுகவரகங்கள் திறமையுடன் பணிசெய்யவும், தேவையான இடங்களில் புதிய சட்டங்களை இயற்றவும் முயன்றுள்ளனர். ஒற்றுவேலைகளில் ஈடுபடுவோரை வலைபோட்டுப் பிடிக்கும் முயற்சிகளும், அவதானமின்மையால் திறமையை இழந்துவிடக்கூடாது எனக் கம்பனி நிர்வாகிகளுக்கு எச்சரிக்கை



செய்வதும் அதிகரித்துள்ளன. அமெரிக்கா, இப்படியான கைத்தொழில் ஒற்றாடல் குறித்துக் கடுமையாக இருந்ததில்லை. அமெரிக்கக் கம்பனிகள் சில, கைக்கூலிக்கு இடமளித்து இப்படி இரகசியங்கள் வெளியேறக் காரணமாயிருந்தமை, சென்ற காலத்தில் அவதானிக்கப்பட்டது. மத்திய புலனாய்வுத்துறை முகவரகத்தின் (சீ. ஐ. ஏ.) இயக்குநர் ஜேம்ஸ் வுல்ஸ்லி சிக்காக்கோ நகரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கம்பனி) நிர்வாகிகள் மத்தியிற் பேசும்போது கூறினார்:- "அவர் நல்ல ஆள் என்று, எவரையும் நம்பிவிட வேண்டாம்" என. சிலர், தம் திறமையால் வென்று எடுக்கமுடியாத ஒப்பந்த வேலைகளை,கம்பனிக்குள் கைக்கூலி கொடுத்து எடுத்துவிடுகிறார்கள். அப்படியான உளவாளிகளைக் குறித்து, சி, ஐ. ஏ, எச்சரிக்கையாயிருக்கும்.

இப்படி "நட்புரிமையுடன்" ஒற்றாடுவோரில்,இஸ்ரேலியரும்,பிரெஞ்ஞ்சுக்காரரும் உளர். சான்.:பிரான்சிஸ்கோவில், அமெரிக்க அரசாங்க பொலிஸ் மா அதிபராகப் பணிபுரியும் மைக்கேல் ஜே. யாமாகுச்சி சொல்கிறார்:- "ஆயினும், நாம் கடுமையாகப் பயப்படவேண்டியது, பசிபிக் சமுத்திரத்தின் விளிம்பில் வுள்ள நாடுகளைக் குறித்தே." எந்த நாடு என, அவர் பெயர் குறித்திலர்; எனினும், வேறு அரச அதிகாரிகள் ஜப்பானியருக்கு முதலாம் இடமும், தாய்வான்'ய, தென்கொரியருக்கு அடுத்த இடமும் கொடுக்கின்றனர்.

அமெரிக்கச் சட்ட(மா) அதிபராக, கலிபோர்ணிய வடமாவட்டத்திற் பணிபுரியும் யாமாகுச்சியின் கணிப்பின் படி, சிலிக்கன் பள்ளத்தாக்குக் கம்பனிகள் ஆண்டு ஒன்றுக்கு 1 மில்லியன் டொலரேனும், (கணனி) மென் உற்பத்தி நுட்பத் திருட்டின் மூலம், இழந்து வருகின்றன. அனைத்துலக வர்த்தக ஆணைக் குழுவோ, எல்லாச் சர்வதேசக் கைத்தொழ்ல் திருட்டு மூலமும், அமெரிக்கா ஆண்டுதோறும் 40 முதல் 50 மில்லியன் டொலர் வரை இழந்துவருவதாகக் கணித்துள்ளது. இது, தற்போதைய அமெரிக்க வர்த்தகக் குறையீட்டின் 40 வீதம் ஆகும்.

ஆகவே, அமெரிக்கச் சட்ட மா அதிபர் ஜனெற்றெனோவும், சமஷ்டிப் புலனாய்வுக் கழக இயக்குநர் லூயி.:ப்றீஹ் என்பவரும், சட்ட நிருவாக அதிகாரிகளை நேரடியாகச் சந்தித்து, புதிய கொள்கை மாற்றத்தின்படி, உயர் தொழில் நுட்பத்திருட்டு தேசியப் பாதுகாப்புக்கும், பொருளாதாரப் போட்டிக்கும் குந்தகம் விளைவிக்கும் என்பதை மனத்திற் பதித்து, நடவடிக்கை எடுப்தன் அவசியத்தை வலியுறுத்தினர். சென்ற ஆண்டு ஜூலையில் (யாமாகுச்சியின் கூற்றுப்படி) .:பிறீஹ், 20 அமெரிக்கச் சட்டத்தரணிகளைச் சந்தித்து, புதிய கைத்தொழிற் களவு எதிர்ப்புக் கொள்கைபற்றி விளக்கினார். சிலிக்கன் பள்ளத்தாக்கு டாலாஸ், பொஸ்ரன், வோஷிங்ரன் ஆகியன, கைத்தொழில் ஒற்றாடல் அதிகம் நிகழக்கூடிய இடங்களாகக் குறிக்கப்பட்டன.

சமஷ்டிப் புலனாய்வுக்கழகம் குறிப்பிட்டு, இன்னவிதமான உந்துசக்திகள் இடமாற்றம் பெற்றுள்ளன எனத் தெரிவிக்காவிட்டாலும், எட்வேட் ஜி அப்பெல்-கழகத்தின் சான் .:பிரான்சிஸ்கோ காரியாலயத்தின் உதவி விசேட முகவர் - முதன்மைக்குரியவற்றை வரிசைப்படுத்தியுள்ளார். ச. பு. க. வெளிப்படையாக எவ்வளவு பேர் அடங்கியிருப்பர் என்று சொல்லாவிட்டாலும், கணிசமான அளவு மூலவளங்களின் அசைவு (இடப்பெயர்ச்சி) நிகழ்ந்துள்ளது. அதிமுக்கியமான தொழில்நுட்பம், கைத்தொழில் ஒற்றாடல் போன்ற செயற்பாடுகளால் இழக்கப்படும் போதும், கைதொழிலில் முதன்மையான செய்திகளை வணிக அறநெறிக்கு மாறாகக் கையாடும் போதும், இக்காரியாலயம் வெறுமனே பார்த்துக்கொண்டிருக்க முடியாது. தீவிரத்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

ச. பு. கழகத்தின் தேசியக் கேந்திரிய அச்சுறுத்தற் பட்டியலில், தேசிய பாதுகாப்புப் பிரச்சனைகளில் தலையாயவற்றை வரன்முறைப் படுத்தியுள்ளனர். அதில், முன்னர் சோவியத் ஒன்றியமும், அதன்பின் சென்ற நாடுகளும் மட்டுமே குறிக்கப்பட்டன. இப்பொழுது அது, மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது."எங்கேயிருந்து அச்சுறுத்தல்வரினும், எந்த நாடு அவ்வழியிற் செயற்பட்டாலும், அதை நாம் பட்டியலிற் சேர்த்துள்ளோம்" என்கிறது புலனாய்வுக் கழகம். இப்புதிய பட்டியலில், நாடுகளும் இப்போது இடம்பெறுகின்றன. இப்பொழுது பட்டியலில், அதிமுக்கிய தொழில் நுட்பங்களைத் திருடுவது முன்னிடம் பெறுகிறது. அமெரிக்காவுக்கே முற்றும் உரிமையான பொருளாதாரச் செய்தியும், தொழில் நுட்பமும் இவ்வரிசையில் அமையும்.

புதிய மூலவளங்களைச் சேர்த்துச் சட்டங்களை மாற்றினாலும், அரசாங்க விசாரணையாளர் ஒரு கடினமான பணியை எதிர்கொள்ளுகின்றனர். சட்ட வல்லுநர்களும், சட்ட நிர்வாக அதிகாரிகளும், கம்பனிகள் தமது இடத்திலிருந்து தொழில் நுட்பம் திருடப்பட்டதை, அறிவிக்க முன்வருவதில்லை என்று கூறுகிறார்கள்.

"இலட்சிய உலகம் எனினும், நாம் காண்பதிலும் சற்று அதிக திருட்டு நிகழ்ச்சிகள் நடந்திருக்கலாம்" என்கிறார், கலிபோர்ணியாவின் வணிக இரகசியச் சட்டத்தில் உச்சத்திறமை வாய்ந்தவரான ஜேம்ஸ் பூலி. "கைத்தொழ்ல் ஒற்றாடல் என்பது, மிகக் குறைந்த அளவு (காவல்துறைக்கு) அறிவிக்கப்படும் குற்றங்களுள் ஒன்று. முதலில், போட்டியாளர் அறிவிக்கக் கூடாது; இரண்டாவது, பங்குதாரர்கள் அறியலாகாது" என்று கருதுகிறார்கள்.

பூலியின் கருத்துப்படி, பிரச்சனை மேலும் சிக்கலாவதற்குக் காரணம், கைத்தொழில் ஒற்றாடற் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் முகவரகங்களால் விசாரிக்கவும், வழக்குத் தொடுக்கவும் செய்வது மிகக் கடினம் ஆனது என்ற பரந்த நம்பிக்கையே. வணிக இரகசியங்களைக் களவாடும் கம்பனிகளும், அரசாங்கங்களும், விசேடமாக நட்பு நாட்டினராயின், வழக்கே பதிவு செய்யப்பட மாட்டாது.

ச. பு. கழகத்தைச் சேர்ந்த அப்பெல், பிடிபடுபவைகளிலும் பார்க்க, எத்தனையோ மடங்கு களவுகள் நடக்கின்றன என்பதை ஒப்புக் கொள்கிறார். "குற்றவியற் சட்டப்படி வழக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத் தொடுக்கப்பட்டவைகளை மட்டும் வைத்துக்கொண்டு, நாம் அங்கு நடைபெறும் கொள்ளைகளை மதிப்பிட முடியாது'' என்கிறார். சிலிக்கன் பள்ளத்தாக்கிலுள்ள கம்பனிகள், குற்றவியற் பிரச்சனைகளை அதிகாரிகளின் பார்வைக்குக் கொண்டுவருவதில்லை. ஒரு காரணம், உள்வீட்டுக் கள்வரே இரகசியங்களை (தாம் கம்பனிச் சேவையிலிருந்து கொண்டே) அயல்நாட்டு அரசாங்கங்களுக்கோ, கம்பனிகளுக்கோ விற்று விடுகிறார்கள். சிலிக்கன் பள்ளதாக்கும், வேறு உயர்தொழில்நுட்பப் பிரதேசங்களும், குறுகிய காலச் சேவையாற்றும் புதுமைகாண் தொழில் ஆரம்பிப்போர் பலர் நிறைந்தனவாயிருக்கின்றன. அவர்கள், தொழில் இரகசியங்களைக் களவாடி, மிகப்பெருந் தொகை கொடுப்போருக்குத் தந்து விடுகின்றனர். அவர்கள், கடல் கடந்தவாயினும் பாதகமில்லை என்ற அளவுக்கு, சுயலாப நோக்கு முற்றிவிட்டது.

பெரும்பாலானவை மறைக்கப்பட்டாலும், அம்பலத்துக்கு வந்தவை, பிரச்சனை எவ்வளவு அபாயகரமானது என்பதைச் சுட்டுகின்றன. உதாரணமாக:- ஓர் அமெரிக்க விஞ்ஞானி, 1986 - 1991 இல் நான்கு ஜப்பானியக் கம்பனிகளிடமிருந்து ஆறு இலட்சம் டொலர் பெற்றுக் கொண்டு, கேந்திரியப் பாதுகாப்பு முன்னெடுப்பு (நட்சத்திரப் போர்) இரகசியங்களை வழங்கினார் என்று குற்றஞ் சுமத்தப்பட்டார். 1992 இல் ச. பு. கழக முகவர்கள் ஹிற்றாச்சி அமெரிக்க (கம்பனி) நிர்வாகிகள், 5 1/2 இலட்சம் டொலர் கைக்கூலி கொடுத்து, ஐ.பி.எம். கம்பனி கண்டுபிடித்த 5380 பிரதானக் கட்டமைப்புக் கணனி பற்றிய தொழில்நுட்ப இரகசியத்தை வாங்க முயன்ற போது, கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்கள். ஹிற்றாச்சி ஒரு ஜப்பானிய பல்தேசிய நிறுவனம் - அமெரிக்கச் சமஷ்டி நீதிமன்றத்தில் 10,000 டொலர் குற்றம் விதிக்கப்பட்டது.

ஜெனரல் எலெக்ட்றிக் கம்பனி, தென்கொரிய முகவர்களுக்குச் செயற்கை வைர உற்பத்தித் தொழில் நுட்பத்தை யாரோ வெளியிட்டதனால், ஆண்டுதோறும் 500மில்லியன் டொலர் நட்டம் அடைகின்றது. அமெரிக்சத் தென் கறோலினா மாநிலத்தில் இலத்திரனியற் கம்பனி மனேஜா ஒருவர், 1,30,000 டொலர் கைக்கூலிக்கு எக்ஸ்-கதிர்க் கருவிகளுக்கு வேண்டிய விசேட பிலிம் சுருள்கள் பற்றிய இரகசியங்களை விற்றதால், அமெரிக்காவுக்குப் பல மில்லியன் டொலர் நட்டமும், ஜப்பானிய 'மிற்சுபிஷி'' கம்பனிக்கு இலாபமும் ஆண்டுதோறும் ஏற்படுகின்றது.

சில ஆண்டுகளுக்கு முன்னரே அரசாங்கக் கொள்கை மாற்றம் தொடங்கினாலும், சமீபத்தில் கைத்தொழில் ஒற்றாடலுக்கு எதிர் ஒற்று நடவடிக்கைகள், ஜனாதிபதி கிளின்ரனின் தேர்தலுடன்தான் கடுமையாயிற்று. தமது சிக்காகோ உரையில், ம. பு, கு. இயக்குநர் வூல்சி கூறினார்:- ஜனாதிபதி, அமெரிக்க வர்த்தக நிறுவனங்களும் அமெரிக்கத் தொழிலாளரும் சமமான களத்தில் (விளையாட்டுப் போட்டியை) நடத்த வசதியளிக்க ஆவலாயிருக்கிறார். இன்னது என்று சுட்டிச் சொல்லாமல், இந்த இலட்சியத்தை அடைய நாம் ஆவன செய்வோம். அதை விசேட உற்சாகத்துடன் செய்வோம் என்று மட்டுமே சொல்லி வைக்க விரும்புகிறேன்''.

''முந்திய ஜனாதிபதிகளின் நிர்வாகங்களின் கீழ் போதைவஸ்து பற்றியே முழுக்கவனமும் செலுத்தப்பட்டது; அவை தீமையானவை; தடுக்கப்படவேண்டியவை. ஆனால், சட்ட நடைமுறைப்படுத்தல் இயந்திரம் முழுவதையும் அதற்கு மட்டும் பயன்படுத்தி, வரவுசெலவு ஒதுக்கீடு முழுவதையும் அதற்கே செலவிடுவது, மற்றொரு நல்ல நடவடிக்கைக்கு வாய்ப்பு இல்லாமற் செய்துவிடும்'' என்கிறார் யாமாகுச்சி.

ஜனாதிபதி புஷ் நிர்வாகம் முடிவுற்றபோது, ச. பு. கழகமும், அமெரிக்கச் சுங்கச் சேவையும் சேர்ந்து, போதைப் பொருள் எதிர்ப்பு நடவடிக்கையுடன், வெள்ளை வேட்டிக் கள்வரையும், உயர் தொழில்நுட்பக் களவுகளையும் பிடிக்க, எதிர் ஒற்றாடல் நடவடிக்கைகளுக்கும் முக்கியத்துவம் அளித்தனர். ம. பு. மு. புலனாய்வு நிபுணர்கள், ருஷ்ய உளவாளிகளைப் பின் தொடர்ந்து, எதிர் நடவடிக்கை எடுப்பதில் செலவீட்ட தம் திறமைகளை, இப்பொழுது வேறுவகையிற் காட்டி, தமக்கு நிதி ஒதுக்கீடு செய்வது சரியே என நிரூபிக்க ஆவலுற்றிருந்தனர்.

இம்முயற்சியைச் சில கோணங்களிலிருந்து எதிர்க்கிறவர்களும் உளர். ம. பு. மு., முன்னர் வர்த்தக ஒற்றாடலில் ஈடுபட்டது கிடையாது. மத்திய அரசின் சட்டப்படி, அமெரிக்காவில் தொழில் செய்யும் வெளிநாட்டுக் கம்பனிகளுக்குள் ஒற்று நடவடிக்கைகளை அது வைத்துக் கொள்ளக் கூடாது. அன்றியும், கைத்தொழில் ஒற்றாடலைப் புலனாய்வு முகவரகங்களுடன் இணைக்கும்போது, வேறோர் ஆபத்தும் வரலாம்; அவை அமெரிக்க கம்பனிகளை உளவாளிகளிடமிருந்து பாதுகாப்பதுடன் நின்றுவிடாமல், அவற்றுக்கு உதவிசெய்வதற்காக, அயல்நாட்டு நிறுவனங்களின் இரகசியங்களைத் திருடவும் முனையக்கூடும்.

விமர்சகர்கள் கூறுகிறார்கள்:- வர்த்தக நிறுவனங்களும், சட்டத்தை நடைமுறைப்படுத்துவோரும், உளவாளிகள் இல்லாத இடங்களிலும் அவர்கள் இருப்பதாக, அடிக்கடி கற்பனை செய்வது வழக்கம். மேலும், குற்ற எதிர்ப்புப் போரில் ஈடுபடுவோரும், உளவாளிகளும் இப்பிரச்சனையை ஒரு சாக்காகச் சொல்லி, தம் முகவரகங்களுக்குத் தொடர்ந்து நிதி ஒதுக்கீடு செய்வதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளனர் என்ற குற்றச்சாட்டையும், விமர்சகர்கள் முன் வைக்கிறார்கள்.

''(F) பார் ஈஸ்ரேன் எக்கொனொமிக் றிவியூ''

பெப்ரவரி, 17, 1994




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்குத் தேவை இராணுவக் கல்லூரிகள்?

— எழுதியவர் —
மார்க் தொம்ஸன்

இராணுவ அதிகாரிகளுக்கிடையே அவர்கள் ring knockers என்று வருணிக்கப்படுபவர்கள். ஏனெனில் அவர்கள் ஏதாவதொரு அமெரிக்க இராணுவக் கல்லூரியிலிருந்து பட்டம் பெற்று வெளியேறும்போது சம்பாதித்த பெரிய பொன் தரத்திலான வளையங்களை அவர்கள் பெருமையோடு அணிவதால் பல தலைமுறைகளாக வளையம், அதை அணிபவர் உயர் தரத்தில் உள்ளவர் என்பதை அடையாளங் காட்டும். இப்போ அது அவ்வாறல்ல. ring knockers படைவீரர் மத்தியில் தமது பிடியைத் தளர்த்திக் கொண்டிருக்கிறார்கள். அட்மிரல் ஜெரெமி பூடா ( Germy Boorda ) இம் மாதம் கடற்படை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பேற்கும்போது கூட்டுப்படைத் தளபதிகளில் ஆறில் ஐந்து பேர் இராணுவக் கல்லூரியைச் சாராதவர்கள். அவர்கள் உறுப்பினராகப் பதிந்து படிப்படியாக உயர்ந்தவராகவோ அல்லது பயிற்சி நிகழ்வுகளில் அதிகாரிகளாகப் பணி புரிந்தவர்களாகவோ ஆவர்.

அதி உயர் இராணுவ அதிகாரிகளிடையே உள்ள அற்ப பிரதிநிதித்துவம், அமெரிக்க இராணுவக் கல்லூரிகளின் செல்வாக்கின் சடுதியான சரிவு எனலாம். கல்லூரிகள் திறனாய்வாளர்களின் முற்றுகைக்குட்பட்டு அவைகள் அதிக செலவுக்குரியன என்றும், அவை வெகு விரைவில் அடிப்படையில் மாற்றப்படவேண்டும் என்றும் நம்புகிறார்கள்.( Annapolis) அனாப்போலிசில் அமைந்துள்ள கடற்படைக் கல்லூரி ஒரு பெரிய நம்பிக்கைத் துரோக அவதூறிலிருந்து மீளக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. அது இம்மாதம் மிகப் பொருத்தமான பின்வரும் தலைப்பில் விவாதிக்க ஏற்பாடு செய்துள்ளது. '' பாதுகாப்புப்படைப் பயிற்சிக் கல்லூரிகள் தலைமைத்துவத்துக்குக் கடின சோதனை அல்லது காலத்துக்கொவ்வாத அபார சாதனை. '' எல்லாக் கல்லூரிகளும் கீழ் நோக்கான சரிவால் கஷ்டப்படுகின்றன. பனிப்போருக்குப் பிந்திய காலத்துக்கேற்ற பாடவிதானத்தை அபிவிருத்தி பண்ணப் பிரயத்தனப்படுகின்றன. அவ்வாறு செய்யும்போது அவைகள் எதற்காகப் பிரிக்கப்பட்டார்களோ அதை இழக்கிறார்கள்.



Chundikuli Branch Library

++++++++++++++++++++++++++++++++++++++++

**உறுப்பினராகப் பதிநலில் கீழ்நோக்கமான சரிவும், இழந்த கௌரவமும் அமெரிக்க வரியிறுப்பாளர்களுக்கேற்பட்ட 1 பில்லியன் செலவு பற்றி கேள்விகள் எழுப்புகின்றன.**

++++++++++++++++++++++++++++++××+++++++++

நியூயோர்க்கிலுள்ள இராணுவக் கல்லூரி மாணவர் ஒருவர் பின்வருமாறு ஒப்புக் கொண்டார். '' நெகிழ்வற்ற யுத்த சம்பந்தமான கலை, விஞ்ஞானம் போதிக்கிற கோயிலாக அவை இப்போதில்லை.'' '' போர் சார்ந்த சூழ்நிலையை எதிர்பார்த்தேன் '' என்று சடேற் Yasan Squire யேசன் ஸ்குயர் நோர்வாக்கிலிருந்து வந்த புதியவர் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர் சொல்கிறார்.: அவர் மேலும் சொன்னார்; வெஸ்ற் போயின்ற் ( West Point ) இராணுவக் கல்லூரி அநேகர் எதிர்பார்ப்பதைவிடச் சிவிலியன் கல்லூரிகளுக்கு நெருக்கமாகவுள்ளது ''என்று.

இம்மூன்று வளாகங்களுக்கான செலவு 1 பில்லியன். '' அவைகளில் செலவிடப்படுந் தொகை பெறுமதி மிக்கதல்ல '' என்கிறார் ( Lawrence Korb ) லோறன்ஸ் கோப் முன்னை நாள் பென்ராகன் அதிகாரி. இதை நியாயப்படுத்துவது கடினமாகும். அதிகாரிகளுக்கு உள்ள வாய்ப்புக்களைக் கணக்கிடும் போது போர்ப் என்பவரும், மேலும் சில திறனாய்வாளர்களும் இராணுவக் கல்லூரிகள் பலநோக்குடைய, பட்டப் பின் படிப்புக் கல்லூரிகளாக இங்கிலாந்து, பிரான்ஸ் நாடுகளில் இருப்பது போல, இங்கே தலைமைப் பீட நியமனத்துக்கு முன் ஒரு வருட பயிற்சியைப் பெற வசதியாக இருக்கவேண்டுமென்று ஆலோசனை கூறுகிறார்கள்.

இராணுவக் கல்லூரிகளுக்கும், சிவிலியன் கல்லூரிகளுக்கும் இடையேயான வேறுபாடு தெளிவற்ற நிலையில் அவைகளைப் பிரிப்பது இராணுவ சட்டத் தொகுப்பின் மதிப்பினாலே. ஆனால், அதுவும் தாக்கத்துக்குள்ளானது. மிக அண்மையில் அனாபோலிஸின் வரலாற்றில் இடம்பெற்ற மிகப் பெரிய ஏமாற்று அவதூறு காரணமாக மார்ச் 31 இல் ஒரு விசேட கடற்படைக் குழு கடற்படைச் செயலர் 71 அங்கத்தவர்களைக் கொண்ட வகுப்பொன்றில் 1992 இல் நடந்த என்ஜினியரிங் சோதனையில் மோசடி செய்தமைக்காகத் தண்டிக்க வேண்டுமென்று சிபார்சு செய்தது .இதில் 29 பேரை வெளியேற்ற வேண்டும். குழுவின் நடவடிக்கையை நிறுத்தக் கோரி 40 நடுத்தர நிலையிலுள்ள கடற்படை வீரரால் தொடரப்பட்ட வழக்கு, அட்மிரல் தரத்திலுள்ளவர்களுட்பட அநேக கல்லூரி ஆதரவாளர்களை அவமதிப்புக்கு உள்ளாக்கியது. வழக்காளிகளால் தெளிவுபடுத்துமாறு அழுத்தங் கொடுக்கப்பட்டமையால், அரசியற் சாசன உரிமை மீறப்பட்டது என வாதாடினார்கள். ''அவர்களுடைய வழக்குத் தொந்தரவு செய்கிறது '' என்கிறார் நாலுபட்டி அதிகாரி.

இராணுவக் கல்லூரி பற்றியதும் பொதுவாக இராணுவம் பற்றிய அக்கறை சாந்தமடையும் தருணத்தில் அவதூறு கிளம்பியிருக்கிறது. பனிப்போர் முடிந்த பிறகு மூன்று இராணுவக் கல்லூரிகளிலும் விண்ணப்பங்கள் கொடுப்பது பின்தங்கு நிலையில் உள்ளது. கொலராடோவின் விமானப்படைப் பயிற்சிக் கல்லூரிக்கான விண்ணப்பங்கள் 1988 இல் 16,000 ஆக இருந்தது. இப்போ 8,800 ஆகக் குறைந்துள்ளது.

**அமெரிக்கா**

**தலைநகர்**
*வோஷிங்ரன்*
**பரப்பு**
93, 72, 614 ச. கி. மீ
**மக்கள் தொகை**
25, 52, 00, 000
**மொழி**
*ஆங்கிலம்*
**எழுத்தறிவு**
99%
**சமயம்**
*கிறீத்தவம்*
**நாணயம்**
டொலர்
**தனிநபர் வருமானம்**
21,790 டொலர்

பிரதிநிதிகள் சபையின் நிதி ஒதுக்கீட்டு உபசபையின் பாதுகாப்புக் குழுவின் தலைவராக விளங்கும் பென்சில வேனியாவைச் சேர்ந்த மூர்த்தா– சொல்கிறார்; '' இராணுவக் கல்லூரியிற் சேர, கொங்கிரசின் அனுமதியைப் பெற விரும்பும் தமது தொகுதி மக்களின் தொகை கடந்த வருடம் அரைவாசியாகக் குறைந்தது '' என்று. '' அது என்னைக் கவலையுறச் செய்கிறது. ஏனெனில் இராணுவத்தைத் தமது முழுநேரத் தொழிலாகக் கொள்ளத் தரமான ஆட்கள் விரும்பமாட்டார்கள் என்பதைக் காட்டுகிறது. ''

ஒருவேளை அவர்கள் Resreve Officers Training Corps (ROTC) அல்லது Officer Candidate School (OCS) ஊடாக அதிகாரிகளாக வருவார்கள். ROTC யும் OCS உம் மாணவர்களுக்குக் கூடுதல் சுதந்திரம் கொடுப்பதுடன் அரசுக்குப் புதிதாகச் சேர்பவர்களுக்கான செலவு மிகக் குறைவு. 550 -க்கும் மேற்பட்ட ROTC கல்லூரிகளில் வழமையான கற்றலோடு போர் சார்ந்த கல்வியும் பயிலலாம். OCS பாடசாலைகள் பட்டதாரிகளை எடுத்துப் போர்சார் கல்வியைக் கொடுக்கிறார்கள். மிக அண்மை வருடங்களில் ROTC அநேக புதிய அதிகாரிகளை உருவாக்கக் காரணமாயிருந்தன. இராணுவக் கல்லூரிகளும் OCS உம் மிகுதியைப் பங்கிட்டுக் கொண்டன. இப்போ இராணுவக் கல்லூரிகளின் பங்கு 10 வீதம் வளருகிறது. பத்து வருடங்களுக்கு முன் இருந்ததிலும் பார்க்க இப்போ 15 வீதத்துக்கு மேல். அது அவ்வாறு இருப்பது போர் சார்ந்த எல்லாமே சுருங்குகிறது என்பதால்.

*ரைம், ஏப்ரல் 18, 1994.*

★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" பொருள் " உலக வாழ்க்கைக்கு அனைவரும்
விரும்பும் பொருளாதாரத் தேவை.

ஆம் ! !

யாழ்/பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கத்தின் தரங்குன்றா
உற்பத்திப் பொருள்களைப் பெற்று
நீங்களும் பயன் பெறலாம்.



உ

★ பல்பொருள் அங்காடி ★

நாவலர் வீதி,
நாவாந்துறை.

★ பல்பொருள் அங்காடி ★

சிறாம்பியடி,
யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாணம் பனை தென்னை வள
# அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

இல. 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறப்பு :

- ஆலோசனை
- சிகிச்சை
- பரிசோதனை

குடாநாட்டில் பிரபல்யம் மிக்க

## மகேசன் வைத்திய சிகிச்சை நிலையம்

சகல விதமான மருத்துவ
ஆலோசனைகளுக்கும், பரிசோதனைகளுக்கும்
சிகிச்சை பெற்றுக்கொள்ள

# மகேசன்

## வைத்திய சிகிச்சை நிலையம்

அம்பலவாணர் வீதி - உடுவில் கிழக்கு - சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சொல்வதில் ஓர் உண்மை உண்டு. ஆனால் அது அவருக்கு வெற்றி தருவதன்று. நெகிழ்வேயற்றதும், வோல்ட்ஹீம் மீது வலைவிரிப்பதுமான 204 பக்கங்கள் கொண்ட புலனாய்வு அறிக்கை அவரின் மீது போர்க் குற்றங்களை உள்ளூரச் சுமத்துவதாயிருப்பினும், வோஷிங்ரன் நியாயவாதி டேவிட் விளாடெக் அதனைப் பாரதூரமாகக் கொள்ளவில்லை. "பெருந்தொகையான சந்தர்ப்ப சாட்சிகள் உள்ளனவாம். ஆனால் தமது சொந்த ஹோதாவில் வோல்ட்ஹீம் எவர் மீதும் தண்டனையை விதித்ததாகவோ, துப்பாக்கி விசையை அழுத்தியதாகவோ சாட்சியம் இல்லை". இந்தக் காரணத்தினாலேயே, புலனாய்வறிக்கை வெளியாவதை வோல்ட்ஹீம் வரவேற்பதோடு, "ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள், நிருபணம் அற்றவை" என்று விளக்கவும் முற்படுகிறார். மிகவும் சிரமப்பட்டுக் குற்றச் சாட்டுக்களை அவர் மறுத்தபோதும், அம்மறுப்புக்கள் முழுக்கதையையும் ஒட்டுமொத்தமாக மறுப்பனவாயில்லை.

"வோல்ட்ஹீம் தமது கைகளை எந்த அளவிற்கு அழுக்குப்படுத்தியுள்ளார் என்பதை, நான் நிறுவ வேண்டிய தேவை இல்லை. அறிக்கையின் பிரகாரம், குறித்த நடவடிக்கையில் அவர் நேரடியாகத் தம்மை இணைத்துக் கொண்டிருந்தார் என்பது தெளிவாகியிருக்கிறது. குற்றத்திற் சம்பந்தப்படுபவர், துப்பாக்கி விசையை அழுத்தித் தான் ஆகவேண்டும் என்பதில்லை" என்று, நீதித் திணைக்களத்தைச் சேர்ந்தவரும், அறிக்கையின் பிரதான சூத்திரதாரியுமான நியல் ஷெர் கூறுகிறார்.

பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுள் ஒன்றாக, மேற்குப் பொஸ்னியாவில் நாஜிகளின் படையணியொன்றிற்கு உணவு, போக்குவரத்து என்பவற்றிற்குப் பொறுப்பாளராய் 1942 கோடைக்காலத்திலே பணியாற்றிய வோல்ட்ஹீம், தமது கடமைக்கு அப்பால், நாஜிகள் கைது

**அவுஸ்திரியா (ஆஸ்திரியா)**

**தலைநகர்**
வியன்னா
**பரப்பு**
83,853 ச. கி. மீ
**மக்கள் தொகை**
78,00,000
**மொழி**
ஜேர்மன்
**எழுத்தறிவு**
98 வீதம்
**நாணயம்**
ஷில்லிங் (ஒரு டொலர் = 11 50 ஷில்லிங்
**தனிநபர் வருமானம்**
17,360 டொலர்

செய்த ஆட்கள் மீது மேற்கொண்ட கொடுமைகளிலும் சம்பந்தப்பட்டிருந்தார் என்பதை நியல் ஷெர் வலியுறுத்துகின்றார். இதில் எவ்வித நயத்திற்கும் இடமில்லை என்பதும், அவர் நிலைப்பாடு. இன்று பொஸ்னியாவின் பகுதியாயுள்ளதும், கொசாரா மலைப்பிரதேசத்தின் வடக்கில் அமைந்ததுமான "பஞ்ஜலுக்கா" என்ற இடத்திற் பெண்களும், குழந்தைகளும் உள்ளிட்ட 3,000 மக்கள் கைப்பற்றப்பட்டுக் கொடுமை புரியப்பட்டதை, வோல்ட்ஹீமே ஏற்றுக் கொள்கிறார் என்கிறார் நியல் ஷெர்.

ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் எதிராக, வோல்ட்ஹீம் ஒரேவகையான மறுப்பே தெரிவிக்கிறார். பிழையான இடத்தில், பிழையான காலப்பகுதியில் அவர் இருந்திருக்கலாம். ஆனால், தாம் பிழை செய்தவர் அல்லர் என்பதே, அவர் வாதம். ஜூலை 27, 28 1942இல், பஞ்ஜலுக்காவில் அவர் பணிபுரிந்ததை உண்மையே. நகரத்தில் யூதர்கள் சுற்றி வளைக்கப்பட்ட செய்தி தமக்கு நினைவில்லை என்கிறார் அவர். கிறீசில், 1944 இன் கோடைப்பருவத்திற் கைதாக்கப்பட்ட நேசநாடுகளின் படையினரை, "அமைதிப்படுத்தல் என்ற பெயரால், அவர்களிடமிருந்து இரகசியங்களைக் கறப்பதில், ஹிட்லரின் கட்டளையை நிறைவேற்ற முற்பட்டார்" என்ற குற்றச்சாட்டை முன்வைத்தபொழுது, 1989 இல் பிரித்தானியப் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையை எடுத்துக்காட்டிய வோல்ட்ஹீம், அதன்படி தான் எவ்விதக் குற்றத்துக்கும் உட்படாதவர் என்கிறார். "நிருவாக அதிகாரி ஒருவர், தமது சொந்த அறிவினால் குற்றம் இழைக்க முற்பட்டால் மட்டுமே, அவர் அக்குற்றத்திற்குப் பொறுப்பாவார். தமது மேலதிகாரி (கொமாண்டர்) யின் கட்டளையை நிறைவேற்றுவதற்காக, அவர் அந்தக் குற்றத்தில் ஈடுபட நேர்ந்தால், அவர் குற்றவாளி எனக் கொள்ளப்படார்" என்பதே, அவர் எடுத்துக்காட்டும் பிரித்தானிய அறிக்கை. அது, 1947 இல் நிகழ்ந்த நூறம்பேக் விசாரணை மேற்கோளை எடுத்துக்காட்டாய்க் கொண்டுள்ளது. மேலும் அதே ஆதாரத்தின் மற்றொரு பகுதியில், "குறிப்பிட்ட அதிகாரி, இறுதித் தண்டனைத் தீர்ப்பில் ஓர் இணைப்புச் சங்கிலி மட்டுமே" என்றும், பிரித்தானிய நீதித் திணைக்களம் வலியுறுத்துகிறது.

பால்கன் பிரதேசத்திற் போரின் போது நிறுத்தப்பட்ட 40,000 ஜேர்மன் படையணியினர் மீது, ஐ அமெரிக்கா தொகுதிவாரியான குற்றத்தைச் சுமத்திக் குற்றவாளிகளாக்கியதை வோல்ட்ஹீம் அறிந்திருந்தாலும், அக்காலப்பகுதியில் பால்கனில் தாம் பணிபுரிந்ததைத் தவிர்க்க முற்படுகின்றார். "புயலின் விழிகளில் என்ற தலைப்பில், ஆங்கில மொழியில் (In the Eye of the storm 1988 இல் வெளியான நூலை நினைவு கூர்ந்த வண்ணமே, அவர் இந்தத் தவிர்ப்பை வலியுறுத்துகிறார். அது ஒரு தவறென்றா)லும், தாம் கண்டனவும், செய்தனவும் குற்ற உணர்வின் பாற்பட்டன அல்ல என்பதும், அவர் வாதம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சொல்வதில் ஓர் உண்மை உண்டு. ஆனால் அது அவருக்கு வெற்றி தருவதன்று. நெகிழ்வேயற்றதும், வோல்ட்ஹீம் மீது வலைவிரிப்பதுமான 204 பக்கங்கள் கொண்ட புலனாய்வு அறிக்கை அவரின் மீது போர்க் குற்றங்களை உள்ளூரச் சுமத்துவதாயிருப்பினும், வோஷிங்ரன் நியாயவாதி டேவிட் விளாடெக் அதனைப் பாரதூரமாகக் கொள்ளவில்லை. ''பெருந்தொகையான சந்தர்ப்ப சாட்சிகள் உள்ளனவாம். ஆனால் தமது சொந்த ஹோதாவில் வோல்ட்ஹீம் எவர் மீதும் தண்டனையை விதித்ததாகவோ, துப்பாக்கி விசையை அழுத்தியதாகவோ சாட்சியம் இல்லை''. இந்தக் காரணத்தினாலேயே, புலனாய்வறிக்கை வெளியாவதை வோல்ட்ஹீம் வரவேற்பதோடு, ''ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள், நிருபணம் அற்றவை'' என்று விளக்கவும் முற்படுகிறார். மிகவும் சிரமப்பட்டுக் குற்றச் சாட்டுக்களை அவர் மறுத்தபோதும், அம்மறுப்புக்க... முழுக்கதையையும் ஒட்டுமொத்தமாக மறுப்பனவாயில்லை.

''வோல்ட்ஹீம் தமது கைகளை எந்த அளவிற்கு அழுக்குப்படுத்தியுள்ளார் என்பதை, நான் நிறுவ வேண்டிய தேவை இல்லை. அறிக்கையின் பிரகாரம், குறித்த நடவடிக்கையில் அவர் நேரடியாகத் தம்மை இணைத்துக் கொண்டிருந்தார் என்பது தெளிவாகியிருக்கிறது. குற்றத்திற் சம்பந்தப்படுபவர், துப்பாக்கி விசையை அழுத்தித் தான் ஆகவேண்டும் என்பதில்லை'' என்று, நீதித் திணைக்களத்தைச் சேர்ந்தவரும், அறிக்கையின் பிரதான சூத்திரதாரியுமான நியல் ஷெர் கூறுகிறார்.

பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுள் ஒன்றாக, மேற்குப் பொஸ்னியாவில் நாஜிகளின் படையணியொன்றிற்கு உணவு, போக்குவரத்து என்பவற்றிற்குப் பொறுப்பாளராய் 1942 கோடைக்காலத்திலே பணியாற்றிய வோல்ட்ஹீம், தமது கடமைக்கு அப்பால், நாஜிகள் கைது செய்த ஆட்கள் மீது மேற்கொண்ட கொடுமைகளிலும் சம்பந்தப்பட்டிருந்தார் என்பதை நியல் ஷெர் வலியுறுத்துகின்றார். இதில் எவ்வித நயத்திற்கும் இடமில்லை என்பதும், அவர் நிலைப்பாடு. இன்று பொஸ்னியாவின் பகுதியாயுள்ளதும், கொசாரா மலைப்பிரதேசத்தின் வடக்கில் அமைந்ததுமான ''பஞ்ஜலுக்கா'' என்ற இடத்திற் பெண்களும், குழந்தைகளும் உள்ளிட்ட 3,000 மக்கள் கைப்பற்றப்பட்டுக் கொடுமை புரியப்பட்டதை, வோல்ட்ஹீமே ஏற்றுக் கொள்கிறார் என்கிறார் நியல் ஷெர்.

| |
|---|
| **அவுஸ்திரியா (ஆஸ்திரியா)** |
| **தலைநகர்** |
| வியன்னா |
| **பரப்பு** |
| 83,853 ச. கி. மீ |
| **மக்கள் தொகை** |
| 78,00,000 |
| **மொழி** |
| ஜேர்மன் |
| **எழுத்தறிவு** |
| 98 வீதம் |
| **நாணயம்** |
| ஷில்லிங் (ஒரு டொலர் = 11 50 ஷில்லிங் |
| **தனிநபர் வருமானம்** |
| 17,360 டொலர் |

ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் எதிராக, வோல்ட்ஹீம் ஒரேவகையான மறுப்பே தெரிவிக்கிறார். பிழையான இடத்தில், பிழையான காலப்பகுதியில் அவர் இருந்திருக்கலாம். ஆனால், தாம் பிழை செய்தவர் அல்லர் என்பதே, அவர் வாதம். ஜூலை 27, 28 1942இல், பஞ்ஜலுக்காவில் அவர் பணிபுரிந்தமை உண்மையே. நகரத்தில் யூதர்கள் சுற்றி வளைக்கப்பட்ட செய்தி தமக்கு நினைவில்லை என்கிறார் அவர். கிறீசில், 1944 இன் கோடைப்பருவத்திற் கைதாக்கப்பட்ட நேசநாடுகளின் படையினரை, ''அமைதிப்படுத்தல் என்ற பெயரால், அவர்களிடமிருந்து இரகசியங்களைக் கறப்பதில், ஹிட்லரின் கட்டளையை நிறைவேற்ற முற்பட்டார்'' என்ற குற்றச்சாட்டை முன்வைத்தபொழுது, 1989 இல் பிரித்தானியப் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையை எடுத்துக்காட்டிய வோல்ட்ஹீம், அதன்படி தான் எவ்விதக் குற்றத்துக்கும் உட்படாதவர் என்கிறார். ''நிருவாக அதிகாரி ஒருவர், தமது சொந்த அறிவினால் குற்றம் இழைக்க முற்பட்டால் மட்டுமே, அவர் அக்குற்றத்திற்குப் பொறுப்பாவார். தமது மேலதிகாரி (கொமாண்டர்) யின் கட்டளையை நிறைவேற்றுவதற்காக, அவர் அந்தக் குற்றத்தில் ஈடுபட நேர்ந்தால், அவர் குற்றவாளி எனக் கொள்ளப்படார்'' என்பதே, அவர் எடுத்துக்காட்டும் பிரித்தானிய அறிக்கை. அது, 1947 இல் நிகழ்ந்த நூறம்பேக் விசாரணை மேற்கோளை எடுத்துக்காட்டாய்க் கொண்டுள்ளது. மேலும் அதே ஆதாரத்தின் மற்றொரு பகுதியில், ''குறிப்பிட்ட அதிகாரி, இறுதித் தண்டனைத் தீர்ப்பில் ஓர் இணைப்புச் சங்கிலி மட்டுமே'' என்றும், பிரித்தானிய நீதித் திணைக்களம் வலியுறுத்துகிறது.

பால்கன் பிரதேசத்திற் போரின் போது நிறுத்தப்பட்ட 40,000 ஜேர்மன் படையணியினர் மீது, ஐ அமெரிக்கா தொகுதிவாரியான குற்றத்தைச் சுமத்திக் குற்றவாளிகளாக்கியதை வோல்ட்ஹீம் அறிந்திருந்தாலும், அக்காலப்பகுதியில் பால்கனில் தாம் பணிபுரிந்ததைத் தவிர்க்க முற்படுகின்றார். ''புயலின் விழிகளில் என்ற தலைப்பில், ஆங்கில மொழியில் (In the Eye of the storm 1988 இல் வெளியான நூலை நினைவு கூர்ந்த வண்ணமே, அவர் இந்தத் தவிர்ப்பை வலியுறுத்துகிறார். அது ஒரு தவறென்றா) லும், தாம் கண்டனவும், செய்தனவும் குற்ற உணர்வின் பாற்பட்டன அல்ல என்பதும், அவர் வாதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மையில், வோல்ட் ஹீம் எந்தக் குற்றச் சாட்டினையும் ஏற்பதாயில்லை. ''ஸ்கின்ட்லரின் பட்டியல்'' (Schndler's list) என்ற திரைப்படத்தை அவர் பார்க்கவில்லையா? என்று வினாவிய போது, தமது மேசை லாச்சியைத் திறந்து, அந்தத் திரைப்படத்தின் கதையமைப்புக்கு ஆதாரமாயிருந்த ஜேர்மனிய நூலை அவர் எடுத்துக் காட்டுகிறார். ''தனிமைப்படுத்திச் சித்திரவதை செய்த முகாமின் கொலையாளிக்கும், யூதருக்கு உதவிசெய்ய முனைந்த ஜேர்மனியனுக்குமுள்ள வித்தியாசத்தை இந்த நூல் சித்திரிக்கின்றது'' என்கிறார். ''உதவிசெய்ய முற்பட்டவர்களும் இருந்தார்கள்; தாமும் அவர்களில் ஒருவர் என்று, வோல்ட்ஹீம் கருதுகிறாரா? நான், ஒரு வீரன் அல்லன் என்பது நிச்சயம். நான், எனது தலையைத் தியாகம் செய்யவில்லை. ஆனால், வருந்தியவர்களுக்கு என்னளவில் செய்யக்கூடிய, மிக மேலான உதவியைப் புரிந்தேன்''.

*வோஷிங்ரனிலிருந்து ஜெஃப் ஹீற்ரன் அனுப்பிய செய்திகளைத் தொகுத்தெழுதிக் கட்டுரைவடிவம் தந்தவர்:-*
ஜேம்ஸ் எல். இறாஃப்.

# ருஷ்யாவுடன் மீண்டும் இணைவதா?

— எழுதியது —
**டொறின்டா எலியற்**

மார்ச் மாதத்திலும், வெயிலுள்ள நாள் எனில், யோல்ராவின் நீர்ப்பெருக்கற்ற கடற்கரை விளிம்பிற் காதல் ஜோடிகளும், குடிகாரரும், ருஷ்ய விடுமுறை நாட்கழிப்போரும்' கருங்கடலிலிருந்து வீசும் வெப்பமான காற்றைச் சுவாசிப்பதற்காகப் பெருந் தொகையிற் கூடியிருப்பர். இங்கு தான் ஸ்ராலின், ரூஸ்வெல்ற், சேர்ச்சில் ஆகிய உலகத் தலைவர்கள் 1945 இல் கூடி 2 ஆம் உலகப் போரின் பிற்கால உலகின் தலைவிதியை நிர்ணயித்தனர். அவ்வுல்லாசப் புரியிலே பாதி கோனீத் தீவிலும், பாதி றிவினியராவிலும் அமைந்துள்ளது. ருஷ்யப் புரட்சிக்கு முந்திய கட்டடங்கள், பொழுது போக்கு விளையாட்டு மண்டபங்கள் கரையோரம் முழுவதும் இருக்கின்றன. தலையிற் சுமந்து திரியும் வியாபாரிகள், இயற்கைக் காட்சி ஓவியங்களையும், 'மஞ்சள்' கதைகளையும் விற்பர். குறத்திகள் சட்டைப் பையிற் கைவிட்டுத் திருட என்றே, அலைந்து திரிவார்கள். சோவியத் ஒன்றியம் உடைந்து போகுமுன் இருந்த மிக மோசம் ஆன நாள்களின் வாழ்க்கையிலும் கீழ் நிலைக்கு வந்து விட்டது.



கருங்கடலில் அதிகரிக்காத குருதி வெப்பம் உள்ள துறைமுகங்கள் இருப்பதால், ருஷ்யரும், உக்ரேயினியரும், தாத்தாரியச் சிறுபான்மையினரும் கிரீமியக்குடாநாட்டில் உரிமை கோருகின்றனர்.

இன்றைய நிலை. சுதந்திர உக்ரேயின் அரசின் எல்லா இடங்களையும் போலவே, கிறிமியாவிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைத் தரங் குறைந்து விட்டது ஒரு வயிற்றுக்கு அரசு தரும் ஓய்வூதியம், சுமார் 10 டொலர் மட்டுமே; ஒரு புதிய குளிர்ச் சட்டை வாங்கவும் போதாது இத்தொகை. ஓய்வுபெற்ற தொழிற்சாலை ஊழியப் பெண் ஒருத்தி (59 வயது) கடற்கரையில் அமர்ந்தபடி சொல்கிறார்:- ''இங்கே, எங்குமே சீவிக்க வழியில்லை. நான் ருஷ்யாவிற் பிறந்தேன். ருஷ்யாவிலேயே சீவிக்க விரும்புகிறேன்!

இவ்வுல்லாசப் பயணப் பகுதியை, பழைய ருஷ்யத் தலைவர் நிகிற்றா குருஷ்சேவ் 1954 இல் உக்றேயின் குடியரசுக்கு, ஒரு கோப்பை மது அருந்திய பின் கொடுத்த போது, கிறீமியாவிற் குடியிருந்தவருட் பெரும்பாலார் ருஷ்ய இனத்தவர் என்பதனால், அதிகம் பிரச்சனை இருக்கவில்லை. அப்போது அங்கு வசித்த உக்றேயினிய, தாத்தாரிய இனங்களைச் சேர்ந்த சிறுபான்மையினர் பற்றியும், யாரும் கவலைப்படவில்லை. இவர்களை ''ஸார்'' மன்னர்கள் காலத்திற் பல கொடுமைகளுக்கு உள்ளாக்கினர் என்ற கசப்பு உணர்வு, இவர்கள் நெஞ்சங்களிற் பதிந்து கிடந்தது. இப்போது ருஷ்யாவும், உக்றேயினும் இரு வேறு நாடுகளாகி விட்டமையால், சிறுபான்மை, பெரும்பான்மைப் பூசல் முளை கொள்ளத் தொடங்கி விட்டது. கிறீமியாவின் சனத்தொகை 2.7 மில்லியன். அதில், 70 வீதம் ருஷ்ய இனத்தவர். அவர்கள், மீண்டும் ருஷ்யாவுடன் இணைவதையே விரும்புகின்றனர். அங்குள்ள உக்றேயினிய, தாத்தாரிய இனத்தவர்கள், சிறுபான்மையினரின் உரிமைகள் பற்றிக் கவலை கொள்கின்றனர். வருங்கால இனத்தகராறுகளுக்கு, மூல உணர்வுகள் கிளறப்படுகின்றன. ''இங்கு ஏதாயினும் நடக்குமானால், இங்கு ஒரு யூகோஸ்லாவியா தோன்ற, இடம் ஏற்படும் (இனவெறி, உள்நாட்டுப் போரில் முடியும்'') என்கிறார், முன்னை நாள் ருஷ்யச் சர்வாதிகாரத்துக்கு மாறாகப் பாடுபட்ட சேர். ஜீ. கிரிகோரியான்ற்ஸ். கிறீமிய அரசாங்கத்திற் சேரும்படி, சமீபத்தில் அழைப்புப் பெற்றும், அவர் சேர மறுத்து விட்டார்.

**உக்றேயின்**

**தலைவர்**
*லியொனிட் கிறாவ்சுக்*

**உள்நாட்டு மொத்த உற்பத்தி அளவு தலா**
*5,180 அமெரிக்க டொலர்*

**சனத் தொகை**
*51.9 மில்லியன் (சோவியத் ஒன்றியத்தின் சனத் தொகையில் 2.7 வீதம்)*

**இனப் பிரிவு**
*உக்றேயினியர் 73 வீதம், ருஷ்யர் 22 வீதம்*

**ஏற்றுமதிகள்**
*நிலக்கரி, சீனி, இரசாயனங்கள்*

**சென்ற ஆண்டு**
*கிறாவ்சுக் பாராளுமன்றம் முக்கிய விடயங்களிலே தன்னைப் பின்பற்றாத பலமற்ற நிலையில் இருக்கிறார்.*

**கண்ணோட்டம்**
*உக்றேயின் தனது அணு ஆயுதக் கையிருப்பைக் கைவிட்டு அவற்றை அழிக்கத் தீர்மானித்திருப்பது அந்த நாடு ருஷ்யாவுடன் கொண்டுள்ள உரசல் நிலையைக் குறைக்க மேற்கத்திய நிதி உதவி கிடைக்கலாம்.*

புதிய ருஷ்யத் தேசியவாதம், கிறீமிய ஜனாதிபதி யூரி மெஷ்கோவையும் தாக்குகிறது. அவர் ருஷ்ய இனத்தவர். பெரும்பான்மையான வாக்குகள் பெறுவதற்காக, தமது பிரதேசம் மீண்டும் ருஷ்யாவுடன் இணையப் பாடுபடுவதாக வாக்குறுதியளித்தே, தேர்தலில் வெற்றி பெற்றார். சென்ற ஏப்ரல் மூன்றாம் திகதி ஞாயிற்றுக்கிழமை, (யாரையும் கட்டுப்படுத்தாத) குடியொப்பம் ஒன்றை நடத்திய போது, கிறீமியா, உகறேயினிலிருந்து விலகிச் சுதந்திரம் பெறும் உரிமை முதன்மை பெற்றது. அவ்வேளையில், அங்குள்ள சிறுபான்மையினர் கொதிப்படைவது நிச்சயம். ருஷ்யக் கடுந் தேசியவாதம் அவர்களுக்கு வேம்பாயிருக்கும். உக்றேயின் ஜனாதிபதி லியோனிட்க்ராவ்ன்சுக், இக்குடியொப்பம் சட்டவிரோதமானது என அறிவித்தார் (அவர் குடியொப்பத்தின் முடிவு பற்றி என்ன நிலை எடுப்பார்? என்பது தெரியவில்லை.) கிழக்கு உக்ரேயினிலும், ருஷ்யர் பெரும்பாலாயிருக்கும் பிரதேசத்திலும், குடியொப்பம் பெறும் முயற்சி, அங்கும் இன வெறியைக் கிளப்பலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய ருஷ்யத் தேசியவாதம் வேரூன்றக் காரணம், பொருளாதாரக் கஷ்டமே; இனி, ஒருமைப்பாடு சிறிய இடத்தையே பெறுகிறது. மூன்றாண்டுகளுக்கு முன், கிறீமியருள் 54 வீத மக்கள் சோவியத் ஒன்றியத்திலிருந்து விலகிச் சுதந்திரம் பெற வாக்களித்தனர். அப்போது, மொஸ்கோவின் பிடி தளர்ந்தாலே, சுபீட்ச வாழ்வு பெறலாம் என்ற எண்ணம் இருந்தது. ஆனால், க்ராவ்சுக் உக்றேயினிற் கணிசமான மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய பொருளாதாரச் சீர்திருத்தங்களைப் புதிதாக இயற்றத் தவறிவிட்டார். புதிய உள்ளூர் நாணயமான கர்போவனெற்ஸ், இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒரு டொலருக்கு 100 என்ற விகிதத்தில் இருந்தது. இன்று 38,000 க்கு ஒரு டொலர் என்ற அளவுக்கு மதிப்புக் குறைந்து விட்டது. மாதந்தோறும் பணவீக்கம் 80 வீதம் ஆகிறது. கடந்த ஓர் ஆண்டில், கைத்தொழில் உற்பத்தி 50 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. ஒப்பீட்டு முறையிற் பார்த்தால், ருஷ்ய றூபிள், டொலர் முதலிய கடின நாணயம்' போலவே உறுதி உள்ளதாக இருக்கின்றது. இதனால், மெஷ்கோவ், றூபிளுடன் இணைந்த நாணய மாற்றுவலயம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற பலமான வாதத்தை முன்வைக்கிறார். பெரும்பாலான கிறீமியர்களுக்கு, உக்றேயினின் அரசியற் தலைவர்கள் பொருளாதாரச் சீர்திருத்தங்களைத் தங்கள் சொந்த நலத்துக்கு மட்டும் ஏற்றபடி, திருப்பி விடுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைக் கண்டு அருவெறுக்கின்றனர். சோவியத்யுகச் சுகாதார நிலையங்களைக் கட்டுப்படுத்திய பங்குக ளுள்ள கம்பனிகளாக்கிவிட, ருஷ்ய ஆதரவுள்ள வர்த்தக நிலையங்களின் உதவியைப் பெறுகிறார்கள். ''ஜனாதிபதி, உண்மையான தனியுடைமையாக்குந் திட்டங்கள், எதையும் வகுக்கக் காணோம்'' என்கிறார். சேர்ஜீஷுவைனிக்கோவ் என்ற ருஷ்ய ஆதரவாளரான அரசியல்வாதி, ''அவர், ருஷ்யாவிலும் உக்றேயினிலும், கிறீமியாவிலும் உள்ள சக்தி வாய்ந்த பெரிய மனிதரைப் பகைக்க விரும்பவில்லை.''

அரசியல் எதிரிகள், மொஸ்கோவே இரகசியமாகக் கிறீமியாவிற் பிரிவினைவாதத்தை வளர்க்கிறது என ஐயுறுகின்றனர். இம்பெக்ஸ் 55 என்று பெயர் தரித்த கம்பனி ஒன்று, மெஷ்கோவுக்கு நிதியுதவி அளிக்கிறது; அது ருஷ்யாவுடன் வியாபாரம் செய்கிறது. மெஷ்கோவ், முன்னைநாள் எல்லைக் காவற்படையில் அதிகாரியாயிருந்தவர். தமது படையில், தான் மட்டுமே தன்னியக்க ஆயுதங்களைக் கொண்டு சரியாகக் குறிசுடும் அதிதிறமைசாலி என்று பெருமைப்படுபவர். அவருக்கு ருஷ்ய உளவுத்துறை (கே. ஜீ. பி) யுடன் தொடர்பு இருந்தது என்றும், அதனால் ருஷ்யாவிலுள்ள நம்பகமற்ற பாதுகாப்பு, வாணிக நலன்களுடன் இன்னும் தொடர்புடையவர் என்றும் நம்புகின்றனர். மெஷ்கோவின் புதிய பிரதமர் ஒரு ருஷ்யப் பொதுமகன்.

கிறீமியாவில் இருபகுதியினரும் ஆவலுடன் பெறமுயல்வது, பழைய சோவியற் ஒன்றியத்தின் கருங்கடற் கப்பற்படை: செவஸ்த போல் துறைமுகத்தினைத் தளமாக உடையது. உக்றேயின் சுதந்திரம் பெற்றது முதல், கீவ், மொஸ்கோ ஆகிய இரண்டு அரசாங்கங்களும் அதன் உரிமை தமக்கே என்கின்றன. சென்ற ஆண்டு ருஷ்யத் தேசியப் பாராளுமன்றம், கடற்படையும், செவஸ்த போல் துறைமுகமும் தனக்கே என்றது. ருஷ்ய ஜனாதிபதி யெல்சின், பாராளுமன்றத்தின் உரிமைக் குரலைக் கண்டித்தார் எனினும், அவருக்கும், கிராவ்சுக்கும் அங்கு துருப்பிடித்துக் கொண்டிருக்கும் கப்பல்கள் குறித்து, ஒரு மித்த முடிவுக்கு வர இயலவில்லை. உக்றேயினியத் தரைப்படையணிகள பல, கிறீமியாவில் நிலைபெற்றுள்ளன.

ருஷ்யா, கருங்கடலுக்குட் பிரவேசிக்கும் உரிமை, தனது பாதுகாப்பு வணிகத் தேவைகளுக்கு உயிர் நாடியானது என உரிமை பாராட்டுவதை, சிறுபான்மை இனங்கள் மறுக்கின்றன. ''கஸக்ஸ்ரான், வட (துருவம்) சமுத்திரத்துக்குப் போக வாய்ப்பு இல்லை'' என்கிறார், தாத்தாரியச் சிறுபான்மை இனத்தவரான முஸ்தாப ஜெமிலோக்லு. ''அவர்களுக்கு, ஏன் தாழ்வுச் சிக்கல் இருக்க வேண்டும்? மொஸ்கோ கடும்பிடி பிடிக்கப், பின் நிற்கிறது. ருஷ்யர், உக்றேயினில் பிரச்சனையைக் கிளப்ப விரும்பவில்லை'' என்கிறார், தளபதி ஸ்யுங்கோல். ''கிறீமிய இஸ்வெஸ்தியா'' பத்திரிகை ஆசிரியர்; ''ருஷ்யர், தமது பொருளாதாரம் உக்றேயினிய மயமாகிவிடும் என்று பயப்படுகிறார்கள். அவர்கள் உக்றேயின் என்ற ட்றாக்டருக்குப் பின்னே இழுத்துச் செல்லப்படும் பெட்டிபோல இருக்க விரும்பவில்லை'' என்கிறார். கிறீமியாவிலுள்ள ருஷ்யத் தீவிரத் தேசியவாதிகள், ஜெல்சின் அரசாங்கம் தமக்குப் போதிய ஆதரவு வழங்க என அங்கலாய்க்கிறார்கள். விளாடிமிர் ஸிரினோவ்ஸ்கி, ருஷ்யக் கட்சியின் தலைவரான ஷுவைனிக்கோவுச்கு ஒரு கடிதம் அனுப்பி, தம் உள்ளார்ந்த ஆதரவைக் காட்டினார். ஆனால், பண உதவி செய்யவில்லை.

கிறீமியாவில் சிறுபான்மையினர் பிரச்சனை வளர்ந்து கொண்டு போகும். 260,000 தாத்தாரியர் மத்திய ஆசியாவிலிருந்து, சமீப ஆண்டுகளில் கிறீமியாவுக்குத் திரும்பி விட்டனர். கிறீமிய வரலாற்றின் மிக்க இருட் காலத்தில், சர்வாதிகாரி ஸ்ராலின் 4 லட்சம் தாத்தாரியரை, ஜேர்மனியருக்கு ஆதரவு வழங்கியதற்காக நாடு கடத்தினர். மெஷ்கோவ், அவர்களுக்கு உள்ளூர்ப் பாராளுமன்றத்தில் ஒரு சிறு, வீதப் பிரதிநிதித்துவம் வழங்குவதற்கு எதிராக, ஆணித்தரமான நியாயங்களை எடுத்துரைத்துள்ளார். அதனால், தாத்தாரியரது செல்வாக்கை மேலும் இழந்துவிட்டார். ''ஓர் அரசின் பிரச்சனைகளை, வெறும் இயந்திரப் பெரும்பான்மை கொண்டு தீர்த்துவிடலாம் என்று நினைப்பது பிழை'' என்கிறார், ஜெமிலோக்லு. அவர் சென்ற மார்ச் இறுதியில் நிகழ்ந்த குடியொப்பத்தில் வாக்களிக்க வேண்டாம் என தாத்தாரியரைக் கேட்டுக் கொண்டார்.

## போராட ஆயத்தம்

தாத்தாரியரும், பிற சிறுபான்மையின உக்றேயினியரும் சேர்ந்து, அரசியல் வசதிக்காக, தம்முள் ஓர் இணைப்பை ஏற்படுத்தியுள்ளனர். தாத்தாரியர், தாம் சமீபத்தில் வென்றெடுத்த கிறீமிய உரிமைகளுக்கு, ருஷ்யர் அச்சுறுத்தல் ஏற்படுத்துகின்றனர் என நினைக்கிறார்கள். உக்றேயினியர், தாத்தாரியர் தாம் சமீபத்திற் பெற்ற தேசிய சுதந்திரத்தைப் பாதுகாக்க உதவுவர் எனக் கருதுகின்றனர். ''நாம் இங்கிருப்பது, உக்றேயினியருக்குரிய நிலப்பரப்பைப் பாதுகாக்கவே'' என்கிறார், இகோர் பானக் உக்றேயினியக் குடியரசுக் கட்சியின் கிறீமியப் பகுதித் தலைவர். ''எந்த உக்றேயினியத் தேசபக்தனும், தன் நாட்டு உரிமைக்காகப் போராடும் மன உயர்வைப் பெற்றுள்ளான்.'' தாத்தாரியரை மீளக் குடியேற்றும் விடயத்தில், உக்றேயின் நிதியுதவியளித்துள்ளது, அதன் மூலம், மொஸ்கோவின் பேராசைக்கு எதிரான நட்புறவுக்கு ஏற்றது. கீவ் (அரசு), கிறீமிய அரசாங்கத்தைப் பகைத்து, தாத்தாரிய உரிமையை அதிகம் வற்புறுத்தப் பின் நிற்கிறது. மீண்டு வந்து குடியமரும் தாத்தாரியர் அமைத்துள்ள கிராமம் ஒன்றுக்கு, இரண்டு பெயர்கள் உள.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறாமை கொண்ட ருஷ்யர் அதனை, ''தாமே அபகரித்து'' என்ற பொருள்படும் ''சாமோஸக் வற்ஸ்'' என்று அழைக்கின்றனர். அவர் கணிப்பின்படி, (நாடு கடத்தப்பட்டு, பே யித் திரும்பிய) தாத்தாரியர் அம்மண்ணை, தம்மிடமிருந்து அபகரித்துக் கொண்டனர். தாத்தாரியரோ, அதனை ''சுய அபிவிருத்தி'' என்று பொருள்படும் ''சாமோரஸ்விற்யீ'' என்கின்றனர். 26 வயதுள்ள எமில் அப்துரக்மனோவ், ஓர் இரசாயனவியற் பட்டதாரி. அவருக்கு அரசாங்கம் வதிவிட உத்தரவுச் சீட்டு வழங்காமையால், உத்தியோகம் பெற இயலவில்லை. ''ஒவ்வொருவரும், தனக்கென ஒரு நிலம் வைத்திருக்க வேண்டும்'' என்கிறார் அவர். அவரது குடும்பம் பல ஆண்டுகளுக்கு முன் மற்றத் தாத்தாரியருடன் இங்கிருந்து நாடு கடத்தப்பட்டுச் சென்றது. உஸ்பெக்கிஸ்தானிலிருந்தும், இனப் பூசலால் மீண்டும் வெளியேற்றப்பட்டது. இப்போது பல குடும்பங்கள், மீண்டும் தம் தாயகமான கிறீமியாவுக்கு வந்து, பழைய சொந்த வீட்டில் வசிக்கின்றன. புதிய இல்லங்களை அமைப்போர் இப்போது குடியேறும் பள்ளத் தாக்கில், மின்சார, நீர் வசதிகள் இல்லை. ''யாரேனும் புத்தி சொன்னால், (வழிகாட்டினால்) நான் என் மண்ணுக்காகப் போராடுவேன்'' என்கிறார், அந்த இரசாயனவியற் பட்டதாரி. ஜெமிலோக்லு, தாத்தாரிய உரிமைகளைப் பாதுகாக்க, சமாதான வழியிற் போராடுமாறு கோருகிறார். கிறீமியா மீண்டும் மொஸ்கோவுடன் இணையுமானால், அவை பறிபோகலாம். ஆபத்து என்னவென்றால், இன விறுவிறுப்பு தூண்டப்பட்டால், அதி எளிதில் அடங்கிவிட மாட்டாது.

''நியூஸ் வீக்,'' ஏப்ரல், 4, 1994.

---

**தென்கொரியா:**

# கடும் விமர்சனங்களின் தொடக்கம்

தென்கொரிய ஜனாதிபதி கிங் யம் சாம் பதவியேற்ற நாள், அரசாங்கத்திலிருந்த கொல்:ப் (GOLF) பிரியர்களுக்கு ஒரு நல்ல நாளன்று. சொல்:ப் விளையாட்டு, சமீபத்திய சில வருடங்களாகத் தென் கொரியாவில் அதிகமானவர்களால் விளையாடப்படும் விளையாட்டாக இருந்து வருகிறது. ஒரு வருடத்திற்கு முன் ஜனாதிபதி கிம், தனது நிர்வாக அலுவலர்களையும், அரசாங்கத்தின் ஏனைய உறுப்பினர்களையும் கொல்:ப் விளையாடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு, மறைமுகமாக வற்புறுத்தினார். இதன் அடிப்படை என்ன? கொல்:ப் மைதானத்தில் செலவழிக்கப்பட்ட ஒரு நாள், நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வேறு முயற்சிகளிற் செலவழிக்கப்படலாம் என்பதே, கிம்மின் கருத்து, எனினும் அதிகாரிகளும், வர்த்தகர்களும் ஒன்றாக விளையாடுவது, பார்ப்பதற்கு அழகாக இருக்காது. ஏனென்றால், லஞ்சம் கொடுப்பதன்மூலமும். செல்வாக்கைப் பயன்படுத்துவதன் மூலமாகவும் காரியங்களைச் செய்விக்க, கொல்:ப் மைதானங்கள் மிக வாய்ப்பான இடங்கள் என்பதே, இவ்வுத்தரவின் மூலம் வழங்கப்பட்ட செய்தி என்று, தென் கொரியாவிற் பொதுவான அபிப்பிராயம். தனது ஆட்சியின் இரண்டாவது வருடத்தைத் தொடங்கும்போது, கொல்:ப் க்கு எதிரான தனது நிலைப்பாட்டைத் தளர்த்திக் கொள்வார் என, ஜனாதிபதியின் உத்தியோகபூர்வமற்ற இவ்வுத்தரவை எதிர்த்து வந்த கொல்:ப் பிரியர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அவர்களுடைய எதிர்ப்பு, அவரது நிலைப்பாட்டை மேலும் இறுகச் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. தாம், இன்னமும் ''சுய கட்டுப்பாட்டை'' எதிர்பார்ப்பதாக, கடந்த வாரம் கிம் ஒரு சுற்று நிருபம் அனுப்பினார். இப்போது, இப்பிரச்சனை அரசியல்ரீதியாக கிம்மிற்குப் பின்னடைவை ஏற்படுத்தும் அச்சுறுத்தல் உள்ளது. விமர்சகர்கள் இவ்வுத்தரவைக் கடுமையாகக் குறைகூறியதுடன், கிம்மின் ஆட்சியை, பொது மக்கள்மீது ஏகாதிபத்தியம் செலுத்தும் ஆட்சியென வர்ணித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Chundikuli Branch Library



**எகிப்து:-**

# எகிப்து சூடு பிடிக்கிறது

எழுதியவர்:
கைறோவிலிருந்து
— டியன் ஃபிஷெர் —



## முஸ்லிம் தீவிர வாதிகள் இம்சைக் கிளர்ச்சியை விரிவாக்குகிறார்கள்; அரசாங்கமும் கடும் நடவடிக்கையை மேற்கொள்கிறது.

எதிரணிக் கைகலப்பு, சிலகாலமாக நிகழ்ந்து கொண்டுதான் இருந்தது. கைறோத் தலைநகரிலிருந்து 350 கி.மீ. தொலைவிலுள்ள சிட்ஃபா என்ற கிராமத்தில், காவற்றுறை ஊர்தி மீது துப்பாக்கி தாங்கியோர் மறைந்திருந்து தாக்கியதில், காவற்றுறையினர் ஏழு பேர் காயமுற்றனர்; ஐவர் இறந்தனர். எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாறக் கோபமுற்று, பாரிய அளவில் பதிலடி கொடுக்கப் பணித்தார். முபாறக்கின் பேச்சாளர் முகமது அப்துல் மோனீம், ''பயங்கரவாதிகள் சிவப்புக் கோட்டைத் தாண்டிவிட்டனர். நாங்கள், இறுதி முடிவு மட்டும் அவர்களை எதிர்த்து அழிப்போம்'' என்று சூளுரைத்தார். இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்குப் பெயர்போன பிரதேசமான அஸ்ஸுயிற் கரும்பு வயல்களிலும், குன்றுகளிலும் மறைந்திருந்து தீவிரவாதிகளைக் கண்டுபிடித்து அழிப்பதற்காக, அரச படைகளின் உலங்கு வானூர்திகள் வானில் பறந்தன. கைறோவிலிருந்து வந்த 3,000 கொமாண்டோக்களின் துணையுடன், காவல் துறையினர் அவ்விடங்களில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு, ஒரு சவக்காலையில் நிகழ்ந்த துப்பாக்கிச் சமரில் 6 தீவிரவாதிகளைக் கொன்றனர். சந்தேகத்தின் பேரில், சிலரைக் கைது செய்தனர்.

இதுவரை நிகழ்ந்திராத அளவு கொடும் பயங்கரவாதமும், எதிர்த்தாக்குதலும் எகிப்தில் ஓங்குவதை அவதானித்தோர், அந்நாடும் அல்ஜீரியாவைப் போல் ஆகிவிடுமோ? என்று அஞ்சுகின்றனர். கடந்த ஈராண்டுக்காலத்தில், இங்கு அடிப்படைவாதிகளுக்கும், அரச படையினருக்கும் இடையில் எழுந்த மோதல்களில் 4,000 பேர் கொல்லப்பட்டனர். சென்ற ஆண்டு செப்ரெம்பரிலிருந்து 31 அயல் நாட்டினர் படுகொலை செய்யப்பட்டனர்; பலரும், கழுத்து வெட்டப்பட்டே இறந்தனர். எகிப்தில் இப்போது நிகழும் ஹிம்சை, அல்ஜீரிய அளவுக்குப் பெருகவில்லை எனினும், சம்பவங்கள் கூடிக்கொண்டே வருகின்றன. 1992 இற்குப்பின், 330 எகிப்தியர் (காவல் துறையினரும், தீவிரவாதிகளும்) படுகொலை செய்யப்பட்டனர். 31 பேர் காயமுற்றனர். அதனால், நாட்டின் முக்கிய வருவாய் ஆகிய சுற்றுலாத்துறை வருமானம், 1992 இல் 2.1 மில்லியன் டொலரிலிருந்து, சென்ற ஆண்டு 1.3 மில்லியனாய்க் குறைந்தது.

எகிப்தின் ஹிம்சை நெறிக்கும், அல்ஜீரிய ஹிம்சை நெறிக்கும் பின்னணி ஒன்றே. தீவிர சமூக, பொருளாதாரப் பிரச்சனைகள், ஏழைகளுக்கும், செல்வர்களுக்கும் இடையே இடைவெளி அதிகரிப்பு, அரசாங்க ஊழல் பற்றிய பொது மக்களின் அதிருப்தி, அதிகாரவர்க்க உத்தியோகத்தரின் தாமத குணம் என்பன. எனினும், இரண்டு நாடுகளிலும் தெளிவாகத் தெரியும் வேறுபாடுகளும் உள. அல்ஜீரியரைப் போலன்றி, எகிப்தியர் பார்வோன் மன்னர் காலம் முதல், வலிமைமிக்க மத்திய அரசின் ஆட்சிக்குப் பழக்கப்பட்டுப் போனவர்கள். கடந்த 50 வருடங்களாக, மதப் பற்றற்ற அரசு, சமயத் தீவிரவாதிகளின் சவால்களைக் காலத்துக்குக் காலம் எதிர்த்து நின்று சமாளிக்கப் பழகிவிட்டது. எகிப்தில் படையணிகள் அரசியலில் ஈடுபடுவதில்லை. இப்போது இராணுவம் அடிப்படைவாதிகளை எதிர்த்துப் போராடவில்லை. கைறோப் பல்கலைக்கழகத்தின் அரசியல், கேந்திரியக் கல்வி மையத்தின் இயக்குநர் அலி. தெஸ்ஸோக்கி கூறுகிறார்:– ''தீவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எகிப்து**

**தலைநகர்**
கைறோ

**பரப்பு**
9, 97, 677 ச. கி. மீ

**மக்கள் தொகை**
5, 47, 79, 000

**மொழி**
அரபி, ஆங்கிலம்

**எழுத்தறிவு**
44 வீதம்

**நாணயம்**
எகிப்து பவுண்டு


**தனி நபர் வருமானம்**
700 டொலர்

வாதிகள், பாதுகாப்புப்படையின ருக்குத் துன்பம் கொடுத்தும், வெளிநாட்டுப்பணம் நாட்டினுள் வராமல் தடுத்தும் விடலாம். ஆனால், அவர்கள் அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியாது. அரசு, வலியகரம் உடையது '' என்று.

மேற்குலகம், இப்படி இருப்பதையே விரும்புகிறது. அமெரிக்க 'பென்ரகன்' அதிகாரி ஒருவர் கூறுகிறார்:- '' அராபிய உலகின், உயர் வலுமிக்க குரல் எகிப்தினுடையதே. அது, அமெரிக்காவுக்கு முக்கிய நட்பு நாடு '' என. கைறோ, வோஷிங்ரனின் மத்திய கிழக்குக் கொள்கை வகுப்பதில், அதிமுக்கிய இடம்பெற்று உள்ளது. முபாறக் அரசு, அடிப்படைவாத அலையினாற் தூழப்பட்டால், இஸ்ரேல்—அராபிய சமாதானமுயற்சி பாழாகிவிடும். மேலும், மொறொக்கோ முதல், சவூதி அரேபியாவரையுள்ள மிதவாத அரசாங்கங்கள் அனைத்தும் அச்சுறுத்தப்படலாம்.

இப்போதைக்கு, தீவிரவாதிகளை அடக்கி வைப்பதில் முபாறக் வெற்றி பெறலாம் எனினும், அவர்தம் கையிலுள்ள நேரத்தை முழுதாகப் பயன்படுத்தவில்லை என்று சில எகிப்தியர் கருதுகின்றனர், எப்ரல் முதலாம் வாரத்தில் ஜனாதிபதி எகிப்தின் மதச்சார்பற்ற அரசியற் கட்சிகளைச் சந்தித்து, பயங்கரவாதத்துக்கு எதிராக, அனைத்துக் கட்சிகளின் ஐக்கிய முன்னணியை ஏற்படுத்த முயல்வார். இதிலே, இஸ்லாமிய அடிப்படைவாதிகளைப் புறக்கணித்துள்ளார். பிரதானமாக, முஸ்லிம் சகோதரத்துவம் என்ற குழுவை விலக்கியதை, இஸ்லாமிய, மதச்சார்பற்ற அறிவு ஜீவிகள் இருபாலாரும் கண்டித்தனர். அவர்கள் கருத்துப்படி, இக்கட்சிகள் மகாநாடு அரசாங்கத்தின் ஆதரவு அத்திவாரத்தை விரிவாக்கி, ஜனநாயகத்தை வளர்க்கும்.

சுதந்திர இஸ்லாமியவாதியான ஃபாஃமி ஹோவேய்தி கூறுகிறார்:- '' பிரச்சனை, அரசாங்கத்துக்கும் இஸ்லாமியக் குழுக்களுக்குமிடையில் இல்லை; அரசாங்கத்துக்கும், அதிகாரத்திலிருக்கும் மதச்சார்பற்றோர், இஸ்லாமியவாதிகளுடைய வட்டத்திலிருந்து விலக்கப்பட்டோருக்குமிடையில் தான் '' என உடன்படுகிறார், அபிவிருத்தி ஆய்வு மைய இயக்குநர் சாத் எல்தீன் இப்றாஹீம் '' அரசியல் வழியில் முடிவைத் தேர்ந்தெடுக்கும் உரிமை அற்றுவிட்டால், அது ஆபத்தில் முடியும் '' என்கிறார்.



வெளிநாட்டு, உள்நாட்டு அவதானிகள் கூற்றுப்படி, ஜனநாயகத்தின் அடிப்படையை விரிவாக்குவதுடன், அரசாங்கம் பொருளாதாரச் சீர்திருத்தத்தையும், தனியார் மயப்படுத்துதலையும், துரிதமுறச் செய்ய வேண்டும். இவையே, அபிவிருத்திக்கு அவசியமானவை. வேலைகள் பெருகாதபடியால், முபாறக்கின் தலைமையில் இருந்த நம்பிக்கையை, அந்நியப்படுத்தப்பட்ட இளைஞர்கள் இழந்துவிட்டனர். விரக்தி பெருகி விட்டது.

அடிப்படைவாதிகளின் சவாலுக்குப் பதில் ஒன்று, முபாறக்கின் காலடியில் உள்ளது. கைறோவின் பின்தங்கிய பகுதியான சீனாவில் 2.5 மில்லியன் நகரச் சேரிவாசிகள் குடியிருக்கிறார்கள். அப்பகுதியின் ஆளுநர் பதவி ஏற்ற அப்தெல் றஹீம் ஷெஹற்றா, சென்ற ஆண்டு முதல் வீதிகளைத் திருத்தி ஓரங்கட்டி, கீழே அழுக்கு நீர்த்தூம்புகள் அமைத்து, சுகாதார நிலையங்கள் பாடசாலைகள் கட்டி வருகிறார். '' இவையெல்லாம், பிரச்சனையைத் தீர்த்துவிட மாட்டா; மக்களது உள்ளக்கொதிப்பின் வெப்பத்தைக் குறைக்கும் நடவடிக்கையே '' என்கிறார் அவர்.

உண்மையான தீர்வாக, எழுத்தறிவின்மையைப் போக்கி, குடும்பக் கட்டுப்பாட்டைப் போதித்து, பெருகிவரும் எகிப்தின்சனத்தொகைக்கு வேலைவாய்ப்பை நல்குவது அவசயம். முன்னாள் முஸ்லிம் தீவிரவாதிகளின் புகலிடமாயிருந்த இம்பாபாவினூடாக வீறு நடைபோடும் அவர், தமது திட்டங்கள் சேவைகளைப் பெருக்கும்படி, தம்மிடம் சமர்ப்பிககப்படும் விண்ணப்பங்களைக் கண்டு மகிழ்கிறார். '' இதிலிருந்து, அரசாங்கத்தின் மீது மக்கள் இன்னும் நம்பிக்கை இழந்து விடவில்லை என்பது தெரிகிறதல்லவா? '' என்கிறார், ஷேஹாற்றா. ஆம் இன்னும் இழந்து விடவில்லைத் தான்!

'' ரைம் '' ஏப்ரல், 4, 1994.
கைறோவிலிருந்தும், வோஷிங்ரனிலிருந்தும் தகவல் அனுப்பிய நிருபர்கள்
**அமெளிறாட்வான்.**
**ஆன் எம.சைமொன்ஸ்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகமான எதிர்காலத்தை நோக்கி நீங்கள் வீறுநடை போடுங்கள்!

தமிழரின் பாரம்பரியம்

சுதுமலையில்

# சித்த வைத்தியம்



தூய்மையான... எளிமையான
வைத்திய முறைகள், மற்றும்
வைத்திய ஆலோசனைகள்.

சிறுபிள்ளைகளுக்கான
கிரந்தி எண்ணெய்.

வன மூலிகைகளைக்
கொண்டு தயாரிக்கப்பட்ட
வளர்ந்தோருக்கான
எண்ணெய் வகைகள்,
தைலங்கள்.

போன்றவற்றிற்கும்

# சுதுமலை சித்த ஆயுர்வேத மருத்துவ மனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு:-

*நாங்கள் உங்களின் தேவைகளைக் கருத்திற் கொண்டே விற்பனை செய்கின்றோம்.......!*

★ தரமான ஆங்கில மருந்து வகைகள்

★ சுவையுந், தரமும் மிக்க பிஸ்கட்டுக்கள்

★ உற்சாகம் ஊட்டும் டொனிக் வகைகள்

★ நிறையுணவு நிகர், பால்மா வகைகள்

## மெடி எயிட்ஸ் மருந்தகம்




# மெடி எயிட்ஸ் மருந்தகம்

644, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கறுப்பனைக் கறுப்பன் அழிக்கும் போது தடுத்து நிறுத்த யாருமில்லை."

இருண்ட கண்டம்' என்று மேற்குலக வரலாற்று ஆசிரியர்களால் வர்ணிக்கப்பட்ட ஆபிரிக்கா 1880 ஆம் ஆண்டளவிற் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளால் பாகப் பிரிவினை செய்யப்பட்டு, அவற்றால் ஏகபோக உரிமை ஆக்கப்பட்டுள்ளது. ஆபிரிக்காவில் காணப்பட்ட கனியங்கள், தாதுப்பொருள்கள் யாவும் இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய தொழிற் புரட்சியின் பின் எழுந்த தொழிற்சாலைகளுக்குத் தீனி ஆக்கப்பட்டுள்ளன. இந்த ஆட்சியாளர்கள் தமது நிர்வாக வசதிக்கேற்ப எல்லைகளை அமைத்து ஆபிரிக்க இனங்களின் நெடுங்கால விருப்பு வெறுப்புக்களை மதியாது நடந்துள்ளனர். பிரித்தாளும் தந்திரத்தின் காரணமாக இனங்களுக்கிடையிலான குரோதங்களை அவர்கள் ஊக்குவித்த சந்தர்ப்பங்களும் உண்டு. ஆபிரிக்காவின் ஐரோப்பிய ஆட்சி ஒரு நெடிய தலைமுறையில் முடிவுக்கு வந்துள்ளது. 1960 ஆம் ஆண்டில் மாத்திரம் (அதாவது 80 வருடங்களின் பின்) 16 நாடுகளும் 85 மில்லியன் மக்களும் விடுதலை அடைந்துள்ளன. 1951-ல் தொடங்கி 1956-ல் முடியுங் காலப்பகுதியில் சகாராப் பாலைவனத்திற்கு வடக்கே உள்ள அரபு மொழி பேசும் நாடுகள் யாவும் விடுதலை ஆகியுள்ளன. பின்பு 1957 இல் தொடங்கி 1963 இல் முடியுங் காலப்பகுதியில் சகாராப் பாலைவனத்திற்குத் தெற்குப் பகுதியில் உள்ள மத்திய ஆபிரிக்கா நாடுகள் விடுதலை ஆகியுள்ளன. கிட்டத்தட்ட இந்தியா அளவு நிலப்பரப்பும் அப்போது 14 மில்லியன் மக்களையுங் கொண்ட பெல்ஜியம் நாடு பிடித்து வைத்திருந்த கொங்கோ (Congo) இந்த விடுதலை அலையைத் தடுத்து நிறுத்தும் என்று வெள்ளை இனவாத ஐரோப்பியர்கள் நம்பியிருந்தனர். இதற்காக கொங்கோவின் ஒரு பகுதியாகிய காதங்காவை (Katanga) தன் நாடாக்கவும் திட்டம் இட்டனர். தங்கள் சுயநலத்திற்காக ருசோம்பி (Tshombe) போன்ற ஆபிரிக்கத் தலைவர்கள் இப்பொறியில் வீழ்ந்தனர்.

நெடு நாள்களாகப் பெல்ஜியம் (Belgium) நாட்டின் ஆட்சி ஆபிரிக்காவில் தொடரும் என எதிர்பார்த்தவர்கள் ஏமாந்தனர். இந்தச் சிறிய ஐரோப்பிய நாடு இப் பெரிய பிரதேசத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாமல் 1960 இல் ஆபிரிக்காவை விட்டு வெளியேறியுள்ளது. ஆகவே, கொங்கோ இவ்வருடம் விடுதலை ஆகிற்று எனலாம். பெல்ஜியம் நாட்டால் கொங்கோவுடன் இணைக்கப்பட்டு ''நம்பிக்கை நாடுகளாக'' (Trust Territories) ஆட்சி செய்யப்பட்ட ருவாண்டாவும், புருண்டியும் (Rwanda & Burundi) 1962 ஆம் ஆண்டு தன் ஆட்சி பெற்றுள்ளன.

கொங்கோவோடு ஒப்பிடும் போது இவை மிகச் சிறிய நாடுகள். 1962 இல் இந்த நாடுகள் ஒவ்வொன்றிலும் 2½ மில்லியன் மக்கள் வாழ்ந்துள்ளனர். இந்த இரு குட்டி நாடுகளையும் மத்திய ஆபிரிக்காவின் இரட்டையர்கள் (Twins of Central Africa) என அரசியல் ஆய்வாளர்கள் நயம்பட உரைப்பார்கள்.

இக் கட்டுரையைப் பொறுத்தளவில் இனங்களுக்கிடையிலான தொன்மையான முரண்பாடுகளும், காலத்திற்குக் காலம் நடந்த பெருந்தொகைப் படுகொலைகளும் பரந்த கொங்கோவுக்கும் சிறிய ருவாண்டா, புருண்டிக்கும் பொதுவான அம்சமாகும். கொங்கோவின் மேற்குப் பகுதியில் உள்ள போகொங்கோ (Bokongo) இனத்தவர்கள் அண்டை நாடுகளில் வாழும் இந்த இனத்தவர்களை ஒன்று கூடிப் புதியதோர் நாட்டை உண்டுபடுத்தப்

**மத்திய ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் இனப்போர் வெடித்ததைத் தொடர்ந்து பல இலட்சம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இன்னும் பல இலட்சக்கணக்கான மக்கள் ஏதிலிகளாக அண்டை நாடுகளுக்கு ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராடிக்கொண்டிருந்தனர். போர்த்துக்கீசர்ஆண்ட அன்கோலா, கபின்டா போன்ற நாடுகளில் உள்ள தம் இனத்தவர்களுக்கு இவர்கள் இந்த நோக்குடன் பிரிவதற்கு ஆக்கமும், ஊக்கமுங் கொடுத்து வந்துள்ளனர். கொங்கோவின் லூலுயா, மற்றும் பலுபா ( Lulua, Baluba ) இனத்தவர்களும் நித்திய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதே மாதிரி நான்கு நூற்றாண்டுகளுக்கு மேலாக ருவாண்டாவிலும், புருண்டியிலும் வாழும் ஹூட்டு ( Hutu ) மற்றும் ருட்சி ( Tutsi ) இனங்களுக்கிடையில் போரும், படுகொலைகளும் நடைபெறுகின்றன. ஹூட்டு இனத்தவர்கள் தான் இரு நாடுகளிலும் பெரும்பான்மையாக இருக்கின்றனர். ஆட்சியும் இரு நாடுகளிலும் இவர்கள் கையில் தான் இருக்கின்றது. இந்த வகையிலான படுகொலைகள் பன்னெடுங் காலமாக நடைபெற்றாலும் அண்மையில் தான் உலகின் மக்கள் தொடர்புச் சாதனங்கள் தகவல் தர ஆரம்பித்துள்ளன. ஒரு சில வெள்ளை இனத்தவர்கள் கொல்லப்பட்டது தகுந்த காரணமாக இருக்கலாம்.


இவ்வாறான இன மோதல்களை முடிவுக்குக் கொண்டுவரப் பெல்ஜியம் ஏதேனும் நடவடிக்கை எடுத்ததாக வரலாற்றுச் சான்றுகள் ஒன்றும் கிடையா. முரண்பாடுகளை வளர்த்ததற்குச் சான்றாகக் கதாங்காவைக் காட்டலாம். காலனித்துவ ஆட்சியாளர்கள் இனங்களை மோதவிட்டுப் பலங் குன்றிய நிலையில் வைத்துத் தமது மேலாதிக்கத்தை உறுதிப்படுத்தியுள்ளனர். இனங்களின் சுயாதீனத்திற்கும், தனித்துவத்திற்கும் மதிப்புக்கொடுக்காத வெள்ளையர்களிடம் நடுநிலையை நாம் எதிர்பார்க்க முடியாது. தொடர்ந்து ஆட்சி செய்ய முடியாத நிலையில் வெளியேறும் வெள்ளையர்கள் சிறுபான்மை இனங்களின் விடுதலைக்கு வழி செய்யாமலே விலகுகின்றனர். பெரும்பான்மை இனத்தவர் கையில் ஆட்சியை ஒப்படைக்கும்போது, சிறுபான்மை இனத்தவர்கள் தொடர்ந்தும் தம்மைத்தாமே ஆட்சி செய்யாத இழி நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இன்று மத்திய ஆபிரிக்காவில் நடக்கும் கொந்தளிப்புகளுக்கு இத்த நிலையே மூலகாரணம். சிறுபான்மை இனங்கள் தொடர்ந்தும் தமது விடுதலைக்குப் போராடிக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகின்றது.

எரித்திரியா போன்ற நாடுகளின் காலங் கடந்த உதயம் இந்தப் பின்னணியில் நடந்த வரலாற்றுச் சம்பவமாகும். வெள்ளையர்கள் தமது நிர்வாக சௌகரியத்திற்காக இனங்களின் ஒன்றுபட்ட வாழ்வையும் இயற்கையான எல்லைகளையும் மதியாது அமைத்த ‘ தடைவேலிகள் ’ மறு சீரமைக்க வேண்டியது அவசியம். அதுவரை காலமும் மோதல்களும், படுகொலைகளும் நடந்த வண்ணம் இருக்கும்.

**ருவாண்டா**
**தலைநகர்**
*கிகாலி*
**பரப்பு**
*26,338 ச. கி. மீ.*
**மக்கள் தொகை**
*75,00,000*
**மொழி**
*பிரெஞ்ச், கினியார் வான்டா, சுவாகிலி*
**எழுத்தறிவு**
*50 வீதம்*
**சமயம்**
*பழங்குடி, இஸ்லாம், கிறித்தவம்*
**நாணயம்**
*ருவாண்டா பிராங்க்(ஒரு டொலர் — 144 ருவாண்டா பிராங்)*
**தனிநபர் வருமானம்**
*310 டொலர்*

புருண்டி, ருவாண்டா ஆகிய இரு நாடுகளிலும் ருட்சி இனத்தவர்களே சிறுபான்மையினர். வேண்டாப் பெண்டீர் போல நாட்டில் எரட்சி முதற்கொண்டு சகல அனர்த்தங்களுக்கும் இவர்கள் மேல் பழி சுமத்திப் படுகொலை செய்வது ஹூட்டு இனத்தவர் வழக்கம். விடுதலை வேண்டி நிற்கும் ருட்சி இனப் போராளிகள் ருவாண்டா தேசாபிமானிகள் முன்னணி ( Rwandan Patriotic Front ) என்ற அமைப்பை நிறுவியுள்ளனர். இவர்கள் நடத்துவது ஆயுதந் தரித்த போராட்டம்.

இந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் நடந்த கலவரங்களுக்கும், படுகொலைகளுக்கும் உடனடிக் காரணம் பின்வருமாறு: ருவாண்டா நாட்டு ஜனாதிபதி ஜூவனால் கபி அறிமானாவும் ( Juvenal Habyarimana) புருண்டி நாட்டு ஜனாதிபதி சிப்பிறியன் நித்தரியமிராவும் ( Cyprien Ntaryamira ) அண்டை நாடான ரன்சானியாவில் ருட்சி இனத் தலைவர்களுடன் சமாதானப் பேச்சுக்கள் நடத்தி விட்டுச் சிறிய விமானம் ஒன்றில் ருவாண்டா நாட்டு கிகாலி விமான நிலையத்தைநோக்கி வந்து கொண்டிருந்தனர். அச்சமயம் தரையிலிருந்து வானை நோக்கி ஏவப்பட்ட ஏவுகணை ஒன்று விமானத்தைத் தாக்கியுள்ளது. ஹூட்டு இனத்தைச் சேர்ந்த இரு ஜனாதி



ருவாண்டாத் தலைநகரின் தெருக்களில் துர்நாற்றம் வீசும் இறந்த மனித உடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிகளும், எட்டு ஆலோசகர்களும், விமானப் பணியாளர்களும் இதில் இறந்துள்ளனர். பழி ருட்சி இனத்தவர்கள் மீது சுமத்தப்பட்டுப் படுகொலைகள் மீண்டும் ஆரம்பமாகின. ருவாண்டா நாட்டு இராணுவம் ஹூட்டு இனத்தவர்கள் கையில் இருக்கின்றது படுகொலைகளுக்கு இந்த இராணுவமே பொறுப்பேற்க வேண்டியுள்ளது. ருட்சி இனத்தவர்களின் விடுதிகளையும், அவர்கள் புகலிடம் தேடிய பொது இடங்களையும், மதஸ்தாபனங்களையும் இவர்கள் தாக்கி ருட்சி இனத்தவர்களைக் கொன்று குவித்து உள்ளனர். ஹூட்டு இனப் பொது மக்களும், அகப்பட்ட ஆயுதங்களைக் கையில் எடுத்துக்கொண்டு கொலை, கொள்ளை, தீ வைத்தல் போன்றவற்றில் தாம் இராணுவத்திலும், தரங் குறைந்தவர்கள் அல்ல என நிரூபித்துள்ளனர். சென்ற வருடம் புருண்டியிலும், ஒக்ரோபர் மாதத்தில் இப்போதைய ஜனாதிபதிக்கு எதிராக எடுக்கப்பட்ட பதவிக் கவிழ்ப்பு முயற்சி ஒன்று தோல்வி கண்டபின் பழி ருட்சி இனத்தவர்கள் மீது சுமத்தப்பட்டு 50,000 மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இப்போது ருவாண்டாவில் நடந்த படுகொலைகளில் இலட்சக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். தன்சானியாப் பேச்சுக்களில் ஆயுதப் போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்த ஒத்துக்கொண்ட ருட்சி இனப்போராளிகள் மீண்டும் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

ஜனாதிபதிகள் இருவரும் ஏறி வந்த விமானத் தகர்ப்புக்கு ஹூட்டு இன இராணுவமே பொறுப்பு என இப்போது தெரியவந்துள்ளது. காரணம்: ருட்சி இனத்தவர்களுடன் நடத்தப்பட்ட சமாதானப் பேச்சுக்களை அவர்கள் விரும்பவில்லை. இத்தகைய அங்கீகாரம் இராணுவத்தினருக்கு ஏற்புடையதல்ல. ஆனால், வழமைபோல அழிவுற்றவர்கள் ருட்சி இனத்தவர்களே.

சோமாலியாவில் கையைப் பொசுக்கிக் கொண்ட அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் ருவாண்டாவில் அகப்பட்டுக் கொண்ட 250 அமெரிக்கர்களை வெளியேற்றுவதுடன் தனது நடவடிக்கையை நிறுத்திக் கொண்டுள்ளார். இதற்காக அவர் 330 கடற்படை வீரர்கள் கொண்ட அணியை அனுப்பி வைத்துள்ளார். அமெரிக்காவைப் பின்பற்றிப் பிரான்சும் 280 விமானப்படை வீரர்களை, தமது நாட்டுக் குடிமக்களை வெளியேற்றும் பணிக்காக அனுப்பிவைத்துள்ளது. இதேமாதிரிப் பெல்ஜியம், இத்தாலி போன்ற நாடுகள் சிறிய அணிகளை அனுப்பித் தமது நாட்டவர்களைப் பத்திரமாக வெளியேற்றியுள்ளனர். புருண்டி, ருவாண்டாவுடன் ஒப்பிடுகையில் ஓர் அமைதிப் பிரதேசமாக இருக்கின்றது. ருட்சி இன அகதிகளும், வெளிநாட்டவர்களும், மருத்துவ உதவி செய்வோர்களும் புருண்டிக்குச் செல்கின்றனர்.

அண்மைக் காலத்தில் 1956 தொடக்கம், இந்த இரு குட்டி நாடுகளில் மாறிமாறிப் படுகொலைகள் நடந்த வண்ணம் இருக்கின்றன. 1994 ஆம் ஆண்டுவரை 4 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இறந்துள்ளனர். 10 வருடங்களில் 3,000 மக்கள் அயர்லாந்தில் இறந்துள்ளனர். இதைப் பெரிது படுத்திய செய்திச் சாதனங்கள் மத்திய ஆபிரிக்காப் படுகொலைகள் பற்றிப் பாராமுகமாக இருந்துள்ளன. ஐநா 2,500 வீரர்கள் கொண்ட அமைதிப்படை ஒன்றைக் கனடா நாட்டுப் பிரிகேடியர் ஜெனரல் தலைமையில் சென்ற வருடம் அனுப்பி வைத்துள்ளது. இப்போதைய படுகொலைகளின் போது அவர்கள் தமது முகாங்களில் பதுங்கி இருந்து விட்டனர். ஐநா பாதுகாப்புச்சபை அமைதிப்படையை ஆயுதப்படையாக மாற்றும் பிரேரணையை நிராகரித்துள்ளது. அமைதிப்படையின் தலைவர் தனது படை ருவாண்டாவில் தங்கியிருப்பதால் யாதொரு பயனும் இல்லையெனத் தெரிவித்துள்ளார். இதற்கிடையில் ருட்சி இனப் போராளிகள் ருவாண்டாவின் தலைநகரை நோக்கி மிக முன்னேறி வருகின்றனர். தலைநகரின் பல பகுதிகளை அவர்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். அவர்கள் இதைக் கைப்பற்றியவுடன் மத்திய ஆபிரிக்கா மண் மீண்டும் சிவப்பு நிறமாக மாறும் என்பதில் ஐயமில்லை.

ஆதாரம்: நியூஸ் வீக், ரைம்.
தொகுப்பு: உலக உலா.

## பிரான்சில் குழந்தைகளின் சாணச்சீலைக்கு வாசனைகள்

சின்னஞ்சிறு குழந்தைகளுக்குப் பாவிக்கத்தக்க சிறுநீரை உறிஞ்சிக் கொண்ட பின்பு கழற்றி எறியும் பஞ்சு வைத்துச் செய்யப்பட்ட சாணைச் சீலைகள் எங்கும் பழக்கத்தில் உள்ளன. பணம் உள்ளவர்களின் பயன்பாட்டுக்காக ஆனால் பிரான்சில் இப்பொழுது அதற்கும் நறுமணம் ஊட்டப்படுவதற்குப் பற்பல மணம் உடைய பன்னீர்க் குப்பிகள் சந்தைக்கு வந்துள்ளன. ஒரு குப்பியின் விலை 10 டொலர் வரை செல்கிறது. அதனால் இனிமேல் பாலகர்களின் அப்பாவும், அம்மாவும் தங்கள் குழந்தைகளின் நனைந்த சாணைச் சீலையை மட்டும் அல்ல, மேலதிகமாகக் காசையும் வீசிவிடப் போகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலுக்குத் தென்னாபிரிக்காவின் ஆயத்தநிலை




" மறக்க முடியாத
வேளை இது.
வாக்காளர்கள்
டிறான்ஸ்கேயில்
வரிசையில்
நிற்கிறார்கள் "

- மண்டேலா

# மறுபிறப்பு எடுக்கும் நாடு

கடும்போக்கிலே தளர்ச்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து தென்னாபிரிக்க மக்கள் தமது நாட்டு வரலாற்றினை எழுத ஆயத்தமாகிறார்கள். காவற் பொறுப்புக் கைமாறுவதன் மூலம் ஆட்சி, பெரும்பான்மையான மக்களின் கைகளுக்கு வருவது, நிலைமாறு காலத்தை உணர்த்துகிறது.

அது புரட்சிச் சதிக்குற்றம். சீவிய காலக் கடூழியச் சிறையும், மேலதிகமாக ஐந்தாண்டுச் சிறையும் அதற்கான தண்டனைகள். 1964 இல் நெல்சன் மண்டேலா, றொபன் தீவிலுள்ள சிறைச்சாலையிலே இக்குற்றத்துக்காக அடைக்கப்பட்டார். இந்தத் தீவு அத்திலாந்திக் சமுத்திரத்தில் கேப்ரவுனை அடுத்துள்ளது. மிகவும் குளிரான சுவாத்திய நிலை கொண்டது. பல ஆண்டுகளாக மண்டேலா சிறைச்சாலையில் சுண்ணக் கற் சுரங்கமொன்றிலே கல்லுடைக்கும் கடூழியத்தில் ஈடுபடுத்தப்பட்டார். அவர் தம்முடைய இளம் மனைவியான வின்னியை அருமையாகவே சந்திக்கலாம். அந்தச் சிறிய நேரச் சந்திப்பில் ஒருவரை ஒருவர் தொடக்கூட அனுமதியில்லை. வாழ்க்கையையே முற்றாக இழந்துவிட்ட ஒருவனின் உணர்ச்சிதான் எனக்கு உண்டாகிறது என்று அவர் தம் மனைவிக்கு எழுதிய கடிதத்திலே குறிப்பிட்டிருந்தார். ஆனால் அவர் தமது நம்பிக்கையை இழந்து சோர்வடைந்துவிடவில்லை. சிறைச்சாலையிலே சட்டம், வரலாறு, பொருளாதாரம் ஆகியவற்றைச் சுலபமாகவே கற்ற மண்டேலா தமது சக கைதிகளுக்கும் கற்பிப்பதிலும் ஈடுபட்டதால் அவரின் சிறைச்சாலை இருந்த தீவு மண்டேலா பல்கலைக்கழகம் என்று அழைக்கப்பட்டது. கடிதங்கள் வாயிலாகவும், இரகசிய சந்திப்புக்களின் வாயிலாகவும் வெள்ளை இன அதிகாரிகளோடு தொடர்பு கொண்ட மண்டேலா கறுப்பர்களும், வெள்ளையர்களும் ஒன்றாக வாழக்கூடிய தென்னாபிரிக்காவை உருவாக்க முடியுமா என்பதை அறிய முயன்றார். 75 வயதான அவரின் கனவு ஏப்ரல் மாதமளவிலேதான் நனவாகிச் செயலுருக் கொள்ளத் தொடங்கியது. இன ஒதுக்காளரிடமிருந்து பெரும்பான்மையினருக்கு ஆட்சி மாறுவதற்கான தேர்தல் முதன் முதலாக இடம்பெற்று வாக்களிப்பு ஆரம்பமான நாளிலே அவர் சொன்னார்: " முன்பு கழிந்து போன நாள்களைப்போன்றதல்ல இன்று மலர்ந்துள்ள நாள். "

மண்டேலாவின் 30 மில்லியன் சக மக்களுக்கு முதன்முதலாக முழுமையான குடியுரிமை பெறுவதற்கமைந்த அந்நாளின் மகிழ்ச்சி கரைகடந்து பெருகியது. அக்காலவரை இரண்டாந்தரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசைகளிலும் ஈடாக நடத்தப்பட்டவர்கள் உரிமை மறுக்கப்பட்டவர்கள் அவர்கள். வெள்ளையருக்குச் சமமாக அவர்களின் அருகருகே நின்றவண்ணம் வரிசையிற் சென்று வாக்களிப்பதென்பது அவர்களைப் பொறுத்தவரை மிகவும் ஆச்சரியமானதோர் அநுபவம்தான். " இன்று நான் முன்னரிலும் இரண்டாம் குலம் உயர்ந்து விட்டேன். வாக்களித்ததன் பின்புதான் இந்த வளர்ச்சி '' என்று கறுத்த இனத்தைச் சேர்ந்த அதிமேற்றிராணியார் மெல்மன்ட் டுட்டு பகிடியாகச் சொன்னார். 48 வயதான செங்கல் அடுக்கும் தொழிலாளி யூலியஸ் மொலாவா, '' காதலில் ஆழ்ந்து போன்ற நிகரில்லாத அநுபவம் இது '' என்றார். பண்ணைத் தொழிலாளிகளான சில பெண்களை வாக்களிப்பதற்கென அழைத்து வந்த அவர் மேலும் சொன்னார்: '' என் வாழ்நாளில் மிகச் சிறந்த நாள் இது என்று எனது இதயம் கூறுகின்றது. நான் எப்பொழுதும் என்னோடு கொண்டு சென்ற அனுமதிச் சீட்டை இனி எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. இந்த நாட்டில் விரும்பிய எந்த இடத்திற்கும் செல்லலாம். நான் சுதந்திரமானவன். வெள்ளை இனத்தைப் பொறுத்த வரையிலும் இது ஒரு புது தினம் தான். மிகவும் குழப்பமடைந்த நிலையில் ஆபிரிக்க வெள்ளையர் ஒருவர், '' எல்லாம் மிக வேகமாக நடக்கின்றன'' என்றார். போவில்லி நகரைச் சேர்ந்த இவர், '' பெரும்பாலான கறுப்பர்கள் வாக்களிக்கக்கூடிய தயார் நிலையில் இல்லை. முழு நாடுமே சிதறிப் பிரியப் போகிறது'' என்றும் கூறினார். ''ஆனால் பெரும்பாலான வெள்ளையர் முணுமுணுத்துக் கொண்டோ இதற்கு மாறான ஏற்பு நிலையிலோ நிகழ்வை வரவேற்கவே செய்கிறார்கள். கறுப்பர்கள் தங்களுக்கு நாங்கள் தேவை என்று உணர்கிறார்கள். எங்களுக்கும் அவர்கள் தேவைப்படுகிறார்கள்'' என்கிறார் முன்னாள் உளவியல் விரிவுரையாளர் கொம்பிறிற் குறோப்னார். டச்சு, பிரஞ்சு, ஜேர்மன் நாட்டிலிருந்து இங்கு வந்து நீண்ட காலமாக வாழ்ந்து தென்னாபிரிக்கராகி விட்டவர்களுக்கு வேறு போக்கிடம் இல்லை என்பதாலும் அவர்கள் இந்த மாறு நிலைக்குத் தங்களைத் தயார்ப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இதே வேளை தென்னாபிரிக்க கறுத்த இனத்தவர்களின் தலைவர்கள் சிலரோ தேர்தலைத் தொடக்கத்திலிருந்தே பகிஷ்கரித்து வந்தார்கள். இவர்களில் முதன்மையானவர் சூலுக்களின் தலைவரான மாங்கோசுது புத்தலேசியாவார். ஆனால் அண்மையில் இவர் தமது பகிஷ்காரத்தைக் கைவிட்டுள்ளார். இதற்கான காரணம் பலருக்கு ஓர் அற்புத நிகழ்வாகவே தோன்றுகின்றது. புத்தலேசியா இது இறைவனின் தலையீட்டினாலேயே நிகழ்ந்ததாக நம்புகிறார். ஆனால் இவரின் திடீர் மனமாற்றத்திற்கான காரணங்களிலொன்று கென்யாவின் மத்தியஸ்தர் ஒருவரின் தந்திரங்கள்; மற்றது அவரின் தமது தலைமைத்துவம் புறக்கணிப்புக்குள்ளாவதை உணர்த்தியிருக்கும். இரண்டிலொன்றாக இருக்கலாம் என்பதே பலரின் நம்பிக்கை.

எது எவ்வாறாயினும் புத்தலேசி தேர்தல் இடம்பெறுவதற்கு ஒரு வாரம் இருக்கையில் தாம் அதைப் பகிஷ்கரிக்கப் போவதில்லை என்று அறிவித்திருக்கிறார். மூன்று மாதங்களாக இடம்பெற்ற இந்தப் பகிஷ்கரிப்பானது இரத்த ஆற்றினை ஓடவிடும் நிலைக்கு வளர்ந்து உள்நாட்டுப்போர் இடம்பெறும் என்ற அச்சுறுத்தலுக்கு இடமளித்தது. பகிஷ்கரிப்பைத் தவிர்த்தமை நாட்டில் மகிழ்ச்சி அலைகள் பொங்கியெழக் காரணமாயிற்று என்பதோடு கையிருப்புச் சந்தையின் முதலீடு நூறு புள்ளிகளுக்கு அதிகரித்தது. டொலர் பெறுமதியோடு தென்னாபிரிக்க நாட்டின் நாணயமான றாண்ட் போட்டியிடுமளவிற்கு வலுவடைந்தது. இந்த அளவிற்கு அறிவித்தல்கள் வானொலி நிலையங்களின் மூலமாக ஒலிபரப்பப்பட்ட வேளையில் மகிழ்ச்சி நிறைந்த சந்தையாளர்கள் அவ்விடங்களில் மொய்த்துக் கொண்டார்கள்.

எதிர்நோக்கும் சவால்களுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலையிலும் தென் ஆபிரிக்காவின் பொருளாதார நிலையில் உற்சாகந் தருவனவாகவே உள்ளன. தென்னாபிரிக்கத் தலைவரான எப்.டபிள்யூ கிளார்க் அவர்களின் சிறுபான்மை அரசே முன்வந்து ஆட்சி அதிகாரத்தைக் கிழமை முடிவில் கையளிக்கவிருப்பது எந்த அரசும் கடைப்பிடிக்காத ஒன்றாகும். மூன்று நாள் நடைபெறவிருக்கும் தேர்தலில் அது செவ்வாயன்று ஆரம்பமாகிறது நாட்டில் 16 மில்லியன் கறுப்பினத்தவர்கள் தமது தலைவர்களைத் தாமே தெரிந்தெடுக்கப் போகிறார்கள். இன ஒதுக்கல் போராட்டத்தில் கிடைக்கவிருக்கும் அதி உச்சவெற்றி இதுவாகும். எதிர்காலத்தில் நடக்கப்போவதைப்பற்றிக்

**தென்னாபிரிக்கா:**

**தலைநகர்**
*பிரிட்டோரியா (நிர்வாகம்)*
*கேட்டரவுன் (அரசு)*
**பரப்பு**
*12, 21, 037 ச. கி மீ*
**மக்கள் தொகை**
*3, 98, 00, 000*
**மொழி**
*ஆபிரிக்க மொழிகள், ஆங்கிலம்*
**எழுத்தறிவு**
*99 வீதம் (வெள்ளையர்)*
*69 வீதம் (ஆசியர்)*
*62 வீதம் (கலப்பினத்தவர்)*
*50 வீதம் (ஆபிரிக்கர்)*
**சமயம்**
*கிறித்தவம்*
**நாணயம்**
*ராண்ட்*
*(ஒரு டொலர் - 3.15 ராண்ட்*
**தனிநபர் வருமானம்**
*2771 டொலர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுப்பினத்தவர் சிலரும் வெள்ளை யினத்தவர் சிலரும் நம்பிக்கையீனத்தோடு வெளிப்படுத்தும் பிழையான கருத்துக்கள் பெரும்பான்மை மக்களை எவ்வகையிலும் பாதிக்கப் போவதில்லை. நெல்சன் மண்டேலாவின் ஆபிரிக்க தேசிய காங்கிரசையே அவர்கள் தெரிந்தெடுக்கப் போகும் உண்மையினை இவர்களின் கருத்துக்களால் மூடி மறைத்துவிடுவது இயலாத காரியம்.

புத்தலேசியின் பகிஷ்கரிப்பு வன்செயல்களுக்கு இடமளித்துத் தேர்தலில் சட்டபூர்வமாக வெற்றியடையப் போகின்றவர்களைப் பாதிப்பதோடு ஜனநாயகத்தையும் முடங்கப்பண்ணி அதைக கருவிலேயே சிதைத்துவிடப் போகிறது என்று மிகைபட எதிர்பார்த்தது உண்மைதான். அரசியல் வன்முறைகள் முடிவு பெறாத போதிலும் அரசியல் விளையாட்டில் ஈடுபட்டுள்ள அனைவரும் ஒரு கூடாரத்துள் ஒன்று கூடியிருப்பது புத்தலேசிக்கு அதிர்ச்சி தந்தாலும், இந்தக் கூட்டிணைப்பே எதிர்காலத்தில் நம்பிக்கை கொள்ளவும் இடமளிக்கின்றது.

வாக்களிப்போர், தேசிய பாராளுமன்ற உறுப்பினர்களாக 400 பேர்களைப் புதியனவாக உருவாக்கப்பட்டுள்ள ஒன்பது மாகாணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கவுள்ளார்கள். கடந்த நவம்பரில் அமைக்கப்பட்ட இடைக்கால யாப்புக்குப் பதிலாக நிரந்தரமான யாப்பு ஒன்றை உருவாக்குவதே இந்த 400 அங்கத்தவர்களுடைய முதன்மையான பணியாக அமையும். புதிய யாப்புக்கிணங்க 1999 வரை பதவி வகிப்பதற்கான ஜனாதிபதி தெரியப்படுவார், மண்டேலாவோடு இரு ஜனாதிபதிகளும் தெரியப்படுவர். இவர்களில் ஒருவராகப் பெரும்பாலும் கிளார்க் இடம் பெறலாம். தேர்தற் களத்தில் குதித்திருக்கும் கட்சிகளின் தொகை 27. இந்தக் கட்சிகளிலே ஆபிரிக்க காங்கிரசிலிருந்து வலது சாரிச் சுதந்திர முன்னணியீறாக உள்ளவற்றில் வலதுசாரி முன்னணிக்குத் தலைமை தாங்குபவர் ஜெனரல் கொன்ஸ்ரான்ட் என்னும் ஆபிரிக்க வெள்ளையர்.

## நச்சுப் பிரச்சாரம்

தேர்தலில் பங்கு கொள்வோரில் மிக அதிகமான ஆச்சரியத்துக் குரியவர் புத்தலேசியே. அவருடைய சொந்த மாகாணமான நேட்டாலில் மார்ச் தொடக்கம் ஏப்ரல் வரை நாளொன்றுக்குப் 10 பேர் படுகொலையாயினர். இந்தத் தசாப்தத்தில் இடம்பெற்ற குருதிச் சண்டையிலே மிகமோசமானது இதுதான். இன்காதா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களான சூலுக்கள், ஆபிரிக்க தேசிய காங்கிரசைச் சேர்ந்த தம் சகோதர சூலுக்களைக் கொன்று குவிக்கத் தூண்டப்பட்ட கொடுஞ் சண்டை தான் இது. சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலை நடத்த முடியாததாய் ஆக்கும் வகையில் இன்காதா வெறியர்கள் வாக்காளர் மீது பயன்படுத்திய வன்முறைப் பலவந்தங்களால் இறந்த அப்பாவி மக்கள் தொகையே மிக அதிகமானதாகும். மார்ச் 28 இல் இன்காதா உறுப்பினர்கள் நடத்திய ஊர்வலத்தின் போது அவர்கள் ஆபிரிக்கத் தேசிய காங்கிரசினருக்கு எதிராக நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 53 பேர் கொல்லப்பட்டனர். இந்த ஊர்வலம் ஜோகனஸ்பேக்கில் இடம்பெற்றது. இரண்டு நாள்களின்பின் கிளார்க் நேட்டாலில் அவசரகால நிலையைப் பிரகடனஞ் செய்ததோடு, 2,500 தென்னாபிரிக்கப் படையினரை அங்கு அனுப்பிவைத்தார். ஆனால் அவர்களால் அங்கு இடம்பெற்ற குருதிச் சண்டைக்கு முடிவு கொண்டுவரமுடியாது போய் விட்டது.

கடந்தமாதம்வரை நல்லதொரு முடிவைத் தேடி அடைவது சிரமமாகவே இருந்தது. இறுதியில் இடைக்கால யாப்பினை அமைத்துக்கொண்ட வேளையில் மண்டேலாவும், கிளார்க்கும் புத்தலேசியைத் தமது வழிக்குக் கொண்டுவர முயன்று கொண்டிருந்தார்கள். ஆனால் புத்தலேசியோ தமது மருமகனான லட்வில் ஸ்வெல்விதினி அரசை ஆட்சியுரிமைக்குக் கொணர்ந்து, சமஷ்டி முறையான ஆட்சி ஒன்றை நேட்டாலுக்குப் பெற்றுத் தன் அதிகாரத்தினை நிலை நிறுத்த எண்ணி அவர்களுடைய அழைப்பினைப் புறக்கணித்தார். தமது அதிகாரப் பரம்பலோடு குவாசுலு நேட்டாலைக் கூடிய தனியாட்சிக்குள் கொணர்வதே அவரின் முதன்மையான இலக்காக இருந்தது. எனினும் ஏப்ரல் 8 இல் கிளார்க்கும் மண்டேலாவும், புத்தலேசியும் ஸ்குடுகசா என்னும் இடத்திலுள்ள குறுகர் தேசியப் பூங்காவில் சந்தித்தனர். ஆனால் எந்த ஒரு முடிவுக்கும் அவர்கள் வராது வெளியேறினர். இவர்களிடையே ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்த ஹென்றி கிசிஸ்கரும், கறிஸ்டன் பிரபுவும் எடுத்த முயற்சிகளும் தோல்வியைத் தழுவின.

கடந்தவார உடன்பாடானது புத்தலேசிக்குச் சில சலுகைகளை வழங்கியுள்ளது. தலைவர்கள் ஸ்வெல்விதினி அரசரின் ஆட்சியுரிமையை யாப்பின் மூலம் அங்கீகரித்துள்ளார்கள். ஆனால் அவரின் தனியாட்சியுரிமைபற்றி யாப்பில் எதுவும் சேர்க்கப்படவில்லை. அவ்வாறிருந்தும் புத்தலேசி கடைசியாகப் பகிஷ்கரிப்பைக் கைவிட்டதன் காரணம் என்ன? மண்டேலா அவருக்கு மந்திரிசபையிலே பிரதானமான இடம் வழங்குவதாக வாக்களித்திருக்கக்கூடும் என்று சிலர் கருதுகின்றனர். துணை ஜனாதிபதியாக வருவதற்குக்கூட வாய்ப்பை அளிப்பதாகக் கூறியிருக்கலாம் என்பது சிலரின் கருத்து. ஆனால் கிளார்க்கும் தென்னாபிரிக்க தேசிய காங்கிரசின் செயலாளர் நாயகமான சிறில் றாமபோசாவும் அத்தகைய இரகசிய உடன்பாடு உண்டு என்பதை மறுத்துள்ளனர். பல கட்சிகள் கூட்டிணைந்து அமைக்கவிருக்கும் அரசில் தாம் சேரப் போவதில்லை என்றார் புத்தலேசி.

இவை யாவிலும் முதன்மையான காரணம் என்று கொள்ளக் கூடியது புத்தலேசி தம் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்வி ஏற்படும் என்பதால் தமது மனதை மாற்றிக் கொண டார் என்பதே. வாக்கெடுப்பில் தங்கள் எதிர்பார்ப்புக்கள் தோல்வியில் முடியும், என்பதையும் புதிய தென்னாபிரிக்காவில் தமது செல்வாக்குப் பறிபோகும் என்பதையும் அவரும், அவரால் போஷிக்கப்படும் குவா சூலுக்களும் உணர்ந்துள்ளார்கள். இதுகால வரையில் இவருடைய ஆதரவின் அடித்தளமாக இருந்தவர்கள். அண்மைக் காலங்களில் இன்காதாத் தலைவர்களும் பகிஷ்கரிப்பை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதை விரும்பிக் கிளர்ச்சி செய்து வந்தார்கள். '' புத்தலேசி தமது அரசியலின் அடித்தளத்தை இழந்துவிட்டார். தமது கட்சி அங்கத்துவத்தையும், அந்தஸ்தையும் கடந்த நாற்பது ஆண்டுகளாகக் காத்து வந்தவர், இன்று அவற்றை இழக்கும் நிலையில் உள்ளார் என்று டேர்பனில் பலகட்சிச் சனநாயக நிறுவனத்தின் பணிப்பாளரான ஜோ மட்டுமா கூறியுள்ளார். அரசியல் வனாந்திரத்திற்கு அவர் நாடுகடத்தப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படக் கூடியவராகி விட்டார். '' ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸ் ஆட்சி நிருவாகமில்லாத நேட்டால் அமைவதைத் தவிர்க்க, முனைகையில் இன்காதா ஆதரவாளர்களான கெரில்லாக்கள் அந்த எண்ணத்துக்குக் குந்தகம் விளைக்கும் வகையில் போர் நடத்தினர்.

புத்தலேசி பகிஷ்கரிப்பைக் கைவிட்டுள்ளதாகப் பிரகடனப்படுத்தினாலும், அவர் அந்த அறிக்கையில் கையெழுத்திட்ட 48 மணித்தியாலங்களில் எட்டுப் பேர் கொல்லப்பட்டுள்ளதாகக் குவாசுலு காவல்துறை அறிவித்திருக்கிறது. ரொகோசா பட்டினத்தில் இன்னமும் இன்காதாக்களுக்கும் ஆபிரிக்க தேசிய காங்கிரசாருக்கு மிடையே போர் கிளர்ந்தெழுந்த வண்ணமேயுள்ளது. இந்நிலை அரசாங்கத்தின் அமைதி பேணும் திறமையின் மீது ஐயத்தையும் கிளப்புவதாயிருக்கிறது.

ரொகோசாவில் சண்டை தொடங்கியதும் அவசரம் அவசரமாகத் திரட்டப்பட்ட தேசிய அமைதிகாக்கும் படையினரும், ஆ, தே, கா இன் ஆயுதம் ஏந்திய பிரிவினரும் தென்னாபிரிக்கப் பாதுகாப்புப் படையிடமிருந்து பிரதேசக் காவற் பொறுப்பினை ஏற்றுக் கொண்டனர். அவர்கள் பெப்ரவரி வரை அங்கு அமைதியைப் பேணும் முயற்சியில் ஈடுபட்டார்கள். இரண்டு நாள்களாக காட்டுத்தனமான துப்பாக்கிச் சூடுகளை நிகழ்த்திய தன் பயனாகச் சூலுவிடுதி வாசிகள் ஒரு டசினுக்கு மேல் கொல்லப்பட்டு இருக்கலாம்.

புத்தலேசி பகிஷ்கரிப்பை நிறுத்திய போதிலும் தென்னாபிரிக்காவின் மேல் ஆதிக்கரான வெள்ளை இனத்தவர் ஆயிரக் கணக்கில் திரண்டு காக்கிச் சட்டைகள் அணிந்தவர்களாய்க் கிளர்ச்சியில் ஈடுபட்டபோது அவர்கள் பாதுகாப்புப் படையினரால் ஒடுக்கப்பட்டார்கள். இன்று ஆட்புழக்கமில்லாத சுதந்திர பொப்சுட்ஸ்த்வானாவின் தலைநகரமான மபதோ, 24 மணித்தியாலமாக ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. அவ்வேளையிலிருந்து மிதவாத வலது சாரிச் சுதந்திர முன்னணியின் தலைவரான ஜெனரல் வியோலன் தீவிரத் தன்மை வாய்ந்த மாறுதல் வேண்டாக் கட்சியுடனும், வேறு சிறு சிறு கட்சிகளுடனும் நேச உறவுக்காக எடுத்துக்கொண்ட முயற்சி பிசுபிசுத்துப் போய் விட்டது. கடந்த வாரம் தீவிர வாதிகள் தேர்தல்களைக் குழப்புவதாக உறுதி மேற்கொண்டுள்ளார்கள். ஒறேஞ் சுதந்திர அரசின் பட்டினமான விலோஜென்ஸ் குறுனில் துப்பாக்கிக் கோபுரங்களை அமைத்துக் கொண்டுள்ள பிரதேச தலைவர்கள், கறுப்பினத்தவர்கள் வாக்களிப்பில் ஈடுபட்டால் அவர்களைக் கொல்வதாகப் பயமுறுத்தினர். ஆனால் நேட்டாலில் இடம்பெற்றுள்ள தேர்தலுக்கான முன் ஆயத்தங்கள் கிளர்ச்சிப் பேரலைகளை அடக்கி விடுவனவாய் உள்ளன. இவ்வளவு தான் மற்றைய கட்சிகள் வாக்குகளைப் பிரித்துக் கொண்டாலும் இன்றுள்ள நிலைமையில் 55 வீத வாக்குகள் ஆபிரிக்க தேசிய காங்கிரசுக்குக் கிடைக்குமென்பது உறுதியாகி விட்டது. ஆட்சியை அமைக்க இந்த வீதாசாரம் போதியதுதான். ஆனால் இது யாப்பினைத் திருத்தி அமைப்பதற்கான பெரும்பான்மையைக் கொண்டதாயில்லை

புத்தலேசி அபாயகரமான கொள்கை எந்த அளவிற்கு அவருடைய சொந்த ஆளுமையின் மூலம் செல்வாக்குடையதாய் விளங்குமென்பது தெளிவாயில்லை. அவருடைய உணர்ச்சி பூர்வமான தனியாட்சியுரிமைக் கோரிக்கைமில்லியன் கணக்கான சூலூக்களின் விசுவாசத்திலேயே இறுகப் பிணைந்துள்ளது. பெருந் தொகையான தமது ஆதரவாளர்களைத் தம் பக்கந் திரட்டி வைத்துள்ளமையைக் கருத்திற் கொண்டால் அவர் புதிய தென்னாபிரிக்காவின் பாரதூரமான சக்தியாய் விளங்குவார் என்பது உண்மைதான். ஆனால் அவரின் பகிஷ்கரிப்பானது அபாயகரமான முறையில் எதிர்பாராத விளைவு ஏற்படுத்தி விட்டது. இதனால் தனது சொந்த ஆதிக்கத்தை உறுதி செய்ய விழையும் கடும் உறுதி வாய்ந்தவரும், தற்பெருமை மிக்கவருமான அவர் நாட்டின் சீரழிவை உருவாக்கித் தமது படிமத்தை உறுதிசெய்ய முற்படலாம். தேர்தலின்பின்பு தமது தனியாட்சிக் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாத பட்சத்தில் அவர் பலாத்காரத்தைக் கைவிட மறுப்பார் என்பது நிச்சயம். '' ஜனநாயகவாதி எவரும் எந்தக் கட்சி வெற்றி அடைகின்றதோ அந்த வெற்றியை அங்கீகரிக்கவே செய்வார். ஆனால் அந்த அங்கீகாரம் போரை நிறுத்திவிடாது. அவர்கள் குறிப்பிட்ட ஒரு பகுதியினர் மீது ஒரு முறைமையை வலுவந்தமாகத் திணிக்க முடியாது '' என்று கூறும் புத்தலேசி இன்று பின்வாங்கியிருக்கலாம். ஆனால் மீண்டும் அந்தச் சிங்கம் கர்ச்சிக்கத் தொடங்கும் என்றே தோன்றுகிறது.

ஜோசுவா ஹமர் எழுதிய கட்டுரையிலிருந்து:

தொகுப்பு: உலக உலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனாவின் நீதித்துறையில் முக்கிய திருப்பங்கள்


# விரல் யுத்தம்

### ஷாஓலின் கோயிலில் வாழ்ந்த துறவி ஹைடென்ங் செய்ததாகச் சொல்லப்படும் குங்.:பூ விளையாட்டுக்கள் உண்மைதானா?

சீனாவில், எண்பதுகளில் ''குங்ஃபூ'' எனப்படும் அந்த நாட்டுப் பாரம்பரியப் போர்ப் பயிற்சியும், வீர விளையாட்டுக்களும் புத்துயிர் பெற்றுள்ளன. ஹூனான் மாகாணத்தின் ஷாஓலின் பௌத்த கோயிலில், இக் கால கட்டத்தில் வாழ்ந்த பௌத்த மதத் துறவி ஹைடென்ங் இந்த மறுமலர்ச்சிக்கு வித்திட்டதாகச் சொல்லப்படுகின்றது. வரலாறு காணாத காலத்தில் குங்ஃபூ, காலத்தே போன்ற தனிநபர் சமர் முறைகள் உன்னத நிலை அடையத் துறவிகளும் உதவியதாக, ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். அடர்ந்த காடுகளில் தவ வாழ்க்கையில் ஈடுபடும் போது, வரும் ஆபத்துக்களைத் தடுப்பதற்காகவே அவர்கள் இக் கலையைப் பயின்றதாகவும், பிறருக்குப் போதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற் குறித்த ஷாஓலின் கோயில் 1,500 வருடங்களாகப் பௌத்த மதத்தின் சென் பிரிவையும், ஷரிஓலின் ரக குங்ஃபூ வையும் பாதுகாத்து வளர்த்த ாகவும் சீன வரலாறு கூறுகின்றது. மேற்குறிதத எண்பதுகளில் சீன அரசும் இராணுவமும், தாம் அந்நிய நாடுகளாற் சுற்றி வளைக்கப்பட்டு, ஆபத்தை நோக்குவதாக எண்ணின இதைத் தடுக்க, மக்கள் அனைவரும் குங்ஃபூ பயிற்சி எடுக்க வேண்டுமென்று இவர்கள் தீர்மானித்தார்கள். இச் சமயத்தில், தனது சீடர்களுக்கு இப் பயிற்சியை வழங்கி வந்த துறவி ஹைடென்ங், எல்லோரது கவனத்தையும் ஈர்ந்துள்ளார். இவரை, தற்காலச் சீனாவின் மிகப் பிரபலமான குங்ஃபூ குரு என வர்ணிப்பது மிகையாகாது.

இரண்டு கைவிரல்களில் தலை கீழாக நிற்கும் இவருடைய சாதனை, நாடளாவிய ரீதியிற் பெரும் புகழ் பெற்றதாகும். 1979 ஆம் ஆண்டு, சீன மொழிச் சஞ்சிகை ஒன்று இவருடைய இந்த



1979 இல் வெளிவந்த சஞ்சிகையில், துறவி இரண்டு விரல்களில் தலைகீழாக நிற்கும் நிலையிற் புகைப்படம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நிலையைப் படம் பிடித்து அட்டைப் படமாகப் பிரசுரித்துள்ளது. இதே வருடம், இவருடைய சாதனைகள் ஆவண ரீதியான திரைப் படமாகவும் எடுக்கப்பட்டுள்ளது. இவர் தனது இரண்டு விரல் நிலையை 1960 ஆம் ஆண்டு தொடக்கம் செய்துவருவதாக, இவருடைய சீடர்கள் தெரிவிக்கின்றனர். சில சீடர்களின் அபிப்பிராயத்தில், இவர் ''குயிகொங்'' எனப்படும் மூச்சுப் பயிற்சி செய்வதால் உணவும் நீரும் இல்லாமல் வாழும் வல்லமை பெற்றவராகவும் சொலலப்படுகின்றது.

இத்தகைய பேரும் புகழும், இவருக்கு அரசியல் அரங்கிலும் இடம் பிடித்துக் கொடுத்துள்ளது. சீன மக்கள் அரசியற் கலந்துரையாடற் கழகத்திலும், சீன பௌத்த சங்கத்திலும் இவர் முக்கிய உறுப்பினராகக் கணிக்கப்படுகின்றார். இவருடைய பிரதம சீடனராஃபான் யின்கிலியான், சீன இராணுவத்திற்கு குங்ஃபூ போர்க்கலைப் பயிற்சியாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். இவை யாவும், சீன நாட்டில் அன்று பரவிய ஹைடென்ங் காய்ச்சலின் வெளிப்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாண்டுபோன பௌத்த மதத்துறவி தோற்றுவித்த போர்க் கலைகள் நீதிமன்றத்தில் வாதப்பிரதி வாதங்களுக்கு உள்ளாகியுள்ளன.

என்று, இப்போது தெரிய வருகின்றது. 1989 ஆம் ஆண்டளவில் இத்துறவி புற்றுநோயின் காரணமாக நன்றாக வயது போன காலத்தில் இறந்துள்ளார். இவருடைய மரணம், அவ் வருடத்தின் பரபரப்பான உள் நாட்டுச் செய்திகளில் ஒன்றாகும்.

இத்துறவியின் புகழை ஆரம்பக் காலத்தில் பத்திரிகை வாயிலாகப் பரப்புவதிற் பெரும் பங்கு எடுத்தவர், ''சிச்சுவான் டெய்லி பத்திரிகையாளர் ஜிங்யொங்சியாங் என்பவர் என்று ஒத்துக் கொள்ளப்பட்டுள்ளது. கட்டுரைகள், புகைப் படங்கள் போன்றவை மூலமாக, இவர் வாசகர்களுக்கு இத்துறவியை அறிமுகஞ் செய்து வைத்துள்ளார். ஆனால், சில காலத்தின் பின், இத்துறவியைப் பற்றிய உயர்ந்த கணிப்பை இவர் மாற்றிக் கொள்ள நேர்ந்துள்ளமை, மிகவும் முக்கியமான விடயமாகும்.

சீனப் பத்திரிகைகள் பற்றியதொரு சிறு குறிப்புத் தரவேண்டியது, இவ் விடத்தில் மிகவும் அவசியம். இந்த நாட்டுப் பத்திரிகைகள் இருவகைப்படும். உயர் அரசபதவி வகிப்போர் படிப்பதற்கெனப் பிரசுரமாகும் பத்திரிகைகளும், பெருந் தொகையிற் பிரசுரமாகிப் பொதுமக்களாற் படிக்கப்படும் தினசரிகளும் என்று நாம் இனங் காணலாம். உயர் குழாம் படிக்கும் பத்திரிகை, கீழ் மட்டத்தினருக்குக் கிடைக்கும் வாய்ப்பு இல்லை. இவை இரகசியமானவை; அரசின் உள் நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகள் வகுப்பதற்கு உதவுபவை. மக்கள் பத்திரிகைகள், தணிக்கைச் சட்டத்திற்கு உட்பட்டவை. அரசின் கொள்கைகளுக்கு முரணான செய்திகள் அச்சேறுவதற்கு, பெரும்பாலும் சந்தர்ப்பம் கிடையாது.

1988 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், மேற் குறித்த பத்திரிகையாளர் ஜிங் யொங் சியாங், தான் போற்றிப் புகழ்ந்த துறவியின் நேர்மையைச் சந்தேகிக்கத் தொடங்கியுள்ளார். இதன் காரணமாக, இவருடைய ''இரண்டு விரல் வித்தை'' ஓர் அப்பட்டமான ஏமாற்று என்று, ஆட்சியாளரின் பத்திரிகைக்குக் கடிதம் மூலம் தகவல் கொடுத்துள்ளார். இக் கடிதம் அப்பத்திரிகையிற் பிரசுரமாகியுள்ளது. மேல்மட்டத்திற்குரிய பத்திரிகையில் வந்த செய்தி, ஹூனான் மாகாணத்தில் மிக அதிகமாக விற்பனையாகும் தினசரி ஒன்றிற்கு எப்படியோ எட்டியுள்ளது. அப் பத்திரிகையும், உடனடியாக'' மாஸ்ரர் ஹைடென்ங் ஒரு பெரிய ஏமாற்றுக்காரன்'' என்ற கொட்டை எழுத்துத் தலையங்கத்துடன், பரபரப்பான செய்தியாக வெளியிட்டுள்ளது.

இதைப் படித்த ஹைடென்ங்கின் சிஷ்ய கோடிகள் கடுஞ்சினங் கொண்டனர். பத்திரிகையாளர் ஜிங் யொங்சி யாங்கிற்குப் பல கொலை மிரட்டல்கள் விடப்பட்டன. பத்திரிகையாளர் தாக்கப்படுவார் என்று பலரின் எதிர்ப்பு ஏமாற்றத்தில் முடிந்தது. அவரை நையப் புடைப்பதற்குப் பதிலாக, துறவியின் பிரதம சீடன் ஃபான் யின் கிலியான் நீதிமன்றத்தில் மானநட்ட வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார். சீனாவின் சிவில் சட்டம் ஆரம்ப நிலையில் உள்ளது, மேற்கோள் காட்ட, பழைய தீர்ப்புக்களோ, இத்தகைய வழக்குகளை நடத்திய அநுபவமோ இங்கு இல்லை. வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட அதிசயத்தைவிட, இன்னுமொன்று உண்டு. யாருடைய மானம் பறிபோய்விட்டதென்று கூறப்பட்டதோ, அவர் இவ் வழக்குக் கொடுக்குமுன்பே இறந்து விட்டார். அத்துடன் சட்டப்படி, தாக்கி எழுதப்பட்ட இரகசியக் கடிதம் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகையைப் படிக்க அவரால் முடியாது. ஏனென்றால் அவர் அதி உயர் அரசக் குழாத்தைச் சேர்ந்தவரல்லர். சீனாவின் தற்கால வரலாற்றில், பத்திரிகைகள் சம்பந்தமான வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டமை இதுவே முதல் தடவை. அதுவும், ஆட்சிக்குப் பொறுப்பானவர்கள் மாத்திரம் படிக்கும் பத்திரிகையில் வந்த செய்தி நீதிமன்றம் வரை வந்துள்ளமை பெரும் அதிசயமே.

ஆட்சியாளர்கள் வழக்கைத் தடுத்திருக்கலாம். அவர்களுக்கு அதிகாரம் உண்டு. நீதிமன்றத்திற்கு வழக்கை விசாரிக்க உரித்தை விட்டுக் கொடுத்தமை மர்மமாகவே உள்ளது. சீனாவில் நீதிமன்றங்களில் நிலை உயருகின்றதா? மேற்கு நாடுகள் போன்று, இங்கு நீதித்துறை தனித்துவத்தைப் பேண முடிகிறதா? போன்ற கேள்விகள் கேட்க இடமுண்டு. ஜிங்யொங் சியாங்கின் கடிதத்திற் காணப்பட்டவை உண்மைக்குப் புறம்பானவை; ஆதாரமற்றவை என்பதே, வழக்காளியின் வாதம். ஹைடென்ங்கும், அவருடைய பிரதம சீடர்களும், தாம் பெரும் வித்தைக்காரர்கள் என்று காரணங் காட்டிப் பணமோசடி செய்துள்ளனர். இரண்டு விரல் நிலை உண்மையல்ல; இதை நடுநிலையாளர் ஒருவரும் ஏற்கவில்லை. ஃபான்யிங்கிலியான் இராணுவத்திற்குப் பயிற்சி கொடுக்கவில்லை. இவ்வாறான தகவல்கள் அக்கடிதத்திற் காணப்படுகின்றன. இவை பொய்யானபடியால், வழக்காளி வேதனைப்பட்டுள்ளார். இதற்குப் பரிகாரமாக, நீதிமன்றம் எதிரி ஜிங் யொங்சியாங்கிடமிருந்து நட்டப் பணம் வாங்கித் தரல் வேண்டும். இதுவே வழக்கின் சாரம். பத்திரிகையாளர் ஜிங்யொங்சியாங் தனது பதிவில், மேல்மட்டத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரிய பத்திரிகைச் செய்தியை அடிப்படையாகக் கொண்டு வழக்குத் தாக்கல் செய்வது, நாட்டின் பாதுகாப்புச் சட்டத்தை மீறுவதாகும் என்று கூறி வழக்கைத் தள்ளிவைக்க வேண்டுமென வேண்டியுள்ளார்.

ஆனால், இரண்டுவருடக் கால தாமதத்தின் பின், சிச்சுவான் மாகாணத் தலைநகர் சென்டூ நீதிமன்றத்தில் வழக்கு, விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது. பத்திரிகையாளர் ஜிங்யொங்சியாங், துறவி செய்த இரண்டு விரல்கள் தலைகீழ் நிலை, ஓர் ஏமாற்று வித்தை என்று காட்டும் படங்களைச் சமர்ப்பித்தார். இரண்டு கால்களிலும் கயிறு கட்டப்பட்டு, மேலே தொடுக்கப்பட்டுள்ளன என்று அவர் நிரூபித்தார். வழக்காளி இதை ஒப்புக்கொண்டு, மேற்படி படங்கள் துறவியின் எழுபதாவது வயதில் எடுக்கப்பட்டதென்றும், அவர் விழுந்துவிடாமல் இருக்கவே கயிறு கொடுக்கப்பட்டது என்றும் கூறினார். கிழவயதுக்கு முன்பெல்லாம், தனது குரு கயின்றி உதவியின்றி, இரண்டுவிரல்களிலே நிற்கும் வழக்கம் உள்ளவர் என்றும் கூறினார். இதற்கு அவர் தகுந்த ஆதாரங்களைச் சமர்ப்பிக்கவில்லை. மேலும் பல சாட்சியங்களை, இரு பகுதியினரும், நீதிமன்றத்தில் நெறிப்படுத்தினர். வழக்கறிஞர்களும், தமது கட்சிக்காரர் சார்பில் நெடிய உரைகள் நிகழ்த்தினர்.

1993 ஆம் ஆண்டு மே மாதம் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. பத்திரிகையாளர் 460 அமெரிக்கன் டொலருக்குச் சமமான சீனப் பணத்தை வழக்காளிக்குக் கொடுக்க வேண்டுமென்றும், பத்திரிகையாளர் தனது தவறுக்கு வருந்தி, பத்திரிகைகள் மூலமாக மன்னிப் கோரவேண்டும் என்பதே தீர்ப்பு. இதன் அடிப்படை என்னவென்றால், ஏதோ ஒரு காலத்தில் இந்தத் துறவி கயிறின் உதவி இன்றி, தலை கீழாக நின்றிருக்கிறார் என்பதே. மேற்குலகச் சட்ட வல்லுநர்கள், இந்த வழக்கை ஒரு மைற்கல் என்று வர்ணிக்கின்றனர் நீதிபதியின் தீர்ப்பின் நியாயத்திற்காக அல்ல; இந்த வழக்கு, விசாரணைக்கு எடுக்கப்பட்டு விட்டதே என்ற ஒரு காரணத்திற்காக.

''(F) பார் ஈஸ்ரேன் எக்கொனோமிக் றிவியூ,'' பெப்ரவரி, 10, 1994.

## தரையிறங்கும் விமானங்களுக்கு செய்மதி உதவி

மூடுபனி நிறைந்த பனித்திரை அற்ற நேரங்களில் விமானங்களைத் தரையிறக்குவதற்கு விமான மோட்டிகளுக்கு இதுவரை காலமும் றாடரும், தரைக் கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்து கிடைக்கும் உத்தரவுகளுமே உதவி வந்துள்ளன. இன்னும் சில வருடங்களில் செய்மதியும், அதனுடன் தொடர்புடைய இறங்குதுறைக் கருவிகளுமே இதைச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அமெரிக்கா பூமியைச் சுற்றிவரும் மதி ஒன்றை ஏவியுள்ளது. புவியிலுள்ள நிலைகளைத் துல்லியமாகக் காட்டுவதே இந்தச் செய்மதியின்பிரதான கடமை. விமான இறங்குதுறையில் அமைக்கப்பட்டிருக்கும் செய்கருவிகளும், இந்தச் செய்மதியும் ஒன்றிணைந்து செயலாற்றும்போது விமானங்கள் மிகவும் பாதுகாப்பாக இறங்கவும் ஏறவும்முடியும். தற்போதைய ஒழுங்குகளின்படி இது இயலாத காரியம். சில அடிகளாற் குறி பிசகக்கூடும் என்று பொறியியலாளர்கள் வரப்போகும் ஒழுங்குகளை வியந்து பாராட்டியுள்ளனர்.

## பின்தொடரும் குளிர்சாதனம்

விடுதிகளிலும், அலுவலகங்களிலும் பொருத்தப்பட்டிருக்கும் 'ஏ. சி' எனப்படும் குளிரூட்டிகள் மற்சுஷிற்ரா நஷனல் கொம்பனியால் மிகவும் முற்போக்கான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த ஏ. சிக் கருவியிற் பொருத்தப்பட்டிருக்கும் கணனி தனது சுற்றாடலில் மனிதர்கள் எங்கிருக்கிறார்கள்? என்பதைக் கணக்கெடுத்து அந்த மனிதர்களிற் படக்கூடியவாறு குளிர்காற்றை அனுப்பும் வல்லமை உடையதென்று அறிவிக்கப்பட்டுள்ளது. பொருத்தப்பட்டிருக்கும் அறையின் சீதோஷ்ண நிலையையும், அறையின் சுவர்களின் நிலையையும் அது தனது கணிப்பில் வைத்திருக்குமென்றும் அறிவுறுத்தப்படுகின்றது. இது ஒரு ஜப்பானியத் தயாரிப்பு. இப்போது இது ஜப்பானில் மாத்திரம் சந்தைப் படுத்தப் படுகின்றது.

என்னதான் சொன்னாலும் வேப்பமர நிழலில் உள்ள சுகம் குளிர்மை இதில் வருமோ என்று அப்பு கேட்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்த மத குருமாரின் மதன காம லீலைகள்

தாய்லாந்தில் புத்த மதம் நன்கு வேரூன்றியுள்ளது என்றாலும் சில மத குருமாரின் துர்நடத்தையால் மக்களின் விசுவாசம் ஆட்டங் காண ஆரம்பித்துள்ளது. சென்ற மார்ச் மாதம் இந்த நாட்டின் அதி உயர் நீதிமன்றம் 70 வயதினரான புத்த மதப் பீடாதிபதி மஞ்சள் உடை அணியத் தகுதியற்றவர் எனத் தீர்மானித்துள்ளது. இந்த நபர் ஒரு பெண்ணுடன் தகாத உறவு வைத்திருந்தமையும் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது. அத்துடன் அவர் பொய் வாக்குமூலம் அளித்துள்ளதாக நீதிமன்றம் ஐயந்திரிபற நம்பியதுடன் மூன்று வருடச் சிறைத் தண்டனையும் அவருக்கு வழங்கியுள்ளது. மேற்கூறியது தனிப்பட்ட ஒரு நிகழ்ச்சியல்ல.

தாய்லாந்தின் புகழ்பூத்த மிகவும் மதிப்புக்குரிய காலஞ்சென்ற புத்ததாச பிக்குவின் இரு சீடர்கள் பிறா யந்திரா அம்மா றோ பிக்குவும், பிறா பயோம் பிக்குவும் பகிரங்கமாக மோதிக் கொள்ள ஆரம்பித்த நாட் தொட்டு இந்த மதம் சிரிப்புக்கிடமாகியுள்ளது. பிறா யந்திரா என்று சுருக்கமாக அழைக்கப்படும் இவருக்கு வயது 43. மதத்திற்குத் தன்னை அர்ப்பணிக்க முன்பு இவர் உல்லாசப் பயணிகளின் வழிகாட்டியாகக் கடமையாற்றியுள்ளார். இத்தொடர்பால் பின்பு மதத்தின் பேரால் உலகின் பல பாகங்களுக்கும் பிரயாணஞ் செய்துள்ளார். இவர் ஒரு நவீன உலக மத போதகர். வானொலியையும், தொலைக்காட்சியையும் மதப் பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்தத் தயங்காதவர். வங்கிக் கணக்குகள், கடன் வசதிகள் போன்றவற்றையெல்லாம் தாராளமாகப் பயன்படுத்துபவர். தனது கவிதைகள் அடங்கிய எழுத்துத் தொகுதியை அண்மையில் வெளியிட்டுள்ளார். இதில் பெரும் புத்த இலக்கியப் படைப்பாளி ரவி பவிலாயி என்பவரின் கவிதைகள் சிலவற்றை உண்மைக்குப் புறம்பாகத் தன்னுடையவை என்று உரிமை கொண்டாடுகிறார்.

என்று கூறி வருகின்றார். இவர் ஒரு பொப் இசைப் பிரியர் என்பது இவரைப் பற்றிய அதிசயமான செய்தி. அத்துடன் மேடையில் பொப் இசைப் பாடகராகவும் இவர் தோன்றியுள்ளார். இவர் தனது போதனைகளில் சீரிய வாழ்க்கைக்கும், நன்னடத்தைக்கும் முதல் இடங்கொடுத்துப் பேசுகின்றார். ஆனால் பிறா யந்திராவோ முத்திக்கு வழி வெறுமை என்று தனக்கே உரிய பாணியிற் பேசி வருகின்றார். இதன் விளக்கத்தை அவர் இது வரையும் வெளியிடவில்லை.

இவர்களுடைய மோதல்கள் இப்போது உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. நாடளாவிய ரீதியில் மேலிருந்து கீழ்வரை இருவருக்கும் நிறைய விசிறிகள் உண்டு. ஒருவருடைய ஆதரவாளர்களை மற்றவர் கவர்வதில் இப்போது இருவரும் குறியாக உள்ளனர். பிறா யந்திராவின் ஆதரவாளர்கள் எல்லோரும் என்னிடம் வந்துவிட்டார்கள் என்று பிறா பயோம் தெரிவித்துள்ளார். என்னுடன் தொடர்பு கொள்பவர்களெல்லாரும் நல்வாழ்வையே மிகவும் விரும்புகிறார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். பிறா யந்திரா பிக்குவைத் தரந் தாழ்த்



தனது பெண் ஆதரவாளர்களுடன் பிறா யந்திரா பிக்கு

மறுபக்கத்தில் 45 வயதினரான பிறா பயோம் பிக்கு ஒரு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். தாய்லாந்து எல்லைக்கப்பாற் பிரயாணஞ் செய்து அறியாதவர். பிறா யந்திரா தனக்கு அமானுஷ்ய சக்திகள் உண்டு என்று காட்டிக்கொள்பவர். ஆனால் பிறாபயோம் பிக்கு, தனது ஏழைப் பின்னணியை வலியுறுத்தித் தான் ஒரு சாதாரணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும் முயற்சியாகவே அவர் இவ்வாறு கூறி வருகின்றார்.

புத்த பிக்குகள் ஆண்-பெண் உடலுறவைத் தவிர்க்கவேண்டுமென்பது இம் மதத்தின் அடிப்படை விதி. இதை மீறியதாக இரு பிக்குகளும் ஒருவரை ஒருவர் பகிரங்கமாகக் குற்றஞ் சுமத்த ஆரம்பித்துள்ளனர். காமரசம் சொட்டும் பேச்சுக்களில் பிறா யந்திராவும் ஒரு பெண்ணும் ஈடுபட்டிருக்கும்போது பதிவு செய்யப்பட்ட ஒலிப்பதிவு நாடாவொன்று தனக்குக் கிடைத்துள்ளதாகப் பிறா பயோம் கூறுகின்றார். அதே போல் தன்னிடமும் பிறா பயோம் சம்பந்தமான நாடாவொன்று இருப்பதாகப் பிறா யந்திராவும் பதில் தாக்குதல் நடத்தி உள்ளார். பிறா யந்திரா சொல்கிறார்:- "நான் அவருக்காக இரக்கப்படுகிறேன். கொஞ்சம் அறிவு உள்ளவர்கள் உண்மை, பொய்யை அறிந்து கொள்ளலாம்." தனது பங்கிற்குப் பிறா பயோம் பின்வரும் பத்திரிகைச் செய்தியை விடுத்துள்ளார்:- தான் பகிரங்கப் படுத்தியுள்ள நாடாவைப் பற்றி மேலும் தகவல் தருவோருக்குத் தான் 4,000 டொலர் தருவதாகவும், தான் பிறா யந்திரா பற்றி நடத்தவிருக்கும் புலனாய்வுக்கு உதவுவோருக்கு மோட்சம் கிடைக்கும் என்பதுமே அச் செய்தி.

இது பிறா யந்திரா ஆதரவாளர்களுக்குக் கோபாவேச மூட்டியுள்ளது. பிறா யந்திராவின் பக்த கோடிகள் பெரும்பாலும் பெண்களே. முன்னாள் தாய்லாந்துப் பிரதமர் சூவன் கவானி மனைவி தொடக்கம கல்லூரி மாணவிகள் கிராமப்புறத்து விவசாயப் பெண்கள் வரை பல்லாயிரக் கணக்கான பெண்கள் இவரைப் பூசிக்கின்றனர். பிறா பயோம் பிக்கு தங்கியிருக்கும் புத்த கோவிலைத் தாக்கி அழிக்கப் போவதாகவும், தீயிடப் போவதாகவும் இவர்கள் பகிரங்க அறிவித்தல் கொடுத்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க கம்போடியா நாட்டுப் புத்த பிக்குணி, டென்மார்க் நாட்டு மேடைப் பாடகி, ஜேர்மன் நாட்டு மனையியற் பட்டதாரி ஆகிய மூவர் தாம் பிறா யந்திராவுடன் உடலுறவில் ஈடுபட்டதாகச் சாட்சியங் கூற முன்வந்துள்ளனர். கைவித்தா மொன்சின்டா என்கின்ற (வயது 88) மூன்று பிள்ளைகளின் தாய், தற்போது புத்த பிக்குணி. பிறா யந்திராவும், தானும் உல்லாசக் கப்பலொன்றின் மேல் தட்டில் கட்டிப் புரண்டதாகச் சொல்கிறார். இவர் தாய்லாந்தின் புத்தசங்க முதல்வருக்கு இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார். "இவள் புத்தி சுவாதீனம் அற்றவள்; நேராக நகரம் போவாள்" என்கிறார் பிறா யந்கிரா. புத்த சங்க முதல்வர் நடத்தவிருக்கும் விசாரணையைத் தடுக்கு முகமாக 1,000-இற்கு மேற்பட்ட தாய்லாந்துப் பெண்கள் இவர் தங்கியிருக்கும் புத்த கோயிலுக்கு அணிவகுத்துச் சென்றுள்ளனர். முதல்வர் என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறார் என்று தெரியவில்லை.

டென்மார்க் நாட்டுப் பாடகி பிறா யந்திரா மதப் பிரச்சாரத்திற்காக ஐரோப்பா வந்திருந்தபோது தன்னுடன் கிரமமாக உடலுறவு வைத்திருந்ததாகச் சொல்கிறார். அடுத்த ஜேர்மன் பெண் சொல்லுவதோ வித்தியாசமான கதை. பிறா யந்திரா தன்னைப் பல தடவை மதபோதனைக்கு என்று அழைத்துப் பலாத்காரம் செய்ததாகவும் இப்படி மூன்று நான்கு தடவை நடந்துவிட்டதாகவும் அவர் சொல்கிறார். இறுதியாக யூகோஸ்சிலாவியாவிற் பிறந்த தாய்லாந்துச் சிறுமி ஒருத்திதான் பிறா யந்திராவின் மகள் என்று கூறுகின்றாள். இதற்கும் மேற்கூறிய சகல குற்றச்சாட்டுகளுக்கும் பிறா யந்திரா மறுப்புக் கூறியுள்ளார். மேற்கூறிய சிறுமியின் குற்றச்சாட்டை மறுத்த அவர் தான் இரத்தப் பரிசோதனைக்கு உட்படவும் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

புத்த மதத்தின் கோட்பாடுகளிற் பெரும் நம்பிக்கை வைத்திருக்கும் தாய்லாந்து நாட்டுப் புத்த ஜீவிகள் மனமுடைந்து போயுள்ளனர். இந்தக் கெட்ட மனிதர்கள் மோதிக்கொள்ளுவதால் மதமல்லவா நட்டமடைகிறது என்று அவர்கள் பிரலாபிக்கின்றனர்.

"ஏசியா வீக்" ஏப்ரல், 06, 1994.

## இளைப்பாற்றுநாள் நீடிப்பு

*இந்தோனேசியாவில், இவ்வாண்டு ஜூன் மாதத்திற் கட்டாய இளைப்பாற்று வயதான 55 ஐ அடையும் இராணுவத் தளபதி ஜெனரல் பைசல் டன்ஜுங்கின் பதவிக்காலம் இன்னும் இரண்டு வருடங்களால் நீடிக்கப்பட உள்ளதாம். அதனால், ஜனாதிபதி சுகார்ரோவின் மைத்துனனான ஜெனரல் விஸ்மோயோ அறிஸ் முனான்டருக்கும், இராணுவத் தளபதியாகும் வாய்ப்பு, கடைசியிற் கிடைக்க இடம் ஏற்படுமாம். தற்பொழுது இராணுவப் பிரதம உத்தியோகத்தராக இருக்கும் அவர், 1995 பெப்ரவரியில் 55 வயதை அடைய உள்ளார் என்பதால், அவருக்கும் 55 வயது இளைப்பாற்றில் இருந்து விடுபட இடங்கிடைக்கும் என்று கூறப்படுகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தித்திக்கும் தேன்பாகு
ஆமாம் — சொல்லிலடங்கா எத்தனை இன்பம்"

# கல்யாணி கிறீம் ஹவுஸ்

- ★ குளிர் களி
- ★ அன்னாசிப் பானம்
- ★ திராட்சைப் பானம்
- ★ குளிர் சர்பத்
- ★ விசேட குளிர் களி

சிற்றுண்டி வகைகள், தேர்ந்தெடுக்கப்பட்ட கனிகளிலிருந்து
தயாராகின்றன

# கல்யாணியின் பானங்கள்

வெயிலுக்கு நிழல்
தாகத்திற்கு

கல்யாணியின்
குளிர் பானங்கள்



# கல்யாணி கிறீம் ஹவுஸ்

இல. 73, சந்தோசம் சாலை - யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் நலம் காப்போம்

நிறைவாக வாழ்வோம்!

## "சம்பந்தர் மெடிக்கல் கிளினிக்"

நீரிழிவு, மனநோய், இரத்த
அழுத்தம், சருமநோய்,
ஆஸ்துமா,
மற்றும் தீராத நோய்கள்
எதுவானலும் சரி.



சகலவிதமான
வைத்திய
ஆலோசனைகளுக்கும்
சிகிச்சைகளுக்கும்

## 'சம்பந்தர் மெடிக்கல் கிளினிக்'

22, இராமையா செட்டியார் ஒழுங்கை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கடல்களில் மீன்வளம் அருகுகின்றது

— எழுதியவர் —
மைக்கல் டீ லெமோனிக்

தற்பொழுது 52 வயதினரான எறிக் நே(ர்)ஸ் என்பவர், நியூபவுண்ட்லாண்டின் சம்பனிஸ் ஈஸ்ற் துறைமுகத்திலிருந்து முதன்முதலாக மீன் பிடிக்கச் சென்ற பொழுது, அங்கே அகப்பட்ட சுறா மீன்கள் தொகையைப் பார்த்துப் பிரமித்து, என்றென்றும் முடிவில்லாமல் அங்கே மீன்பிடிக்கக் கிடைக்குமென்று நினைத்தார். உலகில் மிக அதிகமான மீன்கள் விளைந்த வட அற்லாண்ரிக் கடலில், கிறான்ட் பாங்க்ஸ் பகுதியில் அவருடைய தந்தையும், அதற்கு முன்பு பாட்டனாருங்கூட, அப்படித்தான் அந்தக் குளிர்கூடிய, தாக்குப்பிடித்து நிற்கமுடியாத கடற்பிரதேசத்திற்கு ஆண்டாண்டுகாலமாகச் சென்று மீன் அள்ளி வந்தார்கள்.

ஆனால், இன்றோ நிலைமை வேறாகிவிட்டது. ஐந்து நூற்றாண்டுகளாக இடையறாவண்ணம் மீன் அள்ளிக்கொடுத்த கடலில், திடீரெனச் சுறா மீன்களின் செரிவு சரியத் தொடங்கி, கடந்த சில ஆண்டுகளில் 95 வீத அளவுக்குக் குறைந்துவிட்டது.

அந்தப் பேரழிவிலிருந்து பரிகாரம்பெற, கனேடிய அரசு கடும் நடவடிக்கையாக, இந்த நூற்றாண்டின் முடிவுவரை அந்தக் கடற்பகுதியிற் சுறாமீன் பிடிப்பதைத் தடைசெய்துள்ளது. அதன் உடனடியும், நேரடியுமான விளைவாக, 27,000 மீனவர்கள் தொழிலிழக்க நேரிட்டது.



**கடல் அள்ளித்தந்த மீன் வளத்தை கவனமின்றி அதிக அளவில் நுகர்ந்த உலகம், மீண்டும் அந்த அளவுக்கு மீன் வளத்தைப் பெறமுடியாத நிலையில் இன்று தவிக்கின்றது.**

மீண்டும், அவர்கள் மீன்பிடித் தொழில் செய்து, வாழ்வில் வளங்கொழிக்கச் சந்தர்ப்பம் வருமா? இந்தக் கேள்வி, உலகெங்கும் பல கடல்களிலும் மீன்பிடித்து வாழ்வோர்களுக்கிடையே தற்சமயம் எழத் தொடங்கியுள்ளது.

தற்கால நவீனரக மீன்பிடிப் படகுக் கூட்டங்களின் திறமையால், அனைவரும் வெகுவாக விரும்பி உண்ணும் கடல் உணவு வகைகளைக் கடலிலிருந்து பிடித்தெடுப்பது வரவரக் குறைந்து கொண்டு போகிறது.

அமெரிக்காவில் மிக நெடுங்காலமாகப் பெரும்பகுதி மீன்கள் பிடிபட்ட கேப்கொட் முனைப் பகுதிக் கடலில் சுறா, பாற்சுறா, பாரை போன்ற மீன்களின் தொகை குறைந்துபோய் உள்ளதால், அங்கு மீன் பிடிக்கப் போவது கட்டுப்படியாகாததாகிக் கொண்டு வருகிறது.

1975 இன் பின்பு, இனவிருத்தி செய்யும் பருவமுடைய சூரன் மீன்களின் அளவு அற்லாண்ரிக் கடற்பகுதிகளில் 90 வீதமாகக் குறைந்துள்ளது. பஸ்பிக் மா கடற் பகுதியிலும், மீன்கள் குறைவாகவே பிடிபடுகின்றன. நியூஸிலாந்தை அண்மித்த கடல்களிற் கிடைத்த செங்கண்ணிப் பாரையும், செம்மீன் போன்றவையும், கருபியன் கடலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவாகக் கிடைத்த செம்மீனும் அமெரிக்க வடமேற்குக் கரைகளில் அநேகமாகக் காணப்பட்ட கிரீ மீனும், அற்லாண்ரிக்கில் செறிந்திருந்த கடல் முரல், தளப்பத்து போன்றவைகளும் வெகுவாகக் குறைந்து விட்டன.

ஐ. நா. வின் உலக உணவு விவசாய அமைப்பின் ஆய்வு அறிக்கை ஒன்றின்படி, உலகின் 17 மாபெரும் மீன்வளம் நிறைந்த கடல்களில், 13 இல் மீன் வளம் குன்றிய ஆபத்து நிலையில் உள்ளதாம். 1989 இல் உச்ச அளவாக 86 மில்லியன் மெற்றிக் தொன்னாக இருந்த வருடாந்தக் கடல் மீன் பிடியளவு, 1992 இல் குறைவுற்று 82.5 மில்லியன் மெற்றிக் தொன்னாக உள்ளது. அதன் காரணமாக, 100 நாடுகளின் பிரதிநிதிகள் நியூயோர்க்கில் ஐ. நா. தலைமையகத்தில் ஒரு கூட்டத்தொடரில், இரண்டாவது கூட்டத்திற் பங்குபற்றி ஆலோசனை நடத்துகின்றனர். வர்த்தக ரீதியாகப் பெறுமதி வாய்ந்த மீன் இனங்களைப் பிடிப்பதனை, அனைத்துலக ரீதியாகக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை எடுக்க, அவர்கள் முதன்முறையாக முயன்று கொண்டுள்ளனர்.

இதுவரை மீன்கள் குறைவாகப் பிடிபடுவதன் தாக்கம், நுகர்வோரை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. குறைவாகச் சந்தைக்கு வரும் சூரன் மீன் போன்றவற்றின் விலைகள் உயர்ந்துள்ள போதிலும், நீண்டதூரம் கடலோடி மீன்பிடிக்கும் மீன்பிடிக் கப்பல்கள், உலகின் தென்வலயத்தில் வேறு பகுதிகளுக்குச் சென்று மீன்பிடித்து வருகின்றன. அத்தோடு, மீன் வியாபாரிகளும் முன்னாள்களில் அவ்வளவாக விரும்பி வாங்கப்படாத கெளிறு, குடை போன்றவற்றைச் சந்தைப்படுத்துகின்றனர்.

பல முக்கிய கடல் உணவு உற்பத்தி நிறுவனங்கள், கடலில் மீன்கள் பிடிபடுவது குறைவாக உள்ளதற்கு மாற்றாக, செயற்கைத் தடாகங்களில் மீன் பண்ணைகள் வைத்துச் சமாளிக்கின்றன. கடலை அண்டிய பகுதிகளில், பெரிய தொட்டிகளில் பெருமளவிலே சுறா முதல், கணவாய் வரை பல வகையான மீன்களும் வளர்க்கப்படுகின்றன.

பாரம்பரியமாக மீன்பிடித் தொழிலையே நம்பி வாழும் பல குடும்பங்களுக்கு, இவற்றால் எந்தப் பரிகாரமும் ஆகப்போவதில்லை. நியூ இங்கிலண்ட் பகுதியில், மீனவர்கள் பிடிக்கக் கூடிய மீனின் அளவு கட்டுப்படுத்தப்பட்டிருப்பதால், மீனவர்களிடையே பெரும் மனவேதனை தோன்றியுள்ளது. சில வாரங்களுக்கு முன்பு, பூஸ்ரன் துறைமுகத்திற்கு முன்னால், மீன்பிடி வள்ளங்களில் வந்து மீனவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடாத்தினர். மாசசூசெற்ஸ் மாகாணத்தின் குளோசெஸ்ரர் நகரில், ஆத்திரங்கொண்ட 20 பேர் அடங்கிய தொழிலாளர் கூட்டமொன்று தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்த, கார்களைக் குப்புறப் புரட்டியும், வாகனங்களில் வந்த மீன்களை வீதியிற் கொட்டியும் ஆர்ப்பாட்டம் நடாத்தினர். மாசசூசெற்ஸ் மாகாணத்தின் ஆளுநர் வில்லியம் வெல்ட், மீன்பிடிப் பட்டினங்களுக்கு 10 மில்லியன் டொலர் நிவாரண நிதி வழங்க வாக்களித்து, அமெரிக்க மத்திய அரசிடம் உதவி கோரியுள்ளார். அதனைத் தொடர்ந்து, ஜனாதிபதி கிளின்ரன் நிர்வாகம், நியூ இங்கிலண்ட் பகுதிக்கு 30 மில்லியன் நிவாரண நிதி வழங்கப் போவதாகவும், மேலும் 50 மில்லியன் நிதி உதவியை அமெரிக்க ஆட்சிமன்றமான கொங்கிரஸிடம் கோரப் போவதாகவும் அறிவித்துள்ளது.

அமெரிக்க வர்த்தக அமைச்சர் றொன் பிறவுண், தாங்கள் பிரச்சினைக்கு உடனடியாக முகங்கொடுத்து உள்ளதாகவும், நிவாரண உதவியில் ஒரு பகுதி, கடல்களில் மீன்வளம் குறைவதைத் தடுப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளாற் பாதிக்கப்படும் மீனவர்களுக்கு மாற்றுத் தொழிற் பயிற்சிகள் கொடுக்கச் செலவிடப்படும் என்றும் கூறியுள்ளார்.

மனித குலத்தின் மிருகப் புரதத் தேவையின் ஆறில் ஒரு பங்கை நிறைவேற்றத் தேவையான அளவு மீன்களைக் கிடைக்கச் செய்வதிலும் பார்க்க, அது இலகுவானதாக இருக்கலாம். ஆனால், சனத்தொகை பெருகப் பெருக, மீன் உணவுத் தேவையின் அளவும் பெருகுமாதலால், வேறு வகை உயிரினங்களின் ஊனை உணவாகக் கொள்ளவும், மீன் வளம் உள்ள வேறு தொலை தூரக் கடற் பிரதேசங்களை நாடிச் செல்லவும் நேரும். ஆனால், அவையும் நீடித்து நின்று உதவுமா? என்பது சந்தேகமே. உலக வனவிலங்குப் பாதுகாப்பு நிதியத்தின் ஆய்வாளர் ஒருவரின் கூற்றுப்படி, மீன்களைப் பண்ணைகளில் வளர்ப்பதால். அங்கே அவை நெருக்கடி நிலையில் வளர்வதாலும், அவற்றிற்கிடையே மட்டுப்படுத்தப்பட்ட பிறப்புரிமையியல் நடப்பதாலும், நோய்களும், தொடர் உள் இன விருத்தியால் ஏற்படும் குறைபாடுகளும் உண்டாக இடமுண்டாம்.

1970 களில் மீன்பிடித் தொழில் நுட்ப வளர்ச்சியால், பல அளவிலானதும், பல நாடுகளைச் சேர்ந்தவையுமான மீன்பிடிக்கலங்கள் முன்பிலும் பார்க்க அதிக அளவில் ஆழ்கடலில் நெடுந்தூரம் சென்று வெற்றிகரமாக மீன் பிடித்து வரத்தொடங்கிய காலம் முதல், மீன் பிடித் தொழிலின் வீழ்ச்சியும் ஆரம்பமாகியது. மீன்கள் மறைந்து வாழ்ந்த கடற் பகுதிகளை றேடார்களும், சோனர்களும் காட்டித் தந்தன. செய்மதிகள், கப்பல்களை மீண்டும் மீண்டும் மீன்கள் அதிகமாக உள்ள இடங்களுக்குச் சென்று, வெகுவாக மீன் அள்ளிவரச் சமிக்ஞை காட்டி உதவின. புதிதாகக் கட்டப்பட்ட மாபெரும் மீன் பதனிடும் தொழிற்சாலைகளான கப்பல்கள், ஓர் இழுவையில் 12 ஜம்போ ஜெட் விமானங்களைச் சிக்க வைத்து, இலகுவாக இழுத்து வரக் கூடியதான இராட்சத அளவிலான வலைகளைக் கடலில் விரிக்கும் திறன் கொண்டனவாகின. அமெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிக்காவின் முன்மாதிரியைப் பின்பற்றி, அநேக நாடுகள் தாங்கள் கரையோரங்களிலிருந்து 320 கிலோமீற்றர் தூரம் வரையான கடற்பரப்பைத் தங்கள் நாட்டு ஆதிக்கத்திற்கு உட்பட்ட பிரதேசமாக்கி, வேற்று நாட்டுக்கப்பல்கள் அங்கு வந்து மீன் பிடிப்பதைத் தடைசெய்தன. அதனால் அத்து மீறித் திரிந்த மீன்பிடிக் கப்பல்கள், மேலும் தொலை தூரமான இடங்களை நாடிச் செல்லத்தொடங்கியதும், உள்நாட்டுக் கப்பல்கள் தங்கள் நாட்டுக் கடற்பரப்பில் போட்டி குறைந்ததால், பெரும் பயன் அடையத் தொடங்கின.

1980 களில் பல வகை மீன் இனங்கள் ''வர்த்தக அளவிலான அருகலை'' அடையத் தொடங்கின. இருந்தும், இன்னும் அவை கடல்களிற் காணப்படுகின்றன. ஆனால், பெரும் மீன்பிடிக் கப்பல்களின் திறமையை நிறைவு செய்யும் அளவுக்கு அவை காணப்படுவதில்லை. சில நாடுகள், பல மீன் இனங்கள் நிறைந்து பெருக்கத்தை அடையும் வரை, அவற்றைப் பிடிப்பதைத் தடைசெய்ய இணக்கங் கொண்டுள்ளன.

ஆனால், இந்த நடவடிக்கைகள் எப்பொழுதும் நிறைவான பலனைத் தருவதில்லை. சைபீரியாவை அடுத்துள்ள ஒகொட்ஸ்க் கடற்பரப்பிற் பாற்சுறாக்களைப் பிடிப்பதைத் தடைசெய்ய ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ள முயன்றபோது, போலாந்து, தென் கொரியா, சீனா ஆகிய நாடுகள் அதற்கு இணங்கவில்லை. அதேபோல் சில நாடுகள், ஏதாவதொரு வகை மீனை இவ்வளவு தான் ஒரு மீன்பிடிக்கலன் பிடிக்கலாம் எனச் சட்டமிட்டாற் கூட, அதனை நடைமுறைப் படுத்துவது மிகவும் கஷ்டமானதாகும். சில சமயங்களில், தமது தேவையை நோக்கமாகக் கொண்டு ஒரு குறிப்பிட்ட நாட்டிற் பதிவு செய்யப்பட்ட கப்பலாகி, அந்த நாட்டுக் கொடியுடன் செல்லும் கப்பல், நாடுகளுக்கு இடையிலான ஒப்பந்தங்களை உதாசீனம் செய்யலாம்.

உலகளாவிய ரீதியில் ஒப்பந்தம் ஒன்றை உண்டாக்குவதும் மிகவும் கடினமானதே. மிகவாக விரும்பி உண்ணப்படும் மீன்கள் தங்கள் கரைசார் கடல்களில் உள்ள நாடுகளான கனடா, நியூசிலாந்து, ஆர்ஜன்ரீனா, ஐஸ்லாண்ட் என்பன; அவை, ''தூரத்து நாடுகள்'' என்று கூறும் ஜப்பான், போலந்து, தாய்வான், மற்றும் ஐரோப்பியக் கூட்டு நாடுகள், 320 கிலோ மீற்றர்கள் எல்லைக்கும் அப்பாற் சென்று, அதிக அளவு மீன் பிடித்துக்கொள்வதாகக் குற்றங் கூறுகின்றன. அதற்குப் பதிலாக, அதை ''தூரத்து நாடுகளோ'' கரையோர நாடுகள் தங்கள் எல்லைக்குள் சரியான முறையிற் செயற்படுவதில்லை என்று குறை கூறுகின்றன.

உயிரியலாளர்களின் ஆய்வு ரீதியான மதிப்பீடுகளின்படி, கரையோரங்களை அண்டிய மீனினங்களே, மிகவாக அருகிப் போகும் ஆபத்து நிலையில் உள்ளன. இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு, அனைத்துலக நாடுகள் மத்தியில் ஓர் ஒப்பந்தம் செய்து, அதனை அமுலாக்குவது தான் மிகவும் ஏற்றது. ஆனால் அதற்கு முன்பு நாடுகள் ஒவ்வொன்றும், தத்தமது மீன்பிடித்துறைகளைக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்த வேண்டும்.

உள்ளூர் மீனவர் மீது கட்டுப்பாடுகள் விதிப்பது, அரசியல் ரீதியாக மிகவும் சிரமமான காரியம் ஆயினும், அது வற்றிய கடலை மீண்டும் நீர் வார்த்து நிரப்புவது போன்று, அவ்வளவு மிகுந்த சிரமமாகாது.

''ரைம், ''ஏப்ரல், 4, 1994.

## பம்பாய் நகர் நுஸ்லி வாடியா

இந்தியாவின் தொழிற் தலைநகர் பம்பாயின் நெசவாலை அதிபர் நுஸ்லி வாடியா புது டில்லியில் 634,000 டொலர் விலைக்கு வீடு கட்டும் நிலம் வாங்கியுள்ளார். இந்த நிலத்தில் அலுவலகங்கள் கட்டுவது அவருடைய திட்டம். அத்துடன் கல்கத்தாவின் 176 வருட வயதுள்ள பத்திரிகை ஒன்றையும் இவர் சொந்தமாக்க முயன்று வருகிறார். போதுமென்று ஒதுங்காது என்றும் காலை அகலவைக்கும் பாங்கு கோடீஸ்வரர் நுஸ்லி வாடியாவின் தனி முறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே மாத உலக உலாவின் தொடர்...

# 1970 செப்ரெம்பரில் நடந்த விமானக் கடத்தல்களும் அதன் பின்னணியும்

இதுவரை நாற்பது வருடங்களாக விமானக் கடத்தல்கள் நடைபெற்று வந்தாலும், பாதுகாப்புப் படையினர் எதிர்த்தாக்குதல் நடாத்திய நிகழ்ச்சிகள் இல்லையென்றே சொல்ல இடமுண்டு. அதுபோன்று, விமானங்களைத் தகர்த்துச் சிதறடிக்கும் சம்பவங்களும் மிக அரிது எனலாம். எதிர்த்தாக்குதல், விமானத் தகர்ப்பு யாவும், 1970 இல் நடந்தேறிய வரலாற்று உண்மைகளாகும்.

இஸ்ரேல் நாடு 1948 இல் நிறுவப்பட்டுள்ளது. அவர்கள் இருபது வருடங்களாக எல் அல் என்ற பெயருடன் ஒரு வர்த்தக விமானச் சேவையை நட்டமின்றி நடத்திக் கொண்டிருந்தனர். அவர்களிடம், அக்கால கட்டத்தில் ஏழு போயிங் 707 ரக விமானங்கள் சேவையிலிருந்தன. இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்குப் பதிலடி கொடுக்கக் காத்திருந்த பாலஸ்தீனிய மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் டாக்ரர் ஜோர்ஜ் ஹபாஷ் அவர்களுக்கு, விமானக் கடத்தலே சிறந்த வழியாகத் தெரிந்தது. 1968, ஜூலை, 23 ஆம் திகதி இவ்வியக்கத்தைச் சார்ந்த மூவர், எல் அல் விமானம் ஒன்றைக் கடத்தி, வட ஆபிரிக்க நாடான அல்ஜியர்சுக்குக் (Algiers) கொண்டு சென்றனர். இந்த வேளையில் இஸ்ரேல், எதிர்த்து போராட முடியாத நிலையில் இருந்தபடியால், தமது விமானத்தைக் காக்க, இஸ்ரேலியச் சிறைகளிலிருந்த 16 பாலஸ்தீனியப் போராளிகளை விடுதலை செய்துள்ளது. சுவிற்சிலாந்து, ஜேர்மனி போன்ற நாடுகளில் உள்ள எல் அல் விமான அலுவலகங்களையும், விமான நிலையங்களில் நின்ற அல்லது கிளம்பும் இஸ்ரேலிய விமானங்களையும் தாக்கிய சம்பவங்களிற் பங்கேற்றதற்காக, ஐரோப்பியச் சிறைச்சாலைகளில் ஐந்து பாலஸ்தீனியப் போராளிகள் முடங்கிக் கிடந்தனர். சில காலத்துக்குள்ளாகவே, கிரிஸ் நாட்டில் நடத்தப்பட்ட எல் அல் அலுவலகத் தாக்குதலில், மேலும் ஏழு போராளிகள் சிறையில் இடப்பட்டுள்ளனர். இவர்களை விடுதலை செய்வதற்காக, கிரீஸ்நாட்டின் ஒலிம்பிக் விமானச்சேவை விமானமொன்றைப் பாலஸ்தீனியர்கள் கடத்தினர். 48 பயணிகளையும், விமானத்திற் பணிபுரியும் எண்மரையும் மீட்பதற்காக, தம்மிடம் உள்ள பாலஸ்தீனியர்களை கிரீஸ் அரசு விடுதலை செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இனி மிகுதியாக இருப்போர், சுவிற்சிலாந்திலும், ஜேர்மனியிலும் சிறையில் இருக்கும் பாலஸ்தீனியர்களே. இவர்களை மீட்பதற்கு இந்தநாடுகளின் விமானங்கள் கடத்தப்பட வேண்டியது அவசியமாயிற்று.



இதற்கிடையில், தங்களுக்கென்று ஓர் இறங்குதுறை தேவை என்பதைப் பாலஸ்தீனிய மக்கள் விடுதலை முன்னணி உணர்ந்து, தேடுதல்களை ஆரம்பித்தது. ஒரு நாட்டிலும் இத்தேவைக்காகத் தங்கியிராமல், தமக்குச் சொந்தமாக இவ்வசதியை வைத்திருக்க வேண்டுமென்பது தான், அவர்கள் கருத்து. இரண்டாம் உலக யுத்தத்தில், பிரிட்டிஷாரால் ஜோர்தான் பாலைவனத்திற் கட்டப்பட்டு, பின்பு கைவிடப்பட்ட டோர்சன் விமான நிலையம் அவர்களின் தேவைக்கு உதவியது.


இதற்கு, புரட்சி விமான நிலையமென்று அவர்கள் மறுநாமமும் சூட்டினர். சுவிஸ், ஜேர்மன் சிறைகளில் இருக்கும் தமது தோழர்களை மீட்பதற்காகக் கடத்தப்படும் விமானங்களை, இங்கு கொண்டுவருவதற்கும் திட்டம் தயாராகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான ரீ. டபிள்யூ விமானமொன்றைக் கடத்தி, இரு பாலஸ்தீனியர்கள் புரட்சி விமான நிலையத்திற்கு கொண்டுவந்து தரை இறக்கினர். இரண்டாவதாக, சுவிஸ் விமானமொன்று திசைதிருப்பப்பட்டு, இந்த இடத்தில் தரை இறக்கப்பட்டது. அடுத்து, ஓர் இஸ்ரேலிய எல் அல் விமானத்தைப் பிடிக்க வேண்டியதுதான் திட்டம். அமஸ்ரர்டாம் விமான நிலையத்தில் லெய்லா காலேத்தும், அவளுடன் சகபோராளியான தென் அமெரிக்காவைச் சேர்ந்த பற்றிக் ஆர் குயிலோவும் எல் அல் விமானத்தில் ஏறிக் கொண்டனர். ஆனால் கடத்தல் தொடங்கியவுடன், இஸ்ரேலியப் பாதுகாப்பு அதிகாரியால் பற்றிக் ஆர்குயிலோ சுட்டுக் கொல்லப்பட்டான். லெய்லாவும் கைது செய்யப்பட்டாள். லண்டனில் தரை இறங்கிய விமானம், பிரிட்டிஷாரிடம் லெய்லாவை ஒப்படைத்தபின், அமெரிக்காவுக்குத் தனது பிரயாணத்தைத் தொடர்ந்தது.

டாக்ரர் ஜோர்ஜ் ஹபாஷ் தனது மூளையைக் குடைந்து, லெய்லாவை விடுதலை செய்யும் திட்டத்தைச் செயலாற்றினார். இதன்படி, மூன்று நாள்களின்பின் பிரிட்டிஷ் விமானம் ஒன்று பாலஸ்தீனியப் போராளிகள் வசமாகி, புரட்சி விமானநிலையம் கொண்டுவரப்பட்டது. இப்போது, இங்கு மூன்று பாரிய விமானங்கள், அவற்றில் வந்த பெருந் தொகையான பயணிகள், பாலைவனத்தின் வெப்பத்திலே கிடக்கின்றனர். உலகமெல்லாம், இதுவே பெருஞ் செய்தி. பயணிகளின் உயிரைக் காப்பாற்றும்படி, சம்பந்தப்பட்ட நாடுகளுடன் உறவினர்கள் மோதல், செப்ரெம்பர் 09 1970 ஆம் ஆண்டு நிலைமை இவ்வாறு இருக்க, அமெரிக்க "பன் ஆம்" நிறுவனத்தின் ஜம்போ எனப்படும் மிகப் பெரிய விமானமொன்று, அதே அமஸ்ரர்டாம் விமான நிலையத்தில் இரண்டு பாலஸ்தீனியப் போராளிகளிடம் கைதியாகிற்று. இந்த ரக விமானம், புரட்சி விமான நிலைய ஓடுபாதையில் இறங்க முடியாதபடியால், அது எகிப்தின் கைரோ விமான நிலையம் கொண்டு செல்லப்பட்டது. பயணிகள் எல்லோரும் இறக்கப்பட்டபின், ஓடுபாதையில் வைத்தே, இந்த விமானங்களில் மிகப் பெரியதும், விலை கூடியதுமான (22 மில்லியன் டொலர்) ஜம்போ தகர்த்துச் சிதைக்கப்பட்டது.



11, மே 1974 இல் கொலம்பியா நாட்டில் கடத்தற்காரர்களுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்த போரில், இரண்டு கடத்தற்காரர்கள் உயிரிழந்தனர். ஒருவன் கைதானான். 14 பயணிகள் காயமுற்றனர், தப்பி ஓடும் இதர பயணிகளின் காட்சி.

Chundikuli Branch Library

மீண்டும், உலகின் கண்கள் புரட்சி விமான நிலையம் மீது திரும்பின. 127 பெண்களும், சிறுவர்களும் விமானத்தில் இருந்து இறங்கித் தலைநகர் அம்மான் விடுதிகளுக்குச் செல்ல, போராளிகள் அனுமதித்தனர். மிகுதிப் பயணிகள், விமானங்களில் அடைபட்டு இருந்தனர். இதுவரையும் மிகவும் உற்சாகமாக இருந்த போராளிகள், இப்போது சற்றுக் கலங்க ஆரம்பித்தனர். அமெரிக்காவின் ஆறாவது கப்பற் படையும், விமானம் தாங்கிகளும், நாசகாரிகளும் நெருங்குகின்றன என்ற செய்தி அவர்களுக்குக் கிடைத்ததே காரணம்.

இத்துடன் ஜோர்தான் அரசரின் படைகளும், இஸ்ரேலிய இராணுவமும் தாக்குதல் தொடுக்கத் தயார் நிலையில், பாலைவனம் ஊடாக வருகின்றன என்ற செய்தியும் அவர்களுக்குக் கிடைத்தது. இங்கிலாந்து, சுவிற்சிலாந்து, அமெரிக்கா, ஜேர்மனி, இஸ்ரேல் ஆகிய ஐந்து நாடுகளும் மீட்புக் குழுவொன்றை நிறுவின. செப்ரெம்பர் 15, 1970 இல் பிரச்சனை ஒரு முடிவுக்கு வந்துள்ளது.

பயணிகள் யாவரும் இறங்கிச் செல்ல, பாலஸ்தீனிய மக்கள் விடுதலை இயக்கம் இணங்கியது, ஆனால், பயணிகள் அப்புறப்படுத்தப்பட்டு, சிறைப்பிடிக்கப்பட்ட தமது போராளிகளும் திரும்பியபின், மூன்று விமானங்களையும் குண்டுவைத்துத் தகர்த்துச் சின்னபின்னமாக்கி, தனது மனக்குமுறலை அவ்வியக்கம் வெளிப்படுத்தியது. இங்குதான் பிழை நிகழ்ந்துவிட்டது; பொறுமை இழந்த ஜோர்தான் மன்னர் ஹூசேயின் தாக்குதல் தொடுத்தார். 10 நாள்கள் கடும்போர் நடந்தது. பெருந் தொகையான போராளிகளைப் பாலஸ்தீனியர்கள் இழந்தனர். பாலஸ்தீனிய மக்கள் விடுதலை இயக்கம், இதன் பின் தலைதூக்கவில்லை. எஞ்சியிருந்த போராளிகள் கறுப்பு செப்ரெம்பர் (Black September) என்ற இயக்கத்தைத் தொடங்கி நெடுங்காலமாகப் பலவிதமான வன்முறைகளில் ஈடுபட்டனர். 1970 செப்ரெம்பர் மாதம், விமானச் சேவைச் சரித்திரத்தில் ஒரு மறக்கமுடியாத காலம் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய அமெரிக்க அரசு, ஒவ்வொரு தொலைபேசி, பாக்ஸ், தகவல் அனுப்பும் கணனியிலும் இடைப்புகுந்து, செய்திகளைப்பெற விரும்புகிறது.



# தொலைத் தொடர்புக் கருவிகளின் திறவு மூலங்களை (Keys) யார் வைத்திருப்பது?

— செய்திக் கட்டுரையாக்கம் —

பிலிப் எல்மர் டிவிற்

மிக அண்மைக் காலம்வரை ''கிறைப்ரோ கிறாபி'' என்னும் அறிவியல் – இரகசியக் குழூஉக் குறிகளை (SECRET CODES) ஆக்குவதும், தடைப்படுத்துவதும் தொடர்பானது, மிக நல்ல முறையில் இரகசியமாக இருந்து வந்கது. ஐக்கிய அமெரிக்காவில் தேசியப் பாதுகாப்பு முகவம் இத்துறையிற் பல ஆண்டுகள் மேலாண்மை பெற்றிருந்ததாலும், அரசாங்கம் ஊழலுக்கு அப்பாற்பட்டு விளங்கியதாலும், இவ்வாறு ஒரு விடயம் இருக்கிறது என்பதே மறுக்கப்பட்டு வந்தது. என்.எஸ்.ஏ. (தேசிய பாதுகாப்பு முகவம்), தேசியப் பாதுகாப்பின் பொருட்டு வெளிநாட்டுத் தொலைபேசிகள், கடலடித் தந்திகள் முதலியவற்றின் இடைப்புகுந்து, அந்தரங்கமானவையும், புலனாய்வுக்குரியவையுமான செய்திகளைப் பெற்றும், தன் சக்தி முழுவதையும் பயன்படுத்தி, எவரும் இரகசியக் குழூஉக் குறிகளைப் பயன்படுத்த முடியாதிருப்பதை உறுதிப்படுததியும் வந்தது. திறவு மூலங்களைப் (KEYS) பயன்படுத்தி இரகசியக் குழூஉக் குறிகளைச் சாதாரணக் குழூஉக் குறிகளாக மாற்ற இயலாத வகையில், கடுமையான தடை நடவடிக்கைகளை மேற்கொண்ட அதே வேளையில், ஐ. அ. ஆயுத விநியோகச் சட்டத்தின்மூலம், இரகசியக் குழூஉக்குறிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததையும் தடுத்தது. வர்த்தக ரீதியாகப் பயன்படுத்தப்பட்ட தொலைத் தொடர்பு இரகசிய அமைப்புத் திட்டத்தைப் பலவீனப்படுத்திச் செயலிழக்க வைப்பதிலும், என். எஸ். ஏ. யின் மிக்குயர்ந்த கணனிகள் இலகுவில் வெற்றி கண்டன.

ஆனால், கடந்த சில ஆண்டுகளாய் என். எஸ். ஏ. யின் செயற்பாடுகள் தோல்வியே கண்டு வருகின்றன. அதனுடைய மேல் மறைப்பானது வெடிப்பினைக் கண்டதோடு, தொலைத் தொடர்பு இரகசிய அமைப்புத் தொழில் நுட்பத்தில் அது பெற்றிருந்த ஏக போகமும், வீழ்ச்சிக்குள்ளாகியுள்ளது. கிறைப்ரோக் கிறாபி (CRYPTOG-RAPHY) க் கணனிகள், அதன் வலுவான தடைத் திறனை முறியடிக்கும் வகையிற் பெரு வளர்ச்சி அடைந்துள்ளன. ஐ. நா. கணனித் தயாரிப்பாளர்கள், எதிர்காலத்தில் ஐ. அமெரிக்காவின் குழூஉக் குறித் தடைத்திட்டத்தால் முறியடிக்க முடியாத அளவுக்குத் தமது தொழில்நுட்பத் திறன் உள்ளதாக இவ்வாண்டு ஜனவரியிற் கூறியிருப்பது கவனிக்கத் தக்கது.

ஆக, முன் எப்போதும் இல்லாதவாறு தொழில் நுட்பக் கோட்பாட்டுப் போர்கள் மிகவுந் திகைப்பூட்டும் வகையில் நடைபெறத் தொடங்கியுள்ளன. ஒரு பக்கம் அமெரிக்காவின், மூன்றெழுத்துக்களாற் பிரசித்தி பெற்ற நிறுவனங்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளான என். எஸ். ஏ., சீ. ஐ. ஏ., எஃப்.பி.ஐ. முகவர்களைச் சேர்ந்தவர்களும், கிளின்ரனின் ஆட்சி நிர்வாகத்தின் அரசியற் கொள்கை வகுப்பாளர்களும் அணிவகுத்து நிற்கின்றனர். இவர்களுக்கு எதிராக, கணனி வர்த்தக நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும். நாட்டு விடுதலை வேட்போரும், மாறுதல் விரும்பாப் பத்திரிகைக் கட்டுரையாளர்களும், கிரைப்ரோக் கொடுங்கோலரும் (இவர்கள் தங்களை, சைப்பர்பங்ஸ் என அழைக்கிறார்கள். (CYPHERPUNKS) அணிவகுத்து நிற்கின்றனர்.

என். எஸ். ஏ. கிளிப்பர் சிப்ஸ் என்னும் பெயரில் ஒரு கடத்திக் கருவியை ஒவ்வொரு தொலைபேசியிலும், கணனியிலும், பாக்ஸிலும் பொருத்திவிட விரும்புகிறது. இது குழூஉக் குறிகளைப் பாதியளவு கடத்தி, தகவலைப்பெற வாய்ப்பளிக்குமென்று நம்பப்படுகிறது. இவ்வாறு பொருத்தப்படும் கடத்தியினூடாக, அதிகார பூர்வமாக அந்தரங்கங்களை அரசாங்கம் பெறுவதற்கு வழி ஏற்படும். இதன் மூலம் போதைவஸ்து வியாபாரிகள், பயங்கரவாதிகள், உளவாளிகள் போன்றவர்களின் நடவடிக்கைகளை இடைப்புகுந்து தடுக்கவும், அறியவும் வாய்ப்புண்டாகுமென்று, சட்டத்தைச் செயற்படுத்தும் பணி பூண்ட முகவர்கள் கூறுகிறார்கள். இந்தக் கிளிப்பர் சிப்புக்கு எதிராகக் கண்டனக் குரல்கள் எழுந்தபோதும் ஒற்றைப் படை எண் கொண்ட (பத்துக்குட்பட்ட) நவீன தொலைபேசிக் கருவிகளை உற்பத்தி செய்யும் வர்த்தகர்கள், அந்தக் கருவியிலிருந்து தகவலை இடைத் தடை செய்து பெறுவதனை இலகுபடுத்தக் கூடிய கருவியை இணைத்தல் வேண்டுமென்று சட்டம் பிறப்பிக்கும் முயற்சியில் கொங்கிரஸ் ஈடுபட்டுள்ளது. இவ்விணைப்புக் கருவி. கணனி யுகத்திற் குடி மக்கள் தமக்கென எவ்வித அந்தரங்கத்தினையும் பாதுகாக்க முடியாத நிலையினை ஏற்படுத்தும். இதனால், அவர்களின் தனிப்பட்ட சுதந்திரம் பெரிதும் பாதிக்கப்படும்.

இதுபற்றி ''ரைம்'' (TIME) சஞ்சிகை, சி. என். என். நிறுவனத்தோடு இணைந்து, யாங்கலோவிச் பங்காளர்கள், 1,000 அமெரிக்க மக்களின் கருத்துக் கணிப்பொன்றினை நடத்தினர். அந்த 1,000 பேர்களில் மூன்றில் இரண்டு பகுதியார், தனிப்பட்டவரின் அந்தரங்கங்களைப் பாதுகாப்பதென்பது, காவல் துறையினரின் இடைப்புகுந்து அவற்றை ஒட்டுக் கேட்பதைவிட, முக்கியமானதாகும் என்று கருத்துத் தெரிவித்தனர். கிளிப்பர்சிப்ஸ் முறை அறிவிக்கப்பட்டபொழுது அதற்கு 80 சதவீத மக்கள் எதிர்ப்பாயிருந்தனர்.

கடந்த ஏப்ரல் மாதத்தில், அரசாங்கம் தனது கிளிப்பர் சிப்ஸ் திட்டத்தினைப் பகிரங்கப்படுத்தி மக்களின் கருத்தைக் கோரிய பொழுதே போராட்டம் ஆரம்பித்து விட்டது. அரசாங்கத்தின் கடத்திக்கருவி, குற்றவியலாளர்களின் தொலைபேசித் தொடர்புகளுக்கு இடமளிக்காது. சர்வதேச வாடிக்கையாளர் தொலைத் தொடர்புகளை விலக்கிப் பெறுவதற்கு, அரசின் திறவு மூலங்கள் (KEYS) இடமளிக்கா. புலனாய்வாளர்களுக்கு இரகசியத் தகவல்களை இலகுவாகப் பெற வாய்ப்புண்டாகும். புத்திசாலித்தனமாகச் செயற்படுமொருவர் இத்திறவு மூலங்களைத் திருடாதிருப்பார் என்பதற்கும் உத்தரவாதம் இல்லை. ஆனால், நிர்வாகம் தனக்கு அளிக்கப்பட்ட அறிவுரைகளை அலட்சியஞ் செய்தது. பெப்ரவரி தொடக்கத்தில், கணனிகளின் உற்பத்தியாளர்களின் தலைவர்கள் தொலைத் தொடர்பு இரகசிய அமைப்புத் தொடர்பாக, தமக்கென்று ஒரு தரத்தினை வகுத்து அதனைச் செயற்படுத்த விரும்பியபொழுது, அரசாங்கம் என். எஸ். ஏ. யின் திட்டத்தைச் செயற்படுத்துமாறு பிரகடனஞ் செய்தது. இந்தத் திட்டம், வகையீடு செய்யப்படாத எல்லாவகைத் தொலைத் தொடர்புகளுக்கும் கட்டுப்பாட்டினை விதித்த போதிலும், வர்த்தகம் சம்பந்தப்பட்ட வரையில் தற்காலிகமாக அத்துறைக்கு அது தன்னிச்சையோடு செயற்படும் வகையில் நெகிழ்ச்சி அளிக்கப்பட்டுள்ளது.

என். எஸ். ஏ. யின் திட்டம் தொலைத் தொடர்பு இரகசிய அமைப்பாளர்களின் எதிர்ப்புக்களுக்கு மட்டுமே முகங் கொடுப்பதாய் இல்லை. தமது அந்தரங்கங்கள் பெறுமதி வாய்ந்தவையென்று கருதுங் குடிமக்களும் அதனை வன்மையாக எதிர்க்கிறார்கள். இவர்களோடு தொலைத்தொடர்புச் சாதன உற்பத்தி நிறுவனங்களும் சேர்ந்துள்ளன. இந்நிறுவனங்கள் தமது உற்பத்திகளுக்கு வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பைப் பெற்றவை. வெளிநாட்டவர்களோ, ''கிறைப்ரோகிறாபி'' மற்றைய நாடுகளிற் கிடைக்கும் வாய்ப்பு இருக்கையில், அமெரிக்காவில் மட்டும் அது உளவாளர்களுக்கு இடைப்புக வாய்ப்பளிப்பதை விரும்பவில்லை. இவ் விடயத்தில் இத்துறை சார்ந்த உற்பத்தி நிறுவனங்கள் ஒரு முகமாய் உள்ளன என்கிறார், ''அப்பிள்'' கணனிப் பிரசாரகர் ஜிம் பேகர். கிளிப்பர் முறையினை எதிர்க்கும் 24 உற்பத்தி நிறுவனங்களில், இவர் பணி புரியும் நிறுவனமும் ஒன்றாகும். உள்ளக இலத்திரனியல் இணைப்பின் கணனித்தொழில் நுட்ப ஊழியர்கள், சமூகப் பொறுப்பினை முன்வைத்து ஓர் எதிர்முறையீட்டினைத் தயாரித்து, அம்முறையீட்டில் 45,000 கையொப்பங்களைப் பெற்றுள்ளனர். கடத்திக் கருவிகளைப் பயன்படுத்தி, அவற்றிற்கான திறவு மூலங்களை அரசுக்கிடையிற் பகிஷ்கரிக்கும் நடவடிக்கையில் இறங்க, சில அரசுத் தீவிர எதிர்ப்பாளர்கள் திட்டமிடுகிறார்கள். மரணங் காரணமாக எனது விரல்கள் குளிர்ந்த பின்பு தான், என்னுடைய தொலைத் தொடர்பு இரகசிய அமைப்பின் திறவு மூலத்தில் நீங்கள் தலையிடலாம் என்று இலத்திரனியல் எல்லைப்புறத் தாபனத்தின் இணை நிறுவனரான பெறி பாளோ கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞரும், தொழில் நுட்பவியல் மாணவரும் (MIT) விற்ஃபீல்ட் டிஃப்பி என்ற பெயர் கொண்டவருமான ஒருவராலேயே, இன்று நிலவும் முரண்பாடுகளுக்கான வித்து இடப்பட்டது. மரபு ரீதியான தொலைத் தொடர்பு இரகசிய அமைப்பிற் காணப்பட்ட குறைபாடு அவராற் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த அமைப்பின் நம்பகத்தன்மை, ஒரு பொதுக் குறியீட்டுச் சொல்லிலேயே, அல்லது இலத்திரனியல் சார்ந்த குறியீட்டுக்கு அளிக்கப்படும் விளக்கத்திலேயே தங்கியிருந்தன. இவை ஒரே ஒரு திறவு மூலத்தையே கொண்டிருந்ததும் குறிப்பிடத்தக்கதே. ஆனால், தொலைத் தொடர்புகளைக் கையாளும் மக்கள், அந்தரங்கமான குறியீட்டுத் திறவு மூலங்களைப் பரிமாற்றஞ் செய்வதில் மிகவும் கவனமாக இருக்கவேண்டியதாயிற்று. அவர்கள் வழமைப்பிரகாரமான குழூஉக் குறிகளைக் கையாள்கையில், அவை இடைத்தலையீட்டிற்கு இடமளிக்காததால், இணங்கவேண்டியஅவசியமிருந்தது. இந்தப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும் வகையில், தொலைத் தொடர்பு இரகசிய அமைப்புப்பரவலாக விளங்கிய அக்காலத்தில்அவற்றிற்கான திறவு மூலங்கள், பொதுப் பதிவகத்திற் பதியப்பட்டிருந்தன.

இந்தச் சிக்களுக்குத் தீர்வுகாண, ஒன்றுக்குப் பதில் இரு திறவு மூலங்களை டிஃப்பி மக்களிடையே அறிமுகப் படுத்தினார். சிறப்பாக, வர்த்தக நிறுவனங்கள் இரு திறவு மூலங்களால் பெரும் பயன் அடைந்தன. தம்முடன் வர்த்தகத் தொடர்பு கொண்டவரிடம், அவர் பெற்ற கடனை அறவிடுவதற்கு அவரின் பெயரையும், முகவரியையும் சரியான முறையிற் பெறமுடியாதவாறு, தொலைத் தொடர்புச் சாதனப் பதிவேடுகளிலும், கணனிப் பதிவேடுகளிலும் ஒரே பெயரில் ஏராளமானவர்களின் பெயர்கள் பதிவு பெற்று இருந்தன. இவற்றை வேறுபடுத்தி, சரியான ஆளையும் முகவரியையும் தேடிக் கண்டுபிடிக்க, ஒரே திறவு மூலம் பயன்தருவதாக இல்லை. வணிக வியாபார விளம்பரப் பட்டிகைகள் (Catalogs) ஆள்மாறாட்டங்கள், மோசடிகளுக்கு இடமளித்தன. இந்நிலையில், வெளிப்படையான திறவு மூலத்திற்குப் பதிலாகத் தனிப்பட்ட அந்தரங்கத் திறவு மூலங்கள்மூலம் தொடர்புகளை வாடிக்கையாளரோடு வைக்கவும், இரகசியத்தை இறுக்கமாகப் பேணவும் வழியுண்டாயிற்று.

ஆனால், என். எஸ். ஏ. இத்தகைய வர்த்தகர்களையும், பொது மக்களையும் வேறுபடுத்தி, மோசடிக்காரர்கள், குற்றவியலில் ஈடுபடுவோர் ஆகியோரின் இரகசியங்களை இடைத் தலையீட்டினாற் பெறுவதற்கு வாய்ப்பில்லாது போனமை அதற்குப் பெரும் தலையிடியாயிற்று. 1991 இல் ஃபில் சிம்மர் என்பவர் பகிரங்கப் பொதுத் தொடர்பு இரகசிய அமைப்பினை வழமையான அமைப்போடு இணைத்து அதற்கு P. G. P என்ற (அழகானதும், அந்தரங்கமானதும்) நாமமும் கொடுத்துச் செலுத்த வேண்டிய வரிப் பணத்தையும் செலுத்தாது இலவசமாகவே அதனைக் கையாண்டமை எஸ். என். ஏ யின் தலையிடியைப் பெரும் திருகுவலியாக்கியது. இத்தகைய மோசடிக் குறைகளைக் கடுமையாகத் தடுத்து நிறுத்துவதில் ஈடுபடாது யாப்புக்கு முரணானதும், சந்தை வர்த்தகமாக்குவதுமான முறையை அரசு நிருவாகம் கையாளுவதே இன்று பலத்த எதிர்ப்பினை அதற்குச் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறது. மாற்று வழியொன்றை மிகக் கவனமாக ஆராய்ந்து கையாள்வதை விடுத்து மக்களினதும், வெளிநாட்டாரதும் நலன்களிலும், தனிப்பட்ட சுதந்திரத்திலும் தலையிடும் வகையிலே ''கிளிர்ப் பர்சிப்'' முறையினை வலுவந்தமாகக் கையாள முற்படுவதே இந்த எதிர்ப்புக்கு அடிப்படைக் காரணமாகும்.

''கிறிப்ரோ பூதம்'' போத்தலுக்கு வெளியில் வந்துவிட்டது என்று பொதுத் தொடர்பு இரகசிய அமைப்புப் பற்றி (Encryption) நூல் எழுதிக்கொண்டிருக்கும் ஸ்டிவின் லெவி கூறுகிறார். அவர் கூறுவது உண்மையானால் அந்தப் பூதத்தை மீண்டும் போத்தலுக்குள் அடைத்து வைக்கும் சக்தி என். எஸ். ஏ க்குக்கூட இல்லை.

*தகவல் அனுப்பிய நிருபர்கள்:*
*சான்ஃறான்ஸிஸ்கோவிலிருந்து டேவிற் எஸ். ஜக்ஸன்;*
*வோஷிங்ரனிலிருந்து சுனீல் றற்ரன்.*
*''ரைம் மார்ச்'' 14, 1994*

**சீனா:**

## வர்த்தகர் விடுதலையானார்

*பிலிப் சென்ங் என்ற அமெரிக்கப் பிரஜை, ஹொங்கொங் தீவுகளில் வர்த்தகம் செய்கின்றார். சீனாவுக்குத் தனது தொழில் சம்பந்தமாகச் சென்று வருங் காலத்தில், அந்த நாட்டுக்குரிய பெருந் தொகைப் பணத்தை மோசடி செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார். இதன்பின், சீன அரசு அவரை விளக்க மறியலில் வைத்துள்ளது. அமெரிக்க தூதுவரகத்தின் தலையீட்டால், அவர் ஏழு மாதங்களின் பின் விடுதலை ஆகியுள்ளார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வர்ணங்களின் சிறப்பில்
வானவில்லை மிஞ்சும்"

மென்னிழைச் சருகையில்
மின்னலே கெஞ்சும்!

# யோகாமணி ஆடை அகம்




**யோகாமணி ஆடை அகம்**

32. சந்தோசம் சாலை,
யாழ்ப்பாணம்.

**குமார் புடைவை மாளிகை**

முத்திரைச் சந்தை,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**குமார் வண்ணச் சோலை**

பெரியகடை சாலை,
யாழ்ப்பாணம்.

ஆடவர் பெண்கள் அனைவரும் எண்ணம் போல்
துணிமணிகளைப் பெற்றுக் கொள்ள

# யோகாமணி ஆடை அகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பிய மருந்துப் பொருள்கள் கைவசமில்லை என வருந்துகிறீர்களா?

கவலை வேண்டாம்!

இதோ ஆனைக்கோட்டையில் ஒரு

" ச ஞ் சீ வி "

ஆமாம்...... ............சஞ்சீவி!

சகல விதமான மருந்துப் பொருள்கள், பால்மா வகைகள்,
பாலர்களுக்கான பாடசாலை உபகரணங்கள்
யாவற்றையும் பெற்றுக் கொள்ளலாம்.

# சஞ்சீவி மருந்தகம்

மானிப்பாய் வீதி, அரசடி ஆனைக்கோட்டை.

(கிராம சேவையாளர் அலுவலகம் முன்பாக)

---

கட்டடக் கலைக்கு ஒரு தாஜ்மகால்!
அச்சுக் கலைக்கு ஒரு வஸ்தியன்ஸ்!!

யாழ் நகரில் 90 வருட மக்கள் சேவையைக் கடந்து
வீறுநடை போடும் ஒரே அச்சகம்

வஸ்தியன்ஸ் அச்சகம்

எழுத்தாளர்களே! ஆசிரியர்களே!!

உங்கள் வெளிப்பாடுகள் எதுவானாலும்
தெளிவாகவும், நேர்த்தியாகவும் அழகிய
எழுத்துக்களில் அச்சாகப் பதிக்கின்றோம்.


# வஸ்தியன்ஸ் அச்சகம்

402, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பில், கிறேக் என்பவர்களின் மிகப்பெரிய எண்ணம்

## விண்வெளியில் 840 செயற்கைக் கோள்கள்



## நிறுத்துவதன் மூலம் உலகையும் கணனித் தொடர்பு மூலம் இணைக்க அமெரிக்காவிலுள்ள ரெலிடிசெக் எனும் மிகப்பெரிய கணனி நிறுவனமொன்று திட்டமிட்டுள்ளது. இது சாத்தியமா?

உலகின் ஆரம்பத்தில் எண்ணங்கள், பெரிய எண்ணங்கள், மிகப்பெரிய எண்ணங்கள் உருவாகின. அந்த வகையிலே பில்கேட்ஸ், கிறேக் மெக்காவ் என்பவர்கள் மிகப் பெரிய எண்ணத்தினைக் கொண்டிருக்கிறார்கள். கடந்த வாரம், இவர்கள் 840 தொடர்புச் செய்மதிகளை ஏவும் தமது திட்டத்தை வெளியிட்டார்கள். இது, தற்போது உலகை வலம் வரும் செய்மதிகளின் எண்ணிக்கை போன்று மூன்று மடங்காகும். அவ்வாறு செயற்படுத்தப்பட்டால், அநேகமாக எல்லோரும் ஒலிப்பதிவு மற்றும் நுணுக்கமான தரவுகளை அனுப்பவும், பெறவும் முடியும். இவர்கள் திட்டத்தை ஆரம்பிக்க எண்ணியுள்ள வருடமான 2,001, ஒலிப்பது போல் அவ்வளவு தூரத்தில் இல்லை. விசேடமாக கேற்/மொகாவ் என்பவர்களது தொழில் முயற்சிகளை ஒப்புநோக்கும் போது, அவ்வளவு தூரத்தில் இல்லை. ஏனைய மக்களையும், வாடிக்கையாளர், உற்பத்தியாளர், ஏன்? அரச முகவர்களையும் தமது திட்டத்திற்கு நிதியிடும்படி கோரியுள்ளனர். வேறு யாராவது இவ்வாறான திட்டத்துடன் முன்வந்திருந்தால், எள்ளி நகையாடப்பட்டிருப்பார்கள். ''ஜியோ பாட்னே(ர்)ஸ் றிசேச்'' என்னும்' கேம்பிரிஜ்யைச் சேர்ந்த பேரளவு தொலைத் தொடர்புகள் மதியுரை நிறுவனத்தின் ஜேம்ஸ் மூர் என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:- '' பொருத்தமற்ற எண்ணங்களை எடுத்து, அவற்றைச் செயற்படுத்துவதன் மூலம், மக்கள் கோடீஸ்வரராகிறார்கள். இவர்கள் இருவருமே இவ்விடயத்திற் செயல் வீரர்கள் என்று பெயர்பெற்றவர்கள்''.

38 வயதுடைய கேட்ஸ், (தேறிய பெறுமதி U. S. $ 6 பில்லியன்) உலகிலேயே மிகப் பெரிய ''கணனிக் கணிமம்'' Software) உற்பத்தி நிறுவனமான மைக்றோ சொ.:ப்பற்றினை (Microsoft) உருவாக்கினார். 44 வயதுடைய மெக்கோவ் தேறிய பெறுமதி U. S. $ 1 பில்லியன் செலுலர் (Cellular) செய்தித் தொடர்பு நிறுவனத்தினை ஏற்படுத்தினர். வோஷிங்ரனில் சேக்லன்ட் (Kerkland) என்னுமிடத்தில் உருவாகியுள்ள புதிய நிறுவனமான ரெலிடீசிக் (Teledesic) கோ(ர்)ப்பரேசனில், இவர்கள் ஒவ்வொருவரும் 30 சத வீதப் பங்கினைக் கொண்டிருக்கிறார்கள். நார் ஒளித் தொடர்பு அமைப்பு (Feber Optic delivery system) மூலம் சேவை வழங்கப்படாத உலகின் அபிவிருத்தி குன்றிய பிரதேசங்களுக்கும், கிராமப் புறங்களுக்கும் தகவல் நெடுஞ்சாலை அமைவது ரெலிடீசிச் செய்மதியே என இவர்கள் கூறுகிறார்கள். பொஸ்ரனில் உள்ள மாசசூசெற்ஸ் பொது வைத்திய சாலையிற் சேவையாற்றும், உயர் தொழில் தகைமை பெற்ற ஒரு வைத்தியர், ஆபிரிக்காவில் கள வைத்தியசாலை ஒன்றிற் சேவையாற்றும், வைத்தியருக்கு ஆலோசனை வழங்கக் கூடிய ஒரு நாள் வரும் என நம்புகிறார்கள். இருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

US$5 மில்லியன் டொலர் பணத்தை முதலிட்டுள்ளனர். இது, இவர்களுக்கு மிகவும் சிறிய தொகையாகும். மதிப்பிடப்பட்ட தொகையான US $9 பில்லியனில், மிகுதியைத் திரட்டுவதே இவர்கள் எதிர்நோக்கும் முதலாவது பிரச்சினையாகும். கடுமையான எதிர்க்கணைகள் தொடுக்கப்படும் போது, முதலீட்டைத் தேடுவது கடினமாகும். ஜோர்ஜ் வோஷிங்ரன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த செய்மதித் தொடர்பு நிபுணரான பேட் எடில்சன், தொழிநுட்ப ரீதியாகச் சாத்தியமற்றது என்கிறார். எவருமே, இவ்வளவு குறுகிய காலத்தில் மேற்கூறிய எண்ணிக்கையிற் செய்மதிகளை உருவாக்க முனையவில்லை எனவும், இவற்றை ஒழுங்காக ஏவுவது, மேலும் வியப்பூட்டும் செயலாகும் எனவும் சொல்கிறார். செய்மதித் தொழிலில் உள்ளவர்களால் ஏவப்படும் செய்மதிகளில் 20 சதவீதமானவை, அவற்றின் சுழல் பாதையை அடைவதில்லை என்கின்றார்கள். அத்துடன், ரெலிடீசிக், 840 செய்மதிகளையும் வெற்றியாக ஏவிவிட்டால், மீண்டும் ஆரம்பத்தில் இருந்து தொடங்க வேண்டும். ஏனெனில், இவர்கள் பயன்படுத்தும் செய்மதிகள் ஆறு ஆண்டுகள் மட்டுமே செயற்படக் கூடியவையாக இருக்கும் என்கின்றனர். இவர்கள் பெருமளவு எண்ணிக்கையான செய்மதிகளை அடிக்கடி மாற்றீடு செய்ய வேண்டும் என்கிறார் மூர்.

சுழல் பாதையில் சுற்றிக் கொண்டிருக்கும் இவ்வளவு எண்ணிக்கையான ஓர் அமைப்பினைப் பேணிப்பாதுகாத்தல், மேலும் சிக்கலான செயலாகும். 435 மைல் உயரத்தில், பூகோளத்தின் 95 சத வீதமான இடத்தை உள்ளடக்கக் கூடியவாறு, 21 வித்தியாசமான பாதைகளில் உலகைச் சுற்றிவரும். பொஸ்ரனில் உள்ள ''யாங்கி குறூப்'' (The Yankee Group) நிறுவனத்தின் தொழிநுட்ப ஆய்வாளரான ஹவாட் அண்டர்சனின் கருத்துப்படி, இவற்றையெல்லாம் ஒழுங்காக வைத்திருப்பதற்கு, பாதுகாப்புப் பெட்டகங்களின் இலக்கங்களைச் சுழற்றித் திறக்கும் நுணுக்கமான கைவிரல் போல, மிக நுணுக்கமாகச் செயற்படல் வேண்டும் என்கிறார்.

ரெலிடீசெக்கின் தலைவர் ரசல் டாக்காற், இத்தகைய இடர்களினால், தான் கலக்கமடையவில்லை என்கின்றார். 840 செய்மதிகளையும் உரிய நேரத்தில் உருவாக்குவது பிரச்சினையில்லை எனவும், இதற்காக மோட்டார் வாகன உற்பத்தியிற் பயன்படுத்தப்படும் தொடர்இணைப்பு உற்பத்தியைப் பயன்படுத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் கூறுகிறார். ஏவுவதும் பிரச்சினையில்லை என்கிறார். தற்போதுள்ள ஏவும் ஒழுங்கமைப்பிற்கேற்ப, ஒழுங்கமைக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடுகிறார். சில சமயங்களில், செய்மதிகளை ஏவுவதற்கு ஆயத்தமாகும் போது, தற்போதுள்ளதை விட, சிறந்த ஏவும் முறை கிடைக்கக் கூடும் என்கிறார். இந்தச் செய்மதிகளின் அசைவுகளை ஒருங்கிணைப்பதைப் பற்றியும் அவர் கவலை கொள்ளவில்லை. ரெலிடீசெக் பல பில்லியன் டொலர் பெறுமதியான அரசாங்கம் நிதியிட்ட நட்சத்திர யுத்தம் (Star War), செய்மதிப்பாதுகாப்புத்திட்டத்தின் (ஒருபோதும் நிஜமான வானத்திற் பரீட்சிக்கப்படாத) ஆராய்ச்சியிலேயே பெரிதும் தங்கியிருக்கும்.

தொழிநுட்பக் கஷ்டங்களுக்கு அப்பால், அரசியல் தடைகளையும் திட்டம் எதிர்நோக்குகிறது, அமெரிக்காவிலும், ஏனைய நாடுகளிலும் ஒழுங்குபடுத்தல் அனுமதியைப் பெற வேண்டியுள்ளது. கடந்த வாரம் ரெலிடீசெக், சமஷ்டித் தொடர்பு ஆணைக்குழுவிற்குத் தனது விண்ணப்பத்தைக் கொடுத்தது. மேலும் நூற்றுக்கும் அதிகமான நாடுகளில் அனுமதிகோர வேண்டும். கேட்ஸ், மெக்காவ் ஆகியோருக்குச் செல்வாக்கு இருந்தபோதும், ஆகக் குறைந்தது ஆறு வர்த்தக ரீதியான போட்டியாளர்களைச் சமாளிக்க வேண்டும். இவர்களிற் சிலர், சர்வதேசத்தொடர்பு முகவர்களோடு இணக்கங் கண்டுள்ளனர். இவற்றுள், மிகவும் முன்னணியில் நிற்பது மோட்டரலோ ஆகும். தற்போது 66 செய்மதிகளைக் கொண்ட 'இறிடியம்' என்ற செய்மதித்தொடர்பு அமைப்பிற்கு, US $800 மில்லியன் திரட்டியுள்ளது. இந்த அமைப்பின் இலக்குத் திகதி 1998 ஆம் ஆண்டு எனினும், திட்டம் குறிப்பிட்ட இலக்குத் திகதியை விட முன்நிற்பதாக, திட்டத்தின் நிறைவேற்று அலுவலர்கள் குறிப்பிடுகின்றார்கள். இரண்டு திட்டங்களும், அவற்றின் குறிக்கோள்களில் வேறுபடுவதாகக் குறிப்பிடுகின்றனர். டாக்காற்றின் கூற்றுப்படி, ரெலிடீசெக்கின் வாடிக்கையாளர்கள், வைத்தியசாலைகள், அரசநிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் போன்ற நிறுவனங்கள் எனவும், இறிடியத்தின் நோக்கம், உலகம் முழுவதும் செலூலர் தொலைபேசிச் சேவையை, குறிப்பாகக் கைத்தொழில் நாடுகளிற் பயணஞ் செய்யும் நிறைவேற்று அதிகாரிகளுக்குத் தொலைபேசிச் சேவையை வழங்குவது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ரெலிடீசெக் அலுவலர்கள் மிகவும் ஆரம்ப நிலையில் இருந்து தொடங்கினாலும், அவர்கள் மனோதைரியத்தில் முன்னுக்கு நிற்கிறார்கள். ஒரு தசாப்தத்திற்கு முன்னர் பெருங்கணனிகளை ஒருபோதும் தற்பயன்கணனிகள் மாற்றீடு செய்யாது என்று கூறியவர்களது கூற்றோடு ஒப்பிடுகின்றார்கள். இந்தத் தொழிநுட்பப் புரட்சியில், எதிர்காலத்தை முன்னோக்கிப் பார்க்கின்ற சிலரில் ஒருவர்தான், சீற்றிலைச் சேர்ந்த கவர்ச்சி இல்லாத மனிதர். அவர் பெயர் பில்கேஸ்.

பாபறா கன்ற்றோவிற்ஸ்
டானியல் மக்கின்

''நியூஸ்வீக்'', ஏப்ரல், 4, 1994

★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளி ஆய்வு

## சூரியக் குடும்பத்தில் ஒரு மோதல்

வான்வெளி வால் நட்சத்திரங்கள் அடங்கிய கூட்டம். வான்வெளியையும், வால் நட்சத்திரங்களையும் மக்கள் பன்னெடுங் காலமாக ஆராய்ந்து வருகின்றனர். கி. மு. 2000திற்கு முன்பு பபிலோனியர்கள் வால் நட்சத்திரங்களை ஆராய்ந்த செய்தியை அவர்களுடைய கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. வருடத்தைப் பன்னிரண்டு மாதங்களாக இவர்கள் வகுத்துள்ளனர். இந்தப் பன்னிரண்டு பிரிவுகளுக்கிடையே சூரியன் சஞ்சரிப்பதால் நடப்பவற்றையும் இவர்கள் ஆராய்ந்துள்ளனர், கி. மு. 500 ஆண்டளவில் கிரேக்கம். பபிலோன், சீனா, இந்தியா ஆகியவை வானிலுள்ள கோளங்களின் இயக்கத்தை ஆராய்ந்து சூரிய கிரகணங்களை முன்கூட்டியே அறிவிக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தனர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளி

கிரேக்க நாகரிகத்தின் உயிர் நாடி வானியலில் இருந்ததெனலாம். தேல்ஸ் ( Thales ) அரிஸ்டார்கஸ் ( Aristarches ) ( Pythagoras ) பைதகரஸ், டால்மி ( Ptolemy ) போன்ற தத்துவ ஞானிகள் வானததின் மர்மத்தை விளக்க முற்பட்டனர். அவர்கள் முக்கியமாகச் சூரியனைப்பற்றியும், சூரிய குடும்பத்தைப்பற்றியும் ஆராய்ந்துள்ளனர். அனக்சகோரஸ் (Anaxagoras) என்பார்சூரியனையும், வால்நட்சத்திரங்களையும்விஞ்ஞான பூர்வமாக விளக்கந்தர முயன்றுள்ளார். ஆனால் இவர்களெல்லோரும் சூரியனே பூமியைச் சுற்றி வருவதாகத் தவறாகக் கணித்து விட்டனர். என்றாலும் இவர்களுடைய ஆய்வுகளை நாம் குறைத்து மதிப்பீடு செய்தலாகாது.

கடந்த 200 வருட காலத்து அறிஞர்கள் இத்தவறைச் சரி செய்து விட்டனர். போலாந்து நாட்டு நிக்கலஸ் கோபனிக்கஸ் ( Nicolas Copernicus கி. பி 1473 – 1543 ) பின்வருவனவற்றை ஆதார பூர்வமாக விளக்கியுள்ளார். இப்புவி உட்பட கோளங்கள் யாவும் தமக்குச் சொந்தமான அச்சுக்களில் சுற்றிக்கொண்டு குறிப்பிடக்கூடிய ஓடுபாதையில் சூரியனைச் சுற்றி வருகின்றன. ஜோகான் கெப்பிளர் ( Johann keppler ) என்ற ஜேர்மனியர் ( 1571 – 1630 ) கோள்களின் அசைவுக்குரிய மூன்று பிரமாணங்களை வகுத்துள்ளார். பின்பு வந்த நியூற்றனின் ஆய்வுகளுக்கு இவை வழி அமைத்துள்ளன. கெப்பிளர் கோள்களின் பாதைகள் நீள் வட்டங்களென நிறுவினார். சேர் ஐசாக் நியூற்றன் ( Sir Isaac Newton ) ( 1642 – 1727 ) என்ற ஆங்கிலேயர் கோள்கள் தங்கள் பாதையில் சூரியனின் ஈர்ப்பு விசையால் நகர்கின்றன என்று நிரூபித்தார்.

இத்தாலிய அறிஞரான கலிலியோ ( Galileo ) 1564-1642 தான் செய்த தொலை நோக்கியைக்கொண்டு (Galilean Telescope ) வானியல் ஆராய்ச்சியில் பல பாரிய உண்மைகளைக் கண்டுள்ளார். அவர் முதன்முதலில் சூரிய குடும்பத்தையும், துணைக் கோள்களையும் ( Satellites ) நுணுக்கமாக ஆராய்ந்துள்ளார். சூரியனின் புள்ளிகள் ( Sunspots ) வியாழனின் ( Jupiter ) நான்கு பிரதான துணைக் கோள்கள், சனி ( Saturn ) அதன் வளையங்கள் வெள்ளி ( Venus ) ஆகியவற்றை அவர் ஆராய்ந்துள்ளார். முதன் முறையாக வியாழனின் நான்கு துணைக் கோள்களைக் கண்டுபிடித்தவர் இவரே ஆவார் சந்திரன் சம்பந்தமான ஆய்வுகளிலும் இவர் முன்னோடியாவார்.



*வியாழனைத் தாக்கப் போகும் வால்வெள்ளியைக் கண்டுபிடித்த ஷூமேக்கர் தம்பதிகள் அவர்களுடைய சக ஊழியர் டேவிற் லெவி இடது பக்கத்தில் காணப்படுகிறார்.*

ஆகவே வால் நட்சத்திரங்கள் தமது பொது மையத்தைப் பொறுத்து வான்வெளியில் ஓடிக்கொண்டிருக்கின்றன என்பது 18ஆம் நூற்றாண்டு வானிலையாளர்களின் முடிவு. பேரண்டத்தைப்பற்றிய பல புதிய தகவல்கள் வருகைதர தொலை நோக்கிகள் உதவுகின்றன. உலகின் முதலாவது பெரிய வானியல் தொலை நோக்கி இங்கிலாந்தில் செய்யப்பட்டுள்ளது. வானியல் தொலை நோக்கிகளை ஆறு விதமாக வகைப்படுத்தலாம். இவற்றுள் இங்கிலாந்தின் செசையா மாகாணத்தில் ஜொட்றல் கரையில் ( Cheshire Country – Jodrell Bank ) அமைக்கப்பட்டுள்ள வானொலித் தொலை நோக்கியும் ( Radio ) Telescope ) ஷிமித்ரகத் தொலைநோக்கியும் (Schmidt Flat Focal ) மிக முக்கியமானவையாகும்.

பேரண்டம் ஏறத்தாழ ஒரு முடிவில்லாத வெற்றிடமாகும். அதில் ஆங்காங்கு பொருள் குவிந்துள்ளது. இக் குவியல்களில் நாம் வசிக்கும் இப்புவி சூரிய குடும்பத்தின் மிகச் சிறிய உறுப்புக்களில் ஒன்றாகும். இக்குவியல்கள் அடர் குறைந்த துகள் கூட்டங்களாகவும், நைதரசன் வாயுவாகவும், வால் நட்சத்திரங்களாகவும், வால் நட்சத்திரக்கூட்டங்களாகவும் பர்ணமிக்கின்றன.சூரிய குடும்பத்தில் மிக அதிகமாகக் காணப்படும் தனிமம் நைதரசன் வாயு எனலாம். அடுத்த இடத்தை ஹீலியம் ( Helium ) வாயுவுக்குக் கொடுக்கலாம். நாம் இருக்கும் சூரிய அமைப்பில் ஒரு சூரியன் உட்பட ஒன்பது கோள்களும் (பூமி உட்பட ) அவைகளின் துணைக் கோள்களும் ( துணைக் கோளங்களைச் சந்திரன்கள் எனலாம் ) வேறு ஆயிரக் கணக்கான சிறிய பொருள்களையும் காணலாம். இச் சிறிய பொருள்களில் செவ்வாய்க்கும், வியாழனுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1910 ஆம் ஆண்டு காணப்பட்ட ஹேலியின் வால்வெள்ளி**

வால்வெள்ளி பூமிக்கும், வேறுகோள்களுக்கும் அபாயம் விளைவிக்கலாம் என்று அறியும் காலத்திற்கு முன்பாகவே மக்கள் வால்வெள்ளிகளின் வருகையை அச்சத்துடன் நோக்கியுள்ளனர்.

கி. மு. 1059 ஆம் ஆண்டில் இரண்டு சீன அரசர்களுக்கிடையில் போர் நடந்தபொழுது சீனாவில் இது காணப்பட்டுள்ளது. சீன வானியலாளர்கள் இதைக் குறித்து வைத்துள்ளனர்.

கி. மு 44 ஆம் ஆண்டில் ரோமாபுரியில் ஜூலியசீஸர் கொல்லப்பட்டபின் வால்வெள்ளியொன்று தோன்றியுள்ளது. கொல்லப்பட்டவரின் ஆவி மேலுலகம் செல்கின்றதென்று மக்கள் நம்பினார்கள். அக்கால நாணயங்களில் வால்வெள்ளி பொறிக்கப்பட்டுள்ளது.


1577 ஆம் ஆண்டு வால்வெள்ளி. இது மிகவும் பிரகாசமாக இருந்துள்ளது. ஆகையால் இது சூரியனைச் சுற்றி வருவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

1910 ஆம் ஆண்டு ஹேலியின் வால்வெள்ளி. இது 76 அல்லது 79 வருடத்துக்கு ஒருமுறை பூமியின் மேற் தோன்றும்.

காகூரெக்ஸ் வால்வெள்ளி. 1976 இல் இது பூமியில் நன்றாகத் தெரியுமென்று எதிர்பார்க்கப் பட்டுள்ளது. ஆனால், பூமியிலுள்ளோர் கண்ணில் அது தென்படவில்லை.

இடையிற் காணப்படும் சிறிய கோளங்களும் (Asteroid), சிறிய வால் நட்சத்திரங்களும், கொமெற் (Comet) எனப்படும் வால்வெள்ளிகளும், வீழ் வெள்ளிகள் என்றும், மிற்றியோறைற் (Meteorite) என்றும் அழைக்கப்படும், எரி நட்சத்திரங்களும் காணப்படும்.

ஒன்பது கோள்களில் மிகப் பெரியது வியாழன் (Jupiter). பூமியிலும் பார்க்க இது பத்து மடங்கு அகலம் உள்ளதாகும். மிகுதியான எட்டுக் கோளங்களை ஒன்று சேர்த்தாலும் வியாழன் கிட்டத்தட்ட இரண்டு பங்கு கூடுதலான பரப்பளவு கொண்டதாகும். கோளங்களில் மிகச் சிறியது புதன் (Mercury). எமது சூரிய வெளியின் பரப்பளவு 3,500 மில்லியன் மைல்கள் எனப்படுகிறது. அதாவது சூரியனிலிருந்து மிக அப்பாலுள்ள புளூட்டோ (Pluto) என்ற கோளம்வரையுள்ள தூரக்கணக்கின்படி ஒன்பது கோள்கள் பற்றிய வேறு பல விபரங்களை இணைப்பிற் காணலாம்.



எமது சூரியனை மேற்கூறிய கோளங்கள் துணைக் கோளங்கள் போல மிகச் சிறிய கோளங்களும், (Asteroids) வால் வெள்ளிகளும் (Comets) சுற்றிக் கொண்டிருக்கின்றன. இந்த ரக சிறிய கோளங்கள் சூரியனைச் சுற்றிக் கொண்டிருந்தாலும் அவை பெரும்பாலும் செவ்வாய், வியாழன் ஆகிய கோளங்களின் ஓடு பாதைகளுக்கிடையிலேயே காணப்படுகின்றன. இவை பாறைகளும், கனியங்களும் கொண்டவை. இவை 2,000 வரை இருக்கலாம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதில் மிகப்பெரியது 480மைல் குறுக்களவு கொண்ட செரஸ் (Ceres) என்ற சிறுகோள் என்பர். கொமெற் (Comet) எனப்படும் சூரியனோடு சுற்றுகின்ற சிறு துகள்கள், வாயுக்கள் உறைந்த நீர் ஆகியவற்றால் முற்றிலுமாகவோ, அல்லது பெரும்பான்மையாகவோ ஆக்கப்பட்ட ஒரு திரள் ஆகும். இவை சில மைல்கள் அகலமாக இருக்கும். முன்பக்கம் பந்து வடிவமாகவும், நீண்டதோர் வால் தொடுக்கப்பட்டதாகவும் இருக்கும். சாதாரணமாக வால் வெள்ளிகள் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. ஆனால் இரவில் அது சூரியனை நெருங்கும் போது முன்பக்கம் பிரகாசமாகவும், வால் ஒளி பொருந்தியதாகவும் இருக்கும். இவ்வாறு ஒளி பெறச் செய்வது சூரியனுடைய வெளிச்சமே. வால் வெள்ளிகளில் மிகவும் பிரபலமானது 76 வருடங்களுக்கு ஒரு முறை தோன்றும் ஹேலியின் (Halley's Comet) வால்வெள்ளியாகும். இது 1910, 1986, ஆகிய ஆண்டுகளில் காணப்பட்டுள்ளன. இவ்வால் வெள்ளிகள் அடிக்கடி சிதறுவதுண்டு. அப்படிச் சிதறும் போது சூரிய மண்டலப் பாதை எங்கணும் பரவுகின்றன. எரிசல் எனப்படும் இத்துகள்கள் பூமியின் வளி மண்டலத்திலும் பிரவேசிக்கின்றன. வால் வெள்ளிகளில் உறைந்த நீரும், வாயுக்களும் இருப்பதுண்டு. வால் வெள்ளிகளையும், சூரிய மண்டலத்தையும் அவதானிப்பதற்கு இன்றைய தொலை நோக்கிகள் பெரிதும் உதவுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னெடுங் காலமாக வியாழனின் ஈர்ப்புச் சக்தியால் சிறைப்பிடிக்கப்பட்டிருந்த வால் வெள்ளியொன்று 21 துண்டுகளாக உடைந்து வியாழன் மீது விழுந்தறுவாயில் இருப்பதாக அண்மையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு பெரிய மலையளவு துண்டு அடுத்த ஜூலை மாதம் 16 ஆந் திகதி வியாழன் மீது மோதுமென வானியல் வல்லுநர்கள் அறிவித்துள்ளனர். இதை அடுத்த ஆறு நாள்களில் வேறு துண்டங்கள் வியாழனைத் தாக்கலாம் எனவும் தகவல் வந்துள்ளது. தொடர்ச்சியான இத் தாக்குதல்களை நடத்தும் துண்டுகள் 4 கிலோ மீற்றர் குறுக்களவு உள்ளதாகவும் இருக்கும். வியாழனின் வழியில் இவை சில துகள்களாகச் சிதறலாம், அல்லது இதைத் தப்பிப் பாரிய குண்டுகளுக்கு ஒப்பான அதிர்வுடன் இக் கோளின் மீது விழலாமெனவும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். வியாழனின் வளி தடித்த களி போன்ற நைதரசன் வாயுக் கலவை கொண்டதாகும். இக் கோளை இது, சுற்றியிருப்பதால் பூமியிலிருந்து வியாழனின் தரையைக் கவனிப்பது இயலாதிருக்கின்றது. இத் துண்டுகள் இத் தடித்த வளியினுள் 24 கிலோ மீற்றர் அல்லது ஆகக் கூடுதலாக 400 கிலோ மீற்றர் வரைச் செல்லலாமென விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

இப் புவியில் வெடிக்க வைக்கப்பட்ட மிகப்பெரிய அணுகுண்டு 1961 ஆம் ஆண்டில் சோவியத் ருஷ்யாவில் வெடிக்க வைக்கப்பட்டுள்ளது. இக் குண்டு வெடிப்பு 58 மெகா தொன் சக்தியை வெளியேற்றியுள்ளது. 21 துண்டங்களும் 6 நாள்கள் தொடர்ச்சியாக நடத்தப்போகும் தாக்குதல் 20 மில்லியன் மெகா தொன்வரைச் செல்லலாமெனக் கணக்கிடப் பட்டுள்ளது. இப்போது தெரிகிறதா? இம் மோதலின் தாக்கத்தை. இத் தாக்குதலின்பின் 2, 400 கிலோ மீற்றர் உயரத்திற்கு வியாழனின் தடித்த வளி எழலாமென்றும் தெரிவிக்கப்படுகின்றது. மிகப் பெரியதான வியாழன் தாக்குதல் நடந்த சில மணித்தியாலங்களுக்குப் பெரியதோர் மணிபோல் அதிர்ச்சி அலைகளை அனுப்புமென்றும் விஞ்ஞானிகள் இயம்புகின்றனர். வியாழனின் அதிசயமென அதன் கண் போன்ற சிவப்புநிறப் பெரும் புள்ளி வர்ணிக்கப்பட்டுள்ளது. இது ஹீலியம் வாயுவாக இருக்கக்கூடும். மோதலுக்குப் பின் இது கூடுதலான பிரகாசத்துடன் தோற்றலாம். அல்லது இன்னுமொரு கண் வியாழனில் ஏற்படலாமெனவும் வானியலாளர்கள் கருதுகின்றனர். இந்த மாற்றங்களைப் பூமியிலிருந்து பார்வையிடலாமென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மனிதத்தின் அறிவியல் வரலாற்றில் இது போன்ற பாரிய பிரபஞ்ச மோதலைத் தொலை நோக்கிகள் மூலம் பார்வையிடும் சந்தர்ப்பம் இதற்கு முன் ஒரு போதும் கிடைக்கவில்லை. வானியல் ஆர்வலர்கள் யாவருடைய கண்ணுங் கருத்தும் இந்த நிகழ்வைப் பார்வையிடுவதிலும் இதனால் வரப்போகும் விளைவுகளை ஆராய்வதிலும் செலுத்தப்படுகின்றது. இது போன்ற தொடர்ச்சியான மோதலொன்று அல்லது பல, பூமியின் மீதும் நடக்கலாமென விஞ்ஞானிகள் எதிர்வு கூறத் தொடங்கியுள்ளனர். 65 மில்லியன் வருடங்களுக்கு முன் பாரிய, வால் வெள்ளியொன்று பூமியில் வீழ்ந்ததால், அக்கால கட்டத்தில் பூமியிற் காணப்பட்ட டைனோசர் உயிரினமும், வேறுபல பூதாகரமான நிலம் வாழ் உயிரினங்களும் அழிந்திருக்கலாமென்பது விஞ்ஞானிகளின் நம்பிக்கை. ஆகவே வியாழனில் நடப்பது வெறுங் காட்சியல்ல. அது எமக்கோர் எச்சரிக்கை என்றால் மிகையாகாது.

கோளங்கள் (Planets) இன்றைய உருவத்தைப் பெறுவதற்கு வால் வெள்ளிகள் மற்றும் சிறு கோளங்கள் (Asteroids) ஆகியவற்றின் இவ்வாறான மோதுதல்கள் பெரிதும் உதவியுள்ளன. மோதிய அடையாளங்கள் புவியிலும் மற்றைய கோளங்களிலும் காணப்படுகின்றன. சந்திரனில் காணப்படும் பாரிய கிடங்குகள் இவ்வாறு ஏற்பட்டிருக்க வேண்டுமென விஞ்ஞானிகள் கருதுகின்றனர். புதனிலும் (Mercury) இதுவே நடந்திருக்க வேண்டுமென அவர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் இப் புவியில் உயிரினம் தோன்றுவதற்கும் அதன்மேல் வீழ்ந்த வால் வெள்ளிகளும், சிறு கோள்களும் காரணமாகலாம் என்றும் ஆய்வாளர்கள் முடிவெடுத்துள்ளனர். வால்வெள்ளியின் நீண்ட வாலில் உறைந்த நீரும், வாயுக்களும் உயிரற்ற கோளத்தில் விழும்போது அங்கு உயிரினம் தோன்ற வாய்ப்பு உண்டாகுமென்று உயிரியல் வல்லுநர்கள் ஆதார பூர்வமாக நிருபித்துள்ளனர். வால் வெள்ளியின் வாலிலுள்ள உறைந்த நீர் எமது சமுத்திரங்கள், கடல், வேறு நீர் நிலைகள் என உருவெடுத்திருக்கலாமென்பது இவர்கள் முடிவு. ஆகவே உயிரினத் தோற்றத்திற்கும், அழிவிற்கும் இத்தகைய பாரிய மோதல்கள் காரணமெனக் கற்றறிந்தோர் இயம்புகின்றனர்.

இவ்விடத்தில் வியாழனைப் பற்றி இன்னும் சில விபரங்கள் சொல்லவேண்டி இருக்கின்றது. கோளங்களில் இராட்சதன் எனப் பெயர் வியாழனுக்கு உண்டு. பூமியிலும் பத்து மடங்கு அகலமாகவும், பூமியிலும் 300 வீதம் பெரிதாகவும் வியாழன் இருக்கின்றது. இது பூமியிலும் பார்க்க மூன்று தடவை வேகமாகத் தன்னைத்தான் சுற்றுகிறது. வியாழனின் ஒரு நாள் பத்து மணித்தியாலங்களைக் கொண்டதாகும். அது மிகவும் பின் தங்கிய கோளம் எனப்படுகிறது. சூரியனைப் போல் வியாழனும், நைதரசன் ஹீலியம் வாயுக்களால் பெரும்பாலும் அமைந்த ஒரு பந்து எனலாம். ஆனால், சூரியனைப் போல் எரிந்து ஒளி பரப்ப அமுத்தம் போதாது என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். வியாழனைப் 16 துணைக்கோளங்களும், சிறிய துணைக்கோளங்களும் (Asteroids) வால் வெள்ளிகளும் சுற்றியவண்ணமிருக்கின்றன. பதினாறாவது துணைக் கோளங்களில் மிகப் பெரியவற்றைக் கலிலியோ 1610 இல் கண்டுபிடித்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாழனில் புயல் பன்னெடுங் கால மாக வீசிக் கொண்டிருக்கிறது. ஆனால் தங்கள் இடத்தை விட்டுப் பெயருவதில்லை. வியாழனின் கண் ணென வர்ணிக்கப்படும் சிவப்புப் புள்ளி ( Red Spot ) 1664 இல் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. வியா ழனின் 16 ஆவது துணைக் கோள் களில் ( சந்திரன்கள் ) எரிமலைகள் வெடித்த வண்ணம் இருக்கின்றன. வியாழனைப் பற்றிய பல விடை தெரியாத வினாக்கள் எழுப்பப் பட்டுள்ளன. அங்கு வீசும் புயலின் காரணமென்ன? அதன் உள்ள கத்தை மூடி மறைத்திருக்கும் 60,000 கிலோ மீற்றர் தடித்த ''முகிற் கூட்டத்தின்'' மர்மம் என்ன? உள்ளகம் எவ்வாறு அமைந் துள்ளது என்பவை ஒரு சிலவாகும். ஜூலை 16-க்குப் பின் சில விடை கள் தெரியவரலாமென எதிர் பார்க் கப்படுகிறது.

இந்த வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த வால் வெள்ளியைத் தங்கள் சொந்தத் தொலை நோக்கி மூலம் கண்டுபிடித்தவர்கள்: வானி யலைத் தமது வாழ்வுப் பணியா கக் கொண்ட மூவர்கள். இவர்கள் வானத்தை நோக்க, 18 அங்குல ஷிமித் ( Schmidt ) ரகத் தொலை நோக்கியைப் பாவித்துள்ளனர். இயூஜீன் ஷூமேக்கர் வயது 66. அவரது மனைவி கரோலின் வயது 64. டேவிற் லெவி ( ஆண் ) வயது 45. என்ற இந்த மூவரும் மார்ச் 23, 1993 ஆம் ஆண்டு குறிப்பிட்ட வால் வெள்ளியைக் கண்டுபிடித் துள்ளனர். கணவன், மனைவி இரு வரும் அமெரிக்கர்கள். அடுத்தவர் கனேடியர். இந்த வால்வெள்ளி வர லாற்றை இவர்களும் ஏனைய வானி யல் நிபுணர்களும் பின்வருமாறு கற்பனை செய்கின்றனர். இந்தப் பாறைகளும் துகள்களும், உறைந்த நீரும் வாயுக்களும் நிரம்பிய ''பந்தும் வாலும்'' 4.5 பில்லி யன் வருடங்கள் வான் வெளியில் அலைந்திருக்கிறது. காலப்போககில் இதன் எடையும், உருவமும் பெருத் திருக்கலாம்; சில தசாப்தங்களுக்கு முன்பாக வியாழனின் ஈர்ப்பு விசை யில் அது அகப்பட்டுள்ளது. வியா ழனைச் சுற்றிக் கொண்டிருக்கும் காலத்தில் ஜூலை 7, 1992 இல் அது பல துண்டங்களாக உடைந் துள்ளது. தலைப் பகுதியைத் தாய் என்றும், மிகுதியானவற்றைப் பெண் பிள்ளைகள் என்றும் விஞ் ஞானிகள் தங்கள் சங்கேத மொழி யில் அழைக்கின்றனர். இந்த வால் வெள்ளியைக் கண்டுபிடித்த மூவ ரும் அழியாப் புகழ் பெற்றுள்ள னர். இதனாலேயே இந்த வால் வெள்ளிக்கு ஷூமேக்கர்-லெவி ( Shoemaker Levy ) என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. இவ்விடத்தில் பேராசிரியர் றோயில் அவர்களு டைய வரிகளை நினைவு கூருவது மிகப் பொருத்தம். ''பேரண்ட நிகழ்வுகள் ஏன் நடக்கின்றன? பேரண்டத்தில் பிறக்கும் பொருள் கள் எங்கிருந்து வருகின்றன? இவ் வாறான வினாக்கள் பயனற்றவை யாகும்.''

ஆதாரம்:

1. The Frontiers of Astronomy.
2. ரைம், மே 23, 1994.
3. Galileo

Chundikuli Branch Library

தென் கொரியா;-

## கடும் விமர்சனங்களின் தொடக்கம்

ஜேர்மனியிலிருந்த 81,000 தொன் ருஷ்யச் சன்னங்களுக்கு என்ன நடந்தது? ஜேர்மன் அதி காரிகள் இதைக் கண்டு பிடிக்க ஆவலாய் இருக் கிறார்கள். ஆனால், இதுவரை ருஷ்யர்கள் திருப்தி யளிக்கும் பதில் எதையும் தரவில்லை. ஆகஸ்ற் 31 இல், முன்னாள் கிழக்கு ஜேர்மனியிலிருந்து, ருஷ்யத் துருப்புக்கள் முழுவதும் திருப்பி அழைக் கப்பட்டுவிடுவர். இதற்கு முன்னதாக, விடை காண் பதற்கு இரு பகுதியினரும் முயற்சி செய்யும் பல கேள்விகளுள் இதுவும் ஒன்று. இந்தக் காணாமற் போன சன்னங்களுள், துப்பாக்கிச்சன்னங்கள், டாங்கிச் சன்னங்கள், கனரக எறிகணைகள் என் பன அடங்கும். இவை, 1991 இல் திருப்பி அழைத்தல் ஆரம்பித்த போது, ருஷ்யத் தரப்பினர் ஜேர்மனியில் தாம் வைத்திருப்பதாகக் கூறிய 6,77,000 தொன் சன்னங்களில் ஒரு பகுதி யாகும்.

இச் சன்னங்கள், பயிற்சிகளின் போது பயன்படுத்தப்பட்டு விட்டன என்ற ருஷ்யாவின் கூற்றை ஜேர்மனியின் இராணுவ அதிகாரிகள் நம்புவதாக இல்லை. அத்துடன், பேர்ளினுக்கு அருகிலுள்ள வூன்ஸ்டோர்:ஃபில் உள்ள ருஷ்யத் தளத்தில் இவை புதைக்கப்பட்டுள்ளன என்ப தையோ, அல்லது இவை கறுப்புச் சந்தையில் விற்கப்பட்டு விட்டன என்பதையோ கூட, அவர் கள் நம்பவில்லை. (ருஷ்யத் தளத்திற்கு ஜேர்மன் அதிகாரிகள் செல்ல அநுமதி மறுக்கப்பட்டுள்ள படியால், இக் கூற்றினை உறுதி செய்ய முடியா துள்ளது.) முன்னாள் சோவியத் யூனியன், தனது இராணுவப் பலத்தை உள்ளதிலும் கூடு தலாக வெளி உலகுக்குக் காட்டி வந்துள்ளதைப் பார்க்கும் போது, கணக்குகளிற் போடப்பட்ட இத்தொகை பெருமளவு உயர்த்திக் காட்டப்பட்ட தாக இருக்கலாம் என்று நினைக்க வேண்டி இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழா! நீ பரவாயில்லை

## அமெரிக்காவில், ஒரு ருஷ்ய விண்வெளி வீரன்



கிறிகாலெவ் நாளொன்றுக்கு 16 மணித்தியாலம் பயிற்சி செய்கிறார். நீரில் மிதக்கும் பயிற்சியும் அதில் அடங்கும்.

அமெரிக்காவும், ருஷ்யாவும் கூட்டாக விண்வெளி ஆய்வில் ஒரு பொது வேலைத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாகத் தனது மனிதர்கள் அடங்கிய அடுத்த விண்வெளிப் பயணத்தில் ஒரு ருஷ்யனைச் சேர்க்க அமெரிக்கா ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த ருஷ்ய விண்வெளிப் பயணி ஏற்கனவே 15 மாதங்கள் நீடித்த பயணங்களை ருஷ்யக் கலங்களில் இரு தடவை மேற்கொண்ட அநுபவ முதிர்ச்சி உள்ளவர் ஆவார்.

நாசாவில் அவர் இப்போது நாளொன்றுக்கு 16 மணித்தியாலங்கள் நீடிக்கும் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். அவருடைய மனைவியும், மகளும் புளோறிடாவில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட விடுதியில் இருக்கின்றார்கள். அவருடைய மனைவி ருஷ்யாவில் ஓர் இலத்திரனியற் பொறியியலாளர் என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவில் தனது வீட்டு வேலைகளைக் கவனிப்பதும், கணவனின் வருகைக்காகக் காத்திருப்பதுமாகக் காலம் போக்குகின்றார். ''ஆரம்பத்தில் என்னைப்போல எனது மனைவிக்கும் ஆங்கிலம் சிறிதளவேனும் தெரியாது'' என்று மேற்கூறிய ருஷ்யர் கூறுகின்றார். இந்த ருஷ்ய விண்வெளி வீரருக்கு அமெரிக்கர்கள் கொடுத்த செல்லப் பெயர் 'ஸ்பெஷல் கே.' என்றாலும் அவருடைய உண்மைப் பெயர் சேர்கி கிறிகாலெவ் (Sergei Krikalev). மூன்று தசாப்தங்களாக நாசா விண்வெளி ஆய்வில் ஈடுபட்டாலும் ஒரு ருஷ்யரைத் தனது திட்டங்களில் வரவேற்பது இதுவே முதல் தடவை. பெப்ரவரி மாதம் விண்வெளி ஓடமொன்று நாசாவின் மேற்பார்வையிற் கிளம்பவிருக்கின்றது. அதில் கிறிகாலெவ் செல்வது உறுதி. அமெரிக்கர்களின் விண்கலமொன்றில் ஏறிச் செல்லும் முதலாவது ருஷ்யர் என்ற பெருமை இவருக்கு நிச்சயம் உண்டு.

1975 ஆம் ஆண்டு அமெரிக்காவின் ''அப்பலோ'' விண்கலமும், ருஷ்யர்களுடைய ''சோயுஸ்'' என்ற பெயருடைய விண்கலமும் விண்வெளியிற் சந்தித்துக் கொண்டன. அது ஒரு விளம்பரம் போன்ற நடவடிக்கையே. ஆனால் கிறிகாலெவ் ஒரு பொறுப்பு வாய்ந்த கடமைகள் நிறைந்த ஆய்வாளராகவே இம்முறை செல்கின்றார். விண்வெளியிலிருந்து தான் செல்லும் ஓடத்திற் பொருத்தப்பட்டிருக்கும் கருவியாற் செய்மதியொன்றைப் பிடிப்பதுதான் இவருடைய வேலை. 15 மீற்றர் நீளம் உள்ள இந்தக் கருவியை இயக்குவதில் அவருக்கு ஒரு கஷ்டமும் இல்லை, ருஷ்யர்களுடைய கலங்களிற் பெரும்பாலும் இருவருக்கு மேல் செல்வதில்லையென்றும்; ஆகையால் சகல கடமைகளையும் இந்த இருவரே செய்ய வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். ஆனால் அமெரிக்கர்களுடைய ஓடங்களில் ஐந்திலிருந்து ஏழுபேர் வரை பிரயாணஞ் செய்வதாலும், கடமைகள் யாவும் சரிசரிசமானமாகப் பங்கீடு செய்யப்பட்டிருப்பதாலும் வேலைப் பாரங் குறைவு என்று கூறியுள்ளார். தேவையில்லாத மனக் கஷ்டம் ஏற்படும் என்ற காரணத்தினால் இரு நாடுகளின் தொழில் நுட்பத்தை ஒப்புநோக்குதல் செய்ய அவர் மறுத்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிகாலெவ்வின் பயணம் அமெரிக்க ருஷ்ய விண்வெளி உறவிற் புதிய சகாப்தத்தைத் தொடக்கி வைக்கும். இரு நாடுகளும் சமபங்காளிகளாக விண்வெளி ஆய்வுக் கூடமொன்றைக் கட்டிப் பராமரிக்கவும் இது வழிகோலும். கிறிகாலெவ்வின் பயணம்போன்று அமெரிக்கர்களும் ருஷ்யர்களுடைய கலங்களில் வலம் வருவர். நாசாவுக்குச் சமமான ருஷ்ய நிலையங்களில் அமெரிக்க விண்வெளி வீரர்கள் பயிற்சி பெற வெகு விரைவில் ருஷ்யா செல்வார்கள்.

கிறிகாலெவ் பழகுவதற்கு எளிதான மனிதன். அமெரிக்காவுக்கு வரும்போது ஆங்கிலப் பற்றாக் குறையால் தவித்தாலும் இப்போது ஓரளவு இம் மொழியில் உரையாடக் கற்றுக்கொண்டுள்ளார். அவர் நட்புரிமையுடன் பின் வருமாறு சொல்கிறார்: அமெரிக்காவில் மூன்றுவித மொழிகள் உண்டு. ''அமெரிக்க ஆங்கிலம், ரெக்சாஸ் மாநில ஆங்கிலம், நாசா ஆங்கிலம்''. இவருடைய வேலைத் திறனை அமெரிக்க விஞ்ஞானிகள் மிகவும் மெச்சுகின்றனர். இரு நாடுகளின் விண்வெளித் திட்டங்களின் பொது எதிர்காலம் கிறிகாலெவ் பிரவேசத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

''ரைம்'' பெப்ரவரி 07, 1994.

---

லெபனான்:

## பெய்ரூட் எவருக்குச் சொந்தம்?

லெபனானின் 15 ஆண்டுக்கால உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டாலும், அந்தக் குருதி வெள்ளம் பாய்ந்த பிணக்குக்கு வழிசெய்த முறுகல் நிலைகள் இன்னும் நிலவுகின்றன. குண்டுமாரி பொழிந்து, சீரழிந்து போயுள்ள நகரின் மத்தியபகுதியை மீண்டும் கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கு, அவை அச்சுறுத்தலாக உள்ளன. கடுங்கோட்பாட்டு ஹிஸ்புல்லாக் குழுவின் ஆத்மீகத் தலைவரான சீக்முகமட் உறுசெயின் படல்லா, லெபனானின் கோடிஷ்வரப் பிரதம மந்திரியான ராஃபிக் ஹரீரியால் வழிநடத்தப்படும் தனிப்பட்ட கட்டடப் புரனமைப்பு நிறுவனமான சொலிடெயார் நிறுவனத்துடன் தொடர்பு ஏதும் வைக்க வேண்டாம் என்று, ஒரு கட்டளை பிறப்பித்துள்ளார். சொலிடெயாரிடம் பங்குகள் பெற்றுக்கொண்டு, அரசு அதற்கு ஏகபோக உரிமை கொடுத்துள்ளதால், நிலச் சொந்தக்காரர்கள் தங்கள் நிலத்தை அந்த நிறுவனத்திற்கே விற்கக் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் என்று படல்லா கூறுகிறார். அவ்விதம் அவர்கள் நிலத்தை விற்க மறுத்தால், அவர்கள் தங்கள் நிலத்தை இழக்கவும், அதற்குப் பதிலாக எதுவும் கிடைக்காமற் போகவும் நேருகின்றது என்று சாட்டப்படுகிறது. இஸ்லாமியச் சட்டப்படி, வர்த்தக நடவடிக்கைகள், வாங்குபவர் விற்பவர் ஆகிய இரு சாரா ருக்கும் திருப்தி அளிப்பனவாக இருக்க வேண்டும் என்பதால்தான், இந்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சொலிடெயார் நிறுவனம், அந்த வேலைத் திட்டத்தின் மொத்தப் பெறுமதியின் மூன்றில் ஒரு பங்கான 926 மில்லியன் டொலர் தொகையை ஏற்கனவே சேர்த்துவிட்டது. ஆனால், பணத்திலும் பார்க்க, பிணக்குத்தான் பலங் கொண்டதாக உள்ளது. ஈரானின் உதவியுடன், 1980 களிற் பல பணயக் கைதிகளும், பயங்கரத் தாக்குதல்களும் நடத்திய படல்லாவும், ஹிஸ்புல்லாவும், ஹராரியின் அரசாங்கத்துடன் பகைப்பட்டு நிற்கின்றன. ஹராரியின் அரசு, கிறிஸ்தவர்களையும், சுண்ணி முஸ்லிம்களையும் இணைத்து, அரசியல் ஒற்றுமை உண்டாக்கப் பார்க்கும் பொழுது, முன்னாளில் அதிதீவிரமாக இருந்த ஹிஸ்புல்லாவைப் பின்பற்றும் ஷிகா முஸ்லிம்கள், இந்தக் கட்டடவேலையில் பங்கு பற்றாததுடன், மற்றவர்கள் பங்கு பற்றுவதிலும் இடையூறு விளைவிக்கக்கூடும்.


Chundikuli Branch Library



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டும் வினையும்

**1994 ஆம் ஆண்டு ஒலிம்பிக்ஸ் பனிச்சறுக்கற் போட்டியில் அமெரிக்கர்களின் கனவுக்கன்னி நான்சி வெற்றி பெற்றார்.**



*வெற்றிக் களிப்பில், வெள்ளிப் பதக்கம் அணிந்தபடி நான்சி கெறிகன்.*

அமெரிக்க நகரங்கள் தோறும் காணப்படும் விசாலமான விளையாட்டு அரங்குகளில் நடக்கும் ஓட்டப்பந்தயம், அமெரிக்கப் பாணியிலான உதைபந்தாட்டம், பனிச்சறுக்கல், குத்துச் சண்டை ஆகியவற்றைப் பார்ப்பதிலும், பங்கெடுப்பதிலும் இந்த நாட்டு மக்களுக்குப் பேரார்வம். நேரில் தரிசிக்க முடியாதவர்கள், தொலைக்காட்சிப் பெட்டி முன் தவங் கிடந்து கண்டு களிக்கின்றனர். இதற்கு மிகவும் நெருங்கிய, இரண்டாவதாக வரும் பொழுது போக்கு, கொலை சம்பந்தமான பத்திரிகைச் செய்திகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் ஆகியவற்றைப் படிப்பதும், ஆராய்வதுமே. கொலையிற் பங்குபற்றுவதிலும் அவர்களுக்கு நிறைய ஆர்வமுண்டு என்று, ஒரு தர்க்கவாதி சொல்வதிலும் ஓரளவு உண்மையுண்டு. விளையாட்டுப், கொலையும் ஒரே சம்பவத்திற் கலந்து விட்டால், அமெரிக்கர்கள் பாடு கொண்டாட்டந் தான். பழம் நழுவிப் பாலில் வீழ்ந்த கதைதான்.

உலகில், மிகவும் வேகமான விளையாட்டுக்களில் ஒன்று பனிச்சறுக்கல். இரண்டு காலணிகளுக்கும் கீழ் கூர்மையான தகடுகளைப் பொருத்தி, நீள்வட்டமான பனிக்கட்டி மேடையில் ஆண், பெண் இரு பாலாரும் ஓடி ஆடி மகிழ்வர். பின்னணியில் ஒலிக்கும் இசைக்கு ஏற்ப நடனம் ஆடுவர். கலை அம்சங்கள் நிறைந்து, நெஞ்சை அள்ளும் கவர்ச்சி நிறைந்த விளையாட்டு, பனிச்சறுக்கல். ஒலிம்பிக்ஸ் சர்வதேசக் குளிர்காலப் போட்டிகளில் இதற்கும் முன்னணி இடம் உண்டு. நோர்வே நாட்டில் நடக்கும் 1994 ஆம் ஆண்டுப் போட்டிகளிற் பங்கேற்க, இரு அமெரிக்கப் பெண்கள் பலகாலம் அசுரப்பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வேளையில், ஒரு திடுக்கிடும் சம்பவம் நடந்து உள்ளது.

பெப்ரவரி 1994 இல் அமெரிக்கத் தேசியப்பனிச்சறுக்கற் போட்டிகளிற் பங்கெடுப்பதற்காக நான்சி கெறிகன் (Nancy Kerrigan) என்ற இளநங்கை பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது, அவருடைய கால்களை நோக்கி ஓர் இரும்புக் கம்பி வீசப்பட்டுள்ளது. இது ஒருகொலை முயற்சியே. அமெரிக்க உள்நாட்டுப் புலனாய்வுத்துறை எப். பி. ஐ: தலையிடவேண்டியது அவசியமாயிற்று. இரும்புக் கம்பியை வீசியவர், ரோனியா ஹார்டிங் என்கிற இன்னுமொரு பனிச்சறுக்கல் வீராங்கனையின் முன்னாள் கணவர் என்று நிரூபணமாயிற்று. இவன் கைது செய்யப்பட்டபின், மேற்கூறிய ரோனியா தன்னை ஏவியதாக, ஒப்புதல் வாக்குமூலம் அளித்து உள்ளான். நான்சி உயிர் தப்பியதே, ஓர் அபூர்வமான நிகழ்ச்சி. முதுகில் பலமான அடி. மருத்துவமனையிற் பல வாரங்கள் சிகிச்சை நடைபெற்றது. எழுந்து நடமாடுவாரோ என்று கூட, சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசியப் போட்டிகளில் அவர் கலந்து கொள்ள வாய்ப்பில்லாமற் போய் விட்டது.

எரிச்சல், பொறாமை முதலிய காரணங்களால் உந்தப்பட்டு, ரோனியா ஹார்டிங் இக்கொலை முயற்சியைத் தூண்டினார்; மூல காரணமாயிருந்தார் என்று, எப். பி. ஐ நம்புகின்றது. இதற்கிடையில், மார்ச் முதலாம் திகதி சர்வதேசப் பனிச்சறுக்கற் போட்டிகள் நடக்குமென்று அறிவித்தல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நான்சி கெறிகன் நடப்பாரா ? பனிச்சறுக்கற் காலணிகளை அணிவாரா ? பனிக்கட்டி மேடையில் ஏறுவாரா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிகளிற் பங்குபற்றுவாரா? என்று பட்டி தொட்டியெல்லாம் கேள்விகள் எழுந்தன. நான்சி, மருத்துவ மனையை விட்டு வெளியேறினார். தீவிரப்பயிற்சியில் இறங்கினார். அமெரிக்கப் பனிச்சறுக்கற் கோஷ்டி நோர்வேக்குச் சென்ற போது, நான்சி கெறிகனுக்கும் அதில் இடம் கிடைத்துள்ளது. அந்தக் கோஷ்டியில் இன்னுமொருவர் ரோனியா ஹார்டிங். அமெரிக்கர்களின் ஆர்வம் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. நோர்வே நாட்டிற்குப் போக முடியாதவர்கள், தொலைக் காட்சிப் பெட்டியை மலைபோல் நம்பிஇருந்தனர்.

மார்ச் மாதம் வெள்ளிக்கிழமை 4 ஆம் திகதி, நோர்வே நாட்டின் லில்லிகாமா அரங்கில், பெண்களுக்கான போட்டிகள் ஆரம்பமாகின. தனது வாழ்நாளில், நான்சி இவ்வளவு உன்னதமாக ஆடியது கிடையாது என்கிறார் ஒரு விமர்சகர். அவருக்குப் போட்டியாக வாய்த்தவர், உக்ரேயின் நாட்டைச் சேர்ந்த ஒக்சானா பாய்உல் (Oksana Baiul ). இப்பெண் 16 வயதுச் சிறுமி. ரோனியா, இறுதிப் போட்டிகளில் இருந்து தரக் குறைவால் நீக்கப்பட்டுள்ளார். இறுதிப் போட்டி நான்சிக்கும், ஒக்சானாவுக்கும் இடையில் நடைபெற்றது. இருவருக்கும் சமமாகவே, நடுவர்களாக இருந்த ஒன்பது நாட்டவர்களும் புள்ளிகள் வழங்கியுள்ளனர். பனிச்சறுக்கற் போட்டியில் எப்போதும் புள்ளிகள் இரண்டு பிரிவாக வகுக்கப்படுகின்றன:- விளையாட்டு நுட்பம், கலையம்சம் என்பனவே அவை. ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த நடுவர், கலையம்சப் பிரிவில் 2 கூடுதலான புள்ளிகளை ஒக்சானாவுக்குக் கொடுத்ததால், அவருக்குத் தங்கப்பதக்கமும், நான்சிக்கு வெள்ளிப் பதக்கமும் கிடைத்துள்ளன. மூன்றாவதாக வந்த, சீனாவைச் சேர்ந்த லூசென் (Lu chen) என்ற காரிகை வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

போட்டி முடிவுகள் எப்படி இருப்பினும், அன்றைய கதாநாயகி நான்சி கெறிகன் என்பதில் ஐயமில்லை. மரணப் படுக்கையிலிருந்து எழுந்து அவர் போட்டிக்கு முகங் கொடுத்த விதம், நம்மவர் எல்லோரையும் கவர்ந்துள்ளது. அமெரிக்கர்கள் எம்மாத்திரம்? 100 மில்லியன் அமெரிக்கர்கள் இப்போட்டியைத் தமது தொலைக் காட்சிப் பெட்டிகளிற் கண்டு களித்ததாகக் கணக்குகள் வெளிவந்துள்ளன. நேரிற் பார்த்தவர்களின் விபரங்கள் வெளிவரவில்லை. வோல்ற் டிஸ்னி திரைப்பட நிறுவனம், அவருக்கு ஒரு மில்லியன் டொலர் ஒப்பந்தம் ஒன்றைக் கொடுத்துள்ளது. தங்கள் விளம்பரங்களில் நான்சியின் பெயரை தொடர்புபடுத்த அநுமதி வேண்டி, பணப்பையுடன் தொடர் வரிசையிற் பலர் நிற்கின்றனர். அவர் செல்லுமிடமெல்லாம், காலுக்கடியில் றோசாப் பூக்கள் தான். (Roses, Roses All The Way).

ஒக்சானாவையும் நாம் மறக்கக் கூடாது. சென்ற வருடம் (1993) ஐரோப்பியப் போட்டிகளில், தனது பதினைந்தாவது வயதில் இவர் முதற் பரிசைப் பெற்றுள்ளார். இப்போது, ஒலிம்பிக்ஸ் பதக்கத்தையும் தன் வசமாக்கியுள்ளார். இவருடைய சுயசரிதை மிகவும் பரிதாபமானது. இவர் இரண்டு வயதாக இருக்கும்போது, இவருடைய தந்தை குடும்பத்தைக் கைவிட்டுள்ளார். இவருடைய 13 வயதில் தாய் இறந்து விட்டார். இவருக்குப் பயிற்சி கொடுத்து வந்த கலினா சீமிஸ்விக்கியா என்ற பெண், இவரைத் தமது மகளாக ஏற்றுக் கொண்டுள்ளார். இவரும் அமெரிக்காவிற்குச் சென்று, தனது திறனை அமெரிக்க விளையாட்டுப் பிரியர்களுக்குக் காட்டி, பொருள் திரட்டத் திட்டமிட்டுள்ளார்.

அமெரிக்கப் பொதுமக்கள் தொடர்புச் சாதனங்களின் வரலாற்றில், ( Media Story ) இது போன்ற சுவையான விளையாட்டுச் சம்பந்தமான நிகழ்ச்சி இதுவரை காலமும் நடைபெறவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ரோனியாவின் கதை இன்னும் முடியவில்லை. ''அவர் போட்டிக்குப் போகுமுன் கைது செய்ய நாம் விரும்பவில்லை; திரும்பிய பின் பார்க்கலாம்'' என்கிறார், கொலை முயற்சி வழக்கின் பொறுப்பதிகாரி. வழக்கு முடியும் வரை, தொடர்புச் சாதனங்களுக்குக் கொண்டாட்டந் தான். ஆனால், ரோனியாவுக்கும் விசிறிகள் கூட்டம் பெருகியுள்ளது. அமெரிக்காவில் எதுவும் நடக்கும் என்பதற்கு, இது ஓர் அத்தாட்சி.

## ஐ பீ. எம் தனது திட்டத்தை மாற்றுகின்றது

*தனி நபர்களின் சொந்தப் பாவிப்புக்கென அமைக்கப்பட்ட ஐ. பீ எம் நிறுவனத்தின் பீ. எஸ் 2 எனப் பெயரிடப்பட்ட கணனிப்பொறி வியாபாரத்தில் தோல்வி கண்டுள்ளது சீனாவிலுள்ள அதன் ரியன்சின் தொழிற் சாலையில் பீ. எஸ் 2 செய்யப்பட்டு வந்துள்ளது. நாங்கள் எதிர்பார்த்த வெற்றி அதற்குக் கிடைத்துள்ளதென்று நிர்வாகம் கூறினாலும், இந்த ரகக் கணனிப் பொறிகள் பெருந்தொகையில் விற்பனை ஆகவில்லை என்பதுதான் உண்மை நிலை. இப்போது ஐ. பீ. எம் நிர்வாகம் தனது உலகப்பிரசித்தம் அடைந்துள்ள ஏ. எஸ் 400 ரக மினி எனப்படும் சிறிய உருவ கணனிப் பொறிகளைச் சீனாவில் வைத்துப் பொருத்துவதற்குச் சீன அரசுடன் பேச்சு நடத்தி வருகிறது. இவை ரியன்சின் தொழிற்சாலையில் நிர்மாணிக்கப்பட மாட்டாது என அறியப் படுகின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கைச் சூழலினால் பாதுகாக்கப்பட்ட பிணத்தின் கதை

— எழுதியவர் —
அனாஸ்ரேசியா ரூஃபெக்சிஸ்

**கொலம்பஸ் கடலைக் கடக்க முன்னரே 'புதிய உலகில்' காச நோய் இருந்தது என்பதை ஒரு பெண்ணின் உடற்பகுதிகள் காட்டுகின்றன.**

கொலம்பஸ், மற்றும் அவரின் சக நாடு காண் வீரர்களின் ஆவிகள், இனி ஆறுதலாகச் சுவாசிக்கலாம். புதிய உலகப்பழங்குடிகளை வாளால் மட்டுமன்றி, கிருமிகளாலும் கொன்றார்கள் என, பல காலமாக அவர்கள் குற்றஞ் சாட்டப்பட்டார்கள். பெரியம்மை, சின்னமுத்து, தொற்றுங் காய்ச்சல், மலேரியா, மற்றும் காச நோய், போன்ற அமெரிக்காவிற் காணப்படாத நோய்களின் கிருமிகளை மாலுமிகளும், மற்றும் குடியேறியவர்களுமே கொண்டு வந்தார்கள் எனக் கருதப்பட்டது. இந்நோய்களாற் பீடிக்கப்படாதிருந்த பழங்குடி மக்களுக்கு, இவற்றை எதிர்க்கும் சக்தி இருக்கவில்லை. இப்பொழுது, குறைந்தது ஒரு நோய், புதிய உலகிற்கு ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர் கொண்டு செல்லவில்லை என நீக்கிவிடப் பட்டுள்ளது. ஸ்பானிய நாட்டிலிருந்து கொலம்பஸ் கப்பல் ஏறுவதற்கு 500 ஆண்டுகளுக்கு முன்னர், அமெரிக்காவில் இறந்த பெண்ணின், பாதுகாப்பாக இருந்த பிணத்தில் இருந்து காச நோய்க் கிருமிகளின் டி. என் .ஏ ஐக் கண்டு பிடித்ததாக, விஞ்ஞானிகள் சென்ற கிழமை அறிவித்தார்கள்.

1492 ஆம் ஆண்டுக்கு முன்னர், புதிய உலகில் காச நோய் இருந்ததாகப் பழையகால நோய் ஆய்வாளர்கள் சந்தேகித்தனர். காச நோயால் ஏற்பட்ட அடையாளங்களைப் போன்று, பழங்கால எலும்புக் கூடுகளிற் காணப்பட்டன. ஆனால், தேசிய விஞ்ஞான அக்கடமியின் நடவடிக்கைகளில் மேற்கூறிய டி. என். ஐக் கண்டுபிடிப்பு அறிவிக்கப்பட்ட போதே, அமெரிக்காவிற் காச நோயின் நீண்ட ஆயுள் உறுதிப்படுத்தப்பட்டது. ஆராய்ச்சிக் குழுவில் இருந்த மினிசோற்றா பல்கலைக்கழக உயிரியல் இரசாயன ஆய்வாளர் வில்மர் சாலோ, ''நாம் எதிர்பார்க்கக்கூடிய மிகச் சிறந்த சான்று, அதுவாகும்'' என்று கூறுகிறார்.

தற்போது, தென் பெருநாட்டின் கரை வழியே அமைந்த சிரிபாயா கிராமத்தின் விவசாயக் குடிகளின் புதை குழிகளில், 1987 ஆம், 1990 ஆம் ஆண்டுகளில் சிக்காகோ பல்கலைக்கழக மனிதவியலாளர், இயற்கை மாற்றங்களினாற் பாதுகாக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான உடல்களில் ஒன்றில் இருந்து, மேற்கூறிய பரம்பரை அலகுப் பதார்த்தம் பெறப்பட்டது. மினிசோற்றா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நோய்



களின் ஆய்வாளர் ஆதர் ஔஃப்டர்கைட் இவ்வுடல்கள் மீது பரிசோதனை நடத்தும்போது, அவர்களின் சமுதாயத்திற்கு உயர்வான, 40



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது, 45 வயது என மதிக்கக் கூடிய பெண்ணின் உடலால் ஆச்சரியத்திற்குட்பட்டார். உடல் பழுதடைந்திருந்ததினால், ஏதாவது விசேடமாகக் காணலாம் என அவர் எதிர்பார்க்கவில்லை. ஆனால் மார்பைத் திறந்த பொழுது, சுவாசப்பையில் ஒரு கட்டியும், காச நோய்த் தாக்கத்தின் பொதுவான அடையாளமான நிண நீர்க்கணுக்களில் வேறு இரு கட்டிகளையுங் கண்டார்.

இவற்றின் இழைய மாதிரிகளை அமெரிக்காவுக்கு எடுத்துச் சென்று, தனது சக ஊழியர் சாலோவிடங் கையளித்தார். பொலிமரேஸ் சங்கிலித்தாக்கம் எனப்படும் புதுவிதமான டி.என்.ஏயின் பகுப்பாய்வின் தொழில்நுட்பத்தைக் கொண்டு, இப்பழைய பரம்பரை அலகுப்பதார்த்தத்தின் பல மில்லியன் கணக்கான பிரதிகளை மினி சோற்றா ஆராய்ச்சியாளர்கள் ஆக்கினார்கள். காச நோய் பக்ரீறியாவில் மட்டுங் காணப்படும் டி. என். ஏ துண்டொன்றை அடையாளங் கண்டனர்.

''ஆரம்பக் குடியேற்றக் காலங்களில், அமெரிக்கப் பழங்குடிகள் காச நோயாற் பீடிக்கப்பட்டிருந்தார்கள். காரணம் யாதெனில், பட்டினங்களில் நெருக்கமாக வாழ்ந்தும், அவர்களின் வாழ்க்கைத் தரம் முன்னரிலும் பார்க்க, கீழ்மட்ட நிலையிலேயே இருந்தது'' என, ஒஃப்டர்கைட்கூறுகிறார். போஷாக்கின்மையாலும், இழிவான சுகாதாரச் சூழ்நிலையாலும் எதிர்ப்புத் தொகுதிகள் பலவினமாக்கப்பட்ட மக்களிடையே, ரிபி எனப்படும் காச நோய் விரைவாகப் பரவுகின்றது. சிரிபாயா கிராம மக்களின் பாதுகாக்கப்பட்ட உடல்களில், மிகக் குறைவானவையே ரிபி நோயின் அடையாளங்களைக் காட்டின; மேலும், ரிபி டி. என். ஏ பெறப்பட்ட பெண்ணும், அந்நோயால் இறக்கவில்லை.

மிகப் பெரிய மர்மம்:- எவ்வாறு, ரிபி அமெரிக்காவைச் சென்றடைந்தது? ஆசியாவிலிருந்து பெரங் கடல் நிலப்பாலத்தால் இடம் பெயர்ந்த மக்கள் இந்நோயைப் புதிய உலகிற்குக் கொண்டு சென்றிருக்கலாமா? கொலம்பசுக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே சென்ற அப்பிராணிகள், விடையைத் தமது புதைகுழிகளுக்குள் கொண்டு சென்றிருக்கலாம். அவ்வாறெனின், விஞ்ஞானிகள் அதை ஒரு நாளைக்குத் தோண்டி எடுப்பார்கள்.

சிக்காகோவிலிருந்து அறிவித்தவர்:
:-லெஸ்லி விற்ரேக்கர்.
''ரைம்,'' மாச், 28, 1994.

**பொஸ்னியா:**

## மீண்டும் கட்டி எழுப்பப்படுகிறது.

பொஸ்னியாவின் அழிப்புத் தொடர்ந்து கொண்டிருக்கும் போது அதே வேளையில் அந்தக் குடியரசன் கட்டுமான அமைப்பை மீளக் கட்டி எழுப்புவதற்கான வேலைத் திட்டங்கள் ஏற்கனவே தீட்டப்பட்டுள்ளன. இவ்வாண்டு கோடை காலத்தின்போது வேலைகளை ஆரம்பித்து அங்கே சேதமாக்கப்பட்டுள்ள மசூதிகள், தேவாலயங்கள், நூல் நிலையங்கள் முதலியவற்றைப் புனரமைக்கப் பொஸ்னியக் கட்டடக் கலைஞரான அமீர் பாசிக் என்பவர் எண்ணியுள்ளார். பாசிக், இஸ்தான் புல்லியிலிருந்து ஒரு குழு, கட்டடக் கலை மாணவர்களை அழைத்து மொஸ்டார் நகரை மீள் சீரமைக்கத திட்டங்கள் வரையவுள்ளார். அவர் 1986 இல் அந்த நகரின் வரலாற்றுப் பகுதியொன்றை மீள் சீரமைத்ததற்காகப் பரிசளித்துப்போற்றப்பட்டவர். அந்த இடம் இன்று தொடர்ச்சியான ஏவுகணைத் தாக்குதலால் தகர்வுண்டு அடையாளமே காணமுடியாத விதமாகக் கிடக்கிறது. அவர் திருத்த வேலைகள் செய்யவுள்ள இடங்களில் மொஸ்டாரின் பழைய பாலம் முதலாவது வேலைத் திட்டத்தினுள் வருகின்றது. 1956 இல் கட்டப்பட்ட அது சென்ற ஆண்டு நவம்பர் மாதத்தில் குறோசியர்களின் எறிகணைகளால் அழிவுற்றது. ஐ. நா. வின் கல்வி, விஞ்ஞான, கலாசார அமைப்பான யுனெஸ்கோ முதல் பல பொது அமைப்புக்கள் அந்தத் திட்டத்திற்கு நிதி உதவ முன்வந்துள்ளன.

வெளியிடுவோர்;- உலக உலா என்ரபிறைசஸ் (3-ம் மாடி) 144, அருச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.
அச்சிடுவோர்: இராசன் அச்சகம், 144, அருச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அழகின் ஆராதிப்பும்
ஆக்கத்தின் அழகும்
இன்றும் என்றும்
நிலைத்திட

கைவண்ணம் கொண்டதோர்
கலைவண்ணப் பதிப்புக்களுக்கு

# இராசன் அச்சகம்

*உங்களின் தேவைகள்:*

- திருமண அழைப்பா?
- மங்கள நிகழ்வா?
- கடிதத் தலைப்புக்களா?
- விற்பனைச் சிட்டைகளா?

மற்றும் அச்சுத்தேவைகள் எதுவானாலும்

*தமிழீழத்தின் தன்னிகரில்லாத*
*அச்சுப் பதிப்பாளர்களாக*
*நாமிருக்கிறோம்.*

# இராசன் அச்சகம்

144, அருச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org